அமரகலா விலாஸினீ மலர் 11.

ஸ்ரீ பத்ம புராணம்

ஆசிரியர்

ஸாஹித்ய வாங்முக பூஷணம், மஹா மஹோபதேசக

ஸ்ரீவத்ஸ வெ. ஸோமதேவ சர்மா.

ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.

சாந்தாச்ரமம்,

154, தம்புசெட்டி வீதி,

சென்னை.

ஆங்கீரஸ ச்ராவணம்] [விலை 12 அணா

அவதாரிகை.

பத்மவடிவமான ஸகல உலகத்தின் விஷயத்தைக் கூறுவதால் இதற்கு பத்மபுராணமெனப் பெயரிடப்பட்டது. இது வ்யாஸபகவானருளிய பதினெண் புராணங்களில் இரண்டாவதாகும். இதில் ஆதிகண்டம், பூமிகண்டம், பிரும்மகண்டம், பாதாளகண்டம்,ஸ்ருஷ்டிகண்டம், உத்தரகண்டம் என ஆறு கண்டங்களுண்டு. அறுநூற் றிருபத்தெட்டு அத்யாயங்களும் ஐம்பத்தையாயிரம் சுலோகங்களுமிதில் காணப்படுகின்றன. வர்ணாச்ரம தர்மம், விருதங்கள், தீர்த்தமஹிமை, மந்த்ரம், பகவதாராதநம், அவதார ரஹஸ்யம், ஸதாசாரம் முதலிய பற்பல அரிய விஷயங்களிதில் அடங்கி இருக்கின்றன. வேதாந்த தத்வத்தைப் படிப்போர் மேன்மேலும் அன்புடன் படிக்கும்படி ரஸமான கதை வடிவமாக இப்புராணம் புகட்டுகிறது. இதிலிருந்துதான் ப்ரபோதசந்த்ரோதயம் என்ற நாடகம் தோன்றிற்றெனலாம். கவிசக்ரவர்த்தியான காளிதாஸன் இயற்றிய ரகுவம்சம் முதல் மூன்று ஸர்க்கத்திலுள்ள கதை அணுவளவேனும் மாறாதது மட்டிலுமல்ல; "சாயேவதாம் பூபதிரன்வகச்சத்" என்பதுபோன்ற பத அமைப்பு அப்படியே பத்மத்தில் காணப்படுகிறது.

இருபத்தைந்து ஏகாதசிகளுக்கும் தனித்தனி கதை ருசியாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஸ்ரீராகவனது அச்வமேதம் விஸ்தாரமாக இங்கு காணப்படுகிறது. தேவதைகளுக்குக் கற்பூரம் ஏற்றும் முறை, விநாயகருக்கு மோதகம் நிவேதனம் செய்யும் ஸம்ப்ரதாயம்போன்ற பல விஷயங்களிங்கு யுக்தியுக்தமாகவும் வர்ணிக்கப்பட் டிருக்கிறது. பாரத ராமாயண பாகவதங்களில் கூறாது விடப்பட்ட அவச்யமான பல கதைகளை இங்கு காணலாம். பாகவதஸப்தாஹமுறை, அதை அநுஷ்டித்துப் பயன் பெற்றவர்,

ருக்மிணி ஸத்யபாமை, கோபிகைகள், தசரதர், கௌஸல்யை முதலியவர்களின் முற்பிறவி, ஸீதையை ராவணன் தூக்கிச் செல்லும் காரணம், கீதையின் பதினெட்டு அத்யாயங்களுக்கும் தனித்தனி சரிதம் முதலிய எண்ணிறந்த விஷயங்களை இங்கு காணலாம். சுறுங்கச் சொல்லின் இது எங்கும் கிடைக்காத பல அபூர்வ விஷயரத்னங்களை உட்கொண்ட ஓர் நிதி எனத்தகும்.

இம்மூலக்ரந்தத்தின் விலை நாற்பது ரூபாயாகிறது. பல இடங்களில் ஒரே விஷயம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் ப்ரஸித்தமான கதைகளுமிங்கு காணப்படுகின்றன. இதுபோன்ற புத்தகங்களைப் படிப்பவரது ஸங்க்யை மிகச்சிறிது. அதிலும் இதை வெளியிட உபகாரம் புரிவோர் அரிது. ஆகிய இக்காரணங்களால் இதை நேர் மொழி பெயர்ப்பாகச் செய்யாமல் சுருக்கமாக வெளியிடத் துணிந்தோம். நற்காரியத்திற்குப் பல இடையூறுகள் நேர்வதியற்கையன்றோ? இதற்கு உண்டான விக்னங்களைக் கண்டும் இது ஓர் நற்கருமம் என்று நன்று கண்டுகொண்டோம். எதிர்பாராமல் பல தவறுதல்கள் இதில் நேர்ந்திருக்கின்றன. ஆஸ்திகரிதை மன்னிக்க.

தனது பூர்ண ஸஹாயத்தையுமிதற்களித்து எங்களை விட இந்நூல் வெளிவருவதில் மிக ப்ரயாஸைப்பட்ட கார்லண்ட் கம்பனியின் சொந்தக்காரர்களுக்கு எங்களது மனமார்ந்த நன்றியும் கருணை நிறைந்த கைலாஸநாதனது கடாக்ஷமும் உரியது ஆகுக.

ஆஸ்திக சிகாமணிகள் எங்கள்பாலன்புகொண்டு ஏனைய நூல்களைப்போல் இதையுமாதரித்துப் பதினெண் புராணங்களும் இதேபோல் விரைவில் வெளியாகும்படி ஆசீர்வதிப்பார்களாக! வேண்டிய ஸௌகரியங்களைச்செய்ய வேதரூபியான பகவானது பாதாரவிந்தத்தையே சரண்புகும்

பக்தபாதபாம்ஸு

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.

உ

ஸ்ரீ வேதவ்யாஸாயநம:

பத்மபுராண கதா ஸங்க்ரஹம்.

ஆதி கண்டம்

முன்னொரு ஸமயம் பூலோகவாஸிகளான மஹர்ஷிகள் ப்ரஹ்மாவை வணங்கித் தாங்கள் வஸிப்பதற்கு பூமியில் தக்க இடத்தைக் காட்டும்படி வேண்டினார்கள். ப்ருஹ்மா, ஓர் தர்ப்பையைச் சக்ரம் போல் செய்து உருட்டி விட்டார். இது எந்த இடத்தில் தானாக விழுகிறதோ அதே, தவத்திற்குத் தகுந்த இடம் என்றார். அதே போல் சக்ரத்தின் பின்னால் மஹர்ஷிகள் வந்தார்கள். அது ஓரிடத்திலே விழுந்தது. அதே நைமிசாரண்யம் எனப்படுவது. அது மிக சுத்தமான இடம். அங்கே வஸிப்பவரில் முதன்மையானவர் சௌநகர். அவர் ப்ருஹ்ம வம்சத்திலே பிறந்தவர். மஹாதபஸ்வீ, இவரைச்சுற்றி எண்ணிறந்த ரிஷிகள் சூழ்ந்து வஸித்தனர். இவர்களே சௌநகாதி மஹர்ஷிகள் எனப்படுவோர். இவர்களைப்பார்க்க ஒரு ஸமயம் பூமண்டலத்திலுள்ள மற்ற மஹர்ஷிகளெல்லோரும் வந்தார்கள். அவர்களை வர வேற்று அர்க்யம், பாத்யம், ஆசமநீயம் கொடுத்து சௌநகாதிகள் உபசரித்தார்கள். ஒருவருக்கொருவர் யோக க்ஷேமத்தை விசாரித்துக் கொண்டார்கள்.

இதனிடையில் ரோமஹர்ஷணஸூதர் என்பவர் அங்கு வந்தார். எல்லோரும் எழுந்து நின்று அவரை வர வேற்றனர். அவர் வேதவ்யாஸரின் ஐந்தாவது சிஷ்யர். இவர் மூலமாகத்தான்

தானியற்றிய பதினெட்டு புராணங்களையும் வ்யாஸர்உலகில் பர வச் செய்தார். அவருக்குத்தக்க ஆஸநமளித்தனர். சௌநகாதி முனி வர்கள் ருசியானதும், தர்மம் நிரைந்ததும் பகவத் விஷயமாயு முள்ள புராணத்தைச் சொல்லுங்கள் என ப்ரார்த்தித்தார்கள். அவர் தனது குருவான வேதவ்யாஸரை நமஸ்கரித்து பாத்மபுரா ணத்தைச் சொல்ல ஆரம்பித்தார். இது பத்மவடிவமான ஜகத்தைப் பற்றி சொல்வதால் பாத்மபுராண மெனப்படும். ஐம்பத்தைந்து ஆயிரம் சுலோகங்களுள்ளது. ஆறுகண்ட முள்ளது.

ஜ்வாலேச்வரம்.

உலகம் உண்டான முறையைக்கூறி பூமண்டலம் ஜம்பூத்வீ பம் பாரதவர்ஷம் முதலியவைகளின் சிறப்பையும் ஆங்குள்ள மலை நதிகளையும் விளக்கினர் ஸூதர். தீர்த்தங்களின் மஹிமையைச் சொல்லவேண்டுமென சௌநகாதி முனிகள் ப்ரார்த்தித்தனர். கங்கை முதலிய ஒவ்வொரு மஹாநதியின் விசேஷத்தையும் அந்த தீர்த்தக் கரையில் அமர்ந்த ஆலயத்தின் பெருமையையும் வர் ணித்து நர்மதாநதியின் அருகில் உள்ள ஜ்வாலேச்வரம் என்ற தீர்த் தத்தின் உத்பத்தியையும் மஹிமையையும் வஸிஷ்டர் திலீபராஜ னுக்குச் சொன்னபடி ஸூதர் கூறினர்.

முன் ஒரு ஸமயம் பாணன் என்ற ஓர் அஸுரன் இருந்தான். அவன் மனைவி பெயர் அநௌபம்யா. இவள் மஹாபதிவ்ருதை. இவ்வஸுரன் பகவானைக்குறித்து கடுந்தவம் புரிந்து எண்ணி றந்த வரங்களைப் பெற்றான். தனக்கு வாஹநமாக மூன்று பட்ட ணங்களை ஏற்படுத்திக்கொண்டான். இவை தனித்தனியாக ஆகா யத்தில் பறக்கும். மூன்றும் ஆயிரம் ஆண்டுகளுக்கோர் முறை ஒரே நிமிஷம் ஒன்றாகக்கூடும். அச்சமயம் பரமசிவன் அபூர்வ மான ஆயுதத்தால் அடித்தால்தான் தனக்கு மரணமுண்டாக வேண்டும் என்று பரமனை வேண்டினான். அங்ஙனமே வரம் பெற்று ஓர் ஆச்ரமத்தின் மீது பட்டணத்துடன் உட்காருவான்.

அவ்வாச்ரமவாஸிகளின் கதி என்னாகும்? இப்படி பல ஜநங்களைப் பாணன் அழித்து வந்தான். முனிவர்களும் தேவர்களும் ஒன்று கூடினர். கைலாஸநாதனைப் பணிந்து துதித்துச் சரணமடைந்தனர். அவ்வஸுரனை அழித்து பக்தர்களைப் பரிபாலிக்க வேண்டினர்.

கருணைக்கடலான கைலாஸநாதன் அப்படியே ராக்ஷஸனைக் கொன்று உலகைக்காப்பதாக வாக்களித்தார். வந்த தேவர் ஸந்தோஷமாக வணங்கித் திரும்பினர். உடனே சங்கரர் நாரதனை நினைத்தார். நினைத்தமாத்ரத்தில் வீணையும் கையுமாக விரைவாய் வந்தார் நாரதர். பணிந்து போற்றி "ஐயனே, அடியேனுக்கிடும் ஆக்ஞையா" தென்றார். "நாரதரே! நீர் பூலோகம் சென்று பாணனுடை மனைவியின் மனதைக் கலைத்து வாரும்" என்றார். ஈசனாணையை மீற எவரால் இயலும்? நாரதர் பாணனிடம் வந்தார். நாரதரை வரவேற்காதவர் யார்? ஆஸநமளித்து அர்ச்சனை செய்தானவன். வணங்கி நின்று குசலங்கேட்டான். அரக்கன் மனைவி அநௌபம்யா நாரதரடி பணிந்து "ஐயனே! எக்கருமத்தால் தேவர் ஸந்தோஷிப்பர்" என வினவினாள். மனைவிக்குரிய பதியின் பணிவிடையைச் சொல்லாது, பல்வகைத் தானங்களைக் கூறினார் முனி. அவளும் ஏனைய பெண்களும் பதி தர்மத்தை மறந்து தானத்தையே முக்யதர்மம் என்றெண்ணினர். அந்நாரதரிடமே தானம் செய்ய ஆரம்பித்தனர். அவர் தர்மம் தெரிந்தவராதலால் தானம் வாங்கமறுத்து வந்த கார்யம் ஆயிற்றென்று ஸந்தோஷித்து தேவலோகம் சென்றார்.

பிறகு முக்கண்ணன் நர்மதாதீரத்தை நாடிவந்தார். மாஹேச்வரமென்ற இடத்தில் தங்கினார். பாணனைக்கொல்ல அபூர்வமான ஆயுதமன்றோ வேண்டும்? மந்தர மலையை வில்லாக்கினார். வாசுகி நாணாயிற்று, விஷ்ணுவே பாணமானார். கைலாஸம் ரதமாயிற்று, நாலுவேதங்களும் குதிரைகளாயின. அச்வினீ தேவர்கள் சக்ரமாயினர். ப்ருஹ்மா ஸாரதியானார். இவ்வளவு வைபவத்

துடன் போர்கோலங்கொண்ட ருத்ரன் முப்புரமும் ஒன்று சேருங்காலத்தை நோக்கி நின்றூர். பாணனுக்குத்தோன்றிய அபசகுநத்திற்கு அளவே இல்லை. முப்புரமும் ஒன்று சேர்ந்தது. அந்த பாணத்தின் ஜ்வாலை நாடெங்கும் விழும்பி எழுந்தது. பட்டணங்கள் பற்றி எரிந்தன. தாபம் பொறுக்கமுடியவில்லை. ஹா! ஹா! என்ன ப்ரளய காலமா! அக்நியே உனக்குக் கண்ணில்லையா? பேதைகள் செய்த குற்றம் யாது? என எங்கும் கூக்குறல் இளம்பின. வஹ்நியோ யானென்ன செய்வேன்? யான் ஓர் பணியாளன், என்னைத்தூண்டிய யஜமாநனை வேண்டுங்கள் என்றூர்.

இதைக்கண்ட பாணன் கோபங்கொண்டு சத்ருவைக்கொல்ல எழுந்தான். ஆயினும் பரமசிவனைத் தவிர வேறெவரால் எம் பட்டணத்தை எரிக்க இயலும். எனது தைவமான த்ருபுவநேச்வரலிங்கத்தைக்காத்தல் வேண்டும் என எழுந்து ஓடினுன். அந்த லிங்கத்தைத் தலையில் தாங்கி ஐயனே! யான் செய்த குற்றத்தை மன்னித்தருளல் வேண்டும். யான் உனக்கு மகனல்லனே? நீ எனக்குத் தந்தை யன்றே? என துதித்தான். கதறினுன். கைலாஸநாதன் எதிரே தோன்றினூர். சாகாவரமளித்தார். எம்பெருமானது சரத்தால் தோன்றிய அக்னி அமரகண்டகம் என்றமலைமீதி றங்கி சாந்தமடைந்தது. அங்கு உத்பவமான தீர்த்தம் ஜ்வாலா மாஹேச்வரமெனப்படும். அங்கு ஸ்நாநம் செய்தோர் இஹபர நன்மை பெறுவர்.

ரேவையின் மஹிமை

சுகஸங்கீதி என்றேர் கந்தர்வனிருந்தான். அவனுக்கு ஐந்து கன்யகைகளுண்டு. பரமோஹினீ, ஸுசீலா, ஸுஸ்வரா, ஸுதாரா சந்த்ரிகா என்பது அவர்கள் பெயர். பெயருக்கேற்ற ரூபமும் குணமும் உடையோரிவர். ரதியைப்போன்ற அழகுள்ளவர். முனிவரது மனத்தையுமிழுக்கும் இனிய குறலுடையவர் ஸங்கீதத்தில் கரை கண்டவர். இத்துடன் யௌவனப்பருவமும் கூடிற்று.

ஸத்பதியைப்பெற கௌரியைப் பூஜிப்பது வழக்கமாதலின் இவ் விளங்குமரிகள் அச்சோதமெனும் ஸரஸில் புனலாடினர். பொற்றாமரைமலர்களைக் கொய்து கௌரியின் திருவடிகளில் சாத்தினர். ஷோடசோபசாரத்துடன் பூசனையை மஹேச்வரிக்குச் செய்தனர். பின்னற் மனமுருகப்பாடினர்.

அச்சமயம் அங்கு ஓர் முனி குமாரர் வந்தார். அவர் வேதநிதியின் குமாரர். காமனேவென எண்ணத்தகக அற்புத ரூபமுள்ளவர். நல்ல காளைப்பருவமுள்ளவர். நன்கு பருத்து வளர்ந்த சரீரமுள்ளவர். அவர் உடுத்தியிருந்த மான் தோலும், தண்டமும் அவரது பூர்வாச்ரமத்தை வெளியிடுவதாயிருந்தது. இவரைக்கண்ட கன்னிகைகள் காமவலையில் சிக்கினர். ஆஹா! என்ன உருவம்! என்ன காந்தி? மன்மதனே இவன்? நமது பூஜாபலனே இது? தேவியின் திருவருள் தானே? எனனே என்பாக்யம்! என்னைத்தேடி வந்த இச்சுந்திரன் யாரோ? என்று ஒவ்வொருவரும் தனக்கே அவர் பதி என எண்ணி எனையோருடன் சண்டையிட்டனர். இதைக்கேளாததுபோல் கேட்டிருந்த ரிஷிகுமாரர் கர்மாநுஷ்டாநங்களை கனவேசமாக முடித்தார். அதற்குள் அவர்களும் அருகில் வந்தனர்.

இவர்களது மாயவலையில் மயங்கி மதி கெடலாமோ? பருஹ்மாதி தேவர்களும் முனிவர்களும் இதில் சிக்கிக் குழியில் வீழ்வோர் கதி இஃதென்று செவ்வனே விளக்கி இருக்கின்றனர். இவர்களுடன் பேசினும் போதும். மயக்கி இழுத்து விடுவர். இதிலிருந்து தப்பிப்ப தெங்ஙனம்? என அத்தபஸ்வி சிந்தித்தார். இக்கட்டழகிகளின் கருத்திற் கிணங்கினல் பேரானந்தத்தைப் பெற முடியாதே என்றஞ்சினர். தனது தபோமஹிமையால் தன்னுடலை மறைத்து நின்றார். ஆஹா? இதென்ன கொடுமை! சந்திரன் மறைந்ததே! ஆநந்தம் அகன்றதே! இவர் மாயாவியோ? இந்த்ரஜால முணர்ந்தவரோ? அல்லது இவ்வளவு தான் நமது

புண்யமோ? என அச்சிறுமிகள் திகைத்து நின்றனர். அவரைப்பாராமல் பிழைத்திருப்பது எங்ஙனம்? என்று ஏங்கிவருந்தினர். இவர்களது துக்கத்தைக் காணஸஹியாதவன் போல கதிரவனும் மறைந்தான். உலகமெலாம் இக்கன்னியர் மனம்போல் இருள் சூழ்ந்தது. தந்தை தாய்க்கஞ்சி தம் வீடு சென்றனர். மதனதாபத்தைச் சூர்யதாபமென ஒளித்துத் தாயிடம் கூறினர். அவ்விரவு செல்வது அவர்களுக்கு ஓர் யுகமாக இருந்தது. காலையில் எழுந்ததும் அத்தடாகத்தையே நினைத்து ஓடினர். முன்னும் பின்னும் எங்கும் ரிஷிகுமாரனே அவர்கள் எதிரில் தோன்றினன். வாய் விட்டுக்கதறினர். வெட்கத்தை விட்டு வேண்டினர். இவர்கள் அழைப்பிற்கிணங்கி வந்தவர் போல் அந்தப் ப்ருஹ்மசாரி ப்ராதஸ்நாநம் செய்ய அதே அச்சோத ஸரஸிற்கு வந்தார். புதையல் எடுத்ததநம்போல் அவரைக்கண்டவுடன் மட்டில்லாமகிழ்ச்சி கொண்டனர் மங்கையர்.

முன் போல் தங்கள் கண்ணுக்குக்காணுமல் மறைவரோ என்றஞ்சி அவரைச் சூழ்ந்து அவர் கைகளைப்பிடித்துக்கொண்டனர். தங்களை மணக்கும் படி பற்பல நீதி வாக்யங்களைக் கூறினர். தங்களது மேன்மையை விளக்கினர். வேண்டினும் மற்றவருக்குக் கிட்டாதவர் தாங்கள் என்றனர். எவ்வகையிலும் எங்களைக் கைவிடலாகாது. கைவிட்டால் ப்ராணனை விடுவோம். பெண்ஹத்தி பொல்லாபாபம். அது தங்களைச் சூழும் என்றனர். இவ்வளவிற்கும் சலிக்காசித்தமுள்ள முனிவர், எனக்கு விருப்பில்லா விஷயத்தை வற்புறுத்தாதீர்கள். அதனுல் பல தீங்குகள் வந்திடுமென்றுர். இதைச்சிறிதும் காதில் ஏற்காது அவரை பலாத்காரம் செய்ய ஆரம்பித்தனர். மான மற்ற நீங்கள் பெண்களல்ல பேய்களே! பேய் போல் என்னைப்பிடித்தமையால் பேயாவீர்களென சபித்தார் அவர். அவ்விளங்கன்னிகள், ஆஹா! விதிவசமோ இது! கோரியதென்ன? நாமடைந்ததென்ன? பேயாய்ப் பிறந்து திரிதலோ நம்கதி! யாது குற்றம் செய்தோம்! கருணையற்ற ரிஷிகுமாரர், குற்றமற்ற நம்மைச் சபித்தது நியாயம்

தானே? என சிந்தை கலங்கி கண்ணீர் விட்டனர். கோபக்கனல் பொங்கி எழுந்தது. முனிகுமாரரைப்பார்த்து, ஐயா! வலுவில் வந்த லக்ஷ்மியைக் காலால் உதைத்தீர்! இது தானே! நிரபராதியான எங்களைப் பேயாக்கினீர்! இது தான் சாந்தமோ? தர்மமோ? எங்களது கௌரியின் கருணையால் நாங்களும் ஒருவரை சிக்ஷிக்கவோ ரக்ஷிக்கவோ சக்திபெற்றுளோம்? உமது குற்றத்திற் கேற்ற பலனை நீரும் அனுபவித்தல் வேண்டும். ஆதலின் நீரும் பேயாவீர்! என அவரைச் சபித்தனர். இவ்வாறுபேருமாக பேயு ருவமெடுத்து ஊரூராக அலைந்தனர். ஆஹாரத்திற்கு வகையின்றி வருந்தினர்.

பலகாலஞ் சென்றபின் லோமசர் என்ற மஹர்ஷியைக் கண்டனர். அவரைப்பிடித்து ஆஹாரமாக உண்ண அருகிற் சென்றனர். மஹர்ஷியின் தவத்தீ அவர்கள் அண்டமுடியாமல் இவரைக் காத்தது. பூர்வவாஸனையால் முனி புதல்வன் லோம சரைப்பணிந்து தங்கள் சாபம் நீங்க வழி கேட்டான். லோமசர் நர் மதையின் மஹிமையைக் கூறி தானங்கே ஸ்நாநம் செய்வதாகவும் தன்னுடன் வந்து அங்கு ஸ்நாநம் செய்தால் சாபம் நீங்குமென் றும் கூறினர். அங்ஙனம் எல்லோரும் அவருடன் சென்றனர். நர்மதையின் ஜலத்திவிலைகளை வாயு பேய்களின் மேல் இறைத்தது, உடனே அனைவரும் திவ்யதேஹம் பெற்றனர். ஸங்கல்பத்தின் வலுவை விளக்கி அக்கன்யகைகளை மணக்கும்படி லோமசர் கூற இப்பேருபகாரம் செய்த பெரியோருக்கு அவர் சொல்படி கேட் பதே பதிலுபகாரமெனக் கருதினன் குமாரன். அங்ஙனமே பெற் றோர் முன்னிலையில் மணம் புரிந்து க்ருஹஸ்த தர்மத்தை அநுஷ் டித்து சுகமாக வாழ்ந்தனர்.

ஸப்தஸாரஸ்வதம்

மங்கணகர் என்று ஓர் மஹர்ஷி இருந்தார். இவர் ப்ருஹ்மர்ஷி என ப்ரஸித்தமானவர். தபோவலிமையால் பல்வகை ஸித்தி பெற் றவர். ஒரு நாள் அக்னிஹோத்ரத்திற்கு தர்ப்பைகொண்டுவர

வனம் சென்றார். தர்ப்பையை அறுக்கும் போது கைவிரலில் காயப்பட்டது. அதிலிருந்து ரக்தம் வருவதற்கு பதிலாக வாஸனையுள்ள ஜலம் சிந்தியது. இதைக்கண்டு தனது வலிக்தியின் பெருமையை வியந்தார். தனக்கீடு எவருமில்லை என ஆநந்தக் கூத்தாடினார். இவரது தேஜஸால் அசை பொருளும் அசையாப்பொருளும் மோஹமடைந்தன. இவரைப்போலவே எல்லாம் கூத்தாடக் கிளம்பின. இதைக்கண்ட தேவர்கள் உலகம் அழிந்து விடுமோ என அஞ்சினர். ப்ருஹ்மனைச்சரணமடைந்தனர். அவரும் அமரருடன் கைலாஸம் சென்றார். கருணாநிதியானப் பரமசிவனை வணங்கி துதித்தனர். "அபயம்! அஞ்சாதீர்கள்! உங்களுள்ளமறிவேன். வேண்டியவகை தேடுவேன் இருப்பிடம் செல்லுங்கள்." என்றார் ஈசன். மனமார மாதேவனை தேவர் வாழ்த்தி சென்றனர்.

பிறகு முனிவேடம் பூண்ட முக்கண்ணன், மங்கணகர் முன்னேதோன்றி, மஹர்ஷே! தாங்கள் தாண்டவ மாடும் காரணம் யாதென்றார். தன் பெருமையை மங்கணகர் கூற இஃதென்ன விந்தை! இதோ பாரும் என்று தன் கட்டவிரலை மற்றோர்விரலால் தட்டினார் வந்தமுனி. உடனே அங்கிருந்து வாஸனை நிறைந்த வெண்மை நிறமுள்ள விபூதி தோன்றிற்று. இதைக்கண்ட மங்கணகர் ஆஹா! இதென்ன மஹிமை? இது எவரால் முடியும்! என்கர்வத்தை அகற்ற கைலாஸ நாதன் திருவிளையாடலே இது என்றெண்ணி அவர் திருவடியில் விழுந்து போற்றினார். பரமசிவன் தன்னிஜ உருவுடன் தோன்றி முனிவரே! உமது துதிக்கு மகிழ்ந்தோம். வேண்டிய வரங்களைக் கேளும் என்றார். உமாபதே உம்மை விட்டு ஒரு நிமிஷமும் பிரியமனமில்லை. ஆதலின் இவ்வாச்ரமத்திலேயே தாங்கள் வஸிக்க வேண்டுமென்றார். அதற்கிசைந்த ஈசன் அங்கு திருக்கோயில் கொண்டார். அவ்விடமே ஸப்தஸாரஸ்வத மெனப்படும்.

ஸ்ரீகுண்டல விகுண்டலர்கள்.

க்ருதயுகத்தில் நிஷத நாட்டிலே ஹேமகுண்டலன் என ஓர் வைச்யனிருந்தான். அவன் தனது குல தர்மமான க்ருஷி, பசு ஸம்ரக்ஷணை வியாபாரம் ஆகிய இவைகள் மூலமாக எட்டு கோடி ஸ்வர்ணம் ஸம்பாதித்தான். ஒருநாள் அவனுக்கு ஓர் யோசனை தோன்றிற்று. இப்பொருளும் இதனால் உண்டாகும் ஸௌக்யமும் விரைவில் அழியத்தக்க தன்றோ? அழியாப் பொருள் கடவுள் ஒருவரே! அவர் திருவடியைத்தரிசித்தோர் திரும்பவும் மானிட உடலைப் பெறார். அவரைக்காணும் வழியாது? அவர் ஆணையான தர்மநூல்கள், தானதர்மங்களே சிறந்த மார்க்கமெனக் கூறுகின்றன. ஆகலின் நானீட்டியபொருளில் ஆறில் ஓர் பங்கைக்கொண்டு அறம் புரிவேன் என எண்ணினான். அரிக்கும் அரனுக்கும் ஓர் ஆலயம் கட்டினான். அழகிய தடாகத்தை வெட்டினான். "ஆலை, அரசு, மா, வேம்பு, நாகை, முதலிய மரங்களை வளர்த்துத்தோப்பாக்கினான். அழகிய மலர்கொண்டு ஆண்டவன் அடியை அர்ச்சிக்க உத்யாநவநம் வைத்தான். நகருக்கு நால்புறமும் தண்ணீர் பந்தலமர்த்தினான். அன்னதானம், கோதானம், பூதானம், ஸ்வர்ணதானம் முதலிய ஸகல தானங்களையும் செய்தான். தேவபூஜையும் அதிதிபூஜையும் இல்லாமல் புஜிப்பதில்லை.

இந்த தர்மசீலனுக்கு ஸ்ரீ குண்டலன் விகுண்டலன் என இரு தநயர் தோன்றினர். அவர்களுக்குத் தக்க வயது வந்தவுடன் குடும்பத்தை அவர்களிடம் ஒப்பிவித்தான். ஹேமகுண்டலன் ஓயாது பரமனடி பணிந்து உலகை மறந்தான். உடலை விட்டான். வைகுண்டம் சென்று பேரானந்த மடைந்தான். தந்தைக்கு வேண்டிய ஈமைக்கடனை முடித்தனர் தநயர். தந்தை தேடிவைத்ததனம் தன் கையில் வந்தவுடன் தான் தனிகர் என்ற எண்ணம் இவர்களுக்குத் தடித்தது. தந்தை காட்டிய தர்ம வழியை மறந்தனர். தீய வழியில் சென்றனர். குடித்தும் விலைமாதருக்களித்தும் பற்றும்

பலந்தராத வழியிலும் பொருளைச் செலவு செய்தனர். விரைவில் ஏழ்மைக் காளாயினர். அவசியமான உணவிற்கும் உடைக்குங் கூட வகையின்றி திகைத்தனர். தீயாருடன் சேர்ந்து திருடிவாழ ஆரம்பித்தனர். அரசன் சிக்ஷைக்கு அஞ்சி ஆரண்யம் சென்றனர். வேட்டையாடி வேடனைப் போல் வாழ்ந்தனர். விதிமாளும்போது வேங்கைப் புலிக்கு பலியானான் ஒருவன். மற்றொருவன் அரவந்தீண்டி இறந்தான். எமதூதரால் இருஜீவனும் எமனருகே கொண்டு போகப்பட்டன. சித்ரகுப்தனுடன் கலந்து ஸ்ரீ குண்டலனை ரௌரவ நரகத்திற்கும், விகுண்டலனை ஸ்வர்க்கததிற்கும் யம தர்மராஜன் அநுப்பினான்.

ஒரே குலத்திற்றோன்றி ஒரேதொழிலைச் செய்து ஒரே தினத்தில் இறக்க அண்ணன் நரகத்திற்கும் அடியேன் ஸ்வர்கத்திற்கும் செல்லும் காரணம் யாதென யமதூதனை விகுண்டலன் வினவினான். தாய், மகன், தமயன் தம்பி முதலிய ஸம்மந்தம் ஓர் மரத்தின் மீது வந்து உட்காரும் பக்ஷிகள் சேர்க்கையைப்போலாம். அவரவர் செய்தவினையின் பயனை அவரவரே அநுபவிக்க வேண்டும். ஹரிமித்ரன் என்ற அந்தணரின் புதல்வன் உனது நண்பன். அவன் பெயர் ஸ்வமித்ரனாம். அவனது நட்பால் யமுனா நதீதீரத்திலுள்ள அவராச்ரமத்தில் இரண்டு மாதம் நீ வஸித்தாய். அச்சமயம் ஸத்ஸங்கத்தால் அறுபது நாளும் யமுனா நதியில் ஸ்நானம் செய்தாய் அந்த புண்யத்தால் நீ நற்கதியை அடைந்தாய். முதல் மாஸஸ்நான பலத்தால் நீ செய்த பாபமெல்லாம் அகன்றது. இரண்டாவது மாதஸ்நானத்தால் ஸ்வர்க்கம் கிட்டியது என்றான் எமதூதன். இதைக்கேட்டு வியந்த விகுண்டலன், ஐயா எச் செயல் நரகத்தை அளிக்கும். எது நற்கதி தரும் என்பதைவிளக்கிக் கூறுமென விநயத்துடன் வேண்டினான். வாக்கினாலும் மனதாலும் சரீரத்தாலும் எவருக்கும் எவ்வகையான ஹிம்ஸை செய்யலாகாது. அஹிம்ஸையை விட சிறந்த தர்மமில்லை. ஹிம்ஸையை விடகொடிய பாதகமில்லை. நம்ஜீவனை வளர்க்க இதர ஜீவனைக் கொல்வோர் காமு

ஸூத்ரமெனும் நரகம் செல்வர். நாய் மாம்ஸம் உணவாகவும் ரக்தமும் சீயும் பானமாகவும் அங்கு அளிக்கப்படும். மறு பிறப்பில் பூமியில் அங்கஹீநராகப் பிறப்பர். இந்திரியங்களை ஜயிப்பது, அக்நி, தேவ, அதிதி பூஜைசெய்தல், அங்கஹீநர்களைக் காப்பது, சேரில் சிக்கிய பசுவைக்காத்தல், ப்ராதஸ்நாநம் செய்தல், ஸத்யம் உரைத்தல், சாந்தமாகவும் பிரியமாகவும் பேசுதல் புண்யமாகும். ஸ்நாநம் செய்யாமல் புஜித்தால் மலத்தை உண்பது போலாம். ப்ராதஸ்நானத்தால் துஸ்ஸ்வப்நமகலும் திலதாநம் செய்வோர் யமபுரி செல்லார். க்ரூரமாகப் பேசுபவர் நரகம் செல்வர். கங்கா ஸ்நாநத்திற் கீடான புண்யம் வேறில்லை. பதினாறுப்ராணாயாமம் ப்ரதிதினம் செய்தால் ப்ருஹ்மஹத்தி பாபமும் அகலும். பிறர் பொருளைத்ருணமாவும் பிறர் மனைவியைத்தாயாராகவும் நினைத்தல் தர்மம். கோபத்தை ஜயித்தவனுக்கு பூமியிலேயே ஸ்வர்க்கம் கிட்டும். தாய் தந்தைக்குத்தக்க பணிவிடை புரிதல் உயர்ந்த தர்மமாகும். பக்தியும் பக்தரை ஆராதிப்பதும், ஸாளக்ராமத்தை அர்ச்சிப்பதும் சிவலிங்கத்தைப் பூஜிப்பதும் புண்யமாகும்.

பக்தன் ஸ்வர்க்கத்தில் ஸுகத்தை அனுபவித்து மறுபிறவியில் தனிகனாகப்பிறப்பான். சிவபக்தன் விஷ்ணுவை நிந்தித்தாலும் வைஷ்ணவன் சிவனை நிந்தித்தாலும் இருவரும் நரகம் செல்வர். ஏகாதசி யன்று உபவாஸ மிருப்போர் ஸத்புத்ரனைப் பெறுவர். பாதுகை குடை முதலியவைகளை அளித்தால் யமபாதை இராது. தினத்தைச் சூன்யமாகச் செய்யாமல் ஏதாவது சக்திக்கேற்றபடி ப்ரதிதினம் தானம்செய்யவேண்டும் புண்யகர்மா மற்றோர் புண்யகர்யாவைச் செய்யத்தூண்டும். நீ இதற்கு முன் எட்டாவது ஜன்மாவில் செய்த ஓர் புண்யத்தால் தனமுள்ளவைசயனாகப் பிறந்து யமுநாதீரம் சென்று ஸ்நாநம் செய்தாய். அப்புண்யம் யாதெனில் மதுவனத்தில் சாகுனி என்றோர் மஹர்ஷி இருந்தார். அவருக்கு ஒன்பது பிள்ளைகள் ஜனித்தனர். அதில் நால்வர் நாலாவதாச்ரமத்தை ஏற்று ஊரூராகத்திரிந்தனர். ஒரு

நாள் நீ அவர்களை அழைத்து அன்னமிட்டாய். இது சிறந்த புண்யம் என்றான் மேதாதன். இதனைக்கேட்டு அளவிலா ஆநந்தங் கொண்ட விகுண்டலன் தனது ஸஹோதரன் நற்கதி பெற ஓர் மார்க்கம் சொல்லுமென தூதனை வேண்டினான். ஒரு வேளை ஸன்யாஸி நம் க்ருஹத்தில் பிக்ஷை செய்தால் மரணம் வரையில் அஜ்ஜந்மாவில் செய்த பாபம் நீங்கும். ஆதலால் அப்புண்யத்தை உன் ஸஹோதரனுக்கு அளி என்றான். அங்ஙனமே அளித்து இருவரும் திவ்யதேஹம் பெற்று ஸ்வர்க்கஞ் சென்றனர்.

கங்கையின் மஹிமை.

கங்கையின் பெருமையைப் பரமசிவன் பார்வதி தேவிக்குரைத்தார். உமே! கலியில் எவ்வளவு பாவியானாலுங்கூட காசியில் வஸித்து கங்காஸ்நானம் செய்து அங்கே இறந்தானானால் அவனுக்கு நரகபாதனை கிடையாது. மறு பிறப்புமில்லை. ஸகலதேவர்களு மங்கு வஸிக்கின்றனர். கங்காஸ்நானத்தால் ஸகல புண்யபயனையும் பெறலாம். ஜன்மாந்தரத்தில் அபரிமிதமான புண்யம் செய்திருந்தாலன்றி கங்கையைக் காண்பதரிது. கங்காஸ்நானத்தால் ப்ருஹ்மஹத்தி முதலிய ஸகலபாபங்களும் அகலும். ஆங்கு பற்பல சிறிய தீர்த்தங்களுண்டு. பிசாசமோசநமெனும் தீர்த்தமொன்றிருக்கிறது. அங்கு ஓர் அஸுரன் புலி உருவந்தாங்கி மானைத்துரத்தினான். அம்மான் ஆங்குள்ள கபர்தீச்வர ஆலயத்தைச் சுற்றிவந்து புலியின்வாயில் சிக்கியது. அதனுடலிலிருந்து ஓர் ஜ்யோதிஸ் கிளம்பி பரமனது பாதாரவிந்தத்தில் லயித்தது. அந்த தீர்த்த கரையில் சங்குகர்ணர் என்ற ஓர் ரிஷி சங்கரனை அர்ச்சித்து வந்தார். அவரிடம் பசியால் மெலிந்த ஓர் ப்ரேதம் வந்து புண்ணியரே! முன்பிறவியில் யான் ஓர் அந்தணன். ஒரு புண்யமும் செய்தேனில்லை. ஆனால் விச்வேச்வரனை வழிவசமாக தர்சித்தேன். இப்பாப ஜன்மம் நீங்க ஓர் வழிசொல்லும் என்றது. இதனருகிலுள்ள தீர்த்தத்தில்

மூழ்கி இவரைத்தர்சனம் செய் என்றூர். அங்ஙனம் செய்து அது நற்கதி பெற்றது. சங்குகர்ணரும் பரமனது ஸாக்ஷாத்காரத்தைப் பெற்றூர். வாக்குக்கும் மனதிற்கும் எட்டாத மஹிமையுள்ள இக்காசியின் மஹிமையை யவரே சொல்ல முடியும்? தனிப் புராணத்தின் மூலம் இதைக்கேட்டறி என்றூர் பரமசிவன். யமுனையுங் கங்கையும் கூடுமிடம் ப்ரயாகையாம். அங்கே ஸரஸ்வதி அந்தர்வாஹினியாகச் செல்கிறுள். அங்கே ஸ்நாநம் செய்வோர் கோரிய பலனைப்பெறுவர். ப்ரயாகை என்ற இடம் பூதேவியின் ஜகநபாகமாம்.

ப்ருஹ்மசாரிதர்மம்.

எட்டாவது வயதில் ப்ராஹ்மணன் உபநயநம் செய்துகொள்ளவேண்டும். பலாசதண்டம், மௌஞ்சி, க்ருஷ்ணாஜிநம் முதலியவைகளைத் தரிக்க வேண்டும். அன்றன்று பிக்ஷை எடுத்து குருவுக்குக்காட்டி புஜிக்கவேண்டும். ப்ராதஸ்நாநம் செய்து ஸந்த்யா ஜபங்களைச் செய்ய வேண்டும். இரண்டு வேளையும் ஸமிதாதாநம் செய்து குருவைநமஸ்கரிக்கவேண்டும். ப்ரத்யபிவாதநம் சொல்லத்தெரியாதவர்களுக்கு அபிவாதநம் சொல்லாமல் நமஸ்காரம் மட்டில் செய்ய வேண்டும். ப்ரத்யபி வாதநமாவது, ஆயுஷ்மான் பவஸௌம்ய! என்று கூறி நமஸ்கரிப்பவன் சர்மாவைச் சொல்லி கடைசி எழுத்திற்கு முன் ப்லுதம் என்ற மூன்று மாத்ராகாலம் நீட்டி, கடைசியில் அ. என்று கூறுவதாம். குரு தந்தை ஜ்யேஷ்ட ப்ராதா மாமன் பிதாமஹன் மாதாமஹன் மாமனூர் இவர்கள் குருவாவர். இவர்களைக் கண்டவுடன் எழுந்து நமஸ்கரித்து ஆஸநமளிக்க வேண்டும். அவர் எதிரில் உட்காரக் கூடாது. அவருடன் வாதம் செய்யலாகாது. தாய் மாதாமஹி குருபத்நீ தாயுடனும் தந்தையுடனும் பிறந்தவள் மாமியார் பிதாமஹி ஜ்யேஷ்ட ஸஹோதரீ. இவர்களும் குருவே ஆவர் இதில் தாயே சிறந்த தைவம்.

பிக்ஷை எடுத்து புஜித்தல் உபவாஸத்திற்கு ஸமமாகும். ஸாதுக்களது வீட்டில் பிக்ஷைஎடுக்க வேண்டும், காலலம்பி ஆசமநம் செய்து சுத்தமான இடத்தில் கிழக்கு முகமாக உட்கார்ந்து புஜிக்கவேண்டும். போஜனம் தூக்கம் ஸ்நானம் வழிநடத்தல்வஸ்த்ர முடுத்தல் ஜலமலங்கழித்தல் வாந்தி எடுத்தல் வேதாரம்பம் முதலிய கார்யங்களில் ஆசமனம் செய்ய வேண்டும். குருவிற்கு எதிர் முகமாக இருந்து உபதேசம் பெறவேண்டும். அவருக்கு ஸமமான ஆஸநத்தில் உட்காரக்கூடாது. குருநிந்தையைக் காதால் கேட்கக் கூடாது.

குருவின்பாதுகை ஆஸநம். படுக்கை முதலியவைகளை உபயோகிக்கக்கூடாது. குருவின் வஸ்த்ரத்தைத் தோய்த்து ஸமித் தர்ப்பை புஷ்பம் சந்தனம் முதலியவைகளைக் கொண்டு கொடுத்து அவருக்குப் பணிவிடை செய்யவேண்டும். போக்யமானமாலை சந்தநம் கண்ணாடி ஸங்கீதம் முதலியவைகளை உபயோகிக்கக் கூடாது. யுவதியாக இருந்தால் குருபத்நியின் காலைத்தொட்டு நமஸ்கரிக்கக்கூடாது. வேதத்தை அர்த்தத்துடன் உணர்ந்து அங்கங்களையும் கற்று ஸம்பூர்ணமாக குருதக்ஷிணை அளிக்க வேண்டும்.

பொது தர்மம்.

எச்சக்கையுடனும் தலையில் துணியை போட்டுக்கொண்டும் எவருடனும் பேசக்கூடாது. எண்ணெயிலும் ஜலத்திலும் நம் நிழலைப் பார்க்கலாகாது. தன்னைத்தான் அவமதிக்கக் கூடாது. ஒருநதியில் ஸ்நாநம் செய்யும்போது மற்றோர் நதியைப்பற்றி பேசலாகாது. வஸ்த்ரமில்லாமல் ஸ்நாநம் செய்யக்கூடாது. மடியில் வைத்துக்கொண்டு எதையும் புஜிக்கலாகாது. காலால் காலைத் தேய்க்கலாகாது. வெங்கல பாத்ரத்தால் காலை அலம்பக் கூடாது. தேவாலயத்தை அப்ரதக்ஷிணமாகச் சுத்தக்கூடாது. பூஜை வைச்வதேவம் செய்யாத வீடு குருவின் வீடாக இருந்தாலும் அங்கு புஜிக்கலாகாது. நடன் விடன் முதலியவர்கள்

பொருள் சுத்தமானதல்ல. இரவில் தயிரையும் எள்ளையும் புஜிக்கலாகாது. பசு முகர்ந்ததும் நாய் முகர்ந்ததும் சண்டாளன் தூரஸ்த்ரீ பதிதன் முதலியவர் பார்த்ததுமான அன்னத்தைப் புஜிக்கக்கூடாது. தானம் தனத்தையும் அளிக்கவல்லது. மனிதனுக்கு வேதங்கூறிய ஆயுள்காலம் நூறுவர்ஷமாகும். இதை நான்காகப் பிறித்து, ப்ருஹ்மசர்யம் கார்ஹஸ்த்யம் வாநப்ரஸ்தம் ஸன்யாஸம் என்ற நாலு ஆச்ரமத்தையும் நாலுபாகத்திலும் ஏற்க வேண்டும். விஷ்ணுபக்திக்கு ஈடான தர்மம் வேறில்லை. புராணம் விஷ்ணுஸ்வருப மாதலால் அதைக்கேட்பது சிறந்த புண்யமாகும்.

பூமிகண்டம் 125 அத்யாயம்.

ப்ரஹ்லாதன் பூர்வசரிதம்.

மேற்கு ஸமுத்ரத்திற்கருகில் த்வாரகை என்றோர் பட்டணமுண்டு. அங்கு சிவ சர்மா என்று ஓர் அந்தணரிருந்தார். அவர் கல்வியில் சிறந்தவர். அவருக்கு ஐந்து பிள்ளைகள் பிறந்தனர். யக்ஞசர்மா வேதசர்மா தர்மசர்மா விஷ்ணுசர்மா ஸோமசர்மா என்பது அவர்கள் பெயராகும். ஐவரும் தந்தை தாயிடம் பேரன்பு பூண்டவர்கள். இவர்களது பித்ருபக்தியைப் பரீக்ஷிக்க வேண்டுமென எண்ணினர் தந்தை. தனது தவ வலிமையால் தன் மனைவிக்குத் தாங்க முடியா ஜ்வரத்தை வரவழைத்து விரைவில் அவள் இறக்கும்படி செய்தார். புதல்வர்கள் தாயின் பிறிவை ஸஹியாமல் கதறினர். தந்தை, யக்ஞசர்மாவை அழைத்துக் கோடரியால் அவள் உடலைத் துண்டு துண்டாக வெட்டி எங்கேனும் எறி என்றார். விதிப்படி ஈமக்கடனைச் செய்ய தாயின் உடலை விதிப்படி தீயிலிடுதலன்றோ தர்மம். ஆயினும் தந்தை சொல்மிக்க மந்திரமில்லை. என்றெண்ணி யக்ஞசர்மன் அங்ஙனமே செய்தான்.

இரண்டாம்புதல்வனை அழைத்து! குழந்தாய் இன்று காலை தாசி வீதியில் ஓர் வேசியைக் கண்டேன். அவளை அழைத்துவா என்றார் பிதா. அருமையான தன் தாய் இறந்ததற்குச் சற்றேனும் வருந்தாமல் வேதவிதியை மீறி வேசி மீதிலாசை கொண்ட தகப்பன் செயல் இவருக்கு ஆச்சரியத்தையும் துன்பத்தையும் விளைவித்தது ஆயினும், தந்தையின் ஆணையே வேதமெனக் கருதிவேசி வீடு சென்றானவன். தனது பிதாவின் விருப்பத்திற்கிணங்கும்படி அவளை வேண்டினான். தாஸியோ இவ்விளங்குமாரனைப் பார்த்து, கைநிறைந்த காசைவிட கண்ணுக் கிசைந்த கணவனன்றோ கட்டழகி வேண்டுவது? உன்னோடு கூடிக் குலாவி சிற்றின்பம் பெருவேனேயன்றி உனது கிழத்தந்தையைக் கண்ணெடுத்தும் யாரேனென்றாளவள். அம்மணீ உன்னைத் தாயாகக் கருதினேன். நீ கேட்பதை எல்லாம் அளிப்பேன். என் தந்தையின் சொற்படி நட என்றான் வேதசர்மன். ஆயின் இந்த்ரான் முதலிய தேவர்களை என் முன்னழைத்துக் காட்டு மென்றாள் வேசி. உடனே இச்சிறுவன் நான் உண்மையாக தாய் தந்தையாரிடம் அன்பு கொண்டிருந்தால் தேவர் இவள் எதிரில் தோற்றட்டு மென்றான். அங்ஙனமே தேவர் தோன்றி மறைந்தனர். இதைக் கண்டும் என் மனம் ஆநந்தமடையவில்லை. உன் சிறத்தை நீயே அறுத்து எனக்களித்தால் உன் தந்தை விருப்பத்திற்கிசைவே னென்றாளவள். தந்தையின் பொருட்டு தன்னுயிரை அளிக்க தனக்கோர் ஸமயம் நேர்ந்ததே என்று ஸந்தோஷித்தான். தங்கு தடையின்றித் தலையை அறுத்துத் தந்தான். அவளும் அத்தலையுடன் சிவசர்மாவிடம் சென்று அவனிஷ்டப்படி நடந்தாள்.

மூன்றாம் புதல்வனை அழைத்து, உன் ஸஹோதரன் தலை இதோ இருக்கிறது, இதை எடுத்துக்கொள் என்றார் பிதா. தர்மசர்மா இந்த விருத்தாந்தத்தை அறிந்து தாயும் ஸஹோதரனும் இறந்தனரே! தந்தையின் செயல் விந்தையா இருக்கிறதே! என்று எண்ணி வருந்தினான். ஆயினும் தந்தை சொல்லை மறுக்கும்

தனயன் தநயனுகான் என்று எண்ணி அச்சஹோதரன் தலையைக் கையிலேந்தி நான் பித்ருபக்தன் என்பது ஸத்யமானுல் உடனே என் ஸகோதரன் ஜீவிக்கட்டு மென்முன். உடனே வேதசர்மா உயிருடனெழுந்தான். நாலாவது புத்ரனுன விஷ்ணுசர்மாவை அழைத்து பிதா இந்த்ரலோகம் போய் அமிருதங் கொண்டுவா அதை உண்டு யுவாவாக இருந்தால்தான் என்னிடம் இவ்வேசி ஆசை கொள்வாள் என்முர். தந்தையின் திருவடியை வணங்கி விஷ்ணுசர்மா தேவலோகஞ் சென்முன்.

இந்திரனது இஷ்டத்திற்கிசைந்து மேனகை இவரை மயக்கினுள். அவளது முயற்சி பயன் பெருதொழிந்தது. மற்றும் பல பயங்கரமான விக்நங்களைச்செய்து பார்த்தான் இந்த்ரன். சர்மாவினதுபமுத்த பித்ருபக்தியின் எதிரே ஒன்றும் நிற்க முடியவில்லை. இந்த்ரனது ஈனச் செயலைக்கண்டு கனல்போல் சர்மாவுக்குக்கோபம் கொழுந்து விட்டுக் கிளம்பியது. இவ்விந்த்ரனை அழித்து வேறு ஓர் இந்த்ரனைப் படைப்பேனெனக் கூறினுர். உடனே உடல் நடுங்க ஓடி வந்தான் இந்த்ரன். ஸ்வாமி! தங்களது பித்ருபக்தியைப் பரீக்ஷிக்க எண்ணி இங்ஙனம் செய்தேன். அமிருத கலசத்தை ஏற்று எனது குற்றத்தை மன்னியு மென்முன். அதைப் பெற்று தன் தந்தையினிடம் வந்த விஷ்ணுசர்மாின் தளராத பித்ருபக்தியைக் கண்டு களித்து, மைந்தா உனது பக்திக்குப் பரவசமானேன். நீ வேண்டுவது என்ன ? என்முர் பிதா. தந்தையே என்பால் தங்கள் உள்ளம் குளிர்ந்தால், என்னருமைத்தாயை எழுப்பித்தாரும் என்முன். அப்படியே எழுப்பி பரீக்ஷையில் முதன்மையாகத் தேறிய நாலு மைந்தருக்கும் வைகுண்டம் செல்லும்படி வரமளித்தார்.

ப்ரஹலாதனுடைய பூர்வஜன்மம்

ஐந்தாம் குமாரனுன ஸோமசர்மாவை அழைத்து குழந்தாய்! உன் தாயுடன் யான் தீர்த்த யாத்திரைக்குச் சென்று வருகிறேன். அமிருத கலசத்தை ஜாக்ரதையாகக் காப்பாற்றி என்னிடமளிக்க

வேண்டும் என்று கூறி வெளியிற் சென்றார். பத்தாண்டிற்குப் பிறகு திரும்பிவந்தார். இக்கடைவனைப் பரீக்ஷிக்க தாயுடலிலும் தன்னுடலிலும் அங்க மழிஇச் சீயொழுகும் தொழுநோயை உண்டு பண்ணிக் கொண்டார். இந்நிலையிலுள்ள தந்தை தாய்க்கு மனம் நோகாமல் முகங்கோணாமல் அன்புடன் பணிவிடை செய்தானவன். அவன் எவ்வளவு நன்றாகச் செய்தாலும் அது குற்றம் இது குற்றம் என அவன் மேல் சீறி விழுவார். கடிந்து சிந்திப்பார். பல முறைத் தடி கொண்டும் புடைப்பார். ஒன்றுக்கும் வாய் திறவாமல், ஜகதீச! குற்ற மற்ற என் பெற்றோர் குணமடையாரோ? பிணி நீங்காதோ? பாபிக்கண்ணால் இப்பெரியோரை முன்படி காண்பேனோ எனக் கதறுவான். இங்ஙனம் இரவும் பகலும் நூராண்டு தொண்டு புரிந்தான். ஒரு நாள் தானளித்த அமிருதத்தை மாயையால் மறைத்து விட்டு, மைந்தா! உன்னிடமளித்த அமிருதத்தைக் கொண்டுவா, அதை அருந்தினால் இப்பிணி அகலுமென்றாரவர்.

உடனே ஓடி அமிருதகலசத்தைப் பார்த்தான். அது சூன்யமாக இருந்தது. ஹா! தைவமே! என்ன சோதனை இது? யான் செய்த பாபமோ இது? கொடுத்த அமிருதத்தை இல்லை என எங்ஙனம் கூறுவது? என சிந்தை நொந்து ஈசா! முக்கரணங்களாலும் யான் பித்ருபக்தி செய்வது ஸத்யமானால் அதற்குப்பயனிருக்குமானால், இக்கலசம் அமிருதத்தால் நிரைந்திருக்கட்டும் என்றான். அங்ஙனமே அடுத்த க்ஷணத்தில் கலசத்தில் அமிருதம் நிரைந்தது. தந்தையினிடம் அதைக் கொடுத்தான். அளவில்லாது ஸந்தோஷமடைந்தாரவர். எனது நோயை நானே தருவித்து அமிருதத்தையும் அபஹரித்து உன்னைப் பரீக்ஷித்தேன். உன்னை விடச்சிறந்த புத்ரன் உலகில் இரான் என்று கூறி முன்போலவே தம் உடலை நோயில்லாமல் காண்பித்து ஆசீர்வதித்தார். தனது தபோ மஹிமையால் சிவசர்மாவும் மனைவியும் வைகுண்டம் சென்றனர். பல வருடகாலம் பகவத்யானத்திலீடுபட்டான் ஸோமசர்மா. அவன்

உடலை விடும்தருவாயில் அவ்வாசரமத்திலுள்ளோர் அரக்கர்களால் பிடிக்கப்பட்டு தைத்யர் தைத்யர் எனக் கூவினர். சர்மாவின் உள்ளம் தைத்யனை நினைத்தது. உடலை விடும்போது எதை நினைக்கிறோமோ அதையே மறுஜனனத்தில்பெறுவோம் என்பது சாஸ்த்ரமுறை. ஆகவின் ஸோமசர்மா ஹிரண்யகசிபு எனும் தைத்யனுக்குப் புதல்வனாகத் தோன்றினார். இவரே ப்ரஹ்லாதன். தேவாஸுர யுத்தத்தில் மஹாவிஷ்ணு ஹிரண்யகசிபுவைக்கொன்று இவனுக்கே இந்த்ர பதவியை அளித்து முடிவில் தன் திருவடியில் சேர்த்துக்கொண்டார்.

ஆத்மா மோஹவலையில் சிக்கிய கதை

மஹாவிஷ்ணு நரஸிம்ஹாவதாரம் செய்து ஹிரண்யாக்ஷனையும், வராஹாவதாரம் செய்து ஹிரண்யகசிபுவையுங் கொன்றார். இவர்களது தாயான திதி தன்பதியான காச்யபரிடம் சென்று புதல்வரிறந்த துக்கத்தால் கதறினாள். அவள் மனதைத் தேற்ற காச்யபர் தத்வார்த்தம் நிரைந்த இக்கதையைக்கூறலானார்.

பெண்ணே! உன் மக்கள் இறந்ததும் நீ அழுவதும் ப்ராந்தியன்றோ! ஆத்மாவிற்கு அழிவேது? உடலன்றோ அழிவது. ஆத்மா சுத்தமானவன். அவனது ஆப்த நண்பர்கள் ஞானனும் த்யானனும். ஒரு ஸமயம ஆத்மா வெகு தூரத்தில், ஐவர்பேசுவதைக்கண்டு, அவர் யார்? என அறிந்து வரும்படி ஞானனுக்குக் கட்டளையிட்டான். ஞானன் ஐயா! அவர்களைப்பற்றி உமக்கேன் விசாரம்? அவருடன் சேர்ந்தால் மோஹந்தான்றி சரீரமெனும் பந்தத்துடன் கர்ப்பவாஸந்தான் நேரும். த்யானன் என்ற நண்பனுடன் கலந்து பேசாமலிரு மென்றான்.

அதற்குள் அவ்வைவரும் புத்திஎனும் தூதியை அனுப்பினார்கள். அவள் வந்து ஞானத்யானர்களை விட்டுவிட்டு ஐவருடன் சேரும்படி வேண்டினாள். இதைப் பல

மாக ஞாநத்யாநர்கள் ஆக்ஷேபித்து, அவர்களால் உமக்குட் பெருங்கேடு விளையும் என்றனர். புத்தி அவர்களிடமிதை அறிவித்து அவ்வைந்து பூதங்களுடன் ஆத்மாவிடம் வந்தாள். ஆத்மா ஒவ்வொருவரையும் நீ யார்? உன் யோக்யதை யாதென வினவினார்.

பூமி, தான் சரீரத்தில் தோல், மாம்ஸம் முதலியவைகளை விருத்தி செய்வதாகவும் மூக்கென்பவன் தன் கிங்கரன் என்றும் கூறியது. ஜலம், தான் சுக்ரம், மஜ்ஜை, ரக்தம் முதலியவைகளை வளர்ப்பதாகவும். நாக்கு தன் பணியாளன் என்றும் சொன்னது. ஆகாசம் தான் சூன்யமாக இருந்து காதெனும் தன் வேலைக்காரனுடன் உடலுக்குதவி செய்வதாகச் சொன்னது. வாயு மூச்சுவிட்டு த்வக்கெனும் வேலைக்காரனுடன் சரீரத்தை ரக்ஷிப்பதாகச் சொல்லிற்று. ஐந்து புலன்களும் தனித்தனியாக தனது பெருமையைக் கூறின. தங்களது நட்பால் ஆத்மாவிற்கோர் அழகிய வீடு கிடைக்கும், அங்கு ஸுகமாக வஸிக்கலாமென்றன.

இதைக்கேட்டு ஆத்மா தனது நண்பர்களான ஞாநத்யானர்களை விட்டு இவ்வைவர் மோஹவலையில் சிக்கினான். அவர்கள் ஆத்மாவுக்கு சுக்ல சோணித ஸம்பந்தமான கர்ப்பமெனும் சிறு வீட்டைத்தாயின் வயிற்றில் காட்டினர். ஓர் புரம் மல மூத்ர நாற்றமும் மற்றோர் புரம் ஜாடராக்நியின் சூடும் பொருக்கமுடியாமல் ஆத்மா கஷ்டப்பட்டான். நண்பர் சொல்லை ஏன் மறுத்தேன் என ஏங்கினான். நண்பரை வருந்தி அழைத்தான். பழைய நட்பால் ஞானனும் த்யாநனும் அவனருகே வந்தனர். கர்ப்பமெனும் காராக்ருஹத்திலிருந்து விடு பட்டால் இவ்வைவரையும் விட்டு முன்போல் நண்பருடன் வாழ்வதாகச் சொன்னாத்மா. ப்ரஸவகாலம் வந்தது. ஓர்வாயு தலைகீழாக இக்கர்ப்பத்தைப் புரட்டிக்கீழே தள்ளிற்று. யோநித்வாரம் இருபத்து நான்கு அங்குலம் வாசற்படி

அளித்தது. உடலோ இருபத்தைந்து அங்குலம் அளவுள்ளது. ஆதலால் மிக்கச்ரமத்துடன் பூமியில் விழுந்தது.

உடனே ஆத்மாவை மோஹம் சூழ்ந்தது. நண்பர் அகன்றனர். காமம், குரோதம், லோபம், மதம், மோஹம், மாத்ஸர்ய மெனும் சத்ருக்களினிடையே அகப்பட்டுக்கொண்டான். இவன் மனைவி மக்களை தன்னுடைய தென்றெண்ணினன். புத்ரசோகம், வியாதி, மனோவ்யாதி, கிழத்தனம் முதலிய துன்பங்களால் கஷ்டப்பட்டான். இக்கஷ்டங்களில்லாமலிருக்கக் கடவுளை வேண்டினன்.

தற்செயலாக வஸ்த்ரமில்லாத புருஷன் ஒருவன் எதிரில் வர நீ யார் என்றனாத்மா. தான் வைராக்யன் என அவன் கூற, என் துக்கமகல நீ ஓர் வழி சொல்லாயோ? என்று ஆத்மா வேண்டினன். வைராக்யம் தனது ஸஹோதரனை விவேகனை அழைத்து ஆத்மாவிடம் அனுப்பினன். அந்த விவேகன் சாந்தி, கடமை என்ற மூத்த புதல்வரும், தாரணை புத்தி எனும் இரு பெண்களும் சூழ, மோக்ஷமெனும் குருவுடன் ஆத்மாவின் எதிரில் தோன்றினன். தான் பந்தத்திலிருந்து விடுபட வழியைக்கேட்டானாத்மா. பழையநண்பர்களான ஞான த்யானாதிகளை அழைத்தான். இவர்களைக் கொண்டு ஆத்மா மோஹத்தை உதரித்தள்ளி மோக்ஷஸுகத்தைப் பெற்றான்.

ஸோம சர்மா

ரேவாநதிக்கரையில் வாமநதீர்த்தம் என்றோரிடமுண்டு. அங்கு கௌசிககுலத்தில் உதித்த ஸோம சர்மா என்றோர் பிராமணனிருந்தான். அவனது மனைவி ஸுமநா என்பவள். இருவரும் ஏழ்மையாலும் புத்ரபாக்யமில்லாமையாலும் மிக்க வருந்தினர். ஒருநாள் சர்மா எப்பாபத்தினால் தநமும், தநயனும் நமக்குண்டாகவில்லை

என்று கேட்க மனைவி, தர்மஸ்வரூபத்தையும் அதர்மத்தையும் விளக்கிக் கூறி வந்தாள். தர்மதேவதையைக் கண்ணால் கண்டவர் எவரேனுமுளரோ என்று பதி வினவ, மனைவி கூறலானாள்.

ஸ்வாமி! தூர்வாஸரும் தத்தாத்ரேயரும் லக்ஷ மாண்டுகள் கடுந்தவம் புரிந்தனர். கடவுள் கண்முன் தோன்றாததால் கடுங்கோபங்கொண்ட தூர்வாஸர் தர்ம தேவதையைச் சபிக்க ஆரம்பித்தார். அதை உணர்ந்து தர்மதேவதை அநந்த தர்மங்களையும் ஸ்வரூபத்துடன் அழைத்துக்கொண்டு சாந்தி, அஹிம்ஸை, தயை முதலிய பெண் தேவதைகளுடன் ப்ரத்யக்ஷமாக தூர்வாஸர் முன்னே தோன்றிற்று. முனிவரே! ஏன் கோபங் கொள்கிறீர்? கோபம் தவத்தைக் கெடுக்கும் என்றது தர்மம். தூர்வாஸர் "நீ யார்" என்று கேட்க தர்மம் தன் ஸ்வரூபத்தையும் வந்தவர்கள் ஸ்வரூபத்தையும் விளக்கிக் கூறிற்று. லக்ஷம் வர்ஷமாக யான் காயக்லேசம் செய்து கடுந்தவம் புரிய இதுவரை நீர் எதிரில் வராததால் க்ஷத்ரியனாகவும் சூத்ரனாகவும் சண்டாளனாகவும் பிறக்கக்கடவீர் என சபித்தார். அதன்படி தர்மராஜனாகவும், விதுரராகவும், ஹரிச்சந்த்ரனை விலைக்குவாங்கிய சண்டாளனாகவும் தர்மம் தரணியில் தோன்றியது. அச்சமயம் தத்தாத்ரேயரும் தூர்வாஸரும் தர்மதேவதையைக் கண்ணால் கண்டனர். என்றாள் ஸுமநா. இந்த தர்மங்களை நீ எப்படி அறிந்தாய் என சர்மா வினவினார்.

நாதா! எனது தந்தை ச்யவன னெனப்படுவர். எனது இளமையில் கௌசிக வம்சத்தில் பிறந்த வேதசர்மா என்றோர் வேதியர் வாடிய வதனத்துடன் என் தந்தை யருகே வந்தார். துக்கத்திற்குக் காரணம் யாதென என் தந்தை வினவ புத்ரபாக்யமில்லாமையே என அவர் பதிலுரைத்தார். இதனிடையே அங்கு ஓர் ஸித்த புருஷர் தோன்றி தர்ம ஸ்வரூபத்தை நன்கு விளக்கினார். அடியாளுமங்கிருந்து கேட்டதால் யானதை அறிந்தே

னென்றாள். ஸுமநா! ஆனால் நன்று; எனக்கு தர்மோபதேசம் செய் என்று கணவன் கூற, அவள் காந்த! அடியாள், தைவ வடிவமான புருஷனுக்குரைத்தல் நன்றல்ல. வஸிஷ்டரை அடுத்து அறிவீராக என்றாள். அதே போல் வஸிஷ்டரை வணங்கி ஸோமசர்மா தர்மோபதேசம் பெற்று தனது ஏழ்மைக்கும் புத்ரனில்லாமைக்கும் காரணம் யாதெனவினவினான். ஞான திருஷ்டியாலறிந்து வஸிஷ்டர் கூறலானார் முனிவரே! நீர் முற்பிறவியில் ஓர் உழுதுண்டு வாழ்ந்த சூத்ரனாயிருந்தீர் பலவகையால் பணந்தேடினீர். கினவிலும் ஓர் தர்மம் செய்யாமலிருந்தீர். உமது தந்தைக்கு ச்ராத்தமின்று என உன் மனைவி கூறுவாள். அதைச்செய்தால்செலவாகுமே என்று அவள் வார்த்தையைக் கேளாதவர் போல் வெளியூர் செல்வீர். தேடிய பொருளைப் பூமியில் புதைத்து வைத்தீர். மனைவி மக்கள் கேட்கும்போதும் நீர் கொடுக்கவில்லை. தனமிருந்தும் ஸத்பாத்ரத்தில் தானம் செய்யாததால் ஏழையாகப் பிறந்தீர். பித்ரு சிராத்தத்தை விட்டதால் புத்ரன் பிறக்கவில்லை என்றார்.

நான் பிராஹ்மண ஜன்ம மெடுத்ததற்குச் செய்த புண்யம என்ன? என்று ஸோமசர்மா கேட்க வஸிஷ்டர் கூறலானார். முன் ஓர் பிறவியில் தீர்த்தயாத்திரைக்குச் சென்ற விஷ்ணுபக்தர் ஒருவர் உன் வீட்டிற்கு வந்தார். அவருக்கு அர்க்யம் பாத்யம் முதலியவைகளை அளித்து அவரைப்பூஜித்தாய் அவருக்குச் செய்த நல்விருந்தால் அவர் செய்தபுண்யத்தில் பாதி உனக்கு வந்தது. உனது பக்தியைக் கண்டுகளித்த அந்த ஸாது உன் வீட்டில் தங்கி, ஏகாதசியன்று உபவாஸமிருந்து பஜனை செய்தார். நீயும் அவருடன் உபவாஸமிருந்தாய். அந்த மஹிமையால் நீ இப்பிறவியில் ப்ராஹ்மணனாகப்பிறந்தாய். மஹா விஷ்ணுவைப் பூஜித்தால் அவர் அருளால் ஸத்புத்ரனையும் செல்வத்தையும் பெறுவாய் என்று வஸிஷ்டர் உபதேசித்தார்.

ஸோமசர்மா தன் மனைவியுடன் ஐம்புலன்களை யுமடக்கி பகவானைக் குறித்து தவம்புரிந்தார். இவரது பக்திக்கிணங்கி பகவான் எதிரில் வந்து யாது வரம் வேண்டுமென்றார். முதலில் விஷ்ணுபக்தியையும் பின்னர் ஸத்புத்ரனையும் வேண்டினார். அதை அளித்து பகவான் மறைய ஒரு நாள் வெள்ளானை மீதேரி ஒருவன் தன் வீட்டில் நுழைவதைக்கண்டு சர்மா உள்ளே செல்ல எவரோ தனக்கபிஷேகம் செய்து மறைந்ததாக மனைவி சொன்னாள். பகவானது அநுக்ரஹத்தால் ஸோமசர்மாவுக்குக் குழந்தை பிறந்து வளர, அதற்கு ஜாதகர்மா முதல் விதிப்படி ஸகலகர்மாக்களையும் பிதா செய்தார். அதற்கு ஸுவ்ரதன் என்று பெயரிட்டார். அது கர்ப்பத்திலிருக்கும் பொழுதும் பூமியிற் பிறந்த பிறகும் எப்போதும் விஷ்ணு பக்தியில் ஈடுபட்டிருந்தது.

ஏனெனில் அக்குழந்தை முன் பிறவியில் ருக்மாங்கதன் புதல்வனாயிருந்து, தந்தையின் ஏகாதசி விரதம் கெடாதிருக்க மோஹினிக்குத் தன் தலையைக் கொடுத்த தர்மாங்கதன் ஆதலால் அந்த வாஸனையால் இப்பிறவியிலும் விஷ்ணு பக்தனாகவே இருந்தது. ஸுவ்ரதனெனக் காரணப் பெயர் பெற்ற இவன் ஏகாந்தத்தில் உட்கார்ந்து பகவானை நோக்கித் தவம் புரிந்தான். அவன் எதிரிற்றோன்றிய எம்பிரான் உனக்கென்னவரம் வேண்டும் என்றார். இச்சரீரத்துடன் நானும் எனது தந்தை தாயும் வைகுண்டம் செல்ல வேண்டுமென்றான். அங்ஙனமே அவர் வரமளிக்க ஸோமசர்மா, ஸுவ்ரதன், ஸுமனா என்ற மூவரும் பதினாயிரமாண்டு வைகுண்டத்தில் வஸித்துப் பேரானந்தம் பெற்றனர். இரண்டு கல்பம் சென்றபின் ஸுவ்ரதன் இந்த்ரனாகப் பிறந்தான்.

இந்த்ரன்

ஹிரண்யாக்ஷ ஹிரண்யகசிபு என்ற புத்ரர்களிறந்த பிறகு திதி தன் பதியான காச்யபரை வணங்கி; இந்த்ரனைக் கொல்லும்படியான ஓர் புத்ரனை அநுக்ரஹம்

செய்யவேண்டும் என்றாள். அங்ஙனமே அவரருளால் பலன் என்ற ஓர் அரக்கன் பிறந்தான். இவன் தவம் செய்து வரம் பெற்று இந்த்ரனைக் கொல்லப் போவதை அறிந்து அதிதி தன் புதல்வனான இந்த்ரனைத் தன்னை ரக்ஷித்துக் கொள்ளும்படி கூறினாள். தக்க ஸமயம் பார்த்திருந்த தேவேந்தரன் பலன் ஸமுத்ரக்கரையில் ஜபம் செய்யும் போது வஜ்ராயுதத்தால் அவனைக்கொன்றான். இதை அறிந்த திதி மிகவருந்தி, தன் பர்த்தாவினிடம் சொன்னாள். அவர் கடுங்கோபத்துடன் தன் ஜடாமண்டலத்திலிருந்து ஓர் கேசத்தை எடுத்து அக்னியில ஹோமம் செய்தார். அங்கிருந்து பயங்கரமான உருவத்துடன் ஓர் அஸுரன் கிளம்பினான் அதன் பெயர் வ்ருத்ரன்.

இந்த்ரனைக்கொல் என தந்தை தாய்கூற, தவத்தினால் தக்கபலம் பெற்று இந்த்ரனைக்கொல்ல எண்ணி வ்ருத்ரன் தவம் புரிந்தான். இதைச் சாரணர் மூலமுணர்ந்தான் இந்த்ரன். ஸப்தரிஷிகளை அழைத்துப் பாதி இந்திர பதவி அளிப்பதாகக் கூறி வ்ருத்ரனிடம் ஸந்தி செய்யும்படி அநுப்பினான். தன்னை வஞ்சித்தால் என் செய்வதென்று வ்ருத்ரன் கேட்க ப்ருஹ்மஹத்திபாபத்தை அடைவதாக இந்தரன் சொன்னான். தேவர்கள் இந்த்ரனது ஸிம்மாஸநத்தில் வ்ருத்ரனை உட்காரவைத்து அபிஷேகம் செய்து வைத்தனர். இந்த்ரனைப்போல ஸகல வைபவங்களுமவனுக்கு அளிக்கப்பட்டன. இருவரும் ஸ்நேஹிதர் போல் வாழ்ந்தனர். தேவேந்த்ரன் வ்ருத்ரனைக் கொல்ல வழிதேடிக் கொண்டே இருந்தான். ரம்பையை அழைத்து அவனை மயக்கும்படிச் சொன்னான். நந்தவநத்தில் அவள் அழகாகப் பாடி ஊஞ்சலாடுவதைக்கண்டு வ்ருத்ரன் அவளை மணக்க ஆவல் கொண்டான். தன் சொல்லைத்தவறாமல் கேட்பதாயின் தானவனிஷ்டப்படி நடப்பதாக ரம்பை கூறினாள். அங்ஙனமே ஏற்று இருவருங் கூடிக்குலாவி இருந்தனர். அச்சமயம் மதுவை அருந்தும்படி ரம்பை வேண்ட, ப்ருஹ்மபுத்ரனான தான் குடிக்கத்தகாதென

விருத்ரன் கூறியும் அவள் நிர்ப்பந்திக்க, மோஹத்தினல் மதுவை அருந்தி மயங்கிக் கிடந்தானவன். அத்தருணம் பார்த்து இந்த்ரன் வஜ்ராயுதத்தால் அவனைக்கொன்றான்.

முன்செய்த ப்ரதிக்ஞைப்படி ப்ருஹ்மஹத்தி தோஷத்தால் பீடிக்கப்பட்டானிந்திரன். இத்தோஷத்தை மரம், ஜலம், பூமி, பெண்மக்கள் என இந்நால்வரிடமும் பிரித்துக் கொடுத்தான். அவர்கள் இதற்கு பதிலாக வரங்களை வாங்கிக்கொண்டனர் தன்னைவெட்டினலும் தான் வளர வேண்டுமென்பது மரத்தின் வரம். மரத்திலிருந்து வெளி வரும் பால் மரமேற்ற ப்ருஹ்மஹத்தி பாபமாம். ஜலம் தன்னைப் பிரித்தாலும் தானே கூடிவிட வேண்டுமென வரம் பெற்று நுரை வடிவமான தோஷத்தை ஏற்றது. பூமி தன்னிடம் தோண்டப்படும் பள்ளம் தானே தூர்ந்து போக வரம் பெற்று களர் பூமிவடிவமான தோஷத்தை ஏற்றது. பெண்கள் ப்ரஸவிக்கும் வரை புருஷ ஸங்கமம் வேண்டுமெனவரம் பெற்று மாதவிடாய் என்ற தோஷத்தை ஏற்றனர்.

தன்னிருமக்களுமிறந்த துன்பத்தால் திதி மிக வருந்திக் கதறினள் காச்யபர் நூற்றோராண்டு நியமத்துடன் தவம்செய்து இந்தரனைக் கொல்லும் புதல்வனைப்பெறுவாய் என்று திதியிடங் கூறினர். அவளும் அப்படியே தவம் புரிந்தாள். இந்த்ரன் ஓர் சிறு அந்தணன் வேடம் பூண்டு திதிக்குத்தவம் புரிய உதவி செய்தான் ஒரு நாள் திதி ஸாயங்காலவேளையில் காலைக்கழுவாமல் மேற்கு முகமாகத் தலை வைத்து மயிர் காலில் இடிக்கும்படி மயிரை விரித்துப் படுத்துறங்கினள். இது தான் தக்க ஸமயமென்றுணர்ந்த இந்த்ரன் ஸூக்ஷ்ம ரூபமாக அவள் வயிற்றிற்குள் புகுந்து அவள் கருவை ஏழுகூறாக வஜ்ரத்தால் வெட்டினன். கரு அழும்போது "மாருத" அழாதே! என்று இந்த்ரன் கூறினன். விழித்தெழுந்து, திதியின் வலியை உணர்ந்து இந்த்ரனைச் சபிக்காமல்

இவ்வேழு மருக்துக்களையும் உனக்கு ஸஹாயமாக வைத்துக்கொள் என அவனை ஆசீர்வதித்தாள் திதி.

ப்ருது சக்ரவர்த்தி.

அத்ரிவம்சத்தில் பிறந்த அங்கர் என்பாரொருவர் அத்ரிக்கு ஸமமாயிருந்தார். அவர் யமனதுபெண்ணை ஸுநீதா என்பவளை மணந்தார். இவர்களுக்கு வேநன் என்றோர் புதல்வன் பிறந்தான். இவன் முன்னோரநுஷ்டித்து வந்த மதத்தை வெறுத்து வந்தான். துராசாரத்தை வ்ருத்திசெய்தான். தானே தைவமென்றும் தனக்கே யாகம் செய்யவேண்டுமென்றும் சொன்னான். மஹார்ஷிகள் பனிரண்டாண்டில் முடியும் ஓர் யாகம் செய்ய ஆவல் கொண்டனர். அரசனை அழைத்து இதை அறிவித்தவுடன் அவன் கோபங்கொண்டு உலகையே படைத்து பரிபாலித்து அழிக்கும் சக்திவாய்ந்த என்னைவிட்டு எவருக்கும் யாகம் செய்யலாகாதென்றான். இதைக்கேட்டதும் மஹார்ஷிகளுக்கு அடங்காக் கோபமுண்டானது. அந்த கோபக்கனலால் அரசன் ப்ரக்ஞையற்று கீழேவிழுந்தான்.

அரசனில்லா நகரிலிருக்கக்கூடா தென முனிவர் யோசித்து, வேநனது காலைக் கடைந்தனர். கறுத்து பயங்கரமான உடலமைந்த ஒருவனங்கிருந்து தோன்றினான். அவனை, வேநனது பாபத்தால் பிறந்ததால் வேட ஜாதியைச் சார்ந்தவனென எண்ணினர்கள்.

வலது கையைக் கடைந்தனர். அங்கிருந்து அத்புதமான உருவமுள்ள ப்ருது என்ற அரசன் பிறந்தான். தேவர்கள் புஷ்பமாரிப் பொழிந்தனர். தேவ துந்துபி முழங்கிற்று. ப்ருஹ்மாவின் யாகாக்னியில் தோன்றிய ஸூதன், மாகதன் என்ற இருவரையும் ப்ருதுவைத்துதிக்கும்படி அவர் பூமிக்கு அனுப்பினர். தேவர்களு

மிருந்து இவனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்தனர். மநுநீதி தவராமல் குடிகளை அன்புடன் ஆண்டு வந்தானிவன்.

பூமிமுன போல் விளையாமல் விதைத்த விதையை விழுங்கிவிடுதாக ப்ருதுவினிடம் குடிகள் முறையிட்டனர். அரசன் கோபங் கொண்டு வில்லை வளைத்து அம்பைப் பூட்டி அவனியைத் தேடினான். பூமி யானை உருவெடுத்து வனத்தே வஸித்து வந்தாள். அங்கு அரசனும் பின் தொடர எருமை வடிவமெடுத்தோடினாள். ப்ருதுவும் பின்னே ஓட தேனுவின் உடலெடுத்து அபயம் அபயம் என பதினாலுலகமும் சென்றாள். எவரும் அபயமளிக்காததைக் கண்டு வேறு வகையின்றி ப்ருதுவையே சரணமடைந்தாள் அரசே! பெண் பாவம் பொல்லாதது. என்னை வதைத்து என்னபயன் பெறுவீர்? என்னை அடிக்காமல் விடும் என்று கூறினாள். ப்ருது "பலரைக்காக்க ஒருவரைக் கொல்வது குற்றமல்ல" ஆயினும் உன்னை அடியாது விட்டோம் என்றான். மஹாராஜனே! நீர் தொடுத்த பாணம் பயனுறுமாறு மேடான இடத்தே அதை விட்டு என்னிட மிருந்து வேண்டியதை நீர் கறந்து செல்லும் என்றாள்.

அங்ஙனமே அரசனது அம்பு மலைகளை இடித்துப் பள்ளத்தை நிரப்பிற்று. ஸ்வாயம்புவ மநுவைக் கன்றாகவும் தன் கையைப்பாத்ரமாகவுங்கொண்டு ப்ருது பூமியினிடம் பயிர்களைப் பாலாகக் கறந்தான். இவ்வரசன் காட்டிய வழியைப் பின்பற்றி மற்றவரும் கறந்தனர். தேவர்களுக்காக ப்ருஹஸ்பதி சந்த்ரனைக் கன்றாகக் கொண்டு பலத்தைக் கறந்தார் பித்ருக்களுக்காக அந்தகன் யமனைக் கன்றாக்கி வெள்ளி பாத்ரத்தில் ஸ்வதா என்பதையும், பாம்புகளுக்காக த்ருகராஷ்ட்ரன் தக்ஷகனைக் கன்றாக்கி சொரைக்காயில் விஷத்தையும், அஸுரர்மாயையையும், கந்தர்வர் கானத்தையும், பிசாசங்கள் ரத்தத்தையும், ரிஷிகள் வேதத்தையும், பர்வதங்கள் ரத்நங்களையும் கறந்தனர்.

ஸுநீதை

யமதர்மராஜனது பெண் ஸுநீதை என்பாள். இவள் ஒரு ஸமயம் தோழிகளுடன் கூடி விளையாட வநம் சென்றுள். ஆங்கு ஸுசங்கர் என ஓர் கந்தர்வர் ஸங்கீத வித்யையின் கரையைக்காண ஸரஸ்வதி தேவியை நாடி தவம் புரிந்து வந்தார். விளையாட்டுத்தன்மையால் ஸுநீதை ஸுசங்கன் ஏகாக்ரசித்தமாய்த்தவம்புரிய முடியாமல் பல தடைகளைச் செய்து வந்தாள். பன்முறையும் அவர் தன்னடக்கத்துடன் இவளது செயலைக்கண்டித்து வேண்டாம் தடை செய்யாதே என கூறிவந்தார். அவள் அதை ஒரு பொருட்டாக எண்ணுமல் அவரை அடித்துத் துன்புருத்தவும் ஆரம்பித்தாள். ஸுசங்கர் "பெண்ணே! தன்னை ஒருவன் அடித்தால் பதிலுக்கு அவனை அடிப்பது உலகத்தினியற்கை. நான் தவம் செய்வதால் நீ என்னை அடித்தாலும் அதை மன்னித்துவிட்டேன். உன்னை அடிக்கமாட்டேன் போ" என்ருர்.

இதை ஸுநீதை தன் தந்தையிடம் சொன்னுள். அவர் இதற்கு யாதொருபதிலும் சொல்லவில்லை. ஆதலால் மறு முறையும் தன்னைமறந்து தவம் புரியும் ஸுசங்கரைச்சாட்டை கொண்டடித்தாள். வலிதாளாமல் கோபங்கொண்டாரவர். காரணமின்றி, பல முறையான் மன்னித்தும் நீ கசைகொண்டு என்னை அடித்ததால் உனக்குப் பிறக்கும் குழந்தை க்ரூரகுணமுள்ள பாபியாக இருக்கும் என்று சபித்து ஸ்ுசங்கர் வேறிடம் சென்ருர்.

ஸுநீதை நடந்த வரலாற்றைத் தந்தையினிடம் கூற அவர் நீ செய்தது பாபமாதலின் அவர் கொடுத்த சாபம் நியாயமே. இப்பாபத்தை அகற்ற நீ கடுந்தவம் புரிந்தாலன்றி ஸுகம் பெறுய். எவரும் உன்னை மணக்கமாட்டார் என்ருர். உடனே ஸுநீதை மஹாரண்யம் சென்று தவ வேடம் பூண்டு, கந்தமூலங்களை உட்கொண்டு தவம் செய்

தாள். பல நாட்கள் கழிந்தபின் ரம்பை முதலிய அப்ஸரஸுகள் இவளருகே வந்து விஷயத்தை அறிந்து புருஷரை மயக்கும் ஓர் வித்தையை உபதேசித்தனர்.

தோழிகளுடன்கூட ஒரு நாள் ஸுநீதை நந்தவனம் சென்றாள். அங்கு அழகிற் சிறந்த ஓர் அந்தணச்ரேஷ்டனைக் கண்டாள். அவர் அத்ரியின் புதல்வர். அங்கரெனப் பெயர்பெற்றவர். ஓர் ஸமயம் தேவஸேனை சூழ அப்ஸரஸுகள் ஆட கந்தர்வர் கானம் செய்ய வெள்ளானை மீது தேவேந்த்ரன் பவனிவருவதைக் கண்டார். இவ்வளவு வைபவத்துடன் கூடிய ஓர் புதல்வனைப் பெற வேண்டுமென ஆசை கொண்டார். தந்தையை வணங்கி அதைப்பெற வழியைக்கேட்டார். அவர் கூறியபடி கங்கா தீரம் சென்று ஐம்புலன்களை அடக்கி புருஷோத்தமனை த்யாநம் செய்தார். இவரது தவம் பழுக்க பரமபுருஷன் எதிரிற்றோன்றினார். அங்க! உனது விருப்பம் கைகூடும். அழகிலும் குணத்திலும் குலத்திலும் சிறந்த ஓர் கன்யகையை மணந்து கொள். எனக்கூறி பகவான் மறைந்தார். அந்த அங்கரிஷியே நந்தவனத்திற்கு வந்தவர். அங்கரது அங்கஸௌந்தர்யத்தைக்கண்டு ஸுநீதை காமன்கணைக்கிலக்கானாள். மோஹமந்தரத்தை ஜபித்தாள். மஹர்ஷியும் மாதரசியைக் கண்டுமயங்கினார். ரம்பையின் ஸஹாயத்தால் இருவரும் ஒப்பி மணந்தனர்.

இவ்விருவர்களுக்கும்பிறந்த குழந்தையே வேனன். ஸுசங்கரது சாபத்தால் தன் புதல்வன் பாபி ஆவானே என்றஞ்சி ஸுநீதை அடிக்கடி புதல்வனுக்குத் தர்மோபதேசஞ்செய்து வந்தாள். வேனனும் அறம்வழுவாது அரசாண்டு வந்தான். ஸுசங்கரது சாபத்தைப் பயனுள்ளதாகச் செய்வது, உலகபரிபாலன கர்த்தாவான பரமனது பாரமாகி விட்டது. ஆதலின் ஓர் புத்தஸன்யாஸி வேடம் பூண்டு வேனனது அரண்மனைக்கு வந்தார் பகவான். பகவானது மாயையில் சிக்காதார் உண்டோ? வேனன் அவரை வரவேற்றான். அவரது கபடோபதேசங்களுக்குச்

செவிசாய்த்தான். அன்று முதல் பரமாஸ்திகனுகி வேத விதிக்குமாருக அரசாண்டான். பூமிக்கோர் தக்க அரசன் வேண்டுமென இவ்வேனனை அரசனுக்கிய மஹர்ஷிகள் இவன் செயலைக்கண்டுவருந்தினர்.

வேனனுக்கு நற்கதி.

மஹர்ஷிகளது கோபத்தால்வேனன் அறிவற்று கீழே விழ அவனுடலை முனிவவர் கடைந்தவுடன் இவனது பாபம் நிஷாதவடிவமாக (வேடன்) வெளி சென்றது. அரசன் முன்போல் யோக்யனுனுன். ப்ருதுவெனும் புதல்வன் அரசாளும் போது ரேவாநதீ தீரத்திலுள்ள த்ருணபிந்து ரிஷியின் ஆச்ரமம் சென்று வேனன் தவம் புரிந்தான். நூறுண்டு கழிந்தபின் வைகுண்டநாதன் இவனெதிரிற்றேன்றினர். வேனமஹாராஜன் தர்மோபதேசஞ் செய்யும்படி பகவானை வேண்டினுன். பகவான் கூறியதாவது—தானம் ஓர் சிறந்ததர்மம். ஸத்பாத்ரத்தில் நல்ல க்ஷேத்ரத்தில் உசிதமான காலத்தில் பலனைக் கோருமல் செய்யும் தானம் உயர்ந்த தபஸாகும். சாகுந்தருணத்தில் செய்யும் தானம் மஹபாபங்களை அகற்றவல்லது. கோதானம் பூதானம் ஸ்வர்ணதானம் முதலிய தானங்களைச் செய்வோர் தீர்க்காயுளுள்ள ஸத்புத்ரனையும் ஐச்வர்யத்தையும் பெறுவர். கொடையாளியின் குலத்தில் தரித்ரன் பிறக்கமாட்டான். என்று உபதேசித்தார்.

ஸுகலா.

காசியில் க்ருகலன் என்று ஓர் வைச்யனிருந்தான். அவன் மனைவி பெயர் ஸுகலா. அவள் மிகக் கற்றவள். மிக்க பதிவ்ருதா தர்மமுள்ளவள். க்ருகலன் ஒரு ஸமயம் தீர்த்தயாத்ரைச் செல்லவிரும்பினுன். வழியில் பற்பல துன்பங்கள் நேறுமாதலால் சிறிய தன்மனைவியை அழைத்துப்போக விரும்பவில்லை. பலமுறை பத்னி வேண்டியும் அவளை விட்டுவிட்டு, புருஷன் சென்றுன்.

அவள் கணவனை விட்டுப் பிறிந்த துக்கத்தால் உடலை அலங்கரிக்காமலும் உணவை உட்கொள்ளாமலும் வருந்தினாள். தோழிகள் வந்து உன் கணவன் விரைவில் வந்து விடுவான் ஏன் வருந்துகிறாய்? என்று தேருதல் கூறினர். கற்புள்ளவளுக்கு கணவனே தைவம். அவர் பணிவிடையே தர்மம். அதைவிட்டு அன்ய தர்மத்தைக் கைகொள்பவள் அதன் பயனை அடையாள். கற்புள்ள ஸுதேவியின் சரிதத்தைச்சொல்கிறேன் கேள் என ஸுகலா சொல்லலானாள்.

ஸுதேவி.

அயோத்யையில் இக்ஷ்வாகு என்றோர் அரசனிருந்தான். அவன் மனைவி ஸுதேவி. அரசன் மனைவியுடன் ஒரு ஸமயம் வேட்டையாட வனஞ்சென்றான். அங்கு பறுத்து கொழுத்த பன்றி ஒன்று அரசனைப் பார்த்து அஞ்சி, தன்மனைவி மக்களை "நீங்கள் எங்கே யாவது சென்றுபதுங்கிப் பிழையுங்கள். காலன் போல் வரும் அரசனோடு யான் போர் புரிவேன். ஜயாபஜயம் எவருக்கும் சொந்த மில்லை. இருந்தால் அரசனைக் கொன்று அன்போடு உங்களிடம் வருவேன். இறந்தால் வீரஸ்வர்க்கம் செல்வேன்" என்று கூறியது. அதை விட்டுப் பிரிய மனமில்லாத மனைவி மக்கள் தாங்கள் முன்னே சண்டைக்குச் செல்வதாகக் கூறினர்.

முடிவில் எல்லோரும்சேர்ந்து அரசன் முன்னே தோன்ற, வெகுநேரம் வேட்டையாடி வேந்தன் பன்றியைக்கொன்றான். அது கந்தர்வ உருவெடுத்து ஸ்வர்க்கம் சென்றது. அதைக்கண்டு கதரிகண்ணீர் விட்ட பெண் பன்றி, மக்களைப் பார்த்து குழந்தைகாள்! நீங்கள் எங்கேனும் சென்று பிழையுங்கள். என் கணவனைக் கொன்ற அரசனுடன் போர்புரிந்து மறு உலகிலும் கணவனைக் கைவிடாமல் பின்செல்வேன் நான் என்றது. இக்ஷ்வாகுவின் எதிரில் கர்ஜித்துக் கொண்டுவரும் பெண்

பன்றியைப்பார்த்து பெண்ணுதலின் இதைக்கொல்லேன் என அரசன் கூற, பார்க்கவனெனும் வேடனதைக் கூறிய அம்பாலடித்தான். வலியால் வேதனை கொண்டு வாயால் ரத்தத்தைக்கக்கி பூமியில் புரளும் பெண்பன்றியைக் கண்டு கருணை கொண்ட அரசன்மனைவி அதனருகே வந்து குளிர்ந்த ஜலத்தால் அதைக்கழுவி தன்கையால் தடவிக்கொடுத்தாள். உடனே தெளிந்தெழுந்தபன்றி, தாயே! உனதருளால் என் பாபமகன்றது என்றது. இதைக்கேட்டு வியந்து, ராணி அதன் வரலாற்றைவினவ அது சொல்ல ஆரம்பித்தது.

உன் கணவனால் அடிக்கப்பட்ட பன்றி முற்பிறவியில் 'ரங்கவித்யாதரன்' என்ற கந்தர்வன். மேருமலையில் புலஸ்த்யர் எனும் முனி தவம் புரிந்து வந்தார் அவரருகே சென்று இக்கந்தர்வன் கானவித்யை பயின்று வந்தான். இதனால் மஹர்ஷியின் மனது ஏகாக்ரமாய் நின்று தவம்புரிய முடியாமை கண்டு அவர் அந்த கந்தர்வனைப் பார்த்து வேறிடம் செல்லும்படி வேண்டினார். 'கானம் சிறந்த வித்யை. மனதை அடக்க முடியாத முனி எப்படித்தவம் புரிய முடியும்?' என அவன் வாதம் புரிந்தான். துஷ்டனைக்கண்டு தூரவிலகுவதே நலமெனக் கருதி அந்த சாந்த புலஸ்த்யர் வேறிடம் சென்றார்.

கந்தர்வன் இளமையால் கர்வங்கொண்டு பணிந்து சென்ற முனிவரைப் பின்தொடர்ந்து பன்றி வேடம் பூண்டு அவர் மடியிலும் அருகிலும் சென்று பாடி ஆடி குதித்துப் புறண்டுபலவகையாக அவர் தவத்திற்குவிக்னம் செய்தான். மிருக மென்றெண்ணி பல முறை இதைக் கவனியாமல் த்யானம் செய்து வந்தாரவர். இவனது துஷ்டச்செயல் அளவிலாது மேல் மேலும் விருத்தியானதைக் கண்டு ஞானக்கண்ணால் பழைய துஷ்டகந்தர்வனிவன் என்று கண்டார். "பன்றி யாவாய்" என சபித்தார். உடனே கந்தர்வன் ஓடி இந்த்ரனைப் பணிந்து உமது

காரியத்திற்காகவே அவர் தவத்தைக் கலைத்தேன். எனக்கு இக்கதி நேர்ந்தது. இதற்குப் பரிஹாரம் செய்யவேண்டுமென வேண்டினான் தேவேந்திரன் அம்முனிவரருகே வந்து வரமளித்து இச்சாபத்தை அகற்றும்படி வேண்டினான். கருணைக்கடலான புலஸ்த்யர் ஸூர்ய வம்சத்தில் இக்ஷ்வாகு என்றோர் அரசன் பிறப்பான் அவன் பாணத்தால் அடித்தவுடன் இவ்வுடல் நீங்கி இயற்கை சரீரத்தைப் பெறுவானிவன் என்றார். அங்ஙனமே உனது கணவனால் என் கணவன் நற்கதி பெற்றான்

எனது சரிதத்தையுங்கேள், என மீண்டும் சொல்ல ஆரம்பித்தது பெண்பன்றி. கலிங்கநாட்டிலே ஸ்ரீபுரம் என்றோர் நகரமுண்டு. ஆங்கு வஸுதத்தரென ஓர் வேதியரிருந்தார். அவருக்கோர் பெண்மணி பிறந்தாள். அவள் பெயர் ஸுதேவா என்பதாம். அவளே நான். இதே எனது முன்ஜன்மா. யான் அழகிலும் குணத்திலும் சிறந்தவள். ஆதலின் அரைக்ஷணமேனும் என்னை விட்டுப்பிரிய மனமில்லாதிருந்தார் என் தந்தை. பலர் என்னை மணக்க தனக்குத்தரும்படி வேண்டியும் தன் வீட்டைவிட்டு யான் சென்றுவிடுவேன் என்றபயத்தால் எவருக்கும் என்தந்தை என்னைக் கொடுக்கவில்லை. வயதாகிய பெண்ணை வீட்டில் வைத்திருப்பது வேதவிதிக்கு மாறானதென என்தாய் வேண்டினள். 'நம் வீட்டிலேயே வஸிக்க விரும்பும் வரனுக்கே இவளைக் கொடுத்து மணம் செய்விப்பேனென்று வஸுதத்தர் கூறினார். அவ்வேளையில் தற்செயலாக ஓர் அழகிய வேதிய சிறுவன் எம் வீட்டிற்கு பவதி பிக்ஷாம்தேஹி என்று வந்தான். சிவசர்மா என்ற அவ்வேழைக்கு என்னைக்கொடுத்து வீட்டிலேயே நானும் வரனுமிருக்கும்படி செய்து எங்களைக்கண்டு என் தந்தை மகிழ்ந்தார்.

தந்தையளித்தச்செலுகையால் கணவனையும் பெற்றோரையும் மற்றோரையும் மதியாமலிருந்தேன். தகாத

வர்களுடன் நட்புகொண்டேன். கற்புக்கே கேடு வரும்படி பல தீய கார்யங்களைக் கைக்கொண்டேன். இதைக் கண்டிக்கும் கணவனையும் தாயையும் த்ருணமாக எண்ணி என் தொழிலைவிடாது நடத்தினேன். இதைக்கண்டு மனந்தாளாமல் என்பதியான சிவ சர்மா என் வீட்டை விட்டு எவரிடமும் சொல்லாமல் வெளியிற் சென்றார். இந்த என் துன்பத்தைக் கண்டு என்பெற்றோர் மிக மனமொடிந்து வருந்தினர். ஐந்து வயது வரைதான் குழந்தைகளைப் பெற்றோர் பரிவுடன் போற்றி வளர்க்க வேண்டும். பின்னர் குழந்தைகள் இஷ்டப்படி விடாமல் அவைகளைக்கண்டித்து சிக்ஷித்து ரக்ஷிக்க வேண்டும். இல்லையேல் பின் வயதில் அக்குழந்தை சொல்லொணுத் துன்பமுறும். அதற்கோர் உதாஹரணம் சொல்கிறேன் என என்தாய், தகப்பனைப்பார்த்து கூறினள்.

பத்மாவதி

மதுராபுரியில் உக்ரஸேனன் என்றோர் அரசனிருந்தான். விதர்ப்பதேசத்தரசனான ஸத்யகேதுவின் பெண் பத்மாவதி என்பவளை அவன் மணந்தான். ஸத்யகேது தன்பெண் குணவதி ஆதலின் அவளிடம் அளவிலா அன்புகொண்டான். ஆதலின் அவள் புருஷன் வீடு சென்ற பிறகு அவள் பிறிவை ஸஹியாமல் உடனே ஓர் தூதனுப்பி பத்மாவதியை அழைத்து வந்தான். தாய் வீடானதாலும் அளவிற்கு மிஞ்சி பெற்றோர் தன்னிடம் அன்பு வைத்ததாலும் தங்குதடையின்றி எங்கும் ஸஞ்சரித்தாளவள். எப்பொழுதும் தோழிகளுடன் கூடி விளையாடுவாள். புதிது புதிதாக ஆடை ஆபரணங்களை அணிவாள்.

ஒரு நாள் தோழிகளுடன் வனஞ்சென்று விளையாடி ஜலக்ரீடை செய்ய தடாகத்திலிறங்கினள். அச்சமயத்தில் அங்கு கோபிலன் என்றோர் அரக்கன்

வந்தான். அழகிற்சிறந்த பத்மாவதியையும் அவளது உல்லாஸ விலாஸத்தையுங் கண்டு அவள்பால் ஆசை கொண்டானவன். தன்னை அவள் விரும்புவளோ மாட்டாளோ என அஞ்சி, அவள் கணவன் உருகொண்டு அவளெதிரில் தோன்றினன். தன்பதியே என்றுநினைத்து சிருங்காரலஜ்ஜையுடன் அவனைக்கட்டி முத்தமிட்டு ரமித்தாளவள். ஏகாந்த சயனத்தில் சில குறிகளால் தன் கணவனல்ல இவன் என ஐயமுற்று என்கற்பைக்குலைத்த பாதகா நீயார்? உண்மையைச் சொல்! இல்லையேல் இப்பொழுதே சாபத்தால் எரித்து விடுவேன் என்றாள். உடனே கோபிலன் தன்நிஜ உருகொண்டு "பெண்ணே! யானோர் அரக்கன் எங்கள் குலதர்மமிது. பக்தர்களிடமும் பதிவ்ருதைகளிடமும் செல்லமாட்டோம். நீ உன்பதியை விட்டு, பிறந்த வீட்டில் தங்கி நல்லாடை ஆபரணங்களை உடுத்தி விளையாடுகிறாய் ஆதலின் உன்னையான் தீண்டினேன். கற்பை இழந்த நீ என்னை எங்ஙனம் சபிக்கமுடியும்? எனது வீர்யம் உன் குக்ஷியில் இருக்கிறது" என்று கூறி மறைந்தான்.

இந்த பேரவமானத்தைத் தந்தைதாய்கள் அறிந்து, எவர்காதிலும் விழாதபடி இதை மறைத்து உக்ரஸேன ராஜனிடம் இவளை அநுப்பிவிட்டார்கள். அவன் உண்மையை உணராததால் அவளுடன் முன்போலவே கூடிக்குலாவினன். பத்மாவதியின் மனதை இந்த அரக்கன்செயல் அறுத்தவண்ணமாகவே இருந்தது. அக்கருவை அழிக்க பற்பல மருந்துகளைப் பத்மாவதி உட்கொண்டாள். ஆயினும் அது அழியாது விருத்தியாகி வந்தது. துயருரும் தாயை நோக்கி அக்கரு "அன்னையே! பிறப்பு மிறப்பும் அவனவன்கர்மவினைக் கேற்றபடி விளையும். மருந்தால் அதை மாற்ற இயலாது. காலநேமி எனும் ராக்ஷஸன் யான். முன்னம் என்னை மஹாவிஷ்ணு கொன்றார். ஆதலின் அவரிடம் அடங்காத்வேஷங் கொண்டு உன் வயிற்றில் அவரைப்பகைக்கும் கம்ஸனாகத்

தோன்றினேன்,'' என்று கூறியது. பத்தாண்டுகள் சென்றபின் அந்தகர்ப்பத்திலிருந்து கம்ஸன் தோன்றினன்' என்ற இக்கதையை என்தாய் தந்தையிடம் கூறினுள் தான் இளமையில் எனக்கு இடமளித்ததால் வந்த வினையை நினைத்து வருந்தி துராசாரமுள்ள என்னை என் தந்தைத் துறத்திவிட்டார். எனது துர்மார்க்கச் செயலால் என்னுடலில் பெரும்வியாதி தோன்றிற்று. பிழைப்பிற்கு வகையின்றி நாடு நாடாகச் சென்று வீடு வீடாகப் பிச்சை எடுத்துப்புசித்து வந்தேன். தற்செயலாக கூர்ஜ்ஜர நாட்டில், வனஸ்தலமெனும் நகரத்தில் ஒரு வீட்டிற்குச் சென்று பிக்ஷைகேட்டேன். அவ்வீட்டில் அஷ்டலக்ஷ்மியும் தாண்டவமாடினுள். எனது தீனஸ்வரத்தைக்கேட்டு அவ்வீட்டுயஜமானன் மங்களை எனும் மனைவியை அழைத்து எனக்குப் பசியார அன்னமிடும்படி கூறினர். அங்ஙனமே அம்மாதரசி எனக்கு அறுசுவை அன்ன மளித்தாள். உண்டுகளித்த என்னை நோக்கி நீ யார்? ஏன் இப்படி பிக்ஷை எடுத்துத் திரிகிருய்? என்று அப்புருஷர் கேட்டார். அவர் முகத்தை உற்று நோக்கி எனது கணவனென சிவசர்மா என்றுணர்ந்து வெட்கத்துடன் துக்கத்தால் கண்ணீர் வடிய ஒன்றும் சொல்லாமல் தலை குனிந்து மௌனமாயிருந்தேன். இதைக் கண்டு வியந்த மங்களை தன்கணவனை நோக்கி இதென்ன? என வினவினுள். அவர் எனது வரலாற்றைக் கூற மங்களை அன்புடன் ஆடை ஆபரணங்களை எனக்களித்து அங்கேயே வஸிக்கும்படி கூறினுள். என் மனம் அடங்காத்துயரமடைய சிந்தையால் நாளுக்கு நாள் என் உடல் ஒடிங்கிற்று. பிணி பலத்தது. காலனது பயங்கரமான தூதர்கள் என்னருகே வந்தனர். பற்பல ஆயுதங்கொண்டு அடித்து நரகத்தில் தள்ளி எனது பாபத்திற்கேற்ற கூலிகொடுத்தனர். இரும்பினுல் செய்து பழுக்கக் காய்ச்சிய புருஷனைக் கட்டி அணையச் செய்தனர். எரியும் எண்ணைக் கொப்பறையில் என்னை எரிந்தனர். பசியால் வாடியபோது, ரக்தத்

தையும் சீயையும் மலத்தையும் உண்ணச் சொன்னார்கள். கூறியவாள் கொண்டு துண்டுதுண்டாக என் உடலைச் சேதித்தனர். சுருங்கச் சொல்லின் யான் அநுபவிக்காத நரகமில்லை. பூமியில் பற்பல க்ரூரமிருகமாகப் பிறக்கும்படி செய்தனர். நாயாகவும் ஒட்டையாகவும் பாம்பாகவும் கோழியாகவும் பூனையாகவும் எலியாகவும் மற்றும் பலதுச்சமிருகமாகவும் பிறந்து சொல்லொணாத் துன்பமனுபவித்தேன். முடிவில் பன்றியாகப் பிறந்து, பன்றியாக வந்த கந்தர்வனுடன் கூடி வாழ்ந்தேன். உமது அருளால் நற்கதிபெற்றேன்" என்றாள். உன்னை நற்கதி பெறும்படி செய்ய யான் செய்த நற்கருமம் யாது? என இக்ஷ்வாகு மனைவி வினவ, பன்றி சொல்லிற்று. உன் புருஷன்விஷ்ணுவின் அம்சம். நீ லக்ஷ்மியின் அம்சம். நீ செய்த பதிசுச்ரூஷையில் சிறுதளவு எனக்களித்து என்னைப்பாபத்திலிருந்து மீட்பாயாக என்றது. தன் பர்த்தாவின் உத்திரவுபெற்றுக்கொண்டு தான்செய்தபதிசுச்ரூஷையை அப்பன்றிக்களித்தாள் ராஜபத்னி. உடனே பன்றி உடலை உதறி தேவ சரீரம் பெற்று ஸ்வர்க்கம் சென்றாளவள்.

இங்ஙனம் பதிவ்ருதைகளின் சரிதத்தைத் தோழிகளுக்குக்கூறி ஸுகலை எனும் வைச்யப்பெண் தன்னை விட்டுத் தீர்த்த யாத்திரைக்குச் சென்ற பதியையே நினைத்து வருந்தினாள். இவளது கற்பைப் பரீக்ஷிக்கக் கருதிய இந்த்ரன் காமனைத்துணைகொண்டு மிகச் சுந்தர புருஷனாக அவளெதிரில் தோன்றினான். பரபுருஷனாதலால் அவள் அவனைக்கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. உடனே ஓர் தூதியை அனுப்பி, "இளம்வயதில் உன்னை விட்டுச் சென்ற அரஸிகனான புருஷன் பூமியில் இருக்கிறானோ அல்லது இறந்தானோ? யௌவநம் சென்றால் திரும்பி வருமா? இதோ ஓர் மஹாபுருஷன் இருக்கிறான் அவன் அழகிய உருவுடையவன். நீ விரும்பியதைச் செய்யும் வீர ரஸிகன். அவனுடன் கூடி காமஸுகத்தை அனுபவி" என்று அவள் மனதைக்கலைத்தான். ஸுகலை உத்தமி

யாதலின் காமத்தைவிட தர்மமே சிறந்தது. சரீரத்தில் உண்டாகும் சிற்றின்பம் ஓர் இன்பமா? அழிவில்லாத பரமனுடைய திருவடியை அடைவதன்றோ அழியாச்சுகம். இவ்வுடலில் கிடைத்த ஸாதனங்களைக்கொண்டு பேரின்பத்தைப் பெறுவதற்கல்லவோ வழிதேடவேண்டும்?

சுத்தரத்தம் சுண்டி வீர்யமாகிறது அந்த வீர்யத்தைக் கீழ்நோக்கிச் செலுத்தாமல் நிர்மலமாக்கினால் ஞானம் உதயமாகி மோக்ஷம் பெறலாம். ஸமாநன் என்ற வாயுவால் இழுக்கப்பட்ட அவ்வீர்யம் நிலைத்து ஓரிடத்தில் தங்காமல் உடலெல்லாம் சுற்றுகிறது. தலையில் பற்பல புழுக்கள் கூடி கண் காது வழியாக மூளைக்கு விஷயங்களைக் கொண்டுவருகின்றன. பிங்கலை ச்ருங்கலை என்ற புழுக்கள் காது மூலத்திலும் சபலபிப்பலங்கள் மூக்கிலும், ச்ருங்கலீ ஜங்கலீ கண்களிலும், தங்கி இருக்கின்றன. மற்றும் நூற்றைம்பது புழுக்கள் உடலிலிருந்து அறிவைக் கொடுக்கின்றன. குழந்தை பிறக்கவேண்டிய காலத்தில், அரிசி அளவுள்ளதும் வெண்மை நிறம் வாய்ந்ததுமான ஓர் புழு அதன் முகத்திலுள்ள இரண்டு மீசை மயிர்களால் வீர்யத்தைக் குடித்துக் கொழுத்து தாதுஸ்தானத்திலிருந்து ஸுஷும்ந நாடியை அசைக்கிறது. அப்பொழுது தான் ஸ்த்ரீ புருஷர்களுக்கு காமத்தினவு உண்டாகிறது. ஸங்கமத்தால் ஒரு க்ஷணம் ஸுகமுண்டாகி தினவு அடங்குகிறது. மறுபடியும் முன்போலவே தினவு உண்டாகிறது. இவ்வல்ப ஸுகத்திற்காகவா சாச்வத ஸுகத்தை அளிக்கும் தர்மத்தை விடுவது? என்றாள். இதைக்கேட்டு அவமானமடைந்த தூதி இந்த்ரனிடம் சென்று நடந்ததைக் கூறினாள். மறுமுறை இந்த்ரன் காமனுடன் கூடி தக்க முயற்சியுடன் க்ரீடை என்ற தூதியை அநுப்பி ஸுகலையின் மனதைக் கலக்கவழி தேடினான்.

இதை அறிந்த ஸத்யன் என்பவன் தனது தோழனை தர்மனைப்பார்த்துக் கூறினான். தர்மா! எனக்கு பதிவ

ருதை ப்ராமணன் தேவன் என மூன்று வீடுகளுண்டு. காமன் ஸுகலை எனும் என் வீட்டை அழிக்கக் கிளம்பி விட்டான். அவ்வீட்டில் க்ஷமைசாந்தி என்ற இரு மனைவிகளும் ஸந்தோஷம் அடக்கம் தயை ஸ்நேஹம் ப்ரக்ஞை லோபமில்லாமை திருடாமை அஹிம்ஸை பொறுமை புத்தி முதலிய பந்துக்களுமிருக்கின்றனர். அங்கு யான் உன்னுடன் ஸுகமாக வாழ்ந்து வந்தேன். விச்வாமித்ரர் பரமசிவன் என்ற என் வீட்டைக் காமன் கெடுத்து விட்டான். ஸுகலை என்ற வீட்டை அடைந்தேன். அங்கும் காமன் வந்து விட்டான்! என் செய்வேன்? என ஏங்கிநின்றான். தர்மன் இதைக்கேட்டு ப்ரக்ஞை எனும் தனது தோழியைப் பக்ஷிரூபமெடுத்து ஸுகலையின் வீடு சென்று அவள் கணவன் தீர்த்த யாத்திரையிலிருந்துத் திருப்புவதைக் காட்டும் நற்சகுநபாகக் கத்தும்படி கட்டளையிட்டாள். அங்ஙனமே சகுநத்தைக் கண்டு புருஷன் ஒருவாரத்திற்குள் வந்துவிடுவார்என அறிந்து ஸுகலை மட்டில்லா மகிழ்ச்சிகொண்டாள்.

இதனிடையில் காமனனுப்பிய க்ரீடை எனும் தூதி ஓர் கற்பரசிபோல் ஸுகலையிடம் வந்து அவள் துக்கப்படும் காரணத்தை அறிந்து தன் கணவனும் இதே போல் தன்னை விட்டுப் பிறிந்ததாகக் கூறி துக்கித்து, அவளுடன் நட்புகொண்டாள். ஒரு நாள் தங்கள் துக்கத்தை ஆற்ற அழகிய உத்யாநம் போவோமென்று கூறி காமனுமிந்த்ரனுமுள்ள வநத்திற்கு க்ரீடை ஸுகலையை அழைத்து வந்தாள். ரதி, ப்ரீதி என்ற இரண்டு பெண்களுடன் கூடிக்ரீடையும், புஷ்பம் மந்தமாருதம் மதுரமான பக்ஷிகளின் சப்தம் முதலிய காமாக்னியைக்கிளப்பும் உல்லாஸமான வஸ்துக்களைக் காட்டி இவள் மநதைத்திருப்ப பகீரத ப்ரயத்னம் செய்தாள். என்செய்தென்ன? படைத்த பரமன் வந்தாலும் கொண்ட உறுதியை மாற்றுதவள் ஸுகலை. இச்சமயம் தனக்கிடுடுவாள் என்றெண்ணி இந்த்ரன் ஸுந்திரவடிவத்துடன் எதிரில் தோன்றினான்.

என்னைக்காதலி என காலிலும் விழுந்தான். பல்லைக் காட்டினன். பற்பல காமசொற்களைச் சொன்னன். இதைக் கேட்ட ஸுகலை நடுங்கித் தலைகுனிந்து மெல்லிய குரலில் பதில் கூறினள். ஐயா! என்னைக்காக்க ஆண் துணை இல்லை என்று நீர் எண்ணி ஏதேதோ பேசுகிறீர். என்னை ரக்ஷிக்க எனது மக்கள் இதோ எதிரில் ஆயுதபாணிகளாக நிற்கின்றனர். தர்மம் எனும் வீரன் ஸத்யம், சமம், தமம் க்ஷாந்தி சாந்தி விநயம் தைர்யம் முதலிய வீரர்களுடன் என்னைச்சுற்றி நிற்கிருன். என் கணவனைத்தவிர தேவேந்திரனுயினும் ஸரி, எவரையும் கண்ணெடுத்துப் பாரேன் என்ருள். இது இப்படி யிருக்க,

தர்மதேவர் க்ருகலனது பித்ருக்களைப் பாசத்தால் கட்டி அவனெதிரே நிறுத்தி க்ருகலா! ஸத்குணம் நிறைந்த உன் மனைவியே உயர்ந்த தீர்த்தம். அதை அறியாமல் நீ அவளை விட்டு விட்டுத் தனியாக தீர்த்த யாத்திரை செய்ததால் அதன் பயனைப் பெறமாட்டாய். உனது பித்ருக்களும் பந்தத்திலிருந்து விடுபடமாட்டார்கள் என்ருர். இதைக்கேட்டு இனி யான் செய்யவேண்டிய கடமை யாதெனு? வைச்யன் வணங்கி வினவ, தர்மர் கூறினர். பதிவ்ருதையான மனைவிக்கு ஈடாக எந்த நதியும் ஆகாது. ஆதலின் அவளிருப்பிடம் சென்று பித்ருக்களுக்கு ச்ராத்தம் செய், என்று கூறி மறைந்தார். உடனே க்ருகலன் தன் மனைவியினிடம் வந்து நடந்ததைக் கூறி ச்ராத்தம் செய்து பித்ருக்களைக் கரை ஏற்றினன். இந்திராதி தேவர்கள் அந்த தம்பதியினருகே வந்து ஸுகலையின் கற்பைத்தான் பரீக்ஷித்த வரலாற்றைக் கூறி, வேண்டிய வரமளித்து மறைந்தனர்.

ஸுகர்மாவும் பிப்பலரும்.

வேநமஹாராஜனது வேண்டுகோளுக்கிணங்கி மஹாவிஷ்ணு பித்ரு தீர்த்தத்தின் மஹிமையை விளக்க இக்கதையைக் கூறினர். குருக்ஷேத்ரத்தில் குண்டலர் என்

ளோர் அந்தணரிருந்தார். அவருக்கு ஸுசர்மா என்றொரு புதல்வன் பிறந்தான். அவனது பெயருக்கேற்றபடி தந்தை தாய் பணிவிடையையே முக்ய தர்மமாகக் கொண்டு அவன் நற்கருமத்தைச்செய்து வந்தான். அதே ஸமயத்தில் கச்யபர் வம்சத்தில் தோன்றிய பிப்பலர் என்ற ஓர் தபஸ்வி இருந்தார். அவர் தசாரண்யமென்ற இடஞ் சென்று ஐம்புலன்களையுமடக்கி உக்ரமாக மூவ்வாயிர மாண்டு தவம் புரிந்தார். உடலை மதியாது ஏகாக்ர சித்த ராய் தவம்புரிந்ததால் அவர் புத்தினல் மூடப்பட்டிருந் தார். இவரது தவத்தைக்கண்டு மகிழ்ந்த தேவர்கள், ஒன் றுகூடி இவரருகேவந்து நீவஸித்தனுய்விட்டாய். நீகோரி யபடி வித்யாதரனுவாய். எல்லோரும் உனக்கு வச்யமா வார்கள், என்றுகூறி மறைந்தனர். தேவரளித்த வரத்தின் படிதான் வித்யாதரனுகி ஸகல உலகங்களையும் சுற்றி தான் நினைத்தவனை வச்யமாக்குவதையுங் கண்டு பிப்பலர் தனக்கீடு எவருமில்லை என கர்வங்கொண்டார்.

ஸாரஸமெனும் ஓர் பக்ஷி அவரருகேவந்து சொல் லிற்று. ஓ பிப்பல! ஏன் வீண்கர்வம் படைக்கிறாய்! மூவ் வாயிரமாண்டு தவம்செய்தும் முன் நடந்தவற்றையும் இனி நடக்கப்போவதையும் நீ அறியாய்! ஒருவித ச்ரம மின்றியே ஸுசர்மா எனும் சிறுவன், உன்னை விடச்சிறந், த வஸித்தனுக இருக்கிறான். அவன் முக்காலத்தையு முணர் வான். எதனுல் இவ்வளவு ஸித்தி அவன் பெற்றான்? நான் யார்? என்பதையும் வேண்டுமென்றால் அவனிடந் தெரிந் துகொள். வீண்கர்வம் படைக்காதே! என்று கூறிமறைந் தது. இதைக்கேட்டு வியந்த பிப்பலர் ஸுசர்மாவின் ஆச் ரமந்தேடி சென்றார், தன்னை நாடி வரும் பிப்பலரை நோக் கி ஸுசர்மா பிப்பலரே! வருக வருக! பக்ஷிசொல்படி என்னைக்காணவந்தீரோ? என்றார். முன்னினும் பன்மடங் கு பரமாச்சர்யங்கொண்ட ;பிப்பலர் ஸுசர்மா தன் பெற் றோருக்குச் செய்யும் பணிவிடையைப் பார்த்துவியந்து அப்பக்ஷியின் ஸ்வரூபத்தை முதலில் விளக்கிக்கூறு

மென வேண்டினார். அப்பக்ஷி கேவல பறவை அல்ல. பரமசிவனே அங்ஙனம் உருவெடுத்து உமது கர்வத்தைக் களைந்தார் என்றாரவர். உமது ஸித்தியையும் உமக்கு உலகெலாம் வச்யம் என்பதையும் கண்ணால் காண ஆவல் கொண்டேன் என்று பிப்பலர் கூறினார். உடனே ஸுகர்மா நினைக்க, அழகிய ரூபத்துடன் இந்தரன் முதலிய தேவர்கள் இவ்விருவர் எதிரிலும் தோன்றி எங்கள் வரவு பயனற்றதல்ல. ஆதலால் நீ வேண்டியவரத்தைக்கேள் என்று ஸுகர்மாவைப்பார்த்துக் கூறினர். ஆயின் என் பெற்றோரிடம் அசஞ்சலமான பக்தியை அளியுங்கள் என்றார் அவர். பிப்பலர் விரும்பியபடி உலகந்தோற்றியவகையையும் அழியும் ரீதியையும் ஸுகர்மா விளக்கிகூற உமக்கு இத்தகைய ஸித்தி உண்டாக நீர் செய்த தவம்யாது? என அவர்வினவினார். ஐயா வயதுசென்ற என் தந்தை தாய்ப் பணிவிடையைத்தவிர யாதொரு புண்யமும் செய்தேனில்லை. தாநமும் தர்மமும் தீர்த்தயாத்ரையும் க்ஷேத்ர யாத்ரையும் பித்ருசுச்ரூஷைக்கு ஈடாகாது. இதற்கு உதாஹரணம் கூறுகிறேன் என ஸுகர்மா சொன்னார்.

யயாதி.

சந்த்ரவம்சத்தில் உதித்த நகுஷன் என்றுளர் அரசன் மநுநீதி வழுவாது உலகை ஆண்டு அநேக யக்ஞங்களைச் செய்து இந்தரபதவி பெற்றான். அவன் புதல்வன் யயாதி அவனும் முன்னோர் வழியைப் பின்பற்றி தர்மமாகக்குடிகளைத் தன் குழந்தைகளைப்போல் காப்பாற்றிவந்தான். இவனது தர்மத்தை நாரதர் மூலமாகக்கேட்டு தேவேந்திரன், தனது தேரில் யயாதியைப்பஞ்சபூத உடலைவிட்டு தேவசரீரத்துடன் அழைத்துவரும்படி மாதலியை அநுப்பினான். யயாதி மாதலியின் மூலமாக இவ்வுடல் உண்டாகும் வகை அழியும்விதம் புண்யம் பாபம் ஹாஹார பேத மின்மை ராஜநீதி குடும்பதர்மம் முதலிய விஷயங்களைக்கேட்டுணர்ந்தான். புண்யத்தைச்செய்து மோக்ஷத்திற்கு ஸாதநமான ஞாநத்தைப்பெறுவதற்கு இப்

பஞ்சபூத உடல் மிக்க உபகாரமானது. கேவல ஸுகத்தை மாத்ரம் பெறுவதற்குரிய தேவசரீரமெடுத்து தேவலோகம் வரவிரும்பேன் என தேவேந்த்ரனிடம் சொல்லும்படி யயாதி மாதலியை அனுப்பிவிட்டான்.

அன்று முதல் அரசன் தன்னாட்டிலுள்ள மக்களனைவரும் பகவத் பக்தியிலீடுபடும்படி செய்தான். ஸதாசாரமுள்ளவனாக இருந்ததால் லக்ஷம் வயதாகியும் யயாதி இருபத்தைந்து வயது பாலனைப் போல் காணப்பட்டான். அவனது ஆளுகையில் எவரும் இறக்காததால் யமதர்மராஜன் தனக்கு வேலையே இல்லை; என் செய்வது ? என இந்த்ரனிடம் வந்து முறை இட்டான். இந்த்ரன் மன்மதனை அழைத்து எவ்வகையிலாவது யயாதியை நம்மிடம் அழைத்துவா என கட்டளை இட்டார். மன்மதன் தனது பரிவாரத்துடன் தாங்கள் நாடகமாடுபவர் என்றும், பகவான் வாமநாவதாரம் செய்து மஹாபலியின் அஹங்காரத்தை அடக்கியதை நாடகமாக நடிக்கிறோம். என்றும் நல்விஷய மாதலால் தாங்கள் தயைகூர்ந்து ஸபைகூட்டி இதைக் காணவேணும் என்றும் வேண்டினான். அரசனு மிதற்கிசைந்து நாடகத்தைப்பார்த்தான். பெண்ணுருகொண்ட ஜரை என்பவள் பாடியபாட்டும் ஆடியஆட்டமும் அரசனது மனதைக் கொள்ளை கொண்டது. நாடகத்தினிடையில் யயாதிக்கு ஜலமலங் கழிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. ருசியான நாடகத்தை விட்டுச் சொல்லவோ மனம்வரவில்லை. ஆதலால் அவஸரமாக அவ்வேலையைச்செய்து கைகால்களைச் சுத்தம்செய்துக்கொள்ளாமலும், ஆசமநம்செய்து சரீரத்தைச் சுத்தமாக்காமலும் ஆஸநத்தில் அமர்ந்தான். இதே தக்கஸமயம் என்றெண்ணி கிழத்தனம் அவனுடலில் புகுந்தது. அன்றுமுதல் அரசன் அந்நாடகத்தையே நினைத்து நினைத்து மற்றோர்முறை இனிய கீதத்தைக் கேட்போமா என்று ஏங்கி நின்றான். தர்மகார்யங்களில் ச்ரத்தை குறைந்தது. விஷயாசை மேலிட்டது.

ஒருநாள் வேட்டையாட வனம்சென்றான். ஸ்வர்ணமயமான மானொன்று இவனை வெகுதூரம் இழுத்துச் சென்று மறைந்தது. அரசன் களைத்து அழகிய பொற்றாமரைத் தடாகத்தின் தீரத்திலே சற்று உட்கார்ந்தான். அத்தருணத்தில் முன் நாடகத்தில் கேட்டதை விட மிக மதுரமான ஓர் ஸங்கீதம் அவன் காதில் விழுந்தது. தேஹச்ரமத்தைக்கூட கவனியாமல் அந்தகீதம் வந்த வழியே சென்றான். ரதியோ என ஸந்தேஹிக்கத்தக்க மின்னல் கொடிபோன்ற ஓர் பெண்ணுருவைக்கண்டான். காமனது கணையால் நன்கு தாக்கப்பட்டு அவளருகே ஓடினான். அக்கட்டழகி மறைந்தாள். அவளையே எண்ணி எண்ணிக்கதறினான். விசாலை என்றோர் பெண்மணி அரசனருகே தோன்றினாள். அவளை அணுகி அரசன் பெண்ணே! அழகெலாம் உருண்டுதிரண்டு ஒருருவாகத் தோன்றினதுபோல் என்முன்னே வந்து மறைந்த வனிதாரத்னமெங்கே? அவள்யார்? நீதான்யார்? எனகேட்டான். வேந்தே! ஈசனது கோபத்தால் நாசமடைந்தது மதனனது உடல். மறுபடியும் ரதியின்ப்ரார்த்தனைக்கிணங்கி சம்பு அருள்புரிய காமன் உடல்பெற்றெழுந்தான். அதைக்கண்டு ரதியின் கண்ணிலிருந்து ஆநந்த பாஷ்பம் பெருகி தாமரையிலிருந்து அச்ருபிந்துமதி என்றோர் கன்யாரத்நம் தோன்றிற்று. அவளே உமதுகண்ணைக்கவர்ந்தவள். அவளது தோழி யான். அவள் கேட்பதை இல்லை எனக்கூறுதவனும் யுவாவுமான ஓர் கணவனை நாடி இங்கு தவம் புரிகிறாள். என்று விசாலைகூறினாள்.

யயாதி, எவ்வகையிலும் யான் அவளுக்கேற்ற கணவன். ஆதலால் என்னை மணக்கும்படி உன்தோழிக்குக் கூறென்றான். விசாலை அரசே! தங்கள் உடலில் ஜரைநிறைந்திருப்பதை நீர்காணவில்லை. உமது புதல்வனிடம் இக்கிழத்தன்மையை அளித்து அவன் யௌவனத்தைப்பெற்றுவந்தால் என்தோழியை மணக்கலாமென்றாள். அரசன் உடனே தன்நாட்டிற்குச்சென்று புரு, குரு, யது எனும்

மூன்று புதல்வர்களை தனக்கு இளமையை யளித்து ஜரையை ஏற்கும்படி வேண்டினார். மூவரும் அதைமறுக்க அவர்களுக்குச் சாபமளித்து புருவிடம்வந்து கேட்டார். தந்தைக்காக ஸந்தோஷமாக உயிரையுமளிப்பேன்! இளமையை யளிக்க யாதுதடை? உமது விருப்பப்படி செய்யும் என்றானவன். அதைப்பெற்று யயாதி யுவாவானான். அச்ருபிந்துமதியினருகே சென்று அவன் நீ சொன்னபடி நடக்கும் என்னை மணக்க இன்னும் என்ன ஆக்ஷேபம்? என்றான். அவளும் ஸம்மதிக்க சுபதினத்தில் இருவரும் காந்தர்வ விவாஹம் செய்துக்கொண்டனர். ஒருஸமயம் தன்னைப்பத்தினியாக வைத்து ஓர் அச்வமேதயாகம் செய்யவேண்டுமென்றாள். அங்ஙனமே செய்து யயாதி மற்றும் நீ விரும்பியதைக் கூறென்றான். அச்ருபிந்துமதி காந்த! கைலாஸம் வைகுண்டம் ப்ருஹ்மலோகம் ஸ்வர்க்கம். முதலிய இடங்களைச்சென்று பார்க்கவேண்டுமென்றாள். அரசன் ப்ரியே! இது மனிதருக்கு எட்டாததன்றோ? இதை எப்படி நான் பூர்த்திசெய்வது? என்றான்.

இதனிடையில் யயாதி தங்களிடம் அன்பில்லாமல் புதுமனைவியிடம் அதிக ஆசைகொண்டதைக்கண்டு தேவயானி சர்மிஷ்டை என்ற இருமூத்தமனைவிகளும் இவளிடம் பொறாமை கொண்டார்கள். இதை அறிந்த இளையாளான அச்ருபிந்துமதி அவ்விருவர்களையும் கொல்லும்படி அரசனுக்கு ஆணையிட்டாள். அரசன் யதுவினிடம் சொல்ல அவன் தாயைக்கொல்வது பாபமெனக்கூறி மறுத்தான். அரசன் அடங்காத கோபங்கொண்டு யதுவைச் சபித்தான்.

இவ்வளவு நாட்களாகியும் யயாதி தன் ஸபைக்கு வாராததைக்கண்டு இந்த்ரன் மேநகையை பிந்துமதியிடமனுப்பி விரைவில் வேந்தனை இங்கு அழைத்துவா என கட்டளை இட்டான். ஆதலால் யயாதியிடம் ஸ்வர்க்கம் போவோமென அவள் வற்புறுத்தினாள். யயாதிக்கு இஷ்ட

மில்லாவிடினும் ப்ரியமனைவியின் விருப்பைத்தட்ட மனமில்லாமல் புருவை அழைத்து இளமையைக் கொடுத்து கிழத்தன்மையைத் திரும்பப் பெற்றான். மந்திரிகளையும் புரோஹிதர்களையுமழைத்து இளைவனாயினும் தந்தை சொற்படி நடந்த புருவுக்கு பட்டாபிஷேகம் செய்து வைத்தான். ஓர் அரசன் குடிகளிடமும் பெரியோரிடமும் நடந்து கொள்ளவேண்டிய வகையை உபதேசித்தான். பிறகு அச்ருபிந்துமதியுடன் ஸ்வர்க்கம் சென்றான். என்று இதை ஸுகர்மா கூற பிப்பலர் பெற்றோரிடம் அன்பு செலுத்திப் பணிவிடை செய்வதின் மஹிமையை உணர்ந்து நற்கதி பெற்றார். ஸுகர்மா பித்ருசுச்ரூஷை செய்து வந்தார்.

ச்யவநரும் குஞ்ஜலனும்.

குருதீர்த்தத்தின் மஹிமையை விளக்க விஷ்ணு வேநனுக்கு இக்கதையைக் கூறினார். பார்க்கவகுலத்தில் ச்யவனர் என ஓர் மஹரிஷி இருந்தார். தீர்த்தயாத்ரை செய்ய அவாகொண்டு ஒவ்வொரு நாடாகச்சுற்றி வந்தார். ஒரு ஸமயம் நர்மதாதீரத்தில் அழகிய ஆலமரத்தின் கீழ்படுத்து இளைப்பாறினார். அம்மரத்தின் மீது குஞ்ஜலனெனும் ஓர் கிளி தனது நாலுபுதல்வர்களுடன் பேசுவதைக் கேட்டார். தனக்கும் தனது தந்தைக்கும் தீனியைத்தேட லக்ஷத்வீபம் சென்ற உஜ்வலன் எனும் முதல்புதல்வன் தந்தைக்கினியகனிகளை அளித்தது. தந்தைகிளி உஜ்வல! நீ கண்ட அதிசயம் ஏதேனுமுண்டாகில் கூறென்றது. உஜ்வலன் சொன்னான்.

திவோதாஸனென அங்கு ஓர் அரசனிருக்கிறான். அவனுக்கு திவ்யாதேவி என்று ஓரே கன்யகைபிறந்தாள். அழகில் சிறந்த அவளுக்கோர்வரனை அரசன் அவனியெலாம் தேடியும் கிட்டவில்லை முடிவில் ரூபதேசமெனும் தேசத்தரசனான சித்ரஸேநனுக்கு இவளைக்கொடுத்து மணம்புரிவதாக நிச்சயித்தான். விவாஹமாவதற்குள் சித்

ரஸேநன் இறந்தான். அரசன் என்ன செய்வதென்றறியாமல் சாஸ்த்ரங் கற்றுணர்ந்த பெரியோரை அழைத்து திவ்யாதேவிக்கு மறுமணம் செய்வது சாஸ்த்ர ஸம்மதமோ? என வினவினான். வாக்தாநம் செய்தது மணமாகாது. மறுபுருஷனுக்குக் கொடுத்து விவாஹம் செய்து வைக்கலாம் என பலபண்டிதர்கள் கூறினார்கள். ரூபஸேநன் என்ற அரசனுக்கு இவளை அளிப்பதாக அரசன் யோசித்தான். திடீரென அவனும் இறந்தான். இங்ஙனம் இருபத்தோரு முறை விவாஹஸங்கல்பம் செய்ய இருபத்தோரு அரசர்களும் இறந்தனர். வெருப்புகொண்ட திவோதாஸன் தன் கன்னிகைக்கு ஸ்வயம்வர மேற்பாடு செய்தான். திவ்யாதேவியினது அழகைக்கேட்டுமதிமயங்கிய மன்னர் பலர்கூடி எனக்கு உனக்கென போர்புரிந்து எல்லோரும் மாண்டனர். திவ்யாதேவி மலைமீதேரித் தன் விதியை நினைத்துக் கதரி அழுகிறாள். இதே யான்கண்ட விந்தை. எக்காரணத்தால் இக்கதி அவளுக்கு? என உஜ்வலன் கேட்க குஞ்ஜலன் கூறிற்று.

முற்பிறவியில் சித்ரா என்ற வைச்யப்பெண் இவள். ஸௌவீரர் என்பவர் இவள் பதி. இருவரும் காசிமா நகரில் வாழ்ந்து வந்தனர். சித்ரை ஸதாசாரத்தையும் குலாசாரத்தையும் விட்டு கணவனையும் மற்றோரையும் மதிப்பதில்லை. எப்பொழுதும் பிறர் வீடுசென்று வம்புபேசுவாள். பிறர் தோஷத்தைத் தேடிக் கூறி வீண்சண்டை இடுவாள். ஸாதுக்களை நிந்திப்பாள். ஸதாபல்லெலாந் தெரிய விழுந்து விழுந்து சிறிப்பாள். இத்தகைய தீய ஒழுக்கங்கொண்ட இவளை விலக்கி மற்றோர் மனைவியை ஸௌவீரன் மணந்தான். சித்ரைக்கு ஸ்வராஜ்யங் கிடைத்ததுபோலாய்விட்டது. வீடுவிடாக நுழைவாள். தாயையும் பிள்ளையும் அண்ணனையும் தம்பியையும் புருஷனையும் மனைவியையும் சேரவிட்டாமல் குட்டிக்கலகம் செய்வாள். இவள்கலஹ வார்த்தையால் பலகுடும்பங்கள் அழிந்தன. எவ்வளவு குடும்பத்தை இவள் கெடுத்தாளோ அவ்வளவு முறை இப்பிறவியில் கணவனை இழந்தாள். என்றுகூறிற்று

இதைக்கேட்ட உஜ்வலன் எல்லாமறிந்த தந்தையே! எப்புண்யத்தால் இவள் நற்கதி பெறுவாள்? என தநதையை வினவ, விஷ்ணு மந்தரஜபமும் ஸ்தோத்ரமுமே இதற்கு ப்ராயச்சித்தமென உஜ்வலன் கூறினான். திவ்யாதேவி படுந்துயரத்தைக் கண்டு கருணை கொண்ட உஜ்வலனெனும் சுகன் உடனே ஓடி அவளிடம் இதைக்கூற அவளும் ச்ரத்தையுடன் நாலாண்டு ஜபம் செய்து மஹாவிஷ்ணுவின் அருளால் நற்கதி பெற்றாள்.

ரேவாஸங்கமம்.

ஹிமாலயஞ்சென்ற ஸமுஜ்வலன் என்ற இரண்டாவது கிளி தந்தையிடம் தான் கண்ட அதிசயத்தைக் கூறிற்று மானஸம் என்ற ஸரஸில் கறுப்பு நிறம் வாய்ந்த நான்கு ஹம்ஸங்களும் அதனருகே பயங்கரமான நாலு பெண் ஹம்ஸங்களும் வரக்கண்டேன் பெண் ஹம்ஸங்கள் கரையிலே சிறித்துக்கொண்டு நிற்க ஆண் பறவைகள் ஜலத்தில் முழுகின. இச்சமயத்தில் ஓர் வேடன் வந்து அங்கு ஓர் மரத்தினடியே அயர்ந்து படுத்தான். அவன் மனைவி அவனுக்கு ஆகாரமெடுத்துவந்து அவன் முன் போலில்லாமல் அழகிய சரீரத்துடனிருப்பதால் இவன் கணவனோ அல்லவோ என்றஞ்சித்தயங்கினாள். வேடன் அவளைத்தேற்றி யான் உன் பதிதான். பசியால் வாடி அருகிலுள்ள நர்மதா ஸங்கமத்தில் முழுகினேன். ஆதலால் எனக்கிவ்வழகிய ரூபமுண்டானது என்றான். ஆயின் நானுமங்கு சென்று ஸ்நாநம் செய்வேன் என, அவளும் வேடனும் அந்த ஸங்கமத்தில் முழுகி உடனே தேவசரீரம் பெற்று விமாநத்தின் மீதேறி ஸ்வர்க்கஞ்சென்றார்கள். அந்நாலு ஹம்ஸங்களும் அதில் முழுகி வெண்மை நிறம் பெற்று வானத்தில் பறந்து சென்றன. பெண்பக்ஷிகள் அதில் இறங்கி ஹா! ஹா! எனக்கதறி அழுது இறந்தன. அவை நரகம் செல்வதையும் கண்டேன். அப்பக்ஷிகள் யாவை? சிலது நன்மை பெறவும் சில தீமைபெறவும் காரணம் யாதென தந்தையைக் கேட்க உஜ்வலன் கூறினான்.

ஒரு ஸமயம் நாரதர் இந்த்ரபவனம் செல்ல இந்த்ரன் அவரைப்பார்த்து எங்கிருந்து வருகிறீர்? என்ன விசேஷம்? என்று வினவினான். பூமியிற்சென்று ஸகல நதிகளிலும் ஸ்நாநம் செய்து வந்தேன். ஆனால் இதில் உயர்ந்த தீர்த்தம் யாதென தெரியவில்லை. முடியுமானால் நீ நேரில் நதிகளை விசாரித்துக் கூறென நாரதர் சொன்னார். இந்திரன் மனதினால் நினைத்தவுடன் ஸகலநதிகளும் தேவ உருவந்தாங்கி எதிரில் வந்தன. உங்களில் உயர்ந்தவர்யார்? என மஹேந்த்ரன் கேட்க மற்ற நதிகள் நாங்கள் உபபாதகத்தை நீக்க வல்லவர். மஹாபாதகத்தை நீக்கும் சக்தி உடையவர் ப்ரயாகை புஷ்கரம் ஸர்வ தீர்த்தம் காசி என்ற நால்வர் என்றனர். இந்த்ரன் விருத்ரனைக்கொன்றதாலும் அஹல்யையைக் கெடுத்ததாலும் உண்டான பாபத்தை இந்நான்கு தீர்த்தத்திலும் ஸ்நாநம் செய்து அகற்றினான். இந்நான்கும் தீர்த்தராஜன் எனப்படும். இவைகள், நீங்காத தங்கள் பாபத்தை ஹம்ஸங்களாகி ரேவாஸங்கம ஸ்நாநத்தால் அகற்றின. அந்த ஹம்ஸங்களது மஹாபாதகத்தைச் சொல்கிறேன் கேள் என குஞ்ஜலன கூறினான்.

பாஞ்சால நாட்டில் விதுரன் என்றோர் அரசனிருந்தான். அவன் பணத்தில் கொண்ட பேராசையால் தனிகனான ஒரு பிராமணனைக் கொன்றான். ஆதலின் அவனை ப்ரும்மஹத்தி சூழ்ந்து ராஜ்யத்தையும் காந்தியையுமிழந்தான். நாடு நகரங்களைச் சுற்றி வீடு வீடாகப் பிச்சை எடுத்துப் புசித்து வந்தான். எந்நதியில் ஸ்நாநம் செய்தும் அவன் பாபம் அகலவில்லை. தற்செயலாக சந்த்ரசர்மா என்ற அந்தணனைச் சந்தித்தான். அவன் மகத தேசத்தைச் சேர்ந்தவன். தனது குருவைக் கொன்று உறவினரால் துரத்தப்பட்டவன். இவ்விருவருக்கும் நட்பு உண்டானது. இருவரும வேதசர்மா என்ற விடரனையும வஞ்ஜூலன் எனும் வைச்யனையும் கண்டனர். விப்ரனோ குருபத்னியின் கற்பைக் கெடுத்தவன். வைச்யனோ, பசு

வைக் கொன்றவன். ப்ரும்மஹத்தி, குருஹத்தி, அகம்யாகமநம் கோஹத்தி என்ற மஹாபாதகங்களைச் செய்த நால்வரும் நட்புகொண்டு தங்கள் பாபத்தைத் துலைக்க பல நதிகளுக்குச்சென்று புனலாடினர். பாபம் அகன்றபாடில்லை. சொல்லொணுத் துன்பத்தை அநுபவித்து காலஞ்ஜரம் என்ற இடம் வந்து சிந்தை நொந்து கதறினர். தற்செயலாக ஓர் ஸித்தர் அவ்வழியாக வந்து புஷ்கரம் ப்ரயாகை ஸர்வதீர்த்தம் காசி என்ற புண்ய தீர்த்தங்களைக் காட்டி இதில் ஸ்நாநம் செய்யுங்கள் என்ருர். அங்ஙனமே அதில் முழுகி அந்நால்வரும் பாபத்தை அகற்றி ஸ்வர்க்கம் சென்றனர் ஆனல் அந்த பாபம் இப்புண்ய தீர்த்தங்களைப் பிடித்துக கொண்டது. அதை அகற்ற இவை ஹம்ஸவடிவமெடுத்து ஒவ்வோர் நதியாகச் சென்று முடிவில் ரேவாஸங்கமத்தில் முழுகி கறுப்பு ரூபமான தங்கள் பாபத்தை விட்டு சுத்தமாகி தன்னிருப்பிடம் சென்றன. பெண் ஹம்ஸங்கள் ப்ருஹ்மஹத்தி குருஹத்தி தகாதவரைப் புணர்தல் கோஹத்தி முதலிய பாபங்களாம்.

ஸுபாஹு.

உஜ்வலன் என்ற மூன்ருவது கிளி கூறியது. மேருகிரியில் ஆநந்த மௌமீருர் அரண்யமுண்டு. அங்கு ஓர் ஸ்வச்சமான ஸரஸில் தேவகந்தர்வர்களால் போற்றப்பட்ட ஓர் தம்பதி ப்ரதிதினம் வந்து தங்கள்சரீரம் போல்வே ஜலத்தில் மிதக்கும் சரீரத்தைத் தின்று செல்கிறது. விகாரமான உருவமுள்ள இரண்டு பெண்கள் எனக்குக கொடு என்று கேட்கிருர்கள். அழகிய இரண்டு பெண்கள் இதைப்பார்த்து சிறிக்கின்றனர். இவர்கள் யார்? என்பதைக் கூற வேண்டுமென ப்ரார்த்திக்க குஞ்ஜலன் அதை விளக்கிக் கூறியது. சோழதேசத்தில் ஸுபாகு என்ரேர் அரசனிருந்தான். அவன் சிறந்த தர்ம சீலன். அவனது புரோஹிதர் ஜைமினி என்பவர். அவரை அடுத்து பற்பல தர்மங்களைக் கேட்டான். அவர்

தர்மம் தானம் பக்தி கர்மா ஞானம் இவைகளைக் கூறி இதில் தானம் சிறந்த தர்மம். அதினும் அன்னதானம் மிக மிகச் சிறந்ததென்றார் அரசன் தானம் முதலிய தர்மங்கள் புண்யபயனைக் கொடுத்து அதை அநுபவிக்க மற்றோர் உடலையும் அளிக்கின்றன வாகையால் எவ்வகை தோஷமுமில்லாத பக்தியால் பரமாத்மாவின் திருவடி அடைவேன் என்று மற்றவைகளை விட்டு த்யானயோகத் திலீடுபட்டான். பல்லாண்டுகள் சென்றபின் ஸுபாகுவும் அவன் மனைவியும் இப்பூத உடலை விட்டு தேவசரீரம் பெற்று வைகுண்டம் சென்றனர். ஸ்ரீமஹாவிஷ்ணு அங்கு இவர்களுக்கு தரிசன மளிக்கவில்லை. அகோரமான பசியும் இவர்களை வாட்டியது

தனது த்யான நிஷ்டைக்கு இது தான் பயனோ என மனவருத்தத்துடன் விமானத்திலேறி சுற்றினான் அங்கு வாமதேவர் எனும் விஷ்ணுபக்தரைக்கண்டு தன்குறையை முறையிட்டான. அவர் நீ அன்னதானம் செய்யாததால் பசிதாஹத்துடன் வருந்துகிறாய். மற்றபுண்யம் செய்த தால் இங்குவந்தாய். ஆநந்தாரண்யத்தில் உங்களது சவம் ஜலத்தில் மிதக்கும் அதைப்புஜியுங்கள் என்றார். ஸ்வாமி! எவ்வளவு காலம் இப்படி கஷ்டப்படுவது? இதற்கு ஓர் பரிஹாரமில்லையா? என்று வணங்கி அரசன் வேண்டினான். அரசே! இது போகபூமி ஆகலின் ப்ராயச்சித்த கர்மா வைச்செய்ய முடியாது. எப்பொழுது வாஸுதேவஸ் தோத்ரத்தைக்காதால் கேட்கிறாயோ அது முதல் பசிதா ஹமகலும், என்று முனிவர் கூறினார். கருணை நிறைந்த குஞ்சலம் கூறியபடி விஜ்வலன் வாஸுதேவ ஸ்தோத்ரத் தைப்பாட, அதைக்கேட்டு அரசனும் அக்கிளியைக் குரு வாகக்கொண்டு உபதேசம் பெற்று துதித்தான்.

கருணைக்கடலான வாஸுதேவன் எதிரில் தோன்றி எனக்கு மாம்ஸம்கொடு என்று கேட்கும் விகாரமான பெண்வடிவமுள்ள பசிதாஹங்களை அகற்றினார். நல்லு

ருவமுள்ள ப்ரக்ஞை ச்ரத்தை என்ற இருகன்யகைகள் மூலம் அரசனுக்கு அருள்புரிந்து யாதுவரம் வேண்டுமென்றார். தன்குருவான பக்ஷிக்கும் தனக்கும் பசிதாஹமில்லா வைகுண்ட ஸுகத்தை வேண்டினான். அங்ஙனமே அவனுக்கு நற்கதி அளித்து பகவான் மறைந்தார்.

அசோகஸுந்தரி.

நான்காவது புதல்வனான கபிஞ்ஜலன் கூறியது. கைலாஸமலை ஓரத்திலே அழகே உருவாய் வந்த பெண்ணொருவள் கண்ணீர் விட்டு அழுவதையும் மற்றோரிடத்தில் மஹரிஷி ஒருவர் நதியில் வரும் தாமரையை எடுத்து சிவனை அர்ச்சித்து ஆலயத்தினருகே நின்று துதித்துப் பாடுவதையும் பார்த்தேன். இதை விவரித்துக்கூறுமென தந்தையை வேண்டினான். குஞ்ஜலன் கூறினான். பார்வதீதேவி பரமசிவனை அடுத்து அழகிய நந்தவனத்தைப்பார்க்க வேண்டுமென்றாள். அவரும் உமையுடன், உத்யானஞ்சென்று அதன் அழகை அம்பிகைக்குக்காட்டினார். நினைத்ததைக்கொடுக்கும் கல்பகவிருக்ஷத்தினருகே சென்று ஸர்வாவயவஸுந்தரியாக ஓர் பெண்வேண்டுமென உமை நினைத்தாள். உடனே அப்படியே அழகிய ஒரு கன்னிகை வந்தாள். அவளைப்பார்த்தவுடன் சோகமெலாமகலுமாதலின் அசோகஸுந்தரி என அன்னை அவளை அழைத்தாள். இங்கிருந்தே தவம் செய்து நகுஷனை மணந்து ஸுகம் பெறுவாய் என ஆசீர்வதித்து பார்வதீபரமேச்வரர்கள் கைலாஸஞ்சென்றனர்.

விப்ரசித்தி எனும் அஸுரனின் புதல்வனான ஹுண்டன் அசோகஸுந்தரியின் அழகைப்பார்த்து மயங்கி தன்னை மணக்கும்படி மன்றாடி வேண்டினான். நகுஷனே எனதுபதி. அன்ய புருஷனைக் கண்கொண்டும் காணேனென்றாளவள். ஹுண்டன் இவள் பிடிவாதத்தைக் கண்டு மாயையால் ஓர் பதிவ்ரதைபோல் இவள்முன்னே

தோன்றி ஸுந்தரி! யான் ஓர் பதிவ்ருதை. என் புருஷனை ஹுண்டன் கொன்றான். அவனை அழிக்க யான் தவம் புரிகிறேன். நீயும் என்னாச்ரமத்தில் தவம் செய்து விரைவில் வேண்டியதைப் பெறுவாய் என்று கூறி ஏமாற்றி மேருசிகரத்திலுள்ள வைரேயமென்ற பட்டணத்திற் கழைத்து வந்தான். அந்நகரத்தையும் அஸுரனது மாயையும் கண்டு பயந்து தான் ஏமாந்ததை நினைத்து வருந்தி எதிரில் ராக்ஷஸஸ்வரூபத்துடன் வந்து தன்னை மணக்கும்படி வேண்டும் ஹுண்டனைப் பார்த்து ஸுந்தரி கூறினாள். ராக்ஷஸாதம! உன்னை இந்த க்ஷணத்திலேயே சாபத்தால் சாம்பலாக்கிவிடுவேன். ஆனால் உன்னைக் கொன்று நகுஷன் என்னை மணப்பான் என்பது என்னன்னை கூறிய வரம். நகுஷன் வருமவரை இங்கேயே தவம் புரிவேன். என்னைத்தீண்டி அழியாதே என்றுரைத்துத் தவஞ்செய்து வந்தாள்.

ஹுண்டன் கம்பனன் எனும் மந்திரியுடன் கலந்து யோசித்து நகுஷனை பிறக்காமல் அவள் தாயான இந்துமதியை அபஹரிக்க எண்ணங்கொண்டான். அச்சமயம் சந்திரவம்சத்தில் பிறந்த ஆயு என்ற அரசன் தன் மனைவியான இந்துமதியுடன் பலகாலம் புத்ரபாக்யமில்லாமையால் தத்தாத்ரேயரை உபாஸித்து அவரளித்த பழத்தை மனைவிக்களித்தான். அவள் கர்ப்பிணியாக இருக்கும்போது நாலுகைகளுள்ள ஓர் அந்தணன் தனக்கு அபிஷேகம் செய்து கொடைபிடித்ததாகக் கனவு கண்டாள். மஹாவிஷ்ணுவின் அருளால் மண்டலாதிபதியான ஓர் மகனைப் பிறப்பாய் என பெரியோர் கூறினர். ஹுண்டன் இந்துமதியைத் தூக்கிச் செல்ல முயற்சித்தான். விஷ்ணுதேஜஸால் அவளருகே செல்லவும் அவனால் முடியவில்லை. நூறாண்டுகள் சென்ற பிறகு ஓரிரவில் குழந்தை பிறந்தது. அந்தப்ரஸவக்ருஹத்தில் ஆசாரமில்லாத ஓர் வேலைக்காரியைக் கண்டான் அஸுரன். இது தான் ஏற்ற ஸமயமென்றெண்ணி அவளுடலில் புகுந்து அக்குழந்தையைத் தூக்கிச்சென்றான்.

அக்குழந்தையைத் தன் மனைவியிடமளித்து அதைக் கொன்று பாகம் செய்து எனக்களி என்றான். அவள் மேகலை எனும் வேலைக்காரியிடமளித்தாள். அவள் சமயற் காரனிடமளிக்க அவன் அதைவெட்ட ஆரம்பிக்கும் போது களுக்கென குழந்தை சிறித்தது. விதியின்வலி யாலும் தத்தாத்ரேய ரருளாலும் மேகலையும் சமயற் காரனும் அதனிடமன்பு கொண்டு அதைவெட்டாமல் வஸிஷ்டருடைய ஆச்ரமத்தில் கொண்டு விட்டு மானை வெட்டி சமைத்து இது தான் குழந்தை மாம்ஸமென்று அரக்கனுக்களித்தனர். வஸிஷ்டர் ஞானக்கண்ணால் உண் மையையறிந்து குழந்தைப் பருவத்திலும் அரக்கனால் கொல்லப்படாதவன் என்ற கருத்துகொண்ட நகுஷன் என்ற பெயரைவைத்து வளர்த்துவந்தார். ஆயுவும் இந் துமதியும் இவ்வளவு நாள் சென்று ரிஷியின் அருளால் பிறந்தசிசுவைக் காண வில்லையே! யாருக்கு எவ்வகைத் தீங்கைச் செய்தோமோ, கைக்கெட்டியது வாய்க்கெட்ட வில்லையே! எனக்கதறி அழுதனர். நாரதர் வந்து நடந்த தைக்கூறாமல் அஞ்சாதே குழந்தை சத்ருவைக்கொன்று மனைவியுடன் வருவானென்று கூறிமறைந்தார்.

ஒரு நாள் நகுஷன் ஸமித்தர்ப்பை முதலியவைகளைக் கொண்டுவர காட்டிற்குச் சென்றான். "எப்போது நகுஷன் ஹுண்டனைக்கொல்வானோ! தவத்தால் வாடும் அசோகஸுந்தரியை எப்போது மணப்பானோ? விரஹத் தால் தவிக்கும் பெற்றோரை எப்போது ஸந்தோஷப் படுத்துவானோ" என்று ஆகாயத்தில் சாரணர் சொல் வதைக்கேட்டான். இஃதென்ன என்று வஸிஷ்டரைக் கேட்டான். அவரும் நடந்ததைக் கூறி விரைவில் ஹுண் டனைக்கொல்வாயாக, என ஆசீர்வதித்தனுப்பினர். இந் தரன் தனது ரதத்தையும் ஏனையதேவர்கள் தத்தம் அஸ்த்ரத்தையும் அவனுக்களித்தனர். போர் கோலங் கொண்டு நகுஷன் ஹுண்டன் நகரத்தை நாடிக்கிளம் பினன்.

அஸுரன் நகுஷனைத் தான் கொன்று தின்றதால் தன்னை மணக்கும்படி அசோகஸுந்தரியை வேண்டினான். அவள், ஹா! நாத! இஃது ஸத்யந்தானோ? அன்னை கூறியது பொய்யாமோ? எனது தௌர்ப்பாக்யந்தானோ இது என்று எண்ணி உடலை விட்டுவிட தீர்மானித்தாள். தேவர்கள் ஓர் கந்தர்வன் மூலமாக, விரைவில் நகுஷன் வந்து வீரலக்ஷ்மியுடன் அவளை மணக்கப் போவதைக் கூறி அவளை ஆச்வாஸப்படுத்தினர். ரம்பையும வந்து இவளை ஸமாதானப்படுத்தினாள். ரம்பையைத் தூதியாக நகுஷனிடமனுப்ப அஸுரனைக்கொன்று அவளை மணப்பதாக அவனும் சொல்லி அனுப்பினான். அஸுரன் சாரணர் மூலமாக நகுஷன் வருவதைக் கேட்டு தனது சேனையைத் திரட்டி போருக்கு ஸித்தமானான். இருவர்களுக்கும் கடும் போர் நடந்தது. பாணவர்ஷங்கள் சந்த்ர ஸூர்யரை மறைத்தன. சரத்துடன் சரம் உறைபட்டு நெருப்புப்பொரிகள் நாற்றிசையும் பரந்தன. வீரவாதம் வானைக்கிழித்தது. எவர் ஜயிப்பர் எவர் தோர்ப்பர் என எவராலும் சொல்ல முடியவில்லை. பயங்கரமான யுத்தம் பல நாள் நிகழ்ந்தது. முடிவில் நகுஷன் ஹுண்டனைக்கொன்றான். தேவர் புஷ்பமாரி பொழிந்து அரசனை ஆசீர்வதித்தனர்.

நகுஷன் அசோகஸுந்தரியுடன் வஸிஷ்டாச்ரமம் வந்தான். அவர் அக்னிமுன்பாக இருவருக்கும் விதிப்படி விவாஹம் செய்து வைத்தார். இருவருமாக ரிஷியின் உத்திரவு பெற்று தன் தந்தைதாயிடம சென்றனர். இவர்களது வரவை மேனகை மூலமாக இந்த்ரன் ஏற்கனவே அவர்களுக்கு அறிவித்தான். ஆயு தன்பரிவாரங்களுடன் சேர்ந்து பேரானந்தம் பெற்றான்.

விஹுண்டன்.

ஹுண்டனது புதல்வனான விஹுண்டன் ஸாதுக்களையும் தேவரையும் ஹிம்ஸித்து வந்தான். அவர்கள் ஸ்ரீ விஷ்ணுவைச் சரணமடைய அவர்தனது மாயையை

அழைத்து நந்த வனத்தில் அவ்வஸுரனைக்கொல்ல ஓர் அழகிய பெண்ணுயிரு எனகட்டளையிட்டார். அவளைக் கண்டு அரக்கன் மோஹங்கொண்டு என்னை மணந்து கொள் என்றான். ஏழுகோடி காமோத புஷ்பங்களால் சங்கரனை அர்ச்சித்து அந்த புஷ்பங்களால் எனக்கோர் மாலையளித்தால் உம்மை மாலையிடுவேன் என்றாளவள். காமோதமெனும் மரம் எங்குளதென அவன் சுக்ரரைக் கேட்க அது ஓர் மரமல்ல, அவள் ஓர் பெண்மணி. அவள் சிறித்தால் அதிலிருந்து புஷ்பமுண்டாகும். அதனால் சிவனை அர்ச்சித்தால் வேண்டிய ஸித்தியை அடையலாம். அவளது கண்ணீரிலிருந்தும் புஷ்பமுண்டாகும். அது துக்கத்தை விளைவிக்கும் என்று சுக்ரர் கூறினார் தேவாஸுரர் பாற்கடலைக்கடைந்த போது லக்ஷ்மி வாருணீ காமோதா ச்ரேஷ்டா என நாலுகன்யகைகள் தோன்றினர் காமோதா என்பவளே துளஸியாகவந்து க்ருஷ்ணனை மணப்பவள்.

அவளைத்தேடி விஹுண்டன் செல்ல, வைகுண்டநாதன் நாரதரை அனுப்பி காமோதையருகில் விஷ்ணு இருக்கிறார். அவர் உன் குலசத்ரு. கங்கையில் அப்புஷ்பம் வரும்படி செய்கிறேன். அதைக்கொண்டு சிவனை அர்ச்சித்து அப்பெண்ணை ஸுலபமாக மணந்து ஸுகம் பெறுவாய் என்று கூறிவழிமறித்தார். ஆதலால் அவன் கங்கைக்கரையில் காத்துக்கொண்டிருந்தான். பிறகு நாரதர் வேகமாகச் சென்று காமோதையினிடம் "உன்பதி மஹாவிஷ்ணுப்ருகுவின் யாகத்தைக் காப்பதாக வாக்களித்தார். யக்ஞம் நடக்கும்போது இந்த்ரன் ப்ரார்த்தனைக்கிணங்கி அவர்வேறிடம் சென்றார். அச்சமயத்தில் அஸுரர் இந்தயாகத்தை அழித்தனர். கோபங்கொண்ட ப்ருகு நீ சொற்படி நடக்காததால் பூமியில் பத்துமுறைப் பிறக்கவேண்டும் என்று சாபமளித்தார்." என்று கூறினார். இதைக்கேட்டு அவள் விஷ்ணுவிற்கு உண்டான சாபத்தை நினைத்து வருந்தி கண்ணீர் விட்டபடியே யிருந்தாள்.

காமோதையின் கண்ணீர் புஷ்பமாக கங்கை ப்ரவாஹத்தில்வர அதைக்கொண்டு விஹுண்டன் சங்கரனை அர்ச்சித்து வந்தான். இவ்வஸுரனது எண்ணமெலாம் நந்தவநத்தில் கண்ட மாயைக் கன்னிகையினிடமிருந்தது. பூஜை செய்யும் புஷ்பமோ காமோதையின் கண்ணீரால் உண்டானது.

ஆதலால் உமாதேவி ஓர் ப்ராஹ்மண வேஷங்கொண்டு அஸுரனை நோக்கி உன்பூஜை சுத்தமானதல்ல. இதன் பயனை விரைவில் அநுபவிப்பாய் என்றுள். தனது தோஷத்தைக் கூறியவுடன் விஹுண்டனுக்கு அடங்காக்கோபமுண்டானது. உன்னை வெட்டுகிறேன் பாரென உறையிலிருந்து கத்தியை இழுப்பதற்குள் தேவியின் ஹுங்காரத்தால் வஜ்ரத்தாலடி பட்டவன் போல் கீழே விழுந்து அஸுரன் மாண்டான். கபிஞ்ஜலா! நீ கண்ட காக்ஷி இது என்று கூறி குஞ்ஜலன் ஓய்ந்தான். இவ்வளவு கதையுங் கீழிருந்து கேட்டுவந்த தீர்த்தயாத்ரைக் காகப் புறப்பட்ட ச்யவனர் குஞ்ஜலனை நோக்கி இவ்வளவுஞான முள்ள தாங்கள் யார்? என்று கேட்டார்.

கச்யபகுலத்தில் வித்யாதரர் என ஓர் வேதியரிருந்தார். அவருக்கு வஸுசர்மா நாமசர்மா தர்ம சர்மா என்ற மூன்று புதல்வர்களிருந்தனர். நானே கடைசி புத்ரனான தர்மசர்மா. நான் மிக மூர்க்கன். குருகுலம் செல்வதில்லை. கல்வி எனில் எனக்கது விஷமாக இருந்தது. பிள்ளைகளுடன் கூடிவிளையாடித் திரிந்து கையிலுள்ள தனத்தைத்தாராளமாக செலவு செய்தேன். பெற்றோருக்கடங்குவதில்லை. என்னைக்கண்டு எல்லோரும் நகைத்தனர். வெட்கத்தால் வேறிடஞ் சென்று ஓர் தேவாலயத்தில் உட்கார்ந்து என் விதியை நினைத்துவருந்தினேன். தற்செயலாக எனது பாக்யத்தால் ஓர் ஸித்தரங்குவந்தார். அவரைச் சரணமடைந்தேன். வித்தையில் சிறந்தவேதாந்த ஞாநத்தை எனக்கு அவர் உபதே

சித்து ஏகாந்தமாக உட்கார்ந்து த்யானம் செய் என்றார், அப்படியே செய்துவந்தேன்.

வேடன் ஒருவன் ஓர் கிளிக்குஞ்சைப் பிடித்து விலைக்கு விற்றான். அதை ஓர் அந்தணன் வாங்கி என்னிடம் கொடுத்தான். அது அப்பா இங்கேவா! பூஜை செய்! என்று அழகாகப்பேசியது. அதைக்கேட்டு மகிழ்ந்து அதனிடமன்புகொண்டு வளர்த்து வந்தேன். ஒரு ஸமயம் புஷ்பம் கொண்டுவர வனஞ்சென்றேன். பூனை அதைக்கொன்று தின்றுவிட்டது. எனக்குண்டான துக்கத்திற்கு அளவே இல்லை. ஸித்தர் உபதேசத்தை மறந்தேன். கிளியையே நினைத்து இறந்தேன். சாகுந் தருவாயில் எதை நினைக்கிறோமோ அதைப் பெறுவோமென்பது சாஸ்த்ரமல்லவா? ஆதலால் கிளியானேன். தீர்த்தங்களில் குரு தீர்த்தம் உயர்ந்தது. அதனால் தான் நான் ஞானமடைந்தேன் என்று கூறிற்று. வேனமஹாராஜன் இத்தகைய கதைகளை மஹாவிஷ்ணுவினிடம் கேட்டு அவர் உத்திரவுபடி அச்வமேதம் ராஜஸூயம் முதலிய யாகங்களைச் செய்து வைகுண்டம் சென்றான். வேனனது உத்திரவுபடி ப்ருது குடிகளைப் பாபமில்லாமலிருக்கும்படி செய்யத் தவம்புரிந்தான். குடிகள் செய்த பாபம் தன்பிதாவினிடம் செல்லாமலிருக்க வேனனது தூண்டுதலால் வரம் பெற்றான்.

பூமிகண்டம் முற்றிற்று.

ப்ருஹ்ம கண்டம்.

ஜைமினி ரிஷி வ்யாஸரை வணங்கி கலியில் ஸுலபமாக மோக்ஷமடைய மார்க்கம் எது? என்று கேட்க அவர் சொன்னார். கடவுள் உள்ள இடம் ஆலயம். அங்கு பெருக்கி மொழுகி அல்லது எவ்வகையான கைங்கரிய மேனும் செய்வது சிறந்த மோக்ஷமார்க்கமாகும். தண்டகன் எனும் திருடன் க்ருஷ்ண ஆலயத்தில் திருடச் சென்றான். மழைகாலமாதலால் தன் காலிலிருந்த சேற்றைக் கோவிலில் ஈஷினான். அதனால் அங்கிருந்த ஓர் சிறுபள்ளம் நிரம்பியது. க்ருஷ்ணவிக்ரஹத்தின் மேலிருந்த நகைகளைக் கழிட்டி கீழே வைத்தான். இந்த ஓசை கேட்க காவலாளி விழித்தெழுந்து துறத்தினான். திருடன் நகைகளை எரிந்துவிட்டு வேகமாக ஓடி வழியில் தற்செயலாக ஓர் நாகந்தீண்டி இறந்தான். தெரிந்தோ தெரியாமலோ ஆலய கைங்கரியம் செய்த விஷ்ணுபக்தன் நீ, நேராக வைகுண்டம் செல் என யமன் அவனைத் துதித்து வழி கொண்டு விட்டான். கார்த்திகை மாதத்தில் விஷ்ணுவைத் துளஸியால் அர்ச்சிப்பதும், ஆலயத்தில் தீபமேற்றிவைப்பதும மிகச்சிறந்த தர்மம். இதை அறிந்த வைகுண்டன் என்ற ப்ராமணன் நெய்யினால் தீபம் ஏற்றி வந்தான். இரவில் நெய் உறைந்தால் தீபம் ப்ரகாசமில்லாமல் அவியுந்தருவாயிலிருந்தது. அந்நெய்யைக் குடிக்க ஓர் எலி வந்தது. அதன் கால் பட்டு தீபம் நொந்தப்பட்டது போல் ப்ரகாசமாக எரிய அதைக்கண்டு பயந்து எலி ஓடிற்று. அதை ஓர் பாம்பு கொன்று தின்றது. தீபத்தைத் தூண்டிய புண்யத்தால் எலியும் வைகுண்டஞ் சென்றதென்றால் பக்தியுடன் விளக்கு வைக்கும் மானிடரைப் பற்றி கேட்கவேண்டுமா?

தானத்தினாலும் புராணச்ரவணத்தாலும் குழந்தை உண்டாகும். அதிதி பூஜை செய்யாதவனுக்குப் புத்ர பாக்ய முண்டாகாது. ஸ்ரீதரனென்ற அரசன் ஹேமப்ர

பாவதீ என்ற தன் மனைவியுடன் ஸகலபோகங்களை அநுபவித்தும் புத்ரபாக்யமில்லாதலால் மிகவருந்தி வ்யாஸரை வணங்கி புத்ரனுண்டாகும்படி அருள்புரியவேண்டினன். ஞானதிருஷ்டியால் அவர் அவன் பாபத்தை அறிந்து கூறினார். அரசே நீ முன்பிறவியில வரதநு என்ற ப்ராமணன் சங்கரி என்ற மனைவியுடன் நடந்து வெளியூர் சென்றாய். வழியில் ஓர் சண்டாளக் குழந்தை குளத்தில் விழுந்திறந்தது. அதை எடுத்துக் கரையில் விடாமல் சென்றதால் உங்களுக்குப் புத்ரன் உண்டாகவில்லை. மற்ற புண்யம் செய்ததால ராஜாவாகப் பிறந்தீர்கள். புராணச்ரவணம் செய்து புது வஸ்த்ரத்துடன் கூஷ்மாண்டதானம் செய்தால் புத்ரன் பிறப்பானென்றார். அப்படியே அநுஷ்டித்து அரசன் ஸத்புத்ரனைப் பெற்றான்.

தர்மமென உணர்ந்தோ உணராமலோ செய்யவேண்டும் என்ற எண்ணத்துடனே இல்லாமலோ தேவாலயத்திலுள்ள அழுக்கு அகல சுண்ணம்புபடித்தாலும் பகவான் ஸந்தோஷித்து நற்கதி அளிப்பார். கஞ்சலாங்கி என்றோர் விலைமாது தேவாலயத்தில் பலர் தன்னழகைப்பா... த்துத் தனக்கு தநமளிப்பர் என்றெண்ணி ஆலயத்தில் உட்கார்ந்து தாம்பூலந்தரித்தாள். மிகுதியான சுண்ணம்பைச் சுவற்றில் தடவினாள். அவள் எதிர்பார்த்தபடி ஒரு யுவா அவள் வலையில் சிக்கி இரவில் ஓர் வனத்தில் வந்து ஸங்கிக்கும்படி சொன்னான். அந்நேரத்தில இவள் அங்கு சென்று காத்திருக்க ஓர் புலி வந்து இவளைக் கொன்றது. வைகுண்டலத்திலிருந்து விமானத்துடன தூதர் வந்து இவளை அழைத்துச் சென்றனர். ஒரு ஸமயம் பாரத்தைத் தூக்கமாட்டாமல் பூதேவி பசுவினுடைய உருவங்கொண்டு கோலோகஞ்சென்று க்ருஷ்ணனிடம் முறையிட்டாள். நான் வாஸுதேவனாக பூமியில் பிறந்து பாரத்தை அகற்றுகிறேனென்றார். வஸுதேவ தேவகிகளிடம் அஷ்டமியில் அவர் அவதரித்தார். ராதாதேவி வருஷபர்வாவின் யாகபூமியில் மார்கழி மாதம் சுக்லாஷ்ட

மியில் தோன்றினள். ஆதலால் இவ்விரண்டு அஷ்டமி களிலும் உபவாஸமிருந்து பகவானை அர்ச்சிப்போர் வைகுண்டம் செல்வர்.

அமிருதங்கடைதல்

தூர்வாஸர் அளித்த தேவியின் மாலையை இந்த்ரன் அலக்ஷ்யமாகவாங்கி வெள்ளையானையின் தலையில் வைக்க அது அதைக்காலால் மிதித்தது லக்ஷ்மிகர்வத்தால் நீ இங்ஙனம் செய்தாய். லக்ஷ்மி உன்னைவிட்டு அகலுவாள் என ரிஷி சபித்தார். அங்ஙனமே லக்ஷ்மி மறைந்துவிட அஸுரர்கை ஓங்கி தேவரைத்துன்புறித்தனர் மஹாவிஷ்ணுவின் யோசனைக்கிணங்கி தேவரும் அஸுரரும் மந்தர மலையை மத்தாக்கி வாஸுகியைக்கயிருகக் கொண்டு பாற் கடலைக்கடைந்தனர். முதலில் மூதேவி விகாரமான உருவத்துடன் தோன்றி எனக்கேற்ற வீட்டை அளியுங்கள்? என்று வேண்டினள். சண்டையுள்ளவீடு கடினமாகப் பேசுவர் பொய் சொல்பவர் ஸந்த்யாகாலத்தில உண்போர் எலும்பு மயிர் சாம்பல் முதலியவைகளுள்ள இடம் காலைக்கழுவாமல் உண்போர் மணல் கறி உப்பு முதலியவைகளால் பல் துலக்குவோர் குருதேவ அதிதி பூஜையில்லா வீடு, மற்ற பாபம்செய்வோர் ஆகிய இந்த இடங்களே உனக்கேற்ற வீடு. அங்கு நீவஸி என தேவர்கள் கூறினர்கள்.

பிறகு ஐராவதம் உச்சைச்ரவஸ் காமதேனு பாரிஜாதம் அப்ஸரஸ்கள் சந்தரன் அமிருதம் தந்வந்தரி முதலியவைகள் உண்டாயின. த்வாதசி அன்று அதிகாலையில் லக்ஷ்மிதேவி உதயமானள். அவளைத்தேவர்வணங்கித்துதித்துஉலக நன்மைக்காக மஹாவிஷ்ணுவை மணம் புரிந்துக் கொள்ளுமென வேண்டினர். தேவி தன்மூத்த ஸஹோதரி கல்யாணம் செய்துக் கொள்ளாமலிருக்கும் பொழுது தான் மணப்பது தர்மமல்ல என்றுள். உத்தால

கரை அழைத்து அவளை மணக்கும்படி செய்து விஷ்ணு லக்ஷ்மியை ஏற்றுக்கொண்டார். அமிருதத்தைக்கண்டதும் தேவரும் அஸுரரும் எனக்கு எனக்கெனசண்டையிட விஷ்ணுமோஹினி அவதாரம் செய்து தேவரை ஒருபுரத்திலும் அஸுரரை மற்றோர்புரத்திலும் உட்காரவைத்து தேவருக்கு அமிருதத்தைப் பரமாறினர். அஸுரனில் ஒருவன் தேவ வேஷம் பூண்டு சந்த்ர ஸூர்யர்களுக்கிடையே உட்கார, இவர்கள் அதை விஷ்ணுவுக்குத் தெரிவித்தனர். தன்கையிலிருந்த ஆப்பையால் அஸுரனை விஷ்ணு வெட்ட, தலைராகுவாகவும் உடல்கேதுவாகவுந்தோன்றி கோள் சொன்ன சந்த்ர ஸூர்யர்களைப் பிடித்து வருகிறார்கள்.

லக்ஷ்மீ விருதம்.

ஸௌராஷ்ட்ர தேசத்தில் பத்ரச்ரவஸ் என்றோர் அரசனிருந்தான். அவன் மனைவி ஸுரசந்த்ரிகா எனப்படுவாள். இவர்களுக்கு ஏழுபிள்ளைகளும் ச்யாமபாலா என்று ஓர் கன்யகையும் பிறந்தார்கள். ஒரு நாள் லக்ஷ்மி தேவி ஓர் கிழ ப்ராஹ்மண ஸ்த்ரீவேஷம பூண்டு ராஜபத்நியைப் பார்த்து உனக்கு உபதேசம் செய்யலாமென்றெண்ணி வந்தேன். இன்று லக்ஷ்மீ பிறந்த தினமாதலால் அந்த விருதத்தைச் செய்யாத பாபியான உன்னிடம் பேசக்கூட பிடிக்கவில்லை. வந்தவழியே போகிறேன் என்றாள். ராணிசகுத் தன்னைப் பாபி என்று கூறியதால் வந்து விட்டது கோபம். வந்த லக்ஷ்மியின் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள். அவள் அழுதுக்கொண்டே அரண்மனையை விட்டுச்சென்றாள் இதை அறிந்த ராஜகன்யகை கிழவியை அழைத்து ஸமாதனம் செய்து அந்த விருதத்தைத் தனக்கு உபதேசிக்கும்படி வேண்டினாள். அவளும உபதேசித்துச் செல்ல ச்யாமபாலை அன்று முதல் விடாமல் இதை அநுஷ்டித்து வந்தாள். அந்த புண்யத்தால் வித்தேச்வரனது குமாரனுன மாலா

தரன் எனும் சக்ரவர்த்தியை மணந்தாள். இப்பெண் புருஷன் வீடு சென்றதும் பத்ரச்ரவஸின் செல்வமும் ராஜ்யமும் சென்றவிடம் தெரியாமல் போய்விட்டது. உடுக்கவும் உண்ணவும் பொருளின்றிப் பேதையாய்த் திரிந்து பெண்வீடு சென்றேனும் பொருள்தேடலாமென அரசன் மாலாதரன் நாட்டிற்கு வந்து ஓர் குளத்தங்கரையில் தங்கினான். தீர்த்தங்கொண்டுவர தடாகம் சென்ற பெண்கள் மூலமாக இதை அறிந்த ச்யாமபாலை தந்தையை அழைத்து நல்லாடை ஆபரணங்களை அளித்து ஓர் பாத்ரம் நிரைய பொன்னைக்கொடுத்து ஊருக்கனுப்பினாள்.

ஊர் சென்று மனைவியிடம் பெண்ணளித்த பொன்னைக்காட்ட அதெல்லாம் கரியாகக் காணப்பட்டது. தன் விதியை நொந்து பெண்ணிடம் மறுமுறை செல்ல வெட்கங்கொண்டு தவிக்கும தந்தை தாய்களை பெண் அழைத்துத் தக்கபடி பூஜித்து லக்ஷ்மி விருதத்தை அநுஷ்டிக்கும்படி செய்தாள். அந்த வ்ரதாநுஷ்டானத்தால் முன்போலவே பத்ரச்ரவஸும் ஸுரதிசந்த்ரிகையும் அஷ்ட லக்ஷ்மியுந் தாண்டவமாட ராஜ்ய ஸுகத்தை அநுபவித்தனர். தாய் வீடு சென்று இதைக்கண்டு ஸந்தோஷித்து வந்த ச்யாமபாலையை அவள் புருஷனை மாலாதரன் பார்த்து, நீ அங்கிருந்து என்ன கொண்டுவந்தாய் என்று கேட்டார். ராஜ்ய ஸாரத்தைக் கொண்டுவந்தேனென்ன, ராஜ்யஸாரமொருலென்ன என்று அவர் வினவினார். இதோ காட்டுகிறேனெனக் கூறி உப்பில்லா உணவை அரசனுக்களிக்கும்படி கட்டளை இட்டாள். அதைப் புஜித்து அரசன் உணவு நன்றாக இல்லை என்று கூற உப்பு சேர்த்த உணவை அளித்தாள். உணவிற்கு ஸமுத்ரத்தில் உண்டாகும் உப்பேஸாரம்போல் ராஜனுக்கும் மற்றேருக்கும் ஸாகரத்தில் ஜநித்த லக்ஷ்மியே ஸாரமென உபதேசித்தாள். அரசனும் அந்த வ்ரதத்தைக் கைகொண்டான். தன்னுயிரை அளித்தாவது பிறர் ப்ராணனைக் காப்பது ஓர் உயர்ந்த தர்மம்.

தீநாதனெனும் அரசன் காலவர் உபதேசத்தின்படி நரமேதயாகம் செய்து புத்ரனைப்பெற ஆசைகொண்டான். எண்ணிறந்த தனத்தை அளித்து ஓர் நரனைப் பலியாகப் பெற உலகெலாம் சுற்றினன் தசபுரமென்ற ஊரில் க்ருஷ்ண தேவர் என்பவர் ஏழ்மையின் கொடுமையால் மூன்று புதல்வர்களில் ஒருவனைத் தருவதாக தனத்தைப் பெற்றுக்கொண்டார். முதல் புதல்வனைப் பிதாவும் கடைசி மகனை மாதாவும் கொடுக்க மனமில்லாமைகண்டு இடையவன் தானே, நான் யமனுக்கானவன் என்று கிளம்பினன். அவனது தர்ம புத்தியைக்கண்டு விச்வாமித்திரர் கருணைகொண்டு தன் தவவலிமையால் அக்குழந்தையைக் காப்பாற்றி அரசனுக்கும் ஓர் குழந்தை பிறக்கும்படி செய்தார்.

பாதாள கண்டம்.

வாத்ஸ்யாயன மஹர்ஷி ஆதிசேஷனை வணங்கி ஸ்ரீராமன் சரிதத்திலுள்ள விசேஷங்களை விளம்பவேண்டுமென்று வினவ சேஷர் கூறினர். தசமுகன் முதலிய லோககண்டகர்களான அரக்கரைக் கொன்று ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் செய்துகொண்டு தர்மமாக அரசாண்டு வருந்தருவாயில் அகஸ்த்யர் வந்து ராவணன் முதலிய ராக்ஷஸர்களின் பூர்வ விருத்தாந்தத்தைக் கூறினர். புலஸ்த்யர் என்ற ப்ருஹ்மாவின் வம்சத்திலுதித்த பௌலஸ்த்யரைக் கொன்றதால் ப்ருஹ்மஹத்தி பாபம் வருமோ என்றஞ்சி ஸ்ரீ ராமன் அதற்கு ப்ராயச்சித்தம் விதிக்கும்படி கும்பஸம்பவரை வேண்டினர். அச்வமேதமே அப்பாபத்தை அகற்ற வல்லதென்று அவர்கூற விதிமுறை வழுவாமல் மஹாயாகத்தைச் செய்து முடிக்க மனங்கொண்ட தாசரதி, சத்ருக்னனையும் பரதன் புதல்வனை புஷ்கரனையும் ஆஞ்ஜநேயனையும் குதிரைக்குக் காவலாளியாக நியமித்து, அச்வமேதக்குதிரையை திக்கு விஜ

யம் செய்ய அனுப்பினர். சக்ரவர்த்தித்திருக்குமாரனது திருநாமந்தீட்டிய பட்டயத்தை முகத்திலேந்தி தங்கு தடையின்றி யக்ஞாச்வம் எங்கும் சென்றது. பின்னர் சத்ருக்னன் முதலிய வீரர் தொடர்ந்து சென்றனர். அங்கோர் அழகிய பட்டணத்தைப் பார்த்து அதன் வரலாற்றை ஸ்ரீராமனது மந்த்ரியான ஸுமதி சத்ருக்கனுக்குச் சொன்னர்

ஸுமதன்.

ஹேமகூடகிரியில் ராஜ்யத்தை இழந்த ஸுமதன் என்ற அரசன் முவ்வாண்டு ஏகாக்ர சித்தனுய் ஜகதம்பிகையைக்குறித்துத் தவங்கிடந்தான். இவனது தவத்தைக் கலைக்க இந்த்ரன் அநேகம் அப்ஸரஸ்ஸுகளைக் காமனுடன் அனுப்பினன். அவர்கள் அரசனை அணுகி மயக்கிப் பார்த்தனர். அவனே என் தாயை நாடி தவம் செய்கிறேன், நீங்களும் அவ்வடிவமானதால் தாயாக உங்களை வணங்குவேனேயன்றி காமக்கண்ணுல் பாரேனென்றான். இவனது தீரத்தைக்கண்டு காமாக்ஷிதேவி எதிரில் தோன்றி யாது வரம் வேண்டுமென்றாள். இழந்த என் ராஜ்யத்தை யான் பெறவேண்டும். அங்கு தாங்கள் ஸாந்நித்யம் செய்து பக்தர்களுக்கு அருள்புரிய வேண்டும் என்றான். அங்ஙனமே தேவி அருள் புரிந்தாள். அவ்வரசனிடம் உனது வரவை அறிவி என்று ஸுமதி கூறினன். ஸுமதன் உடனே மிக அன்புடன் இவர்களை வரவேற்று எண்ணிறந்த திரவ்யத்தை ஸ்ரீராமனுக்குக் காணிக்கையாகக்கொடுத்தனுப்பினன்.

ச்யவநர்.

ஓர் ஆச்ரமத்திற்கருகே அச்வம் செல்ல பின் தொடர்ந்த சத்ருக்னனைப் பார்த்து அதன் வரலாற்றை ஸுமதி கூறினர். ப்ருஹ்மவம்சத்தில் ப்ருகு என்றோர் மஹர்ஷி இருந்தார். அவர் ஸமித்தைக் கொண்டுவர

வனஞ் சென்றார். அச்சமயம் தமநன் என்ற ராக்ஷஸன் அவர் மனைவியைத்தூக்கிச்செல்ல உள்ளே புகுந்தான். அவனைப் பார்த்து பயந்து அவள் அக்னிசாலையில் புகுந்தாள். அரக்கனிடம் பயந்து வந்நி அவளை அவனுக்குக் காட்டிவிட்டான். ராக்ஷஸன் அவளைச்தூக்கிச்செல்ல அவள் கதறி அழுதாள். அவள் வயிற்றிலிருந்த கர்ப்பம் நழுவி விழ அதிலிருந்து ச்யவநரிஷி தோன்றி ராக்ஷஸனைத் தனது தேஜஸால் சாம்பலாக்கினார். ப்ருகு வந்ததும் இதை அறிந்து அச்னிக்கு எல்லாவற்றையும் புஜிக்கும்படி சாபமளித்தார் அக்னிவேண்ட, தயையால், எதைப் புஜித்தாலும் நீ சுத்தனே என்று அநுக்ரஹம் செய்தார். ச்யவநர் ரேவாநதீ தீரஞ்சென்று உடலைமறந்து பரமனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தார். அவர் சரீரத்தில் புற்றுண்டாய்விட்டது.

சர்யாதி எனும் அரசன் தன் பெண்ணுடன் வேட்டை ஆட வனஞ்சென்று ரிஷிதவம் செய்யுமிடம் வந்தான். ஸுகன்யகை எனும் ராஜகன்யகை புத்தின் உள்ளே பளிச்சென ப்ரகாசிக்கும் ரிஷியின் கண்ணைக் குச்சியால் குத்தி விட்டாள். உடனே அரசனத் சேனையிலுள்ள யானைகள் இறந்தன. ரத்னங்கள் காணாமல் போயின. சேனைக்குள் கலஹம் ஏற்பட்டது இதைக்கண்ட அரசன் எவரேனும் எந்த ரிஷிக்கேனும் ஏதேனும் தீங்கைச் செய்தீர்களா? என்றுகேட்க. ஸுகன்யை தான் விளையாட்டுத்தனமாக செய்த குற்றத்தைக் கூறினாள். அரசன் தபோதனரை வணங்கி சிறுவள் அறியாமல் செய்த அக்குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினான். மஹர்ஷியோ அக்கன்யகையைத் தனக்களித்து மணம் செய்து வைத்தல் வேண்டுமென்றார். அழகிய பெண்ணை அந்தமில்லா முனிவருக்களிப்பது அரசனமனதிற்கொவ்வாத தாயினும் மஹர்ஷியின்து சாபத்திற்கஞ்சி அவருக்கு ஸுகன்யயை மணம் செய்வித்தான். ஸுகன்யை சற்றேனும் குற்றம் நேராமல் முனிவர் மனம் மகிழ பணிவிடை செய்து வந்

தாள் அந்தரும் அந்தமில்லாதவருமான ச்யவனருக்கு ஸுகன்யை செய்யும் பணிவிடையைக்கண்டு தேவரும் வியந்தனர் தேவவைத்யரான அச்வினீ தேவர்கள் அந்தணருருவந்தாங்கி இவ்வாச்ரமத்திற்கு வந்தனர். பதிக்கு பதிலாக அதிதியை வரவேற்று பூஜைசெய்த அவள் நேர்மையைக்கண்டு ஸந்தோஷங்கொண்ட அச்வினீ தேவர்கள் உனக்கு யாது வரம் வேண்டும்? என்று வினவினர். எனது கணவனுக்குக் கண் வேண்டுமென்று அவள் வேண்ட ச்யவனருடன் அவ்விருவரும் ஓர் குளத்தில் முழுகிதங்களைப்போல் அவருக்கும் அழகிய உருவை அளித்து உன் பதியை அழைத்துக்கொள் என்றனர். சற்றேனும் சலியாத பதிபக்தியால் ஸுகன்யை ச்யவனரை மாலையிட்டு அழைத்துச் சென்றாள்.

இவ்வுபகாரத்திற்கு பதிலாக யாகத்தில் அச்வினீ தேவர்களுக்குப் பங்களிப்பதாக ச்யவநர் வாக்களித்தார். பலநாட்சென்ற பின் ச்யவநர் மனைவியுடன் கூடி சிற்றின்பத்தைப்பெற இச்சித்தார் மனைவி ராஜகன்யகை ஆதலால் அவளுக்கேற்றபடி அரண்மனையையும் பரிவாரங்களையும் மற்றும் வேண்டிய ஸௌகரியங்களையும் தவ வலிமையால் ரிஷி படைத்தார். பல தாதிப்பெண்கள் நிறைந்த ஓர் திவ்ய விமானத்தின்மீதேறி மனைவியுடன் உலகெலாம் சுற்றி ஆனந்தமாக பல ஸுகங்களை அநுபவித்தார்

ஸுகன்யையின் தந்தை சர்யாதி தான் ஓர் யாகஞ் செய்யக் கருதி பெண்ணுடன் ச்யவனரை அழைத்து வரும்படி தூதரை அநுப்பினான். கல்யாணம் செய்துக் கொடுத்தது போலில்லாமல் கந்தர்வனைப்போல் அழகுள்ள புருஷனருகே தன் பெண் நிற்பதைப் பார்த்து அரசன் பெண்ரிஷியைவிட்டு எவரையேனும் கைக்கொண்டனளோ? நம் குலத்தை அழித்துவிடுமே அச்செயல் எனஐயங் கொண்டான். ஸுகன்யை நடந்தவற்றைக் கூற அளவில்லா ஆநந்தங் கொண்ட அரசன் ச்யவனரைக்

கொண்டு யாகத்தை ஆரம்பித்தான். முன்னமே முனிவர் வாக்களித்தபடி அச்விநீ தேவர்களுக்கு மற்ற தேவர் தேவர்களுடன் யாகத்தில் பங்களித்தார். வைத்யத் தொழில் புரிவோருடன் ஸம பங்க்தியில் உட்கார்ந்து புஜிக்கலாகாதென்பது சாஸ்த்ர விதி. அதை மீறின ச்யவனரிடம் இந்த்ரன் கோபங்கொண்டான். வஜ்ராயுதத்தால் அவரைக் கொல்ல கையைத்தூக்கினான் முனிவரது மஹிமையால் அவனது கை அசைவற்று சித்திரத்தில் எழுதியதுபோல் நின்றது. இந்தரன் அவரை வணங்கித் துதித்து அச்விநிகளுடன் தாங்கள் உணவு கொள்வதாகவும் தன்னை க்ஷமிக்க வேண்டுமென்றும் ப்ரார்த்தித்தான். தபோதனரருளால் கை முன்போல் ஸ்வாதீனமானது.

என்ற கதையைக்கேட்டு ராமபக்தரான ச்யவனரை சத்ருக்னன் வணங்கி ராமர் செய்யப்போகும் யாகத்திற்குவர வேண்டுமென ப்ரார்த்தித்தான். அவர் அன்புடன் சத்ருக்னனைப் பூஜித்து சிஷ்யருடன் யாகத்திற்குக் கிளம்பினார். ராமபக்தி உருவெடுத்துவந்தது போலுள்ள அநுமார் ராமபக்தரான ச்யவனர் கால்நடையாகப் போவதைக்கண்டு ஸஹிக்கவில்லை. சத்ருக்னனை வணங்கி நீர் உத்தரவளித்தால் ராம பக்தனுக்கேற்றபடி என் தோளில் தூக்கி ஒரு நிமிஷத்தில் அவரை அயோத்யையில் கொண்டு விட்டுவருகிறேனென்றார். இவ்விருவரது ராமபக்தியும் சத்ருக்னனைப் பரவசமாக்கியது. உடனே உத்தரவளித்தான். அநுமானும் போனது தெரியாமல் அவரை ராமரிடம் சேர்த்துவிட்டுவந்தான்.

ரத்நக்ரீவன்.

காஞ்சீநகரில் ரத்நக்ரீவன் என்றோர் அரசன் தர்மமாக ராஜ்யபரிபாலனம் செய்துவந்தான். தனது முதிய வயதில் தநயனுக்கு ராஜ்யத்தை அளித்துத் தபோவநம் புகுந்து பிறவிக்கடலைக்கடக்க எண்ணினான். தற்செயலாக

அவனருகே ஓர் முநிவர் வர அவர்மூலமாக நீலபர்வதத்திலுள்ள புருஷோத்தம க்ஷேத்ரத்தின் மஹிமையைக்கேட்டான். அங்கு நான் முன்னோர் ஸமயம் நாலுகைகளுள்ள வேடர்களைப்பார்த்து ஆச்சரியமடைந்து எப்படி நாலு கைகளைப் பெற்றீர்களென்று வினவினேன். ஒருநாள் எங்கள்குமாரன் ஒருவன் தற்செயலாக புருஷோத்தம க்ஷேத்ரஞ்சென்று அங்குநடந்த பூஜையைப்பார்த்து சிந்திக்கிடந்த நிவேதநம் செய்த பக்ஷ்யத்தைப் புஜித்தான். அதனால் அவன் இப்பாக்யத்தைப் பெற நாங்களும் அதேபோல் அங்கு சென்று அதைப்பெற்றோம் என்று வேடர்கள் கூறினார்கள். என்று ப்ராஹ்மணன்கூறி, அரசனைப்பரிவாரத்துடன் அந்த க்ஷேத்ரத்திற்கும் மற்ற புண்ய நதிகளுக்கும் அழைத்துச்சென்றார். தீர்த்தமஹிமையையும் ஸாளக்ராமத்தின் பெருமையையும் அரசனுக்குக் கூறிவந்தார் ப்ராஹ்மணன், ஸன்யாஸி, ஸாளக்ராமம் இம் மூன்றும் தனது வீடென்று அம்பரீஷனுக்கு பகவான் க்ருஷ்ணன் சொன்னார் ஆதலால் ஸாளக்ராமத்தின் அபிஷேக ஜலம் சுத்தமானது.

கீடக தேசத்தில் சபரனென்றோர் சக்கிலி இருந்தான். அவன மிகக்ரூர குணமுள்ளவன். இவன் ஆயுள் மாண்டவுடன் யமதூதன் பாம்புருபமாக வந்து இவனைக்கடித்தான். அவன் இறந்தவுடன் யமதூதர்கள் பயங்கரமான உருவததோடு பலவகை ஆயுதங்கொண்டு இவனைப் புடைத்தனர். திடீரென விஷ்ணுகிங்கரர்கள் அவனருகேவந்து "விடுவிடு விஷ்ணுபக்தனை விடு இவனுக்கு இதோ விமாநம வந்துளதெ"ன்றனர். யமதூதர் ஐயா! பாவிபரமனுலகம்போகும்வகையாதென வினவினர். இவன் இறக்கும் தருணத்தில் ஓர் ஸாது ஸாளக்ராம ஜலத்தைத் துளஸியுடன் அவன்வாயில் விட்டு ராம என்ற மந்தரத்தை அவனகாதில்ஓதினரே. அதைநீஙகள் காணவில்லையா? என்று விஷ்ணு கிங்கரர் கூறினர். இக்கதைகளைக் கேட்ட ரத்நக்ரீவன் நீலபர்வதம் வந்தான். அம்மலை அர

சன் கண்ணில் படவில்லே. அரசன் வருந்தி ப்ராமணரைக் காரணம் கேட்க அரசே! கங்காஸாகரஸங்கமத்தில் ஸ்நானம் செய்து உன்பாபத்தை அகற்றி புருஷோத்தமனைப் பூஜித்து போற்றிவா? பகவான் அருள்புரிவார் என்றார். அங்ஙனமே அரசன்செய்ய பகவான் எதிரிற்றோன்றி ராஜனே ! எனது நிவேதந மிகுதியைப் புஜித்து நாற்கைகளைப் பெற ஓர் அழகிய விமானந் தருகிறேன். இது எங்கும் ஸஞ்சரிக்கத்தக்கது, இதைக்கொண்டு தேவலோகஞ் செல்லென்று கூறிமறைந்தார். அரசன் அவனது மனைவி மந்திரி, தன்னுடன் வந்த பக்தியுள்ள ஓர் வேலேக்காரன் ப்ராஹ்மணன் ஆகிய இவ்வைவரும் தனித்தனி விமானமேறிச்சென்றனர். இதே அந்தநீலகிரி என்று ஸூதன்கூற சத்ருக்நன் அங்குசென்று புருஷோத்தமனைத் தர்சித்து சென்றான்.

ஸுபாஹு

சக்ராங்கமெனும் தேசத்திற்கு அச்வமேதககுதிரை சென்றது. அத்தேசத்து யுவராஜன் தமனன் என்பவன் வேட்டை ஆடி வரும்போது இக்குதிரையைப் பிடித்துக் கொண்டான் தமநனது சேனேக்கும் சத்ருக்நனது சேனேக்கும் பெரும்போர் உண்டாயிற்று. ப்ரதாபாக்ரயன் என்ற ராமனைச் சார்ந்த அரசன் போர்முனையில் நின்று தமநனே எதிர்த்தான். தமநனது பாணத்தால் அடிபட்டு மூர்ச்சையாகக் கீழே விழுந்தான். இதைக்கண்ட புஷ்கலன்போருக்குவந்து தமநனதுஸேனேயைப்பதராக அடித்தான். அஸ்த்ரங்களுக்கு பதிலஸ்த்ரம் தவராமல்போட்டு இருவரும் மிகக்கடுமையாக யுத்தம்செய்தனர். அடிபட்டவர்களேயும் பெண்களேயும் பயந்து ஓடுகிறவர்களேயும் கொல்லாதே என்று ஸ்ரீராமனுபதேசித்ததை நினைத்து தன் பாணத்தா லடிபட்டு மூர்ச்சை யோடிருக்கும் தமநனே புஷ்கலன் கொல்லாமல்நின்றுகொண்டிருந்தான். அவனது ஸஹோதரர்களான விசித்ரன் என்பவனும் சித்ராங்கனும் வந்துபோர் புரிந்தனர்.

சித்ராங்கனுடன் புஷ்கலன் நீண்ட நேரம் ஸமர் புரிந்து ராமபாதத்தில் எனக்கு அளவற்றபக்திஇருப்பது உண்மையானால் இப்பாணம் அவனைக் கொல்லட்டும் என்று ஓர் சரத்தைவிட்டான். அது சித்ராங்கனது உயிரைக் கொண்டுசென்றது. இதைக்கண்டு அராத் துயரடைந்த தமநனும் விசித்ரனும் இவர்களது தந்தையான ஸுபாஹுவும் ரணகளத்தில் வந்து சோகத்தால் உடலை மதியாமல் உக்ரமாக வீரகோஷத்துடன் பாணவர்ஷங்களை வர்ஷித்தனர். வீரஹநுமானுக்கும் ஸுபாஹுவுக்கும் பயங்கரமான சண்டை நிகழ்ந்தது. அரசனது பாணவேகத்தைக்கண்டு ஆஞ்ஜநேயன் வீராவேசத்துடன் ராமனை மனதில் நினைத்து ஆகாயத்தில் எழும்பி காலால் ஸுபாஹுவின் மார்பில் உதைத்தான். இதைத் தாளமுடியாமல் அரசன் வாயால் ரத்தத்தைக்கக்கிக்கொண்டு மூர்ச்சையாகக் கிழேவிழுந்தான்.

அப்பொழுது ஓர் ஸ்வப்நம் அவனுக்குத் தோன்றிற்று. அயோத்தையில் அச்வமேதயாகத்திற்கு ஸங்கல்பம் செய்துக்கொண்டிருக்கும் ராமனைப்ரஹ்மாதி தேவர்கள் துதிப்பதைப்பார்த்தான். உடனே மூர்ச்சை தெளிந்து எழுந்தான். புதல்வர்களை அழைத்துப் போரை நிறுத்தும்படி கூறினான். தான் ஒருஸமயம் தீர்த்தயாத்ரைக்குச் சென்றபொழுது அஸிதாங்கர் என்ற முனிவரைத் தர்சித்ததாகவும் அவர் தன்னைப்பார்த்து ஸுபாஹோ! நீ வணங்கும் விஷ்ணுவே ராமனாக அவதரித்திருக்கிறார் என்று கூறியதாகவும், அதைக்கேட்டுதான் பிறப்பு இறப்பில்லா பரந்தாமன் ஸாமான்ய ராமனாக வருவனோ? என்று அவரைப்பரிஹாஸம் செய்ததாகவும், அவர் நீ தத்வஞாநத்தை இழப்பாய் என சாபமளித்ததாகவும் தான் அவரை வேண்டியபொழுது ராமதூதனான மாருதியின் பாதம் உன்மார்பில் பட்டவுடன் அறிவைப் பெறுவாய் என்று அவர் அருள்புரிந்தாகவும் இப்போது தனக்

குத் தத்வம் விளங்கியதால் அச்வமேத குதிரையுடன் காணிக்கையும் அவருக்களித்து அவரை தர்சிக்க வேண்டுமென்றும் கூறினன். இதைக்கேட்ட அவன் புதல்வர்களும் யுத்தத்தை நிறுத்தி தந்தையுடன் சத்ருக்னனை வணங்கி தான் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினர். ஸுபாஹுராஜன் பகவத்பக்தனதலால் புதல்வனுக்கு ராஜ்யத்தைப் பட்டாபிஷேகம் செய்துவைத்து சத்ருக்னனுடன் ராமஸேனையில் சேர்ந்து ராமஸேவகனானன்.

ரிதம்பரன்.

தேஜப்புரம் என்ற தேசத்தில் ரிதம்பரன் என்றோர் ராசனிருந்தான். புத்ரபாக்ய மில்லாமல் ஜாபாலி மஹரிஷியை அடுத்துப் புத்ரப்பேருண்டாகும்படி அருள்புரிய வேண்டினன். அவர் கூறினர். அரசே! விஷ்ணு சிவன் பசு இவர்களின் ப்ரஸாதத்தால்தான் குழந்தை உண்டாகும். பசுவுக்கு ஜலங்காட்டாமலிருந்தாலும், ருதுவான கன்யகையை வீட்டில்வைத்திருந்தாலும், பழைய புஷ்பமான நிர்மால்யத்துடன் ஸ்வாமியை (அபிஷேகம் செய்யாமல்) வைத்திருந்தாலும் நமது புண்யம் அழிந்துவிடும். கோவுக்கு அபசாரம் செய்யக்கூடாதென்பதற்கு ஓர் சரிதத்தைச் சொல்கிறேன் கேள்.

ஜநகன் என்று ஒரு அரசனிருந்தான். அவன் மிக்க தர்மிஷ்டன். அவன் இறந்தபோது அவனை ஏற்றிச்செல்ல ஓர் திவ்ய விமாநம் வந்தது. அதிலேறி ஸ்வர்க்கம் செல்லும் பொழுது அவன் நரகவேதனை அநுபவிப்போரைப் பார்த்து வருந்தி அங்கு சற்று நின்றான். அவன் உடலில் பட்ட காற்று பாபிகள்மேல் பட்டதும் அவர்களது துன்பங்கள் அகன்றன. ஆதலால் ஜநகனை அங்கேயே இருக்கும்படி நரகத்திலுள்ளோர்வேண்ட, அரசனும் அப்படியே நின்றான். இதைத் தூதர்மூலமறிந்த யமதர்மராஜன் ஜநக

அருகேவந்து வணங்கி, நீர் ஸ்வர்க்கம் செல்லும். பாபத்திற்கேற்றபயனை அநுபவிக்கும் இவர்கள் சிக்ஷையை ஏன் தடுக்கிறீர்? என்றான். தீநரிடம் தயைகொண்ட ஜநகர், இவர்களைப் பாபத்திலிருந்து விடுவிக்க ஓர் வழி சொல்லுமென யமனைக் கேட்டார். நீர்செய்த ராமபூஜையின் பலத்தைக் கொடுத்தால் அவர்கள்விடுபடுவர் என்று யமனுரைக்க, அப்படியே தாநம்செய்து எல்லோரையும் ஜநகன் விடுவித்தான். அவர்களும் யமனும் இவரை வாழ்த்தினர். ஜநகரே! நீர் மேய்ந்துக் கொண்டிருந்த பசுவை ஓட்டினீர். அந்தபாபத்தால் நரகத்தைக் கண்ணால் காண நேர்ந்ததெனக் கூறி யமன் அவரை ஸ்வர்க்கத்திற்கநுப்பினன்.

இக்கதையைக்கேட்ட ரிதம்பரன் பசு மேயும்பொழுது அதன் பின்சென்றும் புற்களைப் பிடிங்கிக் கொடுத்தும் சொறிந்தும் அன்புடன்கோவைப் பூஜித்துவந்தான். ஒருநாள் காட்டில் மேய்ந்துக் கொண்டிருந்த கோவை, அரசன் அருகில் வருவதற்குள்ளாக ஓர் ஸிம்ஹம் கொன்றுவிட்டது. இதை நினைத்துக் கதறி மஹர்ஷியிடம்வந்து இதற்கு ப்ராயச்சித்தமென்ன வென்று அரசன் கேட்டான். எல்லா பாபத்திற்கும் ப்ராயச்சித்தமுண்டு. கோஹத்திக்குப்ராயச்சித்தமில்லை. ஆனால் உன்னை அறியாமல் அதுநேர்ந்ததால் ஸ்ரீராமபக்தனான ருதுபர்னக ராஜனைக்கேள் அவன் சொல்வான் என்றார். அப்படியே அரசன் அவரை வேண்ட ஸ்ரீராமபக்தியே இதற்கேற்ற ப்ராயச்சித்தமென்றாரவர். அன்றுமுதல் ரிதம்பரன் ராமபக்தியில் ஈடுபட்டு அவரைப் பூஜித்துவந்தான். காமதேனு அதனால் ஸந்தோஷமடைந்து ஸத்யவான் என்ற புதல்வனை அரசனுக்களித்தது. என்று அவ்வூரின் சரிதத்தை ஸுமதன் சத்ருக்னனுக்குக் கூறினன். ஸத்யவான் இவர்களை வணங்கி ஸ்ரீ ராமனுக்குக் காணிக்கை அளித்தான்.

வித்யுன்மாலி வதம்.

ராவணனுடைய நண்பனான வித்யுன்மாலி என்ற அரக்கன், பாதாளத்திலிருந்து வந்து மாயையால் எங்கும் இருளாக்கிக் குதிரையைக்கொண்டு சென்றான். காவலாளிகள் அனைவரும் திகைத்து நிற்க கொஞ்சநேரத்திற்கெல்லாம் ஆகாயத்தில் அச்வத்துடன் செல்லும் அரக்கனைக் கண்டனர். லக்ஷ்மீநிதி என்ற ராமன் மைத்துனனும் புஷ்கலனும் அவ்வசுரனைக் கொல்லாவிடின் நரகத்திற்குச் செல்வோமென சபதம் செய்து போருக்குச் சென்றனர். இவர்களுக்கும் ராக்ஷஸனுக்கும் பயங்கரமான சண்டை உண்டாயிற்று. இவ்விருவரும் அரக்கனிடம் அடிபடுவதைககண்டு ஆஞ்சநேயன் விரைவாக ஓடிவந்து வித்யுன்மாலியுடன் யுத்தம் செய்தான். அவனையும் மதிக்காமல் ஸேனையை நாசம் செய்யும் அவனோடு சத்ருக்னன் நேராக யுத்தம் செய்தான். இருவருக்கும் கடும்போர் நேர்நதது. முடிவில் ஸ்ரீ ராமபாதமஹிமையால் சத்ருக்னன வித்யுன்மாலியின் கழுத்தை அறுத்து, அவன் ஸேனகளை விரட்டி அச்வத்தை மீட்டு வந்தான். அவனிடம் அடிபட்டவர் சத்ருக்னனது பல பராக்ரமத்தை மெச்சினர்.

ஆரண்யகர்.

ஆரண்யகர் என்ற மஹர்ஷி சத்ருக்னன், முதலியவர்களுக்கு அர்க்யபாத்யம் முதலியவைகளை அளித்து ஸ்ரீ ராமனது பெருமையை விளக்கித் தனது அநுபவத்தைக் கூறினார். பல தீர்த்தங்களுக்குச் சென்று தத்வோபதேசம் செய்யும் பெரியோரை நான் தேடினேன். முடிவில் லோமசர் என்ற ரிஷியை வணங்கி எனக்கு தத்வோபதேசம் செய்யும்படி வேண்ட லோமசர் ராமனைவிட தைவம் வேறில்லை, அவர் மந்த்ரத்தை விட உயர்ந்த மந்த்ரமில்லை, அவரைப் பூஜிப்பதை விட சிறந்த யோக

மில்லை என்று கூறி அவரது அவதார விசேஷத்தை விஸ்தாரமாகச் சொன்னார் அன்று முதல் இன்றுவரை ஸ்ரீ ராமபக்தியிலீடுபட்டேன். ராமர் அகஸ்த்யர் சொற்படி அச்வமேதம் செய்வதைக்கேட்டு அளவிலாமகிழ்ச்சி பெற்றேன் என்றார். இதைக்கேட்டு அவரது ராம பக்திக்கு வியந்து பல்லக்கிலேற்றி அரண்யகரைச் சத்ருக்நன் அயோத்யைக்கு அநுப்பினான்.

வீரமணி

இக்குதிரை ரேவாநதியின் மடுவில் இறங்கிமறைந்தது. ஸுமதன் கூறியபடி சத்ருக்நன், புஷ்கல ஆஞ்சநேயர்களுடன் அந்த ஜலத்தில் இறங்கினான். அங்கு ஓர் அழகிய பட்டணத்தில் ரத்ந ஸிம்மாஸநத்தில ஓர்யோகினி உட்கார்ந்திருந்தாள் அவளை எண்ணிறந்த அழகு வாய்த பெண்கள் ஸேவிப்பதைப் பார்த்து ஆச்சர்யமடைந்து, தாயே! எங்கள் குதிரை எங்கே? யார் கொண்டு சென்றது? என்று கேட்டனர். அங்குள்ளோர், இங்கு மனிதர்வரககூடாது. வந்தால் திரும்பமாட்டார்களே நீங்கள்யார்? என்றுகேட்க அநுமான் தனது விருத்தாந்தத்தைக் கூறினர். அதைக்கேட்ட யோகினி ஆயின் ராமபக்தருக்கு அபசாரம் செய்யக்கூடாது. குதிரையைக்கொண்டு செல்லுங்கள். வீரமணி என்றவீரன உங்களுடன் போருக்கு வருவான். அவனுக்கு ராமபக்தியை ஊட்ட இதையுமெடுத்துக் கொள்ளுங்களென்று ஓர் அஸ்த்ரத்தையும் குதிரையுடன் கொடுத்தாள். இம்மூவரும் அதைப்பெற்று குதிரையுடன் கரை ஏறி வெளிவந்தனர்.

பிறகு ருக்மாங்கதனெனும் ராஜகுமாரன் இக்குதிரையைப் பிடித்துக் கட்டினான். சிவனையே தன்னகரததில் வஸிக்கும்படி செய்த என் தந்தை வீரமணியைவிட வீரனே ராமன்? என்றான். தன் புதல்வனது செயலைச்

சிவனிடம் கூறி யாது செய்வதென்று வீரமணி வேண்ட, ராமாபராதம் செய்யாதே! காணிக்கையுடன் அச்வத்தை அவரிடம் அளிப்பதே உசிதமென்று சிவன் சொன்னார். வீரமணி, ஸ்வாமின்! வீரருக்கு அழகோ இது! போரில் ஒப்பற்ற வீரனென பெயர் பெறுவதன்றோ க்ஷத்ரியன் கடமை என்றான். ஆயின் ஸ்ரீ ராமன் இங்கு வந்து தர்சனம் தந்தாலன்றி அச்வத்தை விடாதே, போருக்கு ஸித்தமாயிரு என்று பரமசிவன் கூறினார். இதனிடையில் குதிரை சென்ற வழி தெரியாமல் சத்ருக்நன் முதலியோர் தவிக்க, நாரதரிஷி வந்து குதிரை இருக்குமிடத்தைக் கூறிச்சென்றார். சத்ருக்நன் தனது ஸேனையை யுத்தத்திற்கு ஸந்நத்தம் செய்து வீரமணிக்குச் செய்தி அனுப்பினான். அவன் தனது ஸஹோதரனை வீரஸிம்ஹனுடனும் ருக்மாங்கதன் சுபாங்கதன் என்ற இரு குமாரர்களுடனும் பரமசிவனை வணங்கி ரணகளம் வந்தான். இருசேனைகளும் கைகலந்து பயங்கரமாக யுத்தம் செய்தன. புஷ்கலனது பாணவர்ஷத்தால் ருக்மாங்கதன் மூர்ச்சையாகிக் கீழே விழுந்தான். இதைக்கண்டு வீரமணி, வீராவேசத்துடன் புஷ்கலனை நோக்கி வர அநுமான் புஷ்கலனுக்கு ஸஹாயமாக வந்தான். புஷ்கலன் ஆஞ்சநேயரைப் பார்த்து ஸமான்யமான இவனை ஜயிக்க தாங்கள் எனக்கு ஸஹாயமாக வரவேண்டுமா? அவன் சிவனை ஆராதித்து ஸஹாயமாகக் கொண்டான் எனில் என்னுள்ளத்திலே ஸ்ரீ ராமபிரான் இல்லையோ? என்று கூறி ராமத்யானம் செய்து வீரமணியைப் போருக்கு அழைத்தான். கடும்போர் இருவருக்கும் நேர்ந்தது. புஷ்கலனது பாணத்தால் அரசன் மூர்ச்சித்தான். அநுமானடித்த அடியால் வீரபாகு மூர்ச்சித்துக் கீழே விழுந்தான். இருராஜகுமாரர்களையும் மாருதி தனது வாலால் ரதத்துடன் கட்டி வளைத்துத் தூக்கி பூமியில் அறைந்தான். அவர்களும் மூர்ச்சித்தனர்.

தனது பக்தர்களது நிலையைக் கண்டு பக்தபராதீனான பரமசிவன் தானே போருக்கு வந்தார். சத்ருக்நன் சிவனுடனும் சத்தியுடன் ஹநுமானும் வீரபத்ரனுடன் புஷ்கலனுமாகச்சேர்ந்து யுத்தம் செய்தனர் ஒருவருக்கும் தோல்வியும் ஜயமும் உண்டாகாமல் பதினோறு நாள் சண்டை நடந்தது. பனிரண்டாம் நாள் சத்ருக்நன ப்ரஹ்மாஸ்தரத்தை ப்ரயோகித்தான் அதைக்காலகண்டன் விழுங்கிவிட்டு உக்ரமான ஓர் பாணத்தால், சத்ருக்நனைத் தாக்கினார். அவன் மூர்ச்சையாகிக் கீழ விழுந்துவிட்டான். ஆஞ்ஜநேயன் உடனே ஓடிவந்து தர்ம விரோதமான கார்யத்தைச் செய்வதால் உம்மோடு நான் யுத்தம் செய்ய வந்தேனென்றார், பக்த! இவ்வரசன்என்னை ஆராதித்து தனக்கு ஸ்வாதீனமாக்கிக் கொண்டான். அவனை ரக்ஷிப்பது என் தர்மமாகும். ஸ்ரீ ராமமூர்த்தி இங்குவந்து எனக்கு ஸேவை அளித்துக் குதிரையைக் கொண்டு செல்வார். அஞ்சாதே என்று கைலாஸ நாதன் கூறினார். ஆயினுமிவ்விருவருக்கும் பயங்கரமான ஸமர் நேர்ந்தது. பர்வதங்களைக் கொண்டு வந்து பரமசிவனது தேரை அநுமான் பலமுறை முறித்தார். சந்தரசூடனது தலையிலுள்ள சந்த்ரகலை ஒடிந்தது.

இவனது பராக்ரமத்தைக் கண்டு வியந்த கைலாஸ நாதன் மாருதியை நோக்கி உனக்கு யாது வரம் வேண்டுமென்றார். அரனே! யான் ஔஷதி மலையைக் கொண்டு வரும்வரை ரணத்தில் மூர்ச்சையான சத்ருக்நன் முதலியோரை உமது கணங்களான பூதப்ரேத பிசாசங்கள் உண்ணாதபடி அருள்புரியவேண்டும் என்றார். அவரும் அதை ஏற்க, வெகு வேகமாகச் சென்று அம்மலையைத் தூக்க, ஆங்குள்ள இந்த்ரனது வேலையாட்கள் அவரைத் தடுத்தனர். கோபங்கொண்ட அநுமான் அவர்களைக் கொல்ல ப்ருஹஸ்பதி வந்து அவரை ஸமாதானம் செய்து வேலைமுடிந்தவுடன் அம்மலையை இங்கேயே கொண்டுவர வேண்டும் என வேண்டி அப்பர்வதத்தை அளித்தார்.

வானரச்ரேஷ்டரான ஆஞ்சநேயன் தான் ராமபக்தன் நைஷ்டிக ப்ரம்மசாரி என்பதுண்மையானல் சத்ருக்நன் முதலியவர்கள் ஜீவித்தெழுந்திருக்கட்டும் என்று கூறி ஒஷதியை அளித்தார். எல்லோரும் உடனே மூர்ச்சை தெளிந்தெழுந்து எங்கே சத்ரு? என்றனர். மறுபடியும் சத்ருக்நனிடம் வீரமணியும் அஸ்த்ரங்களுக்கேற்ற பதிலஸ்த்ரம் விட்டு பயங்கரமான சண்டை செய்தனர். யோகினி அளித்த மோஹனஸ்த்ரத்தால் சத்ருக்நன் எல்லோரையும் மோகிக்கும்படி செய்தான். ருத்ரன் ப்ரளய கால ருத்ரன்போல ஸகல ஸேனைகளையுமழிக்கும்படி பாணவர்ஷம் செய்ய, சத்ருக்நன் மனமுறுக ராம பக்தர்களைக் காத்தருளும்! ருத்ரனுடைய ரௌத்ரத்தைச் சஹிக்க முடியவில்லை என்றார். உடனே தீக்ஷாவேஷத்துடன் ராமர் எதிரிற்றோன்ற பரமசிவனும் ஆஞ்ஜநேயரும் மூர்ச்சை தெளிந்த வீரமணியும் அவரை வணங்கிப் போற்றினர். சிவனுத்திரவுபடி வீரமணி குதிரையுடன் காணிக்கையையு மளித்து புத்ரனிடம் ராஜ்யத்தைக் கொடுத்துவிட்டு ஸ்ரீ ராம கைங்கரியம் புரிய தானும் சத்ருக்நனது ஸேனையில் வந்து சேர்ந்தான்.

ஸாத்வீக சாபமோசநம்.

ஹேமகூடம் என்ற இடத்தில் அச்வமேத குதிரை வந்தவுடன் அதன்கால் எழும்பாமல் ஸ்தம்பித்துவிட்டது. கசையால் காவலாளிகள் அடித்தும் புஷ்கலன் தன் கைகளால் இழுத்தும் ஹநுமான் தன் வாலால் சுற்றி இழுத்தும் குதிரையின் கால் கிளம்பவில்லை. எல்லோரும் ஆச்சரியமடைந்தனர். அநுமான், இது ஏதோ தைவிகமான விக்நம். இல்லையேல் என் வாலுக்கு வாராதோ இது? என்றார். உடனே ஸுமதன் உத்ரவுபடி ஒவ்வொரு இடமாக அலைந்துதிரிந்து ஓர் மஹஷி ஆச்ரமம் இருப்பதாக தூதர்கண்டு சொன்னார்கள். சத்ருக்நன் ஆங்குசென்று சௌநகரெனும் அம்முனிவரைப்பணிந்து குதிரை ஸ்தம்

பித்தகாரணம் யாதென வினவினன். அவர்ஞான திருஷ்டியால்உண்மையை அறிந்து கூறினர்.

சத்ருக்ந ! கௌட தேசத்தில் காவேரீ தீரத்தில் ஸாத்விகர் என்றோர் ப்ராஹ்மணனிருந்தான். நிராஹாரனாக இருந்து தவம்புரிந்து இவ்வுடலழிந்தவுடன் விமானத்தின் மீதேறி தேவலோகஞ் சென்றனவன். மேருவின் சிகரத்தில் ஜாம்பவதீ நதிக்கரையில் ஜம்புமரத்தின்கீழ் பல மஹர்ஷிகள் தவம்புரிவதைக் கண்டான். அவர்களைப் பல அப்ஸரஸ்த்ரீகள் ஸேவிப்பதைப் பார்த்து அவர்களை அலக்ஷ்யம் செய்து தமது கிற்கு விக்நம்செய்தான். அதனல் கோபங்கொண்ட ரிஷிகள் ராக்ஷஸனகும்படி அவனைச் சபிததனர். தனது அபசாரத்தை க்ஷமிக்கும்படி ஸாத்விகன் அவர்களைப் பணிந்து ப்ரார்த்தித்தான். முனிவர்கள் தயைகூர்ந்து ஸ்ரீராமனது அச்வமேதாச்வத்தைத் தடுத்து ஸ்தம்பிக்கும்படி செய்து பின்னர் அங்கு ஸ்ரீராம நாமத்தைக் கேட்டு நற்கதி பெறுவாய் என அநுக்ரஹித்தார். ஆதலால் ஸ்ரீராமநாம பந்த்ரத்தை ஜஜபித்து அவனுக்கும் நற்கதி அளித்து அச்வத்தையும் மீட்டுச் செல்லென்று கூறினர். அங்ஙனமேசெய்து கர்மவிபாகத்தைக் கூறும்படி சத்ருக்நன் வேண்ட, அவர் கூறியதாவது:—

கர்மவிபாகம்.

தன்னுடலை மாத்ரம் ஊட்டி வளர்ப்பது, பரத்ரவ்யத்தைக்கை கொள்வது, பிறர் மனைவியை ரமிப்பது, வீட்டிற்கு நெருப்புவைப்பது; விஷமளிப்பது, குருநிந்தை, கர்வம் முதலியவைகள் நரகத்தை அளிக்கும் பாபகர்மங்களாம். பாபங்களுக்கேற்ற துக்கபலத்தை நரகத்தில் அநுபவித்துவிட்டு பூமியில் பிறந்தும் அப்பாபத்தின் சின்னத்தைத் தரிக்கும்படி நேரிடுகிறது. ஸுராபாநத்தால் சொத்தப்பல்லும், தகாததைப் புஜிப்பதால் குல்மநோயும் தூர

ஸ்த்ரீ பார்த்ததைப் புஜிப்பதால் வயிற்றில் புழுவும், நாய் பூனை முதலியவைகள் தீண்டியதை உண்பதால் சரீர துர்நாற்றமும், ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யாமல் உண்பதால் வயிற்றுநோயும் உண்டாகிறது.

பிறர் உண்பதைத் தடுத்தாலும் ஐச்வர்யமுள்ளபோது அதிதிக்கு நல்ல உணவளிக்காததாலும் அஜீர்ணம், விஷமளித்தால் வாந்தி, வழியைத் தடுத்தால் கால்நோய், கோள் சொன்னால் காசரோகம், காட்டுக்குத் தீவைத்தால் ரக்தாதிஸாரம், பரருக்குப் பாபம் செய்தால் சூலரோகம், தேவாலயத்திலோ ஜலத்திலோ மலஜலங்கழித்தால் மூலரோகம், விக்ரஹங்களை முறித்தால் கர்ப்பபாதம், கடுமையாகப் பேசினாலும் பரநிந்தை செய்தாலும் வழுக்கத்தலை, பக்ஷபாதமாகப் பேசினால் பார்ச்வவாயு, பிறர் சொல்லைப் பரிஹஸித்தால் குருட்டுத்தனம், ஸ்வர்ணத்தைத் திருடினால் சொத்தநகம், தாம்ரத்தைத் திருடினால் தொந்தி, வெண்கலந் திருடினால் வெண்குஷ்டம், அரக்கைத் திருடினால் செம்மட்டை மயிர், ஈயத் திருட்டுக்குத் தலைவலி, நெய் திருட்டிற்குக் கண்ரோகம், தோலைத் திருடினால் மேதஸ், இரும்பைத் திருடினால் குஷ்டரோகம், எண்ணெய் திருடினால் சொறி, அரிசி திருட்டிற்குப் பல்லில்லாமை, பகவான் தனத்தைத் திருடினால் நாக்குரோகம் மாத்ருகமனத்தால் லிங்கமில்லாமையும் உண்டாகும்.

மித்ரன் பார்யைக் கெடுத்தால் மனைவி இறப்பாள். வேதவித்தின் மனைவி கமநத்தால் மூக்குரோகம், தன் ஜாதி பரஸ்த்ரீயானால் ஹ்ருதயரோகம், மேல் ஜாதியானால் தலை ரோகமும் உண்டாகும் என்று சௌநகர் உபதேசித்தார்.

வஸூரதன்.

தேவமாதாவான அதிதியின் காதுகுண்டலம் பூமியில் ஒரு ஸமயம் விழுந்தது. அந்த இடம், குண்டலம் என்ற

நகரமாயிற்று. அங்கு ஸுரதன் என்ற அரசன் ராஜ்யபாரம் செய்துவந்தான். இவன் மிகச் சிறந்த ராமபக்தனுதலால் இவனது குடிகளையும் ராமபக்தியில் ஈடுபடும்படி செய்தான். ஆதலால் அவன் ராஜ்யத்திலிருந்து எவரும் யமலோகம்செல் வதில்லை. இதைக் கண்ட யமதர்மராஜன் ஓர் முனிவேடந் தாங்கி இவ்வரசனருகே வந்தான். அவரைத்தக்கபடி பூஜை செய்தா னரசன். ஆஸனத்திலமர்ந்த ரிஷியைப் பார்த்து ஸ்ரீ ராம கதையைச் சொல்லும்படி அரசன் வேண்டினன். மஹ ர்ஷி நகைத்தார். அரசன் என்ன சிறிப்பிற்குக் காரணம்? என்று கேட்டான்.

அரசே! ஸகல பாபங்களையுமகற்றி இஹபரஸுகத்தை அளிக்கும் கர்மமார்க்கத்தைவிட்டு ராமர் கதையைச் சொல் லச் சொல்கிருயே என்று யமன் கூறினன். மஹர்ஷே! கர்மா வால் கிடைக்கும் பதவிகள் அழிவுள்ளதன்ரே? ஸ்ரீராம பக்தியால் உண்டாகும் பயன் அழிவற்றதல்லவா? என்று அரசனுரைத்தான். யமன் தன்னுருவைக் காட்டி உன் பக்தி யைப் பரீக்ஷித்தேன். இதுதான் ஸரியான மார்க்கம் என்று கூறி மறைந்தார். அந்த ஸுரதன் ஸ்ரீராமனது குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டு ஸ்ரீராமமூர்த்தி எனக்கு தர்சநந்தந்து குதிரையைக்கொண்டு செல்லட்டும் என்ருன்.

இந்த விருத்தாந்தத்தை அறிந்த சத்ருக்னன் அங்கத னைத் தூதனுப்பி அச்வத்தை விடுகிருயா? போருக்கு வருகி ருயா? என்று கேட்டான். தனது நிச்சயத்தைக் கூறி சம் பகனெனும் தன் தநயனுடன்கூட எண்ணிறந்த சேனை புடை சூழ ஸுரதன் ரணகளத்திற்கு வந்தான். புஷ்கலன் அங்க தன் அனுமான் ஸுக்ரீவன் வீரமணி சத்ருக்நன் முதலியவர் களும் சேனையுடன் போருக்கு வந்தனர். இரண்டு சேனையும் கைகலந்தது. புஷ்கலன் சம்பகனைப் பார்த்து நீ யார்? என்

றுன். சம்பகன் எனது தந்தை ராமன் என் தாயும் ராமன் பந்துக்களும் ராமன் என் பெயர் ராமதாஸன் என்றுன். அவனது ராமபக்தியைக் கண்டு அவனை அடிக்க மனமில்லா விடினும் எதிரிகளது நிச்சயத்தையும் க்ஷத்ரிய தர்மத்தையும் யோசித்து யுத்தத்திற்காரம்பித்தானவன். இருவரது சண்டையும் பயங்கரமாக இருந்தது. சம்பகன் ராமாஸ்த்ரத்தால் புஷ்கலனைக் கட்டிவிட்டான்.

அவனை விடுவிக்க மாருதிவந்து மலைகளைச் சம்பகன் மேலெறிந்தான். அதை அரசகுமாரன் பொடிப்பொடியாக்கி விட்டான். கோபங்கொண்ட ஆஞ்சநேயன் காலால் உதைத்துச் சம்பகனைக் கீழே தள்ளி காலைப்பிடித்துக் கரகரவென்று சுழட்டிக் கீழே எறிந்தான். மூர்ச்சை தெளிந்தெழுந்த சம்பகன் அனுமானது வாலைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளினுன். கோபங்கொண்ட மாருதி சம்பகன் காலைப்பிடித்துத் தூக்கிச் சுற்றி யானைமந்தையிலெறிந்து புஷ்கலனை விடுவித்து வந்தான். இவன் வீர்யத்தைக் கண்டு மெச்சி ஸுரதன் தன்னுேடு போரிடும்படி ராமதூதனை வேண்டினுன். இவ்விருவரும் வெகு நேரம் பயங்கரமான யுத்தம் செய்தனர்.

ஸுரதனுடைய நாற்பத்தொன்பது தேர்களை ஒன்றன்பின் ஒன்ருக அனுமான் முறித்தார். ஸுரதன் பாசுபதாஸ்த்தரத்தால் இவரைக் கட்ட, ராமத்யாநத்தால் ராமதூதர் விடுபட்டார். ராமாஸ்த்ரத்தால் ராமதூதனைக்கட்டி ஸுரதன் புஷ்கலனையும் மூர்ச்சிக்கும்படி அடித்தான். மற்றுமுள்ளோரையும் மோஹனுஸ்த்ரத்தால் மயக்கித் தள்ளி ஜயலக்ஷ்மியுடன் ஸுரதன் வீடு திரும்பினுன். அநுமான் கட்டுண்டபடியே ராமனை மனத்தால் நினைத்துத் துதித்தான். அவனுடைய பக்திக்கிடுபட்ட பகவான் பரதலக்ஷ்மணர்களுடன் வந்து மாருதிக்குக் காக்ஷியளித்தார். உடனே அவரது ஸான்னித்ய

விசேஷத்தால் எல்லோரும் மூர்ச்சைதெளிந் தெழுந்து பகவானைத் தர்சித்தனர். ஸுரதன் தனது அபசாரத்தை மன்னிக்கும்படிவேண்டி சம்பகனுக்குப் பட்டாபிஷேகம் செய்து வைத்துத் தானும் ராமலிங்கானுக சேனையுடன் கிளம்பினன். ராமரும் அயோத்யை சென்றுர்.

ஸீதையை விட்ட காரணம்.

வால்மீகி ஆச்ரமத்திற்குக் குதிரை சென்றது. ஆங்குள்ள ராகவன் புதல்வனுன குசன் அதைக் கட்டிவிட்டான். ஸீதையும் லவகுசர்களும் அங்கிருக்கக் காரணம் யாதென வாத்ஸ்யாயனர் வினவ, சேஷன் சொல்கிறுன். ஜநகனது அரண்மனையில் வளர்ந்துவந்த ஸீதாதேவி ஒருநாள் உத்யாநவனத்தில் ஸ்ரீராமாயண கதையைப் பாடும் இரு கிளிகளைக் கண்டு ஆச்சர்யப்பட்டாள். அதைப்பிடித்து நீங்கள் யார்? தேவரோ? ராமனது சரிதத்தை நீங்கள் எப்படி அறிந்தீர்கள்? என்று கேட்டாள். அவை ஸ்ரீராமாயணத்தை வால்மீகி சிஷ்யர்களுக்கு போதிக்கும்போது நாங்கள் கேட்டிருந்தோம். அவர் ஆச்ரமத்தில் வஸிக்கும் கிளிகள் நாங்கள் என்று சொல்லிற்று.

ஸீதாதேவி பெண் கிளியைப் பிடித்துக்கொண்டு நீங்கள் என் வீட்டிலேயே இருங்கள் என்றுகூற, தேவி! நான் கர்ப்பிணி, ப்ரஸவித்தவுடன் உன்னிடம் வருகிறேன் என்று அது கூறிற்று. ஸீதை அதைக் கேளாமல் பலவந்தமாக பெண் கிளியைத் தன் வீட்டில் கூண்டிலடைத்துவைத்தாள். அது புருஷனைப் பிறிந்த துக்கத்தால் வருந்தி ஸீதே! கர்ப்பிணியான என்னை நீ கணவனை விட்டுப் பிறித்ததால் நீ கர்ப்பமாக இருக்கும்போது உன் கணவனை விட்டுப் பிரிவாய் என்று சபித்து உயிரைவிட்டது. ஆண்கிளி இத்துக்கத்தைச் சஹியாமல் ஜாநகி! உன்னை உன் கணவன் விட்டு பிரிய

நானே காரணமாவேன் என்று கூறி கங்கையில் விழுந்து உயிரைவிட்டது. அக்கிளியே அயோத்யையில் ஸீதையிடம் தோஷம் சொன்ன வண்ணனுகப் பிறந்தது.

ராவண வதம் செய்து அயோத்யையை ஆளும்பொழுது ராமன் தனது ஆக்ஷியைப்பற்றி ஜநங்கள் சொல்வதை ரஹஸ்யமாக அறிந்துவரும்படி சாரணர்களை அனுப்பினுர். ஒரு வண்ணுத்தி அன்னியர் வீட்டில் வஸித்ததால் அவளைத் தள்ளி வீட்டில் சேர்ப்பதில்லை என்று வண்ணன் சொன்னுன். அவன் தாய், குற்றமற்ற அவளை அழைத்துக் கொள் என்ருள். அதற்கு வண்ணன், பிறர் வீட்டிலிருந்த மனைவியைச் சேர்த்துக்கொள்ள நான் ராமனு என்ன? என்ருன். இதைச் சாரணன் சொல்ல முடியாமல் கஷ்டப்பட்டு ராமனது பலவந்தத்திஞல் சொல்லிவிட்டான். அதற்கு முதல் நாள் ராமன் ஸீதாதேவி கர்ப்பமாக இருப்பதால் அவளைப் பார்த்து உனக்கு எதில் ஆசை சொல்லு. கர்ப்ப காலத்தில் உண்டாகும் ஆசையைப் பூர்த்தி செய்விப்பது புருஷர் கடமை என்ருர். ஸீதை தங்கள் அருளால் எனக்கு எல்லாம் கிடைத்திருக்கிறது. தபோவனம் சென்று மஹர்ஷிகளைத் தர்சித்து அநுக்ரஹம் பெறவேண்டுமென்பதே ஆசை என்ருள். அப்படியே செய்கிறேன் என்று ராமர் கூறினுர். இதை வ்யாஜமாகக்கொண்டு ஸீதையை வநத்தில் விட்டு வரும்படி ராகவன் கூற, லக்ஷ்மணன் இது அடாத செயல் என மறுத்துரைத்தான்.

ஆயினும், அண்ணனது ஆணைப்படி நடப்பதே தனது கடமை என்றெண்ணித் தேரின் மீது தேவியை ஏற்றி வநத்திற்குப் புறப்பட்டான். குதிரைகள் நடக்கவில்லை. ஸீதைக்கு வாசற்படி காலில் இடித்தது. மற்றும் பல அபசகுநங்களைக் கண்ட ஸீதை மநம் நொந்து எல்லோருக்கும் க்ஷேம

முண்டாகட்டுமென தேவர்களை வணங்கி வநஞ் சென்ருள். லக்ஷமணன் மூலமாக ராமர் தன்னை த்யாகம் செய்ததை அறிந்து மநம் நொந்து கதறி அடுத்த பிறவியிலும் ராமரே எனக்குக் கணவராகுக! எனது மாமி மார்களை வணங்கி விசாரித்ததாகச் சொல்லுமென்று கூறி லக்ஷமணனை அனுப்பி மூர்ச்சித்தாள். அருகிலிருந்த தடாகத்தி லிருந்து ஓர் அன்னப் பறவை தன் இறக்கையால் ஜலத்தைக்கொண்டு வந்து அவள் மேல் தெளித்து விசிரிற்று. ஜாநகி களை நீங்கி எழுந்து தன் விதியை நினைத்துப் புலம்பினுள். இதைக் கேட்டு வால்மீகி ரிஷி வந்து அவளைத் தேற்றி தன்னுச்ரமத்திற்கு அழைத்துச் சென்று பரிபாலித்து வந்தார். சிலநாள் சென்றபின் ஸீதைக்கு இரு குழந்தைகள் பிறக்க தன்னுச்ரமத்தில் பிறந்ததற்கு அடையாளமாக 'குசலவ' என்று பெயர் வைத்து வால்மீகி ஸகல கலைகளையும் அவர்களுக்குக் கற்பித்தார். குசன் உஜ்ஜயினியிலுள்ள மஹாகாலரைத் தர்சிக்கச் சென்றிருந்தான்.

லவ யுத்தம்.

குதிரையின் காவலாளிகள் கூறிய வீரவார்த்தைகளைக் கேட்டு லவன் நானும் ஓர் க்ஷத்திரியனே! பல மிருந்தால் சத்ருக்நன் என்னை ஜயித்து அச்வத்தை மீட்டுச் செல்லட்டுமென்று குதிரையைப் பிடித்துக் கட்டிவிட்டான். சத்ருக்நனது ஸேநாதிபதியான காலஜித் என்பவன் லவனது உருவத்தைக் கண்டு ஸ்ரீராமனுடைய சாயை அங்கிருப்பதால் அவனை அடிக்க மநம் வாராமல் நீ யார்? என்று கேட்டான். என் குலகோத்ரத்தை நீ விசாரிக்கவேண்டிய அவசியமென்ன? ஆண்மை யிருந்தால் போரில் என்னை ஜயித்துக் குதிரையைக் கொண்டு போ! என்று லவன் உரைத்தான். பின்னர் இருவரும் சண்டைக்கு ஆயத்த மாயினர்.

லவன் வால்மீகியின் திருவடியையும் தாயின் சரணத்தையும் நினைத்து வணங்கி நாணைப் பூட்டி அம்பைத் தொடுத்து ஸேநாதிபதியின் தேரை முறித்தான். ஸேநாதிபதி சிறுவனால் தனக்கு நேர்ந்த அவமானத்தைக் கண்டு கோபங்கொண்டு லவனைக் காலால் உதைத்தான். அதை லக்ஷ்யம் செய்யாமல் குழந்தை, ஸேநாதிபதியை யமலோகத்திற்கனுப்பி ஸேனையனைத்தையும் சின்னபின்னமாக அடித்தான். புஷ்கலன் ரதத்தின் மீதேறி ஓ லவ! யுத்தமுறையைத் தழுவி உனக்கோர் ரதமளிக்கிறேன். அதன் மேலிருந்து ஸமர்செய் என்றான். யான் யாசகம் வாங்குபவனல்ல. வேண்டுமாயின் உனக்கும் ரதமில்லாமல் செய்கிறேனென்று கூறி லவன், புஷ்கலனது ரதத்தை முறித்தான். முடிவில் புஷ்கலனையும் மூர்ச்சிக்கும்படி அடித்தான். ஆஞ்ஜநேயன் ஓடிவந்து புஷ்கலனைத் தூக்கி சத்ருக்நனிடம் விட்டுவிட்டு லவனுடன் போருக்கு வந்தான். ராம குமாரனது பாண வேகத்தைத் தாளாமல் அன்புடன் அச்சிறுவனை ராமதூதன் வாலால் இருகக் கட்டினான்.

உடனே லவன் தாயின் சரணத்தை நினைத்து ஓங்கி வாலில் ஓர் குத்து குத்தினான். ராமகுமாரனுக்கு ஜயம் உண்டாகவேண்டுமென்றெண்ணி மாருதி மூர்ச்சையடைந்து கீழே விழுந்துவிட்டார். ஒப்பில்லா வீரனான அநுமானையே ஜயித்த சிறுவன் ஸாமான்யமானவனல்ல. தேவப்பிறவியோ இவன் என்று அஞ்சி சத்ருக்நன் தானே அவனுடன் சண்டைக்கு வந்தான். இருவருக்கும் கடும்போர் நிகழ்ந்தது. முடிவில் லவனது பாணத்தால் சத்ருக்நன் மூர்ச்சையாகக் கீழே விழுந்தான். ஸுரதன் வீரமணி ஸுமதன் முதலிய வீரர்களும் அப்படியே சிறுவனது பாணத்தால் மூர்ச்சையடைந்தனர். இதற்குள் களை தெளிந்தெழுந்த சத்ரு

க்நன் ஸ்ரீராமாஸ்திரத்தால் லவனை மூர்ச்சையாக விழும்படி அடித்து இவ்வளவு பராக்ரமசாலியாயும் உருவத்தில் ராமனை ஒத்தவனுயுமுள்ள இவனை ராமரிடம் காண்பிப்போம் என தனது தேரில் அவனைத் தூக்கி வைத்துக் கொண்டான்.

இதை முனி குமாரர்கள் ஸீதையிடம் சொல்ல, தேவி தன் தநயனை நினைத்துக் கதறி அழுதாள். அதே ஸமயத்தில் யாத்ரைக்குச் சென்றிருந்த குசன் திடீரென வந்து தாயைத் தேற்றி ரணகளஞ் சென்றுன். குசனுடன் யுத்தம் செய்ய சத்ருக்நன் தானே வந்து குழந்தாய்! உன்னைப் பார்க்குமளவில் என் மநம் ராமனை நாடுகிறது. நீ யார்? என்று கேட்க; தான் ஜாநகியின் தநயன் என குசன் விளம்பினுன். அன்பு ஒருபாலிருக்க க்ஷத்ரிய தர்மத்தை நாடி ராம குமாரனுடன் ராம ஸஹோதரன் ஸமர்செய்தான். குசன் ஸீதையின் திருவடிகளைத் துதித்து நினைத்துப் பணிந்து, சரவர்ஷத்தால் ஸுரதன் வீரமணி ஹநுமான் ஸுக்ரீவன் முதலியவர்களை அடித்து வருண பாசத்தால் கட்டி மோஹிக்கும்படி செய்தான். அச்சமயத்தில் லவனும் மூர்ச்சை தெளிந்தெழுந்திருந்தான். உடனே கீழே விழுந்து கிடக்கும் ஆஞ்ஜநேயனை வாலைப் பிடித்துத் தூக்கித் தன் தாய்க்கு வேடிக்கை பொருளாகக் கொண்டு சென்றுன்.

குசனும் அப்படியே ஸுக்ரீவனைத் தூக்கி வந்தான். இவ்விரு வாநரவீரர்களும் தங்கள் தோல்வியை நினைத்து வெட்கமடைந்து ஜாநகியின் எதிரில் எப்படி முகத்தைக் கா காட்டுவோமென வருந்தினர். ஆயினும் நமது ராமகுமாரனிடமே அபஜய மடைந்தோ மல்லவா? இது அவ்வளவு அவமானமல்ல, என்று இருவரும் பேசிக் கொண்டனர். இத ற்குள் குழந்தைகள் வீடு சென்று தாங்கள் பெற்ற ஜயலக்ஷ்மியின் காணிக்கையாக கபிவீரர்களை ஜாநகியிடம் கொண்டு

திருத்தினர். ராவணனிட மிருந்து தன்னைமீட்டு உயிரையே அளித்த உத்தம வீரரை உடனேவிடும்படி மைதிலி சொல்ல குமாரர்கள் அங்ஙனமே செய்தனர். இவர்கள் மூலமாக ராமனது க்ஷேமத்தையும் யாகத்தையும் சத்ருக்நன் முதலியவர் மூர்ச்சித் திருப்பதையு முணர்ந்து ஸீதை ஸூர்யனைத் தர்சித்து, நான் கற்புள்ளவளானால் இவர்கள் மூர்ச்சை தெளிந்தெழுந்திருக்கட்டு மென்றாள். உடனே வீரர்கள் களைநீங்கி எழுந்து தேவியின் உத்திரவுபடி குசலவர்கள் கொடுத்த குதிரையைப் பெற்று சென்றனர்.

அச்வமேதம்.

அச்வமேதக் குதிரை ஓராண்டு பூ ப்ரதக்ஷிணம்செய்து ஸேனையுடன் ஸமீபத்தில் வருவதைக் கேட்டு ஸ்ரீராமன் லக்ஷ்மணனைக் கொண்டு அதை வரவேற்றார். யாகத்திற்கு வேண்டிய மற்ற க்ரியைகளை அவரவரும் ஜாக்ரதையாகக் கவனித்து வந்தனர். ஸ்ரீராமமூர்த்தி குதிரை சென்ற விடங்களையும் அங்கு நடந்த யுத்தங்களையும் தன் ஸேனையில் சேர்ந்த ராஜாக்களையும் விஸ்தாரமாகக் கூறும்படி சொல்ல, ஸூதன் நடந்தவைகளை வர்ணித்து, லவகுசர் சரித்திரத்தையும் அவர் பராக்ரமத்தையும் சொன்னான். காகுத்ஸன் அவ்விருவரும் யார் என்று கேட்க, வால்மீகி எழுந்து உனது புதல்வர்களே! அவர்கள். அவர்களுக்கு ஸ்ரீராமாயணத்தைக் கற்பித்தேன். ஒவ்வொரு தேசமாக அதைப்பாடி ஜனங்களை ஸந்தோஷப்படுத்தி வருகிறார்கள்.

வருணலோகம் சென்று பாடிய இவர்களை ஊருக்கநுப்பமனமில்லாமல் வருணன் நன்கு பூஜித்து அங்கேயே வைத்துக் கொண்டார். பலநாட்களாகியும் குழந்தைகள் வராததைக் கண்டு ஸீதாதேவி வருத்தமுற யானங்கு சென்றேன். என்னை வரவேற்று; ஸீதை குற்றமற்றவள், அவளை ராகவன் ஏற்று

யாகத்தைப் பூர்த்திசெய்யட்டும் என்று வருணனும் மற்ற திக் பாலர்களும் சொன்னார்கள். ஆதலால் நீ ஸீதையுடன் அக்குழந்தைகளை அழைத்து வா என்று வால்மீகி கூறினார். உடனே ராமசந்தரன் உத்திரவுபடி லக்ஷ்மணன் காட்டிற்குச் சென்று ஸீதையை வணங்கி நாட்டிற்கு வரும் படி வேண்டினான். தேவி இக்குழந்தைகளை அழைத்துச்செல்! யானிங்கிருந்து மிகுதியான காலத்தை ஸ்ரீராம பக்தியினால் கழிக்கிறேனென்றாள். லவகுசருடன் லக்ஷ்மணன் இதைக் காகுத்ஸனிடம் கூற, அவர் எனது ஆக்ஞையின்படி ஸீதையை அழைத்துவா என்றார். அவர் அப்படியே வனஞ்சென்று ராமாக்ஞையைக்கூற ஸீதை உடனே கிளம்பினாள். அவர்கள் வருவதற்குள் லவகுசர்கள் இனிமையாக ராமாயணத்தைப் பாடினார்கள்.

ஜானகி வந்தவுடன் அகஸ்த்யர் தாசரதியினருகிலிருந்த ஸ்வர்ணமயமான ஸீதா விக்ரஹத்தை விலக்கி, மைதிலியை அங்கு அமர்த்தி யாகத்தை ஆரம்பித்தார். ஸ்ரீராமன் முதல் ஒவ்வொரு அரசரும் தன் தன் பத்னியுடன்கூட ஸரயூநதியிலிருந்து தீர்த்தங்கொண்டுவந்து அச்வமேதப்பரியை ஸ்நானம் செய்து வைத்தனர். அதற்குரிய பூஜைகளை முடித்து மந்த்ர படநம் செய்து அதன் வபையை எடுப்பதற்காக ராமசந்த்ரன் அதைக்கையால் தொட்டார். உடனே அக்குதிரை தேவ சரீரம் பெற்று ஆகாசம் சென்றது. எல்லோரும் வியந்து அதை நோக்க, நீ யார்? என்று தாசரதி கேட்டார். உடனே அதுதன் விருத்தாந்தத்தைச் சொல்ல ஆரம்பித்தது. ஓ ராகவ! முற் பிறவியில் யான் ஓர் வேதியன். ஒரு ஸமயம் கங்கைக் கரையில் மிக ஆடம்பரமாக பர்ணசாலை அமைத்து டாம்பிகமாக அக்நிஹோத்ரம் செய்தேன். பிறர் நம்மை நல்ல அநுஷ்டாதா என்றுகூற வேண்டுமென்பதற்காக யாராவது

வந்தால் கண்மூடி மௌனியாயிருந்தேன். தற்செயலாக தவத்திற் சிறந்த தூர்வாஸர் அங்கு வந்தார். வீண் கர்வங்கொண்ட நான் அவரை வரவேற்று உபசரிக்கவில்லை. வேண்டுமென்றே டாம்பிக மௌனியாய் நீ இருந்ததால் பேசாத மிருகமாக ஆவாய் என்று அவர் என்னைச் சபித்தார். அவரடி பணிந்து குற்றத்தை மன்னித்துச் சாபத்தை நீக்கும்படி வேண்டினேன். ராமாச்வமேத குதிரையாகி, அவர் உன்னைத் தொட்ட உடன் நீ நற்கதி பெறுவாய்! என்று என்னை அவர் ஆசீர்வதித்தார். அவரது சாபம் எனக்கு அநுக்ரஹமாக முடிந்தது. இல்லையேல் இவ்வேழைக்கு ராமதர்சனம் கிடைக்குமோ? உமது ஸ்பர்ச விசேஷத்தால் இந்நற்கதி பெற்றேனென்று அவரை வணங்கி அவன் தேவலோகம் சென்றான்.

அவ்வச்வத்திற்கு பதிலாக கற்பூரத்தைக் கொண்டுவரச் சொல்லி அதை ஏற்றி ஸகல தேவர்களும் வந்து யாகத்தில் ஹவிர்ப்பாகம் பெற்று ஸந்தோஷமாகச் செல்லும்படி வஸிஷ்டர் செய்தார். யக்ஞம் பூர்த்தியானது. ஸகல ஜனங்களும் பரம ஸந்தோஷத்துடன் ராமனையும் ஸீதையையும் போற்றி வாழ்த்தி எண்ணிறந்த ஸந்மானங்களைப்பெற்றுச் சென்றனர். இங்ஙனமே பல அச்வமேதங்களைச் செய்து ஸீதையுடனும் குசலவர்களுடன் தாசரதி பல்லாயிரமாண்டு ராஜ்யத்தைத் தர்மமாக ஆண்டுவந்தார்.

ஸ்ரீ கிருஷ்ண மஹிமை.

கோலோகமென்பது ராதாதேவியோடு ஸ்ரீக்ருஷ்ணன் வஸிக்குமிடம். அங்கு எண்ணிறந்த கோபிகைகளும் கோபர்களும் பகவானை ஆராதித்துப் பேரானந்தமடைகின்றனர். இந்த கோபர்களும் கோபிகைகளும் பல்லாண்டு மஹர்ஷிகளாக இருந்து பகவத் பக்தி செய்து அதனால் இங்கு வந்தவர்

கள். ப்ரளய காலத்திலும் இவர்களுக்கும் இவ்வுலகிற்கும் அழிவில்லை. அங்கு பிருந்தாவனத்தில் ராஸமண்டபத்தில் நவரத்நமிழைத்த மஞ்சத்தில் பகவான் சிறு குழந்தை வடிவமாக விளையாடுகிறார். அவரது அழகைப் பார்த்து ஸகல தேவர்களும் ப்ரமித்து நிற்கின்றனர். அவரது கையிலுள்ள வேணு தேவவ்ரதர் என்ற ஓர் மஹர்ஷி. அவர் கர்மாவில் பற்றுடையவர். ஓர் பக்தரளித்த க்ருஷ்ணப்ரஸாதத்தை அலக்ஷ்யமாக உட்கொண்டாரவர். அதனால் மூங்கில் மரமானார். இந்த பகவானே மதுராபுரியில் வாஸுதேவனாகத்தோன்றி கோகுலத்தில் நந்த குமாரனாக லீலை செய்தவர்.

இச்சுந்தர புருஷனைத் தர்சிக்க வீணாபாணியான நாரதர் நந்தன் வீடுவந்தார். குழந்தை வடிவமாயுள்ள பரமாத்மாவைப் பணிந்துத் துதித்து ராதாதேவி அவதரித்த வீட்டைத் தேடிச் சென்றார். சித்ரபானு என்பவன் வீட்டில் ஸஞ்சரிக்கும் ராதையைத் தர்சித்துத் தனக்கு நிஜஸ்வரூபத்தைக் காட்ட வேண்டுமென்று ப்ரார்த்தித்தார். கோவர்த்தன மலைக்கருகே குஸுமஸரஸின் கரையிலே அசோகமரத்தினடியிலே அர்த்த ராத்ரியில் என்னைக் காண்பாய்! என்று தேவி கூற, நாரதர் அங்கு சென்று அப்படியே தர்சித்தார். ஒரு ஸமயம் நாரதரும் அர்ஜுனனும் கோலோகஞ் சென்று ஓர் நதியில் முழுக இருவரும் தான் பெண்ணானதைக் கண்டு ஆச்சர்யமடைந்தனர். ராதையின் அருளால் தன் ஸ்வரூபத்தைத் திரும்பிப் பெற்று தன்னிடம் வந்தனர்.

ஸாளக்ராம மஹிமை.

க்ருஷ்ணனை எப்படி பூஜிப்பதென்று உமாதேவி வினவ பரமசிவன் பதிலுரைத்தார். கண்டகீ நதியில் உண்டாகும் ஸாளக்ராமத்தில் ஸ்ரீக்ருஷ்ணனை ஆவாஹநம் செய்து பூஜிக்க வேண்டும். த்வாரமுடையதும் கறுப்பாயிருப்பதும் பூஜைக்

குச் சிறந்தது. பனிரண்டு ஸாளக்ராமத்தை ப்ரதிதினம் பூஜிப்போர் வைகுண்டம் செல்வர். அதை விலைக்கு விற்ப வரும் வாங்குபவரும் நரகம் செல்வர். அதற்கு அபிஷேகம் செய்த ஜலத்தை உட்கொண்டால் ஸகல பாபங்களுமகலும். வியாதிகள் விலகும். பகவந்நாமாவைச் சொல்லி பனிரண்டு புண்ட்ரம் தரித்துக் காலலம்பி ஆசமநம்செய்து பூஜைசெய்ய வேண்டும். மணியும் சங்கமுமில்லாத பூஜை பயனற்றதாகும். ப்ராஹ்மணரது வலது காதில் கங்கையும் வலது நாஸி யில் அக்நியுமிருப்பதால் ஆசமநம் செய்ய முடியாதபோது ப்ரணவத்தைக்கூறி வலது நாஸியையும் வலது காதையும் தொடவேண்டும். சுசியானாலும் அசுசியானாலும் பகவன் னாமாவை ஸதா உச்சரிக்கவேண்டும். சிவ விஷ்ணு பேதத் தைப் பாராட்டுபவர் நரகம் செல்வர். பக்தியில் ஈடுபட்ட வர்கள் முப்பத்திரண்டு அபராதங்களை அகற்றவேண்டும்.

வாஹனத்திலோ பாதுகைகளுடனோ ஆலயம் செல்வது, உத்ஸவத்தைக் காணாமலிருப்பது, ஸ்வாமிக்கு நமஸ்காரம் செய்யாமலிருப்பது, தீட்டிலோ அசுத்தனாக இருக்கும் பொழுதோ பகவானை ஸேவிப்பது, ஒரு கையால் நமஸ் கரிப்பது, அப்ரதக்ஷிணமாகச் செல்லுதல், ஸ்வாமிக்கு நேராக காலை நீட்டுவது, கட்டிலில் உட்காருதல், ஸ்வாமி வரும் போது படுத்திருப்பது, உண்பது, பொய்சொல்வது, ஆல யத்தில் உறக்கப் பேசுவது, ரஹஸ்யம் பேசுவது, அழுவது, சண்டையிடுவது, ஒருவனை நிந்திப்பது, ஒருவனை வாழ்த்து வது, ஸ்த்ரீகளிடத்தில் கோரமாகப் பேசுதல், கம்பளி போர்த்துக்கொள்ளுவது, பிறரை நிந்திப்பது, துதிப்பது, அமங்களமாகப் பேசுவது, அபானவாயு விடுதல், சக்திஇருக் கும்போது குறைவாகப் பூஜிப்பது, ஸ்வாமிக்கு நிவேதனம் செய்யாமல் புஜிப்பது, அந்தந்த காலத்தில் உண்டாகும் பழங்களை ஸ்வாமிக்கு அர்ப்பணம் செய்யாமை, ஒருவர்

உபயோகித்த மிகுதியை பகவானுக்கு அளிப்பது, எல்லோரும் பார்க்கும்போது உண்பது, குருவினிடம் பேசாமை, தன்னைத்தானே துதித்துக்கொள்வது, குரு நிந்தை, தேவ நிந்தை, ஆகிய இவைகள் குற்றமாம்.

பகவத் பூஜை.

நெல்லிமரத்தை வைத்து வளர்ப்பது கிருஷ்ணபூஜை செய்வதாகும். புஷ்பங்களைவிட துளஸீ தளம் பகவானுக்குப்ரியமானது. அதைவிட மிகப்ரியமான புஷ்பங்கள் ஏழாகும். அஹிம்ஸை, இந்திரியங்களை அடக்குவது, பூததயை, பொறுமை, மனதை அடக்குதல், த்யானம், ஸத்யம் இந்த புஷ்பங்களால் வித்வான்கள் பகவானை அர்ச்சிக்கின்றனர். த்யானம் தாரணை புத்தி வேதார்த்தஸ்மரணம் இவை மாநஸ பக்தியாம். வேதாத்யயநம் ஜபம் பகவந் நாமோச்சாரணம் இவை வாசிக பக்தி. வ்ரதோபவாஸநியமம் பஞ்சேந்திரியங்களை அடக்குதல் காயிகபக்தியாம். அபிஷேகம் அர்ச்சனை ந்ருத்யவாத்யம் பலி முதலியவைகளைச் செய்வது லௌகிக பக்தி. ஹோமம் ஜபம் த்யாகம் வேதார்த்யயநம் முதலியவைகளைச் செய்வது வைதிக பக்தியாம்.

உணவைவிட த்ருப்தி யளிப்பது வேறில்லை. பிதாவைவிட குருவும் ப்ராமணனைவிட ஸத்பாத்ரமும் கேசவனைவிட தேவனும் கங்கையைவிட தீர்த்தமும், கோதானத்தைவிட தானமும் காயத்ரியைவிட மந்த்ரமும் ஏகாதசியைவிட வ்ரதமும் மனைவிக்கு ஸமமான மித்ரனும் தயைக்கு ஸமமான தர்மமும் ஸ்வதந்தரத்திற்கு ஸமமான ஸுகமும், கார்ஹஸ்த்யத்திற்கு ஸமமான ஆச்ரமும் ஸத்தியத்திற்குத் துல்யமான ஆசாரமும் ஸந்தோஷத்திற்கு ஈடான சுகமும் வைகாசிக்கு ஸமமான மாதமும் வேறில்லை.

வைசாகஸ்நாந மஹிமை.

வராஹாவதாரம் செய்து பூமியை ஸ்ரீநாராயணமூர்த்தி தூக்கிவரும்போது பூமியின் ப்ரார்த்தனைக் கிணங்கி பகவான் பற்பல தர்மங்களைக் கதை மூலமாக அவளுக்குக் கூறினர். யமன் ஒரு ஸமயம் மத்ய தேசத்தில் மஹத் என்ற ஊரில் உள்ள யக்ஞதத்தன் என்ற ப்ராஹ்மணனைக் கொண்டு வா என்று கட்டளையிட்டார். தூதன் அவரை விட்டு மற்றொருவரை அழைத்துவந்தான். தூதனைக்கடிந்து யமன் இவரைப் பூமியில் கொண்டுவிட்டு அவரை அழைத்துவா என்றார்.

வந்தவரோ நான்போகமாட்டேன். உமது ஸன்னதியிலேயே இருப்பேனென்று கூறி பற்பல தர்மங்களை அவரிடமிருந்து அறிந்துகொண்டார். பசி என்று வந்த அதிதி யோக்யனு அயோக்யனு என்று விசாரிப்பவரும், ஸ்நாநம் செய்யாமல் துளஸி பறிப்பவரும் நரகம் செல்பவர். அச்வத்த பூஜை செய்பவரும் வைசாக ஸ்நாநம் செய்பவரும் ஸ்வர்க்கம் செல்வர். மத்ய தேசத்தில் தநசர்மா என்றோரந்தணரிருந்தார். தர்ப்பைகொண்டுவர அவர் வனஞ்சென்றார். அங்கே பயங்கரமான ப்ரேதங்கள் இவரைத் துரத்த அவர் பயந்து ஓடி நீங்கள் யாரென்று கேட்டார். இவரது வார்த்தையைக் கேட்டவுடன் அவை அவனை அடித்துத் தின்னும் முயற்சியைவிட்டு தன் வரலாற்றைச் சொல்லத் தொடங்கின.

அவர்களில் ஒருவன் ஸூதாஸன் என்ற ப்ராமணனுயிருந்து நம்பினவரை த்ரோஹம் செய்தானும். மற்றொருவன் ஹரிவீரன் என்ற க்ஷத்ரியனுக இருந்து தேவபித்ரு கார்யங்களை மறந்து போகத்தை அநுபவித்தானும். இன்னொருவன் கௌதமன் என்ற ப்ராஹ்மணனுயிருந்து அன்ய தர்மங்களை அநுஷ்டித்து வைசாக ஸ்நாநம் செய்யாமலிருந்தானும்.

அதனால் இம் மூவரும இப் பேய் உருவெடுத்து அலேகிறேம் என்று கூறினர். தநசர்மா, கௌதமன் தனது தந்தை என்றுணர்ந்து வருந்தி என்ன செய்தால் உங்களது பாப சரீர மகலுமென்று அவரைக் கேட்க வைசாக ஸ்நாநபலத்தை அளி என்றூர்கள். அப்படியே செய்து அவர் மூவரையும் ஸ்வர்க்கத்திற்கனுப்பினுர்.

மஹீரதன்.

மஹீரதன் என்ற அரசன் தனது ராஜ்ய கார்யங்களே மந்த்ரியினிடம் ஒப்படைத்து சிற்றின்பத்திலேயே காலத்தைக் கழித்து வந்தான். அவன் புரோஹிதரான கச்யபர், இதை நரம் கண்டித்து இவனே நல்வழியில் திருப்பாவிடில் இப்பாபம் நம்மைச் சாறும என்றெண்ணி அரசனுக்கு அனேக கதைகளேக் கூறி தர்மத்தை உபதேசித்தார். அரசன் இதுவரை தான் ஒரு தர்மத்தையும் செய்யாததற்கு வருந்தி விரைவில் அதிகச்ரமமில்லாமல் நற்பயனே அளிக்கும் தர்மத்தைச் சொல்லுங்களென்று வேண்டினுன்.

வைசாக ஸ்நாநமே சிறந்த தர்மமென கச்யபர் கூற, அரசன் அங்ஙனமே அதை அநுஷ்டித்தான். அரசனது விதி மாண்டதும் யமதூதர் இவரைக்கட்டி சென்றனர். உடனே வைகுண்டத்திலிருந்து வந்த தூதன் இவரை யமதூதர்களிடமிருந்து விடுவித்து விமானமளித்து வைகுண்டமழைத்துச் சென்றுன். அரசன் துக்கமடைவோரைத் துக்கத்திலிருந்து மீட்பது பெரும் புண்யமென்று கிங்கரர் சொல்லக் கேட்டு தனது வைசாக புண்யத்தை அளித்து நரகத்திலிருந்தோரை மீட்டான். யமன் மூலமாக வைசாக மாஹாத்ம்யத்தை அறிந்த ப்ராஹ்மணர் அவன் உத்திரவுபடி பூலோகம் சென்று வைசாக ஸ்நாநம் செய்து நற்கதி பெற்றுர்.

விபீஷண பாபமோசநம்.

ஒரு ஸமயம் பரமசிவன் பார்வதியுடன் ப்ராஹ்மண வேஷம் பூண்டு பற்பல மஹர்ஷிகளுடன் ஸ்ரீராமனது ஸபைக்கு வந்தார். ராமர் அவரைப் பூஜித்து சிவலிங்க பூஜை யின் முறையையும் பயனையும் சொல்லும்படி வேண்டினர். அவர் சொல்ல ஆரம்பிப்பதற்குள் ஓர் தூதன் வந்து வணங்கி ராமனிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்தான். அவர் அதைப் படித்துப்பார்த்து கவலையுடன் ஒன்றும் பேசாமலிருக்கக் கண்டு சிவ ரிஷி, மஹர்ஷிகளிருக்கும் போது ஏன் அஞ்சு கிருய்? என்ருர். ராகவன் மஹர்ஷிகளைப் பார்த்து ராமேச் வரத்தில் நான் ஸ்தாபித்த சிவலிங்கத்தைத் தர்சநம் செய்யும் விபீஷணன் த்ராவிடர்களால் சங்கிலிகொண்டு கட்டப்பட் டான். அதற்குக் காரணம் யாது? கூறுங்களென்ருர். எவ ரும் பதிலுரைக்கவில்லை. சிவரிஷியைக் கேட்க பதினெட்டு புராணங்கள் அதிலுள்ள விசேஷம் அதைக் கேட்க வேண்டிய முறை அக்காலத்தில் உண்டாகும் சகுநம் முதலியவைகளை விரிவாக கைலாஸரிஷி கூறினர். உடனே ராகவன் புராண சகுநத்தால் விபீஷணன் விடுபடுவானு என்று கண்டறிந்து கூறும்படி வஸிஷ்டரை வேண்டினர். வஸிஷ்டர் தனக்குச் சக்தி இல்லை என்று கூற ராமர் சம்புவை வேண்டினர்.

உடனே கைலாஸநாதன் ஸ்காந்தத்தைப் பூஜித்து சகு நம் பார்த்து விபீஷணன் கட்டுண்டது உண்மை, விரைவில் விடுபடுவான் என்று சொன்னர். ராகவன் மஹர்ஷிகளுட னும் ஸேனையுடனும் புஷ்பக விமாநத்தின் மீதேறி ஸ்ரீரங்கம் சென்று விபீஷணனது விருத்தாந்தத்தைக் கூறும்படி அங் குள்ள பெரியோரை வேண்டினன். அவர்கள் நாங்களறியோ மென்றனர். வாநரங்களைக்கொண்டு தேடச் சொன்னர். அப்

போதும் அவனிருக்குமிடம் தெரியவில்லை. உடனே சம்பு ரிஷியை வேண்ட அவர் ப்ராஹ்மணர் உள்ள இடத்திற்கு அழைத்து சென்று இவர்களைக் கேளென்றார்.

அவர்கள், இங்கு உத்யாநத்தில் மிகவயதான ப்ராஹ்மணரொருவர் தவம் செய்தார். அங்கு வந்து விபீஷணன் அவரைக் காலால் மிதித்துக் கொன்றான். ஆதலால் ப்ருஹ்மஹத்தி அவனைச் சூழ்ந்தது என்றனர். ராமனது ப்ரார்த்தனையின்படி ரிஷிகள் யோசித்து, அறியாமல் விபீஷணன் செய் தவதத்திற்குப்ராய்ச்சித்தமாக முன்னூற்றறுபது கோக்களைத் தாநம் செய்யும்படி கூறினர். ப்ராய்ச்சித்தம் செய்துகொண்டாலன்றி விபீஷணனைக் கண்ணெடுத்துக் காண்பதில்லை. என்று காகுஸ்த்தர் கூறினார். உடனே விபீஷணன் விதிப்படி ப்ராய்ச்சித்தம் செய்து கொண்டு ராகவனது திருவடியை வணங்கி நிற்க, இனியாவது ஜாக்ரதையாக இரு! எவருக்கும் அபசாரம் செய்யாதே! என்று உபதேசித்து தாசரதி அயோத்யை சென்றார். நாராயண தர்சநம்:— மஹர்ஷிகள் சங்கர ரிஷியைப் பார்த்து சிறந்த தர்மதத்தைத் தங்களுக்கு உபதேசிக்கும்படி கேட்க அவர் அதைக் காதில் ஏற்காமல் தன் மனைவியுடன் ச்ருங்காரமாகப் பேசிக் கொண்டிருந்தார். இதைக் கண்டு முனிவர் சினங் கொண்டனர். பரமசிவனும் அவர்களைப் பார்த்து கோபிக்க அவர் கோபத்திலிருந்து ஓர் பெண்பூதங் கிளம்பி ஓர் ரிஷி பத்னியைப் பீடிக்க ஆரம்பித்தது. கருணைவடிவமான காகுத்ஸ்தன் அவளைக் காக்க விமானத்திலேறி சென்றார். வெகு தூரம் சென்று அது மறைந்தது. அதன்பின் வேகமாகச் சென்று அதையுங் காணமல் இருள்சூழ்ந்த லோகாலோக பர்வதத்தில் நின்று ராகவன் இஃதென்ன விபரீதம்? என்று சிந்தை கலங்கினார்.

பரமசிவ ரிஷி தன்னொளியால் இருளை அகற்றி ராக

வனை வெகு தூரம் அழைத்து வைகுண்டம் சென்று ஸ்ரீமந் நாராயண மூர்த்தியைத் தர்சநம் செய்து வைத்தார். திரும்பி வரும்போது பரத்வாஜாச்ரமத்தில் தங்கி ச்ரார்த்தநியமம் சிவ பூஜையின் மஹிமை பஸ்மாவின் பெருமை முதலியவைகளை ராமனுக்கு மஹர்ஷியை உபதேசிக்கும்படி சொன்னார்.

பஸ்ம மஹிமை:—பாபத்தை நீக்குவதாலும் மஹேசனை நினைவூட்டுவதாலும் விபூதிக்குப் பஸ்மா என்று பெயருண்டானது. வஸிஷ்ட வம்சத்தில் தநஞ்ஜயர் என்று ஓர் ரிஷி இருந்தார். அவர் நூறு மனைவிகளை மணந்து நூறு பிள்ளைகளைப் பெற்றார். அவர் தனது ஸொத்தை எல்லோருக்கும் பாகம் செய்து கொடுத்தார். அவர்களில் கருணர் என்பவர், மற்ற ஸஹோதரர்கள் பங்காளிப் பகமையால் சண்டையிடுவதைக் கண்டு வருந்தி காசிக்ஷேத்ரம் வந்தார். அவருடன் பல மஹர்ஷிகள் கூடி நரஸிம்ம ஸ்வாமியைத் தர்சிக்க ஆலயஞ் சென்றனர்.

ஒரு ரிஷி ஸ்வாமியை வெறுங் கையோடு தர்சிக்கலாகாதென்றெண்ணி அழகிய எலிமிச்சம் பழத்தைக்கொண்டு வந்தார். கருணர் அதைக் கையில் வாங்கி உடனே முகர்ந்து பார்த்தார். அருகிலுள்ள ரிஷிகள் இவரது பாபச் செயலைக் கண்டு கோபங்கொண்டு நீ ஈயாக நூறு வருஷமிரு என்று கருணனைச் சபித்தனர். தானறியாமல் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்று அவர் ப்ரார்த்திக்க ததீசி ரிஷியால் உன் சாபம் அகலும் என்று ஆசீர்வதித்தனர். ஈ ரூபங் கொண்ட தன் கணவனை அவர் மனைவி எவருங் கொல்லாது காத்து வந்தாள். இதை அறிந்த அவர் ஞாதிகள் ஈயை எரியும் எண்ணெயில் போட்டுக் கொன்று விட்டனர். அவர் மனைவி கதறுவதைக் கேட்டு கருணைகொண்ட அருந்ததி அக்நிஹோத்ர விபூதியை எடுத்து ம்ருத்யுஞ்ஜய மந்த்ரத்தை

ஜபித்து ஈயைப் பிழைப்பித்தாள். நூருண்டிற்குப் பிறகு முன்போலவே ஈயை ஓர் ஞாதி மறுமுறை கொல்ல அவன் மனைவி ததீசரிடம் சென்று அழுதாள். அவர் பஸ்மாவினுல் அவரைப் பிழைப்பித்தார்.

ஒரு ஸமயம் உலகெலாம் அழிந்து லயமான பிறகு முன்போல் உலகைப் படைக்க வேண்டுமென்று மஹா விஷ்ணு நினைத்தார். அவர் எதிரில் ஓர் பரஞ்ஜோதிஸ் வந்து நிற்க அதைத் துதித்துப் பணிந்த உலகைப் படைக்கும் வழியைக் கூறுமென வேண்டினுர். ஜ்யோதிர் வடிவமாக இருந்த ஸதாசிவம் வாருண ஸ்நாநமும் பஸ்மஸ்நாநமும் செய்து வாரும். பிறகு யான் உபதேசிக்கிறேனென்றுர். உலகெலாம் பரவி நிற்கும் என் உருவம் அமிழ்ந்து முழுகுவதற்கேற்ற தடாகம் எங்கே இருக்கிறது? என்று விஷ்ணு வினவ, பரமசிவன் தன் மூன்றும் கண்ணுல் விஷ்ணுவைச் சிறுவராக்கிப் பாற்கடலைக் காட்ட, அதில் இறங்க அவர் அஞ்சினுர். பரமசிவன் வேதங்களைப் படிக் கட்டாகக்காட்ட அதன் வழியாக இறங்கி விஷ்ணு ஸ்நாநம் செய்து வந்தார். தன் மார்பிலுள்ள பஸ்மாவைக் கொடுத்து பாதாதிகேசம் வரை அதைப் பூசி பரமசிவம் அவரைப் பஸ்மஸ்நாநம் செய்யச் சொன்னுர். அப்படி அவர் செய்ய உனது உள்ளத்தில் என்ன தோன்றுகிறது? என்று சிவன் கேட்க ஓர் தீபம் தெரிகிறது என்று நாராயணன் கூறினுர். மற்றும் கொஞ்சம் பஸ்மாவை அளித்து வாயில் போட்டுக் கொள்ளும்படி செய்து இப்போது என்ன தெரிகிறதென்றுர். ஜ்யோதிர் மண்டலத்தினிடையே ஸுந்தர வடிவமான உம்மை உள்ளே காண்கிறேன் என்று விஷ்ணு கூறினுர். பிறகு பஞ்சாக்ஷிரியை உபதேசித்து உலகைப் படையுமென்று சிவன் கூற, அங்ஙனமே வைகுண்டநாதன் ப்ருஹ்மாவின் மூலமாக ஜகத்தைப் படைத்தார்.

நாயின் நற்கதி:—ஓர் ப்ராஹ்மணன்கங்காஸ்நாநம் செய்ய ஆவல்கொண்டு காசிக்குச் சென்றான். ஆங்கே செய்ய வேண்டிய விதிப்படி ஸகல கர்மாக்களையும் செய்துமுடித்து ஓர் வீட்டுத் திண்ணைமீது படுத்து உறங்கினான். இளமையில் பதியை இழந்த ஓர் க்ஷத்ரியப் பெண்ணின் வீடு அது. இரவில் எழுந்து வந்து நீர் யார்? என அவள் இவரை வினவ, நிசியில் தனியாக பெண்ணுடன் பேசுவது அதர்மம், ஆதலால் காலையில் பேசுகிறேனென்று கூறி அவர் படுத்து விட்டார். அவள் எப்படியாவது இவரை உள்ளே அழைத்து அவருடன் சிற்றின்பத்தைப் பெற வேண்டுமென்று ஆசைகொண்டு அவர் காதில் விழும்படி விக்கி விக்கி அழுதாள்.

துக்கப்படுபவரது துன்பத்தை நீக்குவது தர்மம் என்றெண்ணி அவர் அவளருகே சென்று ஸமாதானம் சொல்லி மூர்ச்சையாக விழுந்த அவளைத் தன் கையால் தொட்டுத் தூக்கி உட்கார வைத்தார். அவரும் அவளது அழகைக் கண்டு மோஹித்து தனக்காகவே இவளுக்கு இந்த சோகம் என்பதை அறிந்து அவளிஷ்டப்படி அவளுடன் கூடி சிற்றின்பத்தை அநுபவித்தார். ஒரு நாள் கங்கைக் கரையில் ஒரு பெரியார் கூர்ம புராணம் சொல்லிக்கொண்டிருந்தார். அங்கே பாபம் செய்வோர் படும் நரகயாதனைகளைக் கேட்டு பயந்தார். அவரருகே சென்று பணிந்து நான் செய்யாத பாபமில்லை. எதைச் செய்தால் இவைகள் அகலும்? என்று அவர் புராணிகரைக் கேட்டார். அவர் பரமசிவனை ஆராதித்தலே உமது பாபத்தை அகற்றவல்லது என்றார். அங்ஙனமே இவர் அன்றுமுதல் ஸ்திரீயை விட்டு சிவாராதநம் செய்து வந்தார். ஒரு ஸமயம் அவர் உடல் நோய்வாய் பட்டது. அன்னத்தைப் புஜிக்க முடியவில்லை. சிவாலயத்தில் ஏற்றி இருந்த நெய் தீபத்திலிருந்து நெய்யை எடுத்து அன்னத்துடன் சேர்த்து உண்டார்.

அதனால் இவர் இறந்து பல்கோடி வருஷங்கள் நரக யாதனையை அனுபவித்து நூறு ஜன்மம் நாயாகப் பிறக்கும் படி நேர்ந்தது. பதிவ்ரதையான இவன் மனைவி தீர்த்த யாத்ரைக்குச் சென்றபதி திரும்பவில்லையே? என்று ஏங்கி பதியை நினைத்து அழுது கொண்டிருந்தாள். கருணைக்கடலான நாரதர் அவளைத் தன் வீணையின் தந்திக்கம்பியிலேற்றி அவள் புருஷனது சவமிருந்த இடத்திற் கொண்டு விட்டார். அவள் புருஷனுக்கு வேண்டிய உத்திரக்ரியைகளைச் செய்து முடித்துத் தானும் அக்நி ப்ரவேசம் செய்தாள். அவள் புருஷன் நாயாகப் பிறந்து தற்செயலாக ததீசி முனிவரது ஆச்ரமத்திற்கு வந்தான். அவர் மந்த்ரஜபம் செய்து சுவற்றின் அருகில் வைத்திருந்த பஸ்மாவில் படுத்துப் புறண்டான். உடனே சிவ தூதர் வந்து திவ்ய சரீரமளித்து இவனை விமானத்திலேற்றி கைலாஸத்திற்கு அழைத்துச் சென்றனர்.

பச்சமேட்ரன்:—அக்னிமுகன் என்று ஓர் அஸுரன் இருந்தான். அவன் தன் வாயிலிருந்து கிளம்பும் அக்னி ஜ்வாலையால் ஸகல தேவர்களையும் எரித்து வந்தான். பரமசிவனது ஜடையிலிருந்து தோன்றிய வீரபத்ரர் இவ்வஸுரன் வாயினின்றும்வரும் ஜ்வாலையைக் குடித்தார். அதன் வழியாக அவ்வஸுரனும் இறக்க வீரபத்ரன் பஸ்மாவைக் கொண்டு இறந்த தேவர்களை எழுப்பினர். மற்றோர் ஸமயம் ஓர் பயங்கரமான ஸர்ப்பமானது தேவர்களைப் பக்ஷிக்க வீரர் இச்சர்பத்தோடு ஓராண்டு போர் புரிந்தார். அது பற்பல உருவங்களைத் தாங்கி எதிர்த்தது. வீரன் அதன் வாயைக் கிழித்து எறிந்து அச்சர்ப்பத்தின் குக்ஷியிலிருந்து ஸகல தேவர்களையும் விடுவித்தார். வீரன் எதிரில் பத்து கைகளும், ஐந்து கால்களும், எட்டு தலைகளும் உள்ள பயங்கர உருவத்தோடு பஞ்சமேட்ரன் என்ற அஸுரன் தோன்றினான். அவன் ஆதிவராஹ

மூர்த்தியின் பலத்தைப்போல் இரண்டு மடங்கு பலமுள்ள வாலியை முழுங்கி ஸுக்ரீவனைக் கையில் பிடித்துக்கொண்டு தேவர்களை விழுங்க வாயைத் திறந்தான். உடனே வீரர் பெரியதோர் பாரையைக் கொண்டு அவ்வஸுரனுடைய ஓர் தலையை நசுக்கினர். கத்தியினுலும் கதையினுலும் இருவர்களுக்கும் பயங்கரமான யுத்தம் நேர்ந்தது. நாரதர் மூலம் இதையறிந்த ஹரிஹர ப்ரம்மாதி தேவர்கள் அருகில் வந்து அவ்வஸுரனது முகத்திலிருந்து கக்கிய வாலி ஸுக்ரீவர்களைப் பிழைப்பித்தார்கள். வீரபத்ரன் இவ் வஸுரனைக் கொன்று ரக்தபானம் செய்து தாண்டவமாடினர்.

இவ்வஸுரன் பலமுறை தேவரால் கொல்லப்பட்டு சுக்ராது மிருத சஞ்சீவினியால் பிழைப்பிக்கப் பட்டான். ஆதலால் சாகா வரம் பெற தலையைத் தரையில் வைத்து பல்லாண்டு பரமசிவனை நாடித் தவம் செய்தான். ஈசன் எதிரில் தோன்ருமற் போகவே அக்னியை வளர்த்தி ஒவ்வொன்ருகத் தன் தலைகளை நறுக்கி ஹோமம் செய்தான். ஐந்தாவது தலையை அறுக்கும்போது சங்கரன் எதிரில் தோன்றி எனது ஜடையிலிருந்து பிறக்கும் வீரனைத் தவிர மற்ற எவராலும் உனக்கு மரணமில்லையென வரமளித்து மறைந்தார். ஆதலால் இவ்வஸுரன் தேவரிற் பலரைக்கொன்று குவித்தான். வீரபத்ரன், பஸ்மத்தால் இவர்களை எழுப்பினன்.

இக்ஷ்வாகு:—என்ற ஓர் பிராமணன் ஸகல கலைகளையும் கற்றுணர்ந்து கல்விக்கேற்ற அனுஷ்டானமில்லாமல் இருந்தான். தற்செயலாக ஒரு நாள் ஓர் புராணத்தைக் கேட்டான். அதில் தர்மம் செய்யாதவர் பலவகை நரகங்களை அனுபவித்துத் தரித்ரனும், ரோகமுள்ளவனும், மனைவி மக்களை இழந்தவனுகவும், அனேகப் ப்ரஜைகளை யுடையவனும் இருப்பானென்று கூறியிருந்தது. அதைக் கேட்டு

தான் ஒரு தர்மமும் செய்யவில்லையே? என் கதியாதோ? என சிந்திக்கும்பொழுது அவனுக்கு அகாலமரணம்நேர்ந்தது. யம தர்மராஜன் இவனைப் பார்த்து உனக்கு இன்னும் ஸ்வல்ப காலம் பூமியில் இருக்கும்படி ஆயுள் இருக்கிறது. ஆதலின் இனியாவது பூமி சென்று தர்மானுஷ்டானம்செய்து ஸ்வர்க் கத்திற்கு வரும் வழியைத் தேடென்று அனுப்பினன். இக்ஷ்வாகு தக்க பெரியோரைத் தேடித்திரியும் போது ஜாபாலி என்ற பெரியார் கண்முன்தோன்ற அவரைப்பணிந்து தானிறப்பதற்குள் எந்த தர்மத்தைச் செய்தால் நற்கதியுண்டாகுமெனக் கேட்டான். அவர் இனி பத்து நாட்களே உனது ஆயுள். ஆதலின் உமாஸஹாயனை பரமசிவனைப் பூஜித்து நற்கதி பெறுவாய் எனக்கூறி சிவ மந்திரத்தையும் பூஜை மார்க்கத்தையும் உபதேசித்தார். அவனங்ஙனமே உபாஸித்து பத்தாவது நாள் இறக்க, அவனைத் தன்னுலகுக்கழைத்துச் செல்ல யமதூதர்களும் சிவதூதர்களும் ஒன்று சேர்ந்து வந்தனர். சிவதூதரின் தலைவரான அக்னி சிகன் என்பான் யமதூதர்களை வென்று இக்ஷ்வாகுவுடன் கைலாஸம் சென்று சங்கரரது திருவடியிற் கொண்டு சேர்த்தான்.

அக்னிசிகன்:—என்பவன் முற்பிறவியில் ஓர் க்ஷத்ரியன். ஓர் ஸமயம் துரதிருஷ்ட வசமாக ராஜ்யத்தையும் ஸேனையையும், மனைவியையும் இழந்து உணவுக்கும் வகையின்றி மூன்று குமாரர்களுடன் உழுதுண்டு வாழ்ந்தானவன். ஒரு குமாரன் அரவம் தீண்டி இறக்க மற்ற இரு குமாரர்களையும் விட்டு துக்காக்ராந்தனாய்க் கதறி நற்கதிபெற வழிகாட்டுமாறு வஸிஷ்டரை யடுத்தான். அவர் சிவபூஜையே சிறந்த வழி என்றுகூறி சிவபூஜா துரந்தரனை தனது புதல்வன் சக்தி என்பவன் ராக்ஷஸனுல் பக்ஷிக்கப்பட்டும் யமலோகம் செல்லாமல் பூவுலகில் வாழ்ந்துவந்தான். ஆதலால் நீயும்

சம்புவை ஆராதித்து நன்மைபெறு என உபதேசித்தார். அரசன் அங்ஙனமே சிவபூஜா மஹிமையால் அடுத்த பிறவியிலும் அரசனாகவே தோன்றி ராஜ்யபாரம் செய்துவந்தான். ஒரு நாள் சிவாலயத்திற்குச் செல்ல ஆங்குள்ள தீபமொன்று அரசன்மேல் விழுந்தது. கோபம்கொண்ட அரசன் அத்தீபத்தைக் கோயில்மேல் எறிய அவ்வாலயம் பற்றி எரிந்தது. மற்றோர் ஆலயம் கட்டிவைத்து அரனைப் பூஜித்தான். எனினும் பழைய ஆலயத்தைக்கொளுத்திய தோஷத்தால் சிவலோகஞ்சென்று எப்போதும் தலையிலிருந்து அக்னி ஜ்வலித்துக்கொண்டிருக்கும் அக்னிசிகன் என்ற கணமாக ஆனான்.

வித்ருதன்:—என்ற ஓர் அரசன் த்ரேதாயுகத்தில் தன் முன்னோர் அனுஷ்டித்து வந்த வழியைவிட்டு ராஜ்யத்தையும் கவனிக்காமல் நடவிடகாயகர்களுடன் சேர்ந்து நகரத்தவர் பரிஹஸிக்கத்தக்க நிலையிலிருந்தான். இதைக்கண்ட மற்றோர் அரசன் இவனது ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டான். ஆதலால் அரசன் பழைய தோழர்களுடன் சேர்ந்து வனம் சென்று, வேட்டையாடி ஜீவித்துவந்தான். இங்ஙனம் பல நாட்கள் செல்ல தேகத்தின் வலிமை குறைய மூப்பினாலும், பிணியினாலும், பல்வகைத் துன்பங்களை யனுபவித்து இறக்கும் தருவாயில் ஸுராபன் என்ற மந்திரியை அழைத்தான். அவன் அரசே! இச்சமயம் தாங்கள் விரும்புவது யாதென வினவ, அமாத்ய! நமது ஆசாரத்தை எப்போதும் கைவிடாதே. வழியில் செல்பவரை அடி (ப்ரஹர) அவர் பொருளை அபஹரி (ஆஹர) என்று சொல்லிக்கொண்டே இறந்தான். ஆதலால் சிவதூதர்கள் விமானமளித்து இவனைக் கைலாஸத்திற் கழைத்துச்சென்று இறக்கும் தருணத்தில் எப்பொருள்கொண்டோ "ஹர ஹர" என்று சொன்னமையால் தங்கள் திருவடியினருகே கொண்டுவந்தோமென்

ளூர்கள். வீரபத்ரனும் இவனை வரவேற்று கைலாயத்தில் ஓர் பதவியளித்தான்.

சோணன் என்ற பிராமணன் கலை எனும் மனைவியுடன்கூட கங்காஸ்நாநம் செய்யக் காசிக்கு வந்தான். அங்கே அவன் மிருத்திகா செளசத்திற்காக மண்ணை எடுக்கும் போது ஸ்வர்ணம் நிறைந்த வெள்ளிப் பாத்ரத்தைக் கண்டான். உடனே ஓடிவந்து தன் மனைவியினிடத்தில் அறிவிக்க அவள் அதைக் கண்ணெடுத்தும் காணலாகாதென்ளுள். ஏனெனில் எவராவது நம்மைப் பரீக்ஷிப்பதற்காக இதை வைத்திருக்கக்கூடும், அல்லது இந்த தனம் நம்மிடம் வந்தவுடன் நாம் வைதிக ஆசாரத்தையும் பரமனையும் மறந்து லோகஸுகத்தில் ஈடுபடுவோம். அதன் மூலமாக நரகம் உண்டாகும். ஆதலால் அதனருகே செல்ல வேண்டாம் என்ளுள்.

சோணனோ அதில் ஆசைகொண்டு அவளை வீட்டுக்கு அனுப்பிவிட்டு தனது வஸ்திரத்தைக் கிழித்து சிறிதளவு ஸ்வர்ணத்தை வாரி அதில் கட்டி பூமியில் தோண்டிபுதைத்து விட்டுக் கர்மானுஷ்டானம் செய்யக் கங்கைக்குச் சென்ளுன். இதனிடையில் கலையின் அழகைக்கண்டு மோஹித்த மாரீசன் என்ற அஸுரன் அவள் கணவன் வேஷம் பூண்டு மற்ளுேர் தீர்த்தத்திற்கு ஸ்நானம் செய்ய வா! என்று அவளை அழைத்தான். கலையோ கங்கையைவிட சிறந்த தீர்த்தம் வேறு உண்டோ? என்றனள். பதியின் சொல்லுக்குப் பதில்கூறல் பதிவ்ரதைக்கு அழகோ என்ளுன் அஸுரன். உண்மையாகப் பதி யென்றெண்ணி கலை அவனுடன் கிளம்பி செல்ல வெகுதூரத்திற்கப்பாலுள்ள ஓர் நதியில் இருவரும் ஸ்நாநம் செய்தனர். பதிக்கேற்ற உணவைப் பாகம்செய்து உமாதேவியைக் கலை த்யானம் செய்தாள். உமையின் அருளால்

அவன் அரக்கனென அறிந்து கண்ணீர்விட்டுக் கதறினாள். மாரீசன் அவளருகே வந்து பலாத்காரம் செய்ய, அவள் தன் கற்பின் மஹிமையால் தன்னுடலை இடுப்பு வரை கல்லாக்கிக் கொண்டாள். கோபங்கொண்ட அரக்கன் அவள் கழுத்தை யறுக்க கத்தியை ஓங்கினான். (மாஹர) கொல்லாதே என்று அவள் வாயிலிருந்து சொல் கிளம்பிக் கொண்டிருக்கும் பொழுதே அவள் தலையை இவன் வெட்டிவிட்டான். இந்த நாமோச்சாரண புண்யத்தால் அவள் கைலாஸம் செல்லஉமா தேவி உனக்கு யாதுவரம் வேண்டும் என்றாள். கலை உமது திருவடியைப் பணியும் தோழியாக என்னை ஏற்கவேண்டும் என்றாள். தேவி அங்ஙனமே அருள்புரிந்தாள்.

சோணன் வீட்டிற்கு வந்து மனைவியைக் காணாமல் மாமனார் வீடு சென்றான். அங்குமவளைக் காணாமல் விச்வாமித்ரர், வஸிஷ்டர் முதலிய மஹர்ஷிகளைப் பணிந்து தன் மனைவி சென்றவிடத்தை ஞான திருஷ்டியால் அறிந்துக் கூறும்படி வேண்டினான். அம்மஹரிஷிகள் அங்ஙனமே அறிந்து சோணனுடன் கைலாஸம் சென்று உமையை வணங்கி கலையை அளிக்கும்படி வேண்டினர். கலையும் தேவியும் விட்டுப்பிரிய மனமில்லாதவர்களாகச் சோணனை தரணியிற் சென்று கலைபோன்ற மற்றோர் மனைவியை மணக்கும்படி கூறினர்.

மஹரிஷிகளும் அங்ஙனமே ஏற்றுத் திரும்பும்போது தேவி இன்று ஸோமவார பூஜையாதலால் நீங்கள் இங்குதங்கி பகவத் ப்ரஸாதத்தைப் புஜித்துச் செல்லலாமெனக் கூறினாள். அவர்களும் அப்படியே அங்கு தங்க, சிவபூஜைக்குப் பிறகு எல்லோருக்கும் உணவளிக்கப்பட்டது. மஹரிஷிகளுடைய பங்தியில் ஓர் கிழவர் அழகிய தன் சிறிய மனைவியுடன் அங்கு வந்து எனக்கன்னமளி என கேட்டார். அருந்

ததியும், கலேயும் வந்த அந்தணர்களேப் பூஜித்து பலவகைப் பக்ஷியங்களேப் பரமாறினர். கிழவரும் இலேயில் போடுவ தற்குமுன் எல்லாவற்றையும் பக்ஷித்து இன்னும் வேண்டும் என்று கேட்டுவந்தார். மற்றவர்களால் போடமுடியாமல் போகவே பார்வதிதேவி தன் கையால் அக்ஷயம் என்று பரிமாறினுள். கிழவர் இதைக்கண்டு இடது கையாலும் புஜிக்க ஆரம்பித்தார். தேவி அப்போதும் அக்ஷயம் என்று கூற இவர் ஆயிரம் கைகள்கொண்டு புஜித்தார். உடனே கிழவர் உனக்கு வேண்டிய வரத்தைக் கேளென்ருர். தேவி உம்மால் எனக்கு வரம் கொடுக்க முடியுமானுல் என்றும் குன்ருத ஈச்வர பக்தியை எனக்களியும் என்ருள். இதைக் கேட்டு நகைத்துக் கிழவர் தேவி! எனது அழகைக்கண்டு இவ்விளங்குமரி என்னேப் பின்தொடர்ந்து வருகிருள். நீயும் என்னே மணந்துகொண்டால் உனக்கு தலேவாரி பூச்சூட்டி உன்னே அலங்கரிப்பேன் என்ருர். இதைக்கேட்டு தேவி ஸ்வாமிந்! என் கணவனுன கைலாஸநாதனேத் தவிர மற்றெவரையும் கண்ணெடுத்துங்காணேன் என்ருள். கிழவனுர் பெண்ணே! நீ பதிவிரதை யென்பது உண்மையாயின் என் மடியில் வந்து உட்காரு! உன் மனது மாருமல் இருக்கிறதா? என்பதைப் பார்க்கிறேன் என்று கூறி தேவியின் கையைப் பிடித்து இழுத்தார். தேவி திகைத்து நிற்க உடனே கிழவனுர் ஈசனுனர். அருகிலிருந்த ஸ்திரீ விஷ்ணுவானுள். உடனே ஸகல ரிஷிகளும் வியந்து பார்வதி பரமசிவனேப் பணிந்துப் போற்றி சென்றனர்.

சங்கராத்மா.

ஓர் ஸமயம் மஹரிஷிகள் ஆங்கிரஸ் என்ற மஹரிஷியைப் பணிந்து பிறப்பிறப்பில்லாப் பேரானந்தம் பெற யாது வழி? என வினவினர். அவர் பரமசிவனது பூஜையும் புராண

ச்ரவணமும் உயர்ந்த மார்க்கமெனக் கூறி கௌதமரது ஆச்ரமத்திற்கு அழைத்து வந்தார். அம்மஹரிஷி அன்புடன் சிவலிங்க ப்ரதிஷ்டை செய்து முப்பத்திரண்டு உபசாரத்துடன் பூஜை செய்யக்கண்டனர். இப்பூஜையைத் தர்சிக்க நாரதர் தும்புரு பாணன் ப்ரஹ்லாதன முதலியவர்கள் வந்தனர். இதனிடையில் சங்கராத்மா எனும் கௌதமரது சிஷ்யன் பித்தம் பிடித்தவனைப்போல் திகம்பரனாக ஆடிப்பாடி அலைந்து திரிந்து குருவுடன் உட்கார்ந்து உணவை உட்கொண்டான். சிவஞானம் பெற்றவனாதலின் சிவாநந்தம் பெருக தன்னை மறந்து திரியும் இவனைப் பரீக்ஷிக்க அகல்யை அன்னத்திற்குப் பதிலாக நெருப்புத்தணலை இலையில் பரிமாரினாள். அதையும் உண்டு ஆனந்தமாக அவன் திரிந்து விருஷபர்வாவின் அருகே வந்து நின்றான். மிக்க ஆபாஸமான இவனைக் கண்டு விருஷபர்வா கோபம்கொண்டு அவன் தலையை வெட்டிவிட்டான். கௌதமர் தனது சிஷ்யனும் உண்மைபக்தனுமான சங்கராத்மனது கதியைப்பார்த்துத் தானும் இறந்தார். அச்சபையில் எல்லோரும் இதேபோல் இறக்க, இதை நாரதர் மூலமறிந்த ஹரிஹர ப்ரம்மாதிகள் ஆங்கு சென்று அனைவரையும் பிழைப்பித்தனர். கௌதமர் ஸகல தேவர்களும் தன் ஆச்ரமத்தில் ஒரு நாள் தங்கி விருந்துண்டு செல்ல வேண்டுமென்று வேண்டினார். அதற்கிசைந்த தேவர்களும் அங்கு தங்கி ஜலக்ரீடை செய்தனர். அச்சமயம் சிலர் பாட சிலர் ஆட அதிமதுரமான ஆஞ்சனேயனது பாடல் எல்லோருள்ளத்தையும் இழுத்தது. பரமசிவன் தன்னோடு விருஷபத்திலமர்ந்து பாடி வரும்படி அவருக்குக் கட்டளையிட ஸ்வாமியுடன் ஸமமாக உட்காருவது உசிதமல்லவென மறுத்து தன்மீது ஏறும்படி பரமசிவனை ஆஞ்சநேயர் வேண்டினார். அங்ஙனமே பரமசிவன் அவன் மீதேரி கௌதமர் ஆச்ரமம் வந்து விருந்துண்டனர்.

ஒரு நாள் ஹநுமான் சிவபூஜை செய்துக் கொண்டிருக்கும் போது லிங்கத்தின் பீடத்தைக் காணுமல் மிக வருந்தி சதருத்ரீயம் என்ற மந்திரத்தை ஜபித்துக்கொண்டிருந்தார். உடனே வீர பத்ரர் எதிரில் தோன்ற ஹநுமார், பீடத்துடன் சிவனைத் தான் அர்ச்சிக்க உடனே பீடத்தைக் கொண்டுதர வேண்டுமென்றார். எங்கு தேடியும் அது கிடைக்காமற் போகவே வீரபத்ரன் கோபங்கொண்டு நெற்றிக் கண்ணுல் உலகைத் தஹிக்க ஆரம்பித்தார். தேவர்கள் இத்தாபத்தைத் தாளாது மஹரிஷிகளுடன் கைலாஸம் சென்று பரமசிவனைத் தேடி அங்கு அவரைக் காணுமல் கௌதமாச்ரமம் சென்றனர். அங்கு பரமசிவனைத் தர்சித்து இதை விக்ஞாபிக்க, அனுமானது சித்தத்தைப் பரீக்ஷிக்க நானே அதை அபஹரித்தவன். ஆதலின் இதை அவனிடம் கொடு என்று பீடத்தை அனுப்பிவிட்டு அவனது பக்தியைக் கண்டு ஸந்தோஷித்து ஸமுத்ரத்தைக் காலால் தாண்டும்படியான சக்தியை அவனுக்கு அளித்தார்.

முன்னெரு கலியுகத்தில் கௌதமர் என்ற ஓர் அந்தணர் இருந்தார். அவருக்குப் புஷ்டி பசு என்ற இரு ஸஹோதரர் உண்டு. அவர்களைக் கொண்டு இவர் உழுதுண்டு வாழ்ந்தார். அதிலுண்டான பொருளை அரசனிடம் அர்ப்பணம் செய்து க்ருஷிமிகச் சிரமமாயிருப்பதால் கிராமக் கணக்க உத்யோகம் தனக்களிக்க வேண்டுமென அரசனை வேண்டினர். இவரது துராசாரத்தைக்கண்டு அரசன் இவருக்கு யாதொரு உபகாரமும் செய்யவில்லை. ஜீவனத்திற்கு வேறுவகையின்றி அவர் கிடைத்த இடத்தில் மாம்ஸம் முதலியவைகளைப் பக்ஷிக்க ஆரம்பித்தார். ஒருநாள் தற்செயலாக புராணம் சொல்லும் ஒருவரைக்கண்டு பாபத்தின் பயனை நரகயாதனையைக் கேட்டுப்பயந்து அதைக் தாண்ட ஓர் வழி

சொல்லும்படி கேட்டார். பௌராணிகர் காசிக்குச் செல் அல்லது பரமசிவனைப் பூஜி. அல்லது ருத்ராக்ஷத்தை ஜபம் செய். ஸ்ரீசைலமாவது செல். மாகஸ்நாநமாவது செய், என்று கூறினர். கௌதமர் ஸ்ரீசைலம் சென்று பரமசிவனைப் பூஜித்து நற்கதியடைந்தார்.

புராண மஹிமை:—ஸகல சாஸ்த்ரார்த்தங்களும் புராணங்களில் கதை வடிவமாகக் கூறப்படுவதால் அத்தகைய புராண மறிந்தோர் பூஜிக்கத் தக்கவராவர். காலத்திற் கேற்றபடி கருமத்தை செய்ய ஸாமர்த்யம் வாய்ந்தவர் புராணஜ்ஞர். ராம ராஜ்யத்தில் சாகா வரம் பெற்ற ஓர் அஸுரன் அயோத்தியின் அருகே ஸேனையுடன் வந்திருப்பதை புராணக்ஞரான வஸிஷ்டர் அறிந்தார். தனது ஸேனையுடன் வெளியிற்சென்று ராக்ஷஸவேஷம் தரித்து அந்த ராக்ஷஸனருகே சென்று என்னைப் பக்ஷித்துச் செல். ராமனை ஜெயித்தாலென்ன? ஜெயிக்காவிடில் என்ன? என்று கூற அரக்கன் அரக்கனையே தின்பதுண்டோவென அவன் வியந்து கூறினன். உடனே வஸிஷ்டர் மனித சரீரம் பெற்று ஆகாசத்தில் சென்று அரக்கன் தலையில் காரித்துப் பினர். கோபம்கொண்டு அஸுரன் அவரைத் துறத்தஅவர் ஓர் ஸமுத்திரத்தின் ஜலத்திலமிழ்ந்தார். அவனும் அங்கே நுழைய அங்கே அவனைக் கொல்வதற்காகக் காத்திருந்த ஓர் பூதம் அவனை விழுங்கிற்று. ஆதலால் ஒவ்வொரு தினமும் பதினெண் புராணங்களில் நியமத்துடன் எதையாவதொன்றைக் கேட்கவேண்டும். வேத வியாஸர் பாரதத்தை மூவ்வாண்டுகள் சிஷ்யர்களுக்கு விரிவாக உபந்யஸித்தார். ஆதலால் அப்பாரதம் சொல்வோர் பூஜிக்கத்தக்க பாத்ரமாவர். அவரை வ்யாஸரென்று கருதி ஒவ்வொரு பர்வா பூர்த்தியாகும்போதும் அவருக்குத் தக்க ஸன்மானம் செய்ய வேண்டும்.

ஸ்ரீராமர் கேட்ட ராமாயணம்.

ஸ்ரீராகவன் சம்பு ரிஷியை முன்நடந்த ராமாயணத்தைச் சொல்லும்படி கேட்க பரமசிவன் ஸாங்கோபாங்கமாக அதை விவரித்தார். தசரதன் ஸௌமஸம் என்ற பட்டணத்தை எதிர்க்க அந்நகரத்தரசனான ஸாத்யன் தன் ஸேனையுடன் யுத்தத்திற்கு வந்தான். அவனது புதல்வன் பூஷணம் என்ற பெயருடையவன். அவனை எதிரில் கண்டவுடன் பரமப்ரீதிவர்த்தனன் என்ற தனது குழந்தை காடியினால் பக்ஷிக்கப்பட்டது அவன் நினைவிற்கு வந்தது. தன் புதல்வன்போன்ற அக்குழந்தையை அடிக்க மனமில்லாமல் அச்சாத்யனை ஜயித்து அவன் புதல்வனோடு ஒரு மாதம் அங்கு தங்கினான். அதுபோன்ற குழந்தை உண்டாகவேண்டுமென மஹாவிஷ்ணுவை நாடி தவம் செய்தான். அவர் எதிரில் தோன்றி லோகோபகாரமான புதல்வன் உண்டாவான் என்று சொல்லி மறைந்தார். கௌஸல்யையினிடத்தில் ராமனும் ஸௌமித்ரையினிடத்தில் லக்ஷ்மணனும் ஸௌரூபையினிடம் பரதனும் ஸௌவேஷையினிடம் சத்ருக்னனும் உண்டானார்கள். ஒரு ஸமயம் ராமனை ப்ரம்மராக்ஷஸ் பிடித்துக்கொள்ள வஸிஷ்டர் மந்த்ரத்தால் அதை அகற்றினார். வேதகர்வத்தால் பிரம்மராக்ஷஸ்ஸான அந்த பிராமணனுக்கு கங்கா ஸ்நானத்தாலும் பில்வ அர்ச்சனையாலும் நற்கதி பெறு என உபதேசித்தார். தசரதர் புதல்வர்களுக்கு விவாஹ விஷயமாக யோசிக்கும்போது விதேஹநது ஹோமத்திலுண்டான ஸீதையே இவனுக்கேற்ற மனைவியென வஸிஷ்டர் கூறினார். சதுரங்க ஸேனையுடன் தசரதர் விதேஹம் சென்றார். சிவபக்தனான விதேஹராஜன் "சதரூத்ரீயம்" என்ற மஹா மந்திரத்தை ஜபிக்க பரமசிவன் எதிரில்தோன்றி தனது தனுஸை யளித்து இதை வளைக்கும் ராமனுக்கே உன் பெண்ணைக்கொடு என சொல்லிமறைந்தார்.

ஸகல தேவர்களும், ராஜாக்களும் ராக்ஷஸர்களும் வந்து அதை வளைக்க முடியாமல் திகைத்து நின்றனர். மாரீசன் பிராமண வேஷம் பூண்டு விதேஹன் அரண்மனைசென்று ஸீதையைத் தூக்கிவர முயற்சித்தான்; அவனால் முடியவில்லை. விச்வாமித்ரரும் அவ்வில்லை ஒரு அங்குல நீளம் வளைத்து முடியாமல் விட்டுவிட்டார். ராகவன் வந்து தனுஸைப் பிரதக்ஷிணம் செய்து வில்லை வளைத்து ஸீதையை மணந்து ஊர் சென்றார். தசரதர் ராமனுக்கு யுவராஜ்ய பட்டாபிஷேகமும் செய்தார். ராமனது குணத்தையும் ஜனங்கள் அவர்பால் வைத்திருந்த அன்பையும் கண்டு ஸுவேவை பொறாமைகொண்டு பதினான்கு வருஷம் ராமனைக் காட்டிற்குப் போகும்படி வரங்கேட்டாள். வஸிஷ்டர் மூலமாக ராமனது பெருமையை உணர்ந்து தசரதர் அவரைக் காட்டிற்குஅனுப்பித் தானும் தேவலோகம் சென்றார். ராவணன் ஸீதையைத் தூக்கிச்செல்ல ஹநுமான் ராமஸுக்ரீவர்களுக்கு ஸக்யம் செய்துவைத்தார். ஹநுமான் ஸமுத்ரத்தைத் தாண்டி லங்கையைக்கொளுத்தி ஸீதையைத் தர்சித்து ராகவனிடம் விஷயத்தை அறிவித்தார். ராகவன் பரமசிவனை நாடித்தவம் புரிய பரமசிவன் தனது வில்லைத்தந்து அதன்மீது ஏறி லங்கைக்குச் செல் என்றார். லங்கையின் கோபுரத்திலிருந்த ஐந்து மரங்களை ராகவன் ஒரே பாணத்தினால் அடித்து வீழ்த்தினார். அதை அடிப்பவர் ராவணனைக் கொல்வார் என்று சுக்ரர் சொன்ன சொல்லைக்கூறி ஸீதையை ராமனிடம் கொடுக்கும்படி விபீஷணன் ராவணனை வேண்டினான். அவனங்ஙனம் செய்யாமல் போகவே ராகவன் ராவண கும்பகர்ணாதிகளை வதம்செய்து விபீஷணனுக்கு ராஜ்யத்தையளித்து ஸீதையுடன் புஷ்பகவிமானத்தின் மீதேறி அயோத்திக்குத் திரும்பிப் பட்டாபிஷேகம் செய்துகொண்டார்.

ஆகதன் சரித்திரம்:—மங்கனர்என்ற மஹர்ஷியின் புதல்வரான ஆகதர் என்பவர் ஸகல கலைகளிலும் பாண்டித்திய முள்ளவர். ஏழ்மையால் பீடிக்கப்பட்டு அன்னங்கிடைத்த பொழுது ஐந்தாறு நாட்களுக்கோர் முறை புஜிப்பதே அவர் வழக்கம். ஒரு ஸமயம் ஆருவதுநாள் ஸகல கர்மானுஷ்டானங்களையும் செய்து போஜனம் செய்யும் ஸமயத்தில் ஒருமாத காலமாய் உணவில்லாமல் வருந்துவதாகக் கூறி ஓர் யோகி வந்தார். அவருக்கு அன்னமளித்து மிகுதியை உண்ணும் பொழுது நொண்டியும் கண்ணில்லாதவனுமான ஒருவர் வேதத்தை உச்சரித்துக்கொண்டு பிக்ஷைக்கு வந்தார். அன்ன தானத்தைவிட சிறந்த தர்மம் வேறில்லை யென்றெண்ணி அவரைப் பூஜித்து அவருக் கன்னமிட்டார். இச்சமயத்தில் ஓர் பைத்தியக்காரன் இவனது வீட்டைக் கொளுத்தி இத் தம்பதிகளை அடிக்க ஆரம்பித்தான். ஆகதன் வீட்டின் மத்தியிலுள்ள சிவலிங்கத்தைக்காக்க நெருப்பையுங் கவனியாமல் உள்ளே நுழைந்து அதைத் தூக்கி வந்தான். சிவலிங்கம் பாதி வெந்திருப்பதைக் கண்டு ஸஹியாமல் தன்னுடலை நெருப்பிலிடத் தீர்மானித்து அக்னியை மூட்டினுன்.

இதற்குள் வந்த ப்ராந்தன் இச்சிவலிங்கத்தையும் தூக்கி மறைந்தான். அதைக்கண்டு ஆகதன் தவிக்கும்போது பரம சிவன் ப்ரத்யக்ஷமாகத்தோன்றி ஆகதனை ஆசீர்வதித்து மறைந்தார்.

சங்கர லீலை.

ஸ்ரீராகவன் கௌஸலைக்கு மாஸச்ராத்தம் செய்தபொழுது ஓர் பிராமணன் எதிரில் தோன்றி தன்னையும் சிராத்தத்தில் ஓர் பிராமணனுக வரிக்கும்படி வேண்டினுர். அப்படியே ராமன் வரிக்க அவர் இலையிலுள்ள ஸகல பதார்த்தங்களையும் ஒரே கபளமாக புஜித்தார். ராமர் புதிதாக பாகம்

செய்து பரிமாறினர். எல்லாவற்றையும் அவர் புஜித்து இன்னும் வேண்டும் இன்னும் வேண்டுமென்று கேட்டபொழுது கவலைகொண்ட காகுத்ஸ்தன் அன்ன பூர்ணியை வேண்ட தேவி வந்து அக்ஷயமென்று பரிமாறினள். அவர் இடது கையால் புஜிக்க அப்பொழுதும் அக்ஷயமென்று தேவி கூறினள். இவ்வாறே ஆயிரங்கையெடுக்க ஆயிரமுறை தேவி பரிமாற, வந்த அதிதி பாயஸம் முதலியவைகளைத் தன்னுடலில் பூசிக்கொண்டு ஆஸனத்திலிருந்து என்னல் எழுந்திருக்க முடியவில்லை. ராம! என்னைக் கைகொடுத்துத் தூக்கு என்றார்.

ராமர் தனது பூர்ண முயற்சியுடன் முயன்றும் அவரைத்தூக்க முடியாமல் போகவே ஹநுமான் விருந்தாளியின் கையை பிடித்திழுத்தான். அவர் கை அறுந்து விடுமென்றஞ்சி ஆஸனத்துடன் தூக்கி அப்புறம் வை என்று ராகவன் உரைத்தார். ஹனுமான் தனது வாலினல் சுற்றி இரண்டு கால்களையும் பூமியில் உதைத்து மிக சிரமத்துடன் தூக்கி அப்புறம் வைத்தார். இவரது லீலையைக்கண்டு எல்லோரு மாச்சரியமடைந்து இவர் பரமசிவனே என்று ஸந்தேகித்து துதித்தனர். உடனே விருந்தாளி சங்கசக்ர கதாபாணியாய் பீதாம்பரதாரியாயுள்ள பரமசிவனது ரூபத்தைக்காட்டி உனக்கு யாது வரம் வேண்டுமென்று ராமரைக் கேட்டார். யான் க்ஷத்திரியனுதலின் எவரையும் யாசிப்பதில்லை என்று ராகவன் கூற, ராகவனது குணத்தைக்கண்டு கொண்டாடி அவர் மறைந்தார். இங்ஙனம் சம்பு மஹரிஷி பற்பல கதைகளைச் சொல்லிக் கைலாஸகிரி சென்றார்.

பாதாள கண்டமெனும் நான்காவது கண்டம் முற்றிற்று.

ஸ்ருஷ்டி கண்டம்.

தசாவதார காரணம்.

பீஷ்மருக்கு பௌலஸ்த்யர் ஜகத்ஸ்ருஷ்டியையும் சந்திர ஸூர்யர்களது வம்சத்தையும், இடையிடையே, பற்பல தர்மங்களையும் கூறினார். ஸுரர்களுக்கும் அஸுரர்களுக்கும் பெரும்போர் நடந்தது. தோல்வியடைந்த தைத்யர்கள் தம் குருவான சுக்ரரிடம் சென்று தங்கள் குறையை வெளியிட்டனர். சுக்ரர் சில ஆண்டு நான் தவம் புரிந்து சிவனிடமிருந்து வரம் பெற்று தேவர்களை ஜயிக்கும் உபாயத்தைக் கண்டு வருகிறேன். அதுவரைப் போரை நிறுத்திச் சாந்தமாக இருங்கள் என்று கூறி தபோவனம் சென்றார்.

குருவின் சொற்படி அஸுரர்கள் ஆயுதங்களை விட்டு சாந்தமாயிருந்தனர். இதுதான் தக்க ஸமயமென எண்ணி தேவர்கள் அஸுரர்களை நன்கு புடைத்தனர். அஸுரர்கள் சுக்ரரது தாயினிடம் சென்று அபயம் அபயம் என்று கதறினர். சுக்ரரது தாய் கோபம்கொண்டு ஸகல தேவர்களையும் தூங்கும்படி செய்தாள். தேவேந்திரன் மஹாவிஷ்ணுவினிடம் சென்று இதை அறிவித்து தங்களைக்காக்க வேண்டும் என்று ப்ரார்த்தித்தான். உடனே வைகுண்ட நாதன் தேவேந்திரனைத் தன்னுள்ளே புகும்படி செய்து ரக்ஷித்தார். இதைக் கண்டு அடங்காக் கோபம்கொண்ட சுக்ரமாதா இருவரையும் தன் தவத்தால் தஹித்துவிடுவதாகக்கூறினாள். ஸ்வாமி இந்திரனது பிரார்த்தனைக் கிணங்கி சக்ராயுதத்தை எரிந்து அவளைக் கொன்றார். தனது மனைவியைக் கொன்ற மஹாவிஷ்ணுவைப் பார்த்து ப்ருகு மஹர்ஷி இவ்வடாத கார்யம் செய்ததால் தேவனேயானாலும் மானிடப் பிறவியில் ஏழுமுறை பிறப்பாய் என்று சபித்தார். பின்னர் தபோ பலத்தால் தனது பத்னியை முனி எழுப்பினர்.

நாஸ்திகோபதேச காரணம்.

சுக்ரர் கடுந்தவம் புரியும்போது அவரது தவத்தைக் கலக்க எண்ணிய தேவேந்திரன் தனது புதல்வியான ஜயந்தியை யழைத்துக் கூறினன். பெண்ணே! உனது ரூபத்தினுலும் இனிய குரலாலும் அத்புதமான ஆடலாலும் பாடலாலும் சுக்ரரை மோஹிக்கும்படி செய். பற்பல உபசாரங்களைச் செய்து அவரது தவத்திற்கு அனுகூலமாயிரு. அவரது அருளைப் பெறத்தக்கபடி மிகநன்ருக பணிவிடை செய். இதனுல் அவர் உன்னிடம் பேரன்புகொண்டு தவத்தை மறப்பார். இடையே நாங்கள் தேவகார்யத்தைச் சாதித்துக் கொள்கிருேம் என்ருர்.

பிதாவின் சொற்படி ஜயந்தி, தூமபானம் செய்து தலைகீழாகத் தவம் செய்யும் சுக்ரரை அணுகி அந்தந்த காலத்திற்கு உசிதமான பணிவிடைகளைச் செய்து வந்தாள். லோகோத்தரமான இவளது உருவைக் கண்டு சுக்ரர் ஏமாருமல் பணிவிடைகளை மாத்ரம் ஏற்று ஆயிரம் ஆண்டு தவம் புரிந்தார். கோரமான தவத்திற்கு இசைந்து பரமசிவன் எதிரே தோன்றி, சுக்ர! உன்னைப்போல் இதுவரை எவரும் கடுந்தவம் புரிந்தவரில்லை. ஆதலின் உன்னிடம் பரம ஸந்தோஷம் கொண்டோம்; நீ வேண்டும் வரமனைத்தையும் அளிப்போம் என்று கூறி சுக்ரர் விரும்பிய வரங்களையளித்து மறைந்தார். தனது கார்யம் ஸித்தியானவுடன் தன்னைக் குறித்துத் தவம் கிடப்பதுபோல் பணிசெய்யும் பெண்மணியைப் பார்த்து பெண்ணரசே! நீ யார்? எக்காரணம் பற்றி எனக்குப் பணிவிடை புரிகிருய்? நீ வேண்டும் வரம் யாது? என வினவினர். ஜயந்தியோ தனது வம்சத்தைக்கூறி யுவதியான யான் என்ன விரும்புவேன் என தவத்திற் சிறந்த தாங்கள் அறியீரோ! என்றனள்.

மாதரசே! மதனன் கணைக்கு இலக்கான உன் விருப்பை எனது இல்லம் சென்று பூர்த்தி செய்வேன். நூறுண்டு ஒரு வரும் அறியாது மறைந்து உன்னுடன் ரமிப்பேன் என்றார். அங்ஙனமே அவ்விருவரும் கூடிக் களித்திருக்க அஸுரர்கள் தம் குரு கார்யஸித்தியுடன் வந்தாரெனக் கேட்டு ஆசார்ய ரது கிருஹத்திற்கு வந்தனர். அச்சமயம் அவர் அஸுரர் கண் களில் தோன்ருததால் குரு வரவில்லை என்று எண்ணிச் சென்றனர். இத்தருணம் பிருஹஸ்பதி சுக்ரவடிவம் பூண்டு அஸுரர் முன்னே தோன்றி சிவபிரானிடம் வரம் பெற்று வந்தேன். சிஷ்யர்களே! வாருங்கள்! உங்களுக்கேற்ற உப தேசம் புரிவேன் என்று கூறினார். உண்மையான சுக்ரரென் றெண்ணி அரக்கர்களும் அவரது உபதேசத்திற்குச் செவி யளித்தனர். அச்சமயம் சுக்ர வேடம் பூண்ட ஸுரகுரு வேத தர்மங்களனைத்தும் வயிற்றுப் பிழைப்புக்காக இயற்றப் பெற்றன. இவ்வுலகில் பெறும் ஸுகமே ஸ்வர்க்கமாம். இங்கு நாம் அனுபவிக்கும் துன்பமே நரகமாம் என்று பல வகையாக நாஸ்திக மதத்தைக்கூறி ராக்ஷஸர்களுடைய உள் ளத்தைக் கலக்கினர். அஸுரர்களும், இதே நமக்கேற்ற அரிய உபதேசமென்றெண்ணி ஸன்மார்க்கத்தை விட்டு துர் மார்க்கத்திலீடுபட்டதால் ஸுலபமாக தேவர்கள் இவர்களை ஜயிக்க முடிந்தது.

நூறுண்டு கழித்து சுக்ரர் தன் கிருஹத்தில் வந்து நுழைய ஆங்கோர் சுக்ரர் இருப்பதைக் கண்டு வியந்தார். உண்மையான சுக்ரர் ஞானதிருஷ்டியால் உள்ளதையுணர்ந்து தனது சிஷ்யர்களைப் பார்த்து தேவகுரு எனதுவேஷம்பூண்டு உங்களை ஏமாற்றுகிருர். ஆதலின் ஸுரகுருவான அவரைக் கட்டி காராகிருஹத்தில் போடுங்கள் என்ருர். பிருஹஸ் பதியோ வந்தவரே வேஷதாரியான சுக்ரர்; அவரைக் கட்டிய டியுங்கள் என்று கூறினர். அவர் சொற்படியே அஸுரர்கள்

தங்கள் குருவை ஏற்காததோடு ஹிம்ஸிக்கவும் ஆரம்பித்தனர். அதனால் சுக்ரர் தன் சிஷ்யர்களுக்கே சாபமளித்துச் சென்றார்.

ஸப்தஸித்தர்கள்.

குருக்ஷேத்ரத்தில் கௌசிகர் எனும் ஓர் தர்மசீலர் இருந்தார். அவருக்கு ஸ்வஸ்ருபன், க்ரோதனன், ஹிம்ஸ்ரன், பிசுனன், கவி, வாக்துஷ்டன், பிதுருவர்த்தி என்ற ஏழு புதல்வர்கள் இருந்தனர். இவர்கள் கர்க்கரிடம் சென்று வித்யை பயின்றனர். இவர்களது தந்தை இறந்த பிறகு உலகில் துர்ப்பிக்ஷம் தோன்றி பல்லாண்டு மழையில்லாமல் பயிர்கள் அழிந்தன. குடிக்கத் தண்ணீரின்றிக் குடிகள் தவித்தன. இச்சமயத்தில் கர்க்கரது பசுவை மேய்ப்பதற்கு ஒட்டிச் சென்ற இக் கௌசிகர்களுக்குப் பசி அதிகரித்தது. குருவினது பசுவைக் கொன்று புசிப்பதென தீர்மானித்தனர். பித்ருவர்த்தி என்பவன் இம்மாம்ஸத்தைக் கொண்டு பித்ரு ச்ராத்தம் செய்து மிகுதியைப் புசிப்பது நியாயமென்றான். அதையே எல்லோரும் ஆமோதித்து இருவரைத் தேவராகவும் மூவரைப் பித்ருக்களாகவும் ஒருவனை அதிதியாகவும் வரித்து ச்ராத்தத்தை முடித்து கோமாம்ஸத்தைப் புஜித்தனர். குருவினிடம் வந்து பசுவைப் புலி கொன்றதெனக் கூறினர். பலநாள் சென்றபின் இவர்கள் இறந்து தசபுரமென்ற விடத்தில் ஏழு வேடர்களாகப் பிறந்தனர். அங்கும் பூர்வஜன்ம அறிவைப் பெற்றிருந்தனர். ஆதலின் ஜ்ஞான வைராக்யம் கொண்டு வேடத் தொழிலில் ஈடுபடாமல் ஸன்மார்க்கத்தைக் கைப்பற்றினர். தீர்த்தக்கரையில் ஆகாரமில்லாமல் இருந்து வேட உடலை விட்டு காலஞ்சரம் எனும் மலையில் ஏழு மிருகங்களாகத் தோன்றினர். அவ்வுடலையும் விட்டு மானஸஸரஸில் ஏழு சக்ரவாக பக்ஷிகளாகத் தோன்றினார்கள்.

அங்கும் யோகமார்க்கத்தை அனுஷ்டித்தே வந்தார்கள். இதில் மூவர் யோகத்திலிருந்து நழுவினர்.

பாஞ்சால வம்சத்தில் தோன்றிய அணுஹன் என்ற அரசன் பல பெண்களோடு ரமிப்பதைப்பார்த்து இவர் போகத்திலாசை கொண்டனர். பிதுருவர்த்தி என்பவன் ராஜபதவியிலும், மற்றிருவர் மந்திரிபதவியிலும் ஆசை கொண்டனர். ஆதலின் அவ்வுடலைவிட்டு பிப்ராஜனெனும் அரசனுக்கு ப்ரஹ்மதத்தனென்ற ராஜகுமாரனாக பித்ருவர்த்தி பிறந்தார். மற்றவர் அவனுக்கே புண்டரீகன் ஸுபாலகன் என்ற மந்திரிகளாகத் தோன்றினர்கள். இவர்களால் கொல்லப்பட்ட பசு ஸந்நதி என்ற பெயருடன் அரசன் மனைவியாகத் தோன்றிற்று. பித்ருகார்யத்தில் விநியோகமானதால் அவள் வேதாந்த ஜ்ஞானமுள்ளவளாக இருந்தாள். ப்ரஹ்மதத்தனும் ஸந்நதியும் சேர்ந்து உத்யானத்தில் உலவும்போது அரசன், கோபங்கொண்ட பெண் எறும்பை ஸமாதானம் செய்யும் ஆண் எறும்பின் அழகிய வார்த்தைகளைக் கேட்டு நகைத்தான். அதைக்கண்டு ஸந்நதி தன்னைக்கண்டு நகைப்பதாக எண்ணிப் பலமுறை சிறித்த காரணத்தைக் கேட்டாள். அரசன் இது தேவரஹஸ்யமெனப் பலமுறை கூறியும் அவள் நிர்ப்பந்தம் செய்தாள். அரசன் ஏழு நாட்களில் கூறுவதாகக் கூறி பிரஹ்மனை நாடி தன்னிலையை நினைந்து வருந்தினன். பிரஹ்மன் கனவில் தோன்றி நாளைக்காலையில் உனது அரண்மனைக்கு வரும் வ்ருத்தன்மூலமாக உன் கவலை அகலுமெனக் கூறினர்.

இம்மூவர் தவிர மற்ற நால்வரும் அதே ஊரில் ஓர் ஏழைப் பிராமணப் புதல்வர்களாகப் பிறந்தனர். தன் தந்தையை வணங்கித் தங்களுக்குத் தவம் புரிந்து ஸித்திபெற அனுஜ்ஞையளிக்க வேண்டுமென பிரார்த்தித்தார்கள். கிழவர், இவ்வயதில் நீங்களல்லவோ என்னை உணவளித்து ரக்ஷிக்க வேண்டும்? நீங்கள் தபோவனம்சென்றால் வயோதிகர்களான

தாய் தந்தையின் கதியாது? என்று வருந்தினர். இதைக் கேட்ட புதல்வர்கள் தாங்கள் குருக்ஷேத்ரத்தில் பிராமணர்களாகப் பிறந்ததையும், தசபுரத்தில் வியாதர்களாக வந்ததையும், காளஞ்சரத்தில் மிருகமாக ஆனதையும், மானஸத்தில் சக்ரவாகமாக மாறினதையும் ஓர் பாட்டாக எழுதிக் கொடுத்து இதை அரசனிடம் கொடுங்கள். அபரிமிதமான தநமளிப்பான் என்றார்கள். அதேபோல் வ்ருத்தர் செய்ய அரசன் தனது தவறுதலையும், ஸஹோதரர்களது கருணையையும் உணர்ந்து விஷ்வக்ஸேனனெனும் தனது புதல்வனிடம் ராஜ்யத்தை யளித்து இரு மந்திரிகளுடனும், ஸகோதரர்களிடம் வந்து சேர்ந்து தவம் செய்து ஸித்திபெற்றான். இக்கதையே ச்லோகரூபமாக ச்ரார்த்தகாலத்தில் சொல்லப்படுகிறது.

கர்ணார்ஜுனர்களது முற்பிறவி.

பரமசிவன் பிரஹ்மாவின் ஐந்தாவது சிரத்தை நகத்தால் கிள்ளியபோது பிரஹ்மா கோபம் கொண்டு தன் நெற்றியில் தோன்றிய வியர்வை ஜலத்தைக் கோபத்துடன் பூமியில் விட்டார். அது ஆயிரம் கவசமுள்ள ஓர் வில்லாளியாகத்தோன்றி, யான் என்னசெய்யட்டும்? என்று பிரஹ்மனைக் கேட்டது. எனது ஐந்தாம் சிரத்தையறுத்த சங்கரனைக் கொல் என்று பிரஹ்மா கூற, பயங்கர உருவத்தோடு அது பரமசிவனை எதிர்த்தது. அதைக் கண்டு பயந்து ஓடி பரமசிவன் அபயம் அபயம் என்று மஹாவிஷ்ணுவிடம் சென்றார். பகவான் தனது ஹூங்காரத்தினால் வந்தவனை ஸ்தம்பித்து நிற்கும்படி செய்தார். தன் வீட்டை நாடிவந்த பிக்ஷாடன மூர்த்தியான பரமசிவத்தைநாடி உமக்கு யாது வேண்டுமென வினவினார். பரமசிவனும் தனது கபாலத்தைக் காட்டி இதில் தக்க பிக்ஷை அளியும் என்றார். இவ்வுத்தம பிக்ஷுவுக்கு நமது

வலது கையைத் தவிர தக்க பிக்ஷை வேறு ஏது? என்று தனது வலது புஜத்தையே விஷ்ணு கபாலத்தில் வைத்தார். பரமசிவனும் அதைத் தனது சூலத்தினுல் குத்த ஆயிர மாண்டு அக்கையிலிருந்து ஸ்வர்ணவர்ணம் போன்ற ரக்த தாரை சுறந்தது. சிவபிரான் முக்கண்ணுலும் அக்கபாலத்தை நோக்கித் தனது விரலைக் கபாலத்தில் வைத்தார். அதி லிருந்து கிரீடகுண்டலதாரியான ஓர் நரன் தோன்ற அவரும் விஷ்ணுவும் சேர்ந்து நரநாராயணர்களாக ஆனுர்கள்.

விஷ்ணுவினது ஹுங்காரத்தினுல் ஸ்தம்பித்து நிற்கும் பிரஹ்மாவின் வேர்வையிலிருந்து உண்டான புருஷனை எழுப் பென்று நாராயணன் நரனைக் கூறினுர். நரன் அவனைக்காலால் உதைக்க ப்ரஹ்மாவின் வேர்வையிலிருந்து உண்டானவனுக் கும் நாராயணன் ரக்தத்திலிருந்து உதித்தவனுக்கும் நெடுங் காலம் கடும்போர் நேர்ந்தது. ஸ்வேதஜனது கவசங்கள் நர னுல் அறுக்கப்பட்டு ஒன்றே மிகுந்தது. இதைக் கண்டு பிரஹ்மா வருத்தப்பட அடுத்த பிறவியில் இவன் நரனை ஜயிப் பானென விஷ்ணு ஸமாதானம் கூறினுர். அதேபோல் திரேதாயுகத்தில் நரன் ஸுக்ரீவனுகவும் ஸ்வேதஜன் வாலி யாகவும் தோன்றினர். வாலியினது பலத்தினுல் ஸுக்ரீவன் அடிபட்டுத் தோல்வி யுற்றுன். துவாபர யுகத்தில் நரன் அர்ஜுனனுகவும் ஸ்வேதஜன் கர்ணனுகவும் பிறந்து நர னிடம் கர்ணன் தோல்வியுற்றுன்.

சிவனது பாபமோசனம்.

பிரமனது ஐந்தாம் தலை ஆகாசத்தை நோக்கியிருந்தது. அது ரஜோ குணம் நிறைந்ததாயிருந்தபடியால் எனக்கு ஈடு எவருமில்லை என்று கர்வம்கொண்டு க்ரூரபார்வையினுல் தேஜஸ்ஸைக்கக்கியது. அதனுல் சந்தர ஸூர்யர்களது ஒளி மழுங்கியது. தேவர்களதை ஸஹிக்கமாட்டாமல் அத்தலையை

அகற்ற பரமசிவனே வேண்டினர். அவர் இடதுகை நகத்தால் அத்தலையை அறுத்தார். அதனால் பிரஹ்மஹத்தி பாபம் அவரைச் சூழ உடல் கருத்து நாற்றமுண்டாகி தனக்குத்தானே அருவறுக்கத் தகுந்த நிலையை அடைந்தார். இதையகற்ற யாது வழியென மஹாவிஷ்ணுவைக் கேட்க பிரம்மனைத் துதித்து கங்கை முதலிய புண்யநதிகளில் புனலாடி இப்பாபத்தை எங்கு விடலாம் என அவரையே கேளென்றார். அவர் அங்ஙனமே செய்ய பிரம்மா கங்கையில் கபால மோசனம் என்ற விடத்தில் அத்தோஷத்தை விட்டு கங்கைக்கரையில் வஸிக்கும்படி சிவனை வேண்டினார். அன்றுமுதல் பாபமகன்று ஸகல ஜனங்களின் பாபத்தையகற்றி முக்தியளிக்கும் காசியில் சிவமூர்த்தி தங்கினார்.

காயத்ரீ.

ஒரு ஸமயம் ஸகல தேவர்களுடன் கூடி பிரம்மா ஓர் யாகம் செய்ய ஆரம்பித்தார். அதில் ப்ருகுஹோதாவாகவும், புலஸ்த்யர் அத்வர்யுவாகவும், மரீசி உத்காதாவாகவும் நாரதர் பிரஹ்மாவாகவும், ஸனத்குமாராதிகள் ஸதஸ்யராகவும் வரிக்கப்பட்டார்கள். ஸகல தேவர்களும் மற்ற வேலையில் ஈடுபட, அத்வர்யு, பத்னியை ஸங்கல்பத்திற்கு அழைத்தார். ஸாவித்ரி, பெண் ஸ்வாபத்தைத் தழுவி இதர பெண்மக்களுடன் தன்னை அலங்கரித்துக்கொண்டுவர தாமதம் செய்தாள். அத்வர்யு பன்முறை வேண்டியும், மற்ற பெண்களுடன் வருவதாகச் சொல்லி தாமதித்தாள். இதைக் கண்ட பிரம்மா வேறொரு பெண்ணைக்கொண்டு யாகத்தைப் பூர்த்திசெய்வதாக எண்ணி பெண்ணைத்தேட இந்திரனை யனுப்பினார். தேவேந்திரன் அழகிற் சிறந்த ஓர் யாதவ கன்னிகையைப் பார்த்து நீ யார்? எங்கு வந்தனை? என வினவினார். யானோர் இடைச்சி. வெண்ணெய் பால் தயிர் விற்க வந்தேன்

என்று அவள்கூற, அவளைப் பலாத்காரமாக இந்திரன் தூக்கிச் சென்றான். அப்பெண் தன் தந்தை தாய் உத்தரவின்றி தான் எங்கும் செல்லலாகாதென்றும், தான் சென்றவிடம் தெரியாமல் அவர்கள் தவிப்பார்கள் என்றும் பலமுறை வேண்டியும் தேவேந்திரன் அவளைப் பலாத்காரமாகக்கொண்டு சென்றான். ப்ரம்மனுக்குத்தான் மனைவியாகப் போவதைக் கேட்டு பிறகு அவள் பரம ஸந்தோஷமடைந்தாள்.

மஹாவிஷ்ணு காயத்ரீ என்று அவளுக்கு நாமகரணஞ் செய்து விதியை நோக்கி விதிப்படி அவளை மணந்து வேள்விக்குப் பத்னியாக வைத்துக்கொள்ளுமென்றார். அங்ஙனமே செய்து தீக்ஷை பெற்று பத்னியுடன் பிரம்மா யாகசாலையில் வீற்றிருக்க இக்கோபகன்னியின் தந்தை தாய்மார்கள் ஓடி வந்தனர். எனது பெண்ணைத் தூக்கிச்சென்றவன் யார்? அவளை விட்டுவிடுங்கள் என்று அவர்கள் கதறியழுதனர். தேவேந்திரன் அவர்களைத் தேற்றி என்ன ஸமாதானம்சொல்லியும் கேழ்க்கவில்லை. ஆதலால் மஹாவிஷ்ணுதானே அவர்கள் அருகில் வந்து அவர்கள் குலத்தையும் அப்பெண் பிரம்ம பத்னியாக அமைந்ததையும், யாகத்தின் சிறப்பையும் வர்ணித்து யாதவகுலத்தில் தான் தோன்றப்போவதாக வரமளித்தார். அப்பெண்ணும் பெற்றோர்களுக்கு ஸமாதானம் சொல்ல அவர்கள் வருத்தமின்றிச் சென்றனர்.

பரமசிவனது லீலை.

நூறாண்டு நான்முகன் வேள்வி செய்ய, பரமசிவன் ஆண்டிவேடம் பூண்டு பெரியதோர் கபாலமெனும் மண்டை ஓட்டைக் கரத்திலேந்தி யாகசாலையில் புகுந்தார். இவரது அவைதிக கோலத்தைக் கண்ட வேதியர், வேதியில் இவர் வரத்தகாதென இவரை விரட்டினர். எல்லோரும் இன்புறும் இவ்வேள்வியில் எனக்குத்தான் பாக்யமில்லையோஎன்று

இவர் முறையிட, நீ வயிறுர உண்டு களித்துச்செல்! இங்கே வராதே! என்று வைதிகர் கூறினர். சிவமும் தனது கபாலத்தை யாகசாலையில் வைத்துவிட்டு ஸ்நானம் செய்து புஜித்துப் போவதாகக் கூறி சென்றுர். இக்கபாலம் அசுத்தப் பொருளாதலின் அது இங்குள்ளவரை மேலே யாகம் நடைபெறுதென ஆங்குளோர் கூறினர். ஆதலால் பிரும்மனுணையின்படி, ஓர் தாஸன் அந்த கபாலத்தைத் தூக்கி வெளியிலெறிந்து மூழ்கிவிட்டு வந்தான். அவன் வருவதற்குள் அதே இடத்தில் மற்றோர் கபாலம் வந்து சேர்ந்தது. அதையுமகற்ற மற்றொன்று தோன்றியது. இங்ஙனம் அளவற்ற கபாலமுண்டாக ஸபையோர் ஆச்சரியமடைந்து இது கைலாஸ நாதனது லீலை என்றுணர்ந்து அவரைப் போற்றினர்கள். அவர் தன்னுருவுடன் ஸபையினிடையே தோன்றி நீங்கள் யாகத்திற்காக பாகம் செய்யும் புரோடாசமென்பது இக்கபாலத்தில்தான் வைக்கப்படுகிறது. கபாலம் என்பது ஞானஸ்தானமாம். ஆங்கு உதிக்கும் நல்லெண்ணங்களே தேவருக்குரிய ஆஹாரமென்று கூறி, தன்னை அறியாமல் யாகசாலைக்கு வரலாகாதென தன்னைத் தடுத்தவர் வேதபாஹ்ய பாஷண்டிகளாவர் எனக்கூறி மறைந்தார்.

பிறகு யாகசாலைக்கு வந்த ஸாவித்ரி தன் கணவன் மற்றொரு பெண்ணை அருகில் வைத்திருப்பதைக் கண்டாள். நடந்த வரலாற்றை ஞானக்கண்ணுல் கண்டறிந்து கோபங்கொண்டாள். இக்கல்யாணத்திற்குக் காரணமாயிருந்தவரையும் அதை ஆமோதித்தவரையும் சபித்தாள். விஷ்ணு அவள் சாபத்தால் ராமாவதாரத்தில் தன் மனைவியை இழந்தார். சிவன் தாருகாவந ரிஷிகளால் சபிக்கப்பட்டார். பிரும்மன் பூஜையை இழந்தான். இந்த்ரன் அஸுரரால் அவமதிக்கப்பட்டான். அக்நி அசுத்தங்களையும் புஜிப்பவரானுர். தேவர் தம் தம் மனைவியிடம் மக்கள் பேற்றைப் பெறவில்லை. லக்ஷ்மி

சஞ்சலை ஆனாள். இங்ஙனம் எல்லோரையும் சபித்துவிட்டு ஸாவித்ரி ஒருவரும் ஸஞ்சரிக்காவிடம் செல்லக்கிளம்பினாள். விஷ்ணு அவளடி பணிந்து கோபத்தைவிட்டு முன்போலவே புருஷருடன் கூடி வஸிக்கும்படி வேண்டினார். அவளும் சாந்தமாகி பர்த்தாவுடன் கூடி யாகத்தைப் பூர்த்தி செய்தாள். காயத்ரியும் ஸாவித்ரியும் ஒன்றுகூடி முன்கொடுத்த சாபத்திற்குக் கொஞ்சம் பரிஹாரம் செய்தனர்.

பிரபஞ்சன சரிதம்.

பிரபஞ்சனன் எனும் அரசன் க்ஷத்ரிய தர்மம் தவறாது தரணியை ஆண்டுவந்தான். ஒரு ஸமயம் வேட்டையாடும் போது ஓர் புதரிலிருந்த ஒரு பெண்மானை அடித்தான். உடனே அப்பெண்மான் அவனைப் பார்த்து நீ உண்மையாக க்ஷத்ரிய தர்மத்தைக் கடைபிடித்தவனோ? உண்ணும்போதும் உறங்கும்போதும் சிருங்காரத்திலும், குழந்தைக்குப் பாற் கொடுக்கும்போதும் கொல்வது தர்மமாமோ? அருமையான குழந்தைக்குப் பால்கொடுக்கும்போது என்னை நீ அடித்தமையால் இக்காட்டில் க்ரூர குணமுடைய வ்யாக்ரமாகத் தோன்றுவாய் என சபித்தது. அரசன் அடியேன் அறியாமல் செய்த அபசாரத்தை நீ மன்னித்தருள லாகாதோ? எப்போது இக்கொடிய சாபம் அகலும்? என்று மானை மன்றாடி வேண்டினன். நூறாண்டு சென்றபின் நந்தையெனும் ஓர் பசு உன்னோடு வாதம் புரியும். அப்பொழுது உனது சாபம் அகலும் என்றதுமான். அங்ஙனம் அரசன் அரண்யத்தில் புலியாகிப் பல காலம் கழித்தான். ஒரு ஸமயம் அழகிய பசு அவ்வனத்திற்கு வந்தது. அப்புலி ஓடித்தாவி அப்பசுவின் அருகே சென்று அதைப் பக்ஷிக்க ஆரம்பித்தது. அப்பசு தன் கன்றை நினைத்துக் கதறுவதைப் பார்த்து ஏன் அழுகிறாய்? என்று புலி கேட்டது. பசு எனக்கு ஓரே

குழந்தை தான் உளது. அது இன்னும் பாலே மறந்து புல்லைத் தின்னும் காலம் வரவில்லை. இடைச்சேரியில்உள்ள அவ் விளங்கன்று என்னை நினைத்துக் கதறி அழும். ஆங்கு சென்று அதற்குப் பால் அளித்து ஸகிகளிடம் அதை ஒப்பு வித்து உடனே திரும்பி வருகிறேன், என்னைப் புஜிக்கலாம் என்றது. அங்ஙனம் யான் திரும்பி வராவிடில் தாய்தந்தையைக் கொன்றவனும், தூங்குகிறவனைக் கொல்கிறவனும், ஸத்கதையைக் கெடுக்கிறவனும், எந்த நரகத்திற்குச் செல்வானே அந்நரகத்தை அடைவேன் என்றது. புலியும் அதற்கிசைந்து கன்றுக்குப் பால் அளித்துவரும்படி உத்திரவு செய்ய, ஆவலுடன் தாய் வரவை நோக்கியுள்ள கன்றின் அருகே சென்று நடந்ததைக் கூறி பாலைக் கொடுத்தது.

அக் கன்று தாயே! உனக்கு பதிலாக யான் அங்கு செல்கிறேன். எப்படியிருந்தாலும் நிச்சயமாக இறக்கும் இவ்வுடலைக்கொண்டு தாயின் பணி செய்பவன் உத்தமனன்றோ? அன்னைக்கீடாக வேறு தெய்வமில்லை என்று வேத மோதுகிறது! ஆதலின் எனக்கு விடையளி என்றது. தாய்! என்னையே அப்புலி கோரியது. ஒவ்வொருவனும் எப்பாடுபட்டாவது தன்னை ரக்ஷித்துக்கொள்ள வேண்டுமன்றோ ? சிறுவனை நீ உலக வாழ்க்கையில் ஈடு படவேண்டும். 'அரசனுக்குச் சாரனேகண். அந்தணனுக்கு வேதமே நேத்ரம். பசுக்களுக்கு மோப்பமே நயநம். எதையும் முகர்ந்து பார்த்து புஜி. எப்போதும் தனித்திராதே! தர்மத்தைக் கனவிலும் மறக்காதே, என்று குழந்தைக்கு உபதேசம் செய்துவிட்டு பிரியமனமில்லாமல் கண்ணீருடன் நந்தை வநத்திற்குக் திரும்பியது. அவளது ஸகிகள், புலியினிடம் செய்த அவளது பிரதிஜ்ஞை ஜீவனைக் காப்பதற்காகச் சொன்னதாதலால் அதை நிறைவேற்ற வேண்டுமென்பது முக்யமல்ல. இக் குழந்தையைக் காப்பதைவிட வேறு சிறந்த தர்மமில்லை. என்று

கூறின. நந்தை ஸகல தர்மங்களிலும் உயர்ந்தது ஸத்யமே! ஸத்தியத்திற்காகவே பலி பாதாளம் சென்றான். ஸத்தியத்தினுல் தான் உலகிலுள்ள ஸகல வஸ்துக்களும் கட்டுப்பட்டிருக்கின்றன. அச்சத்யத்தை நிறைவேற்றும்பொழுது வாத்ஸல்யம் முதலிய பல விக்னங்கள் குறுக்கிடுவது இயற்கை. இச்சமயம் சரீரத்தைக் காத்தால் இனி மரணம் வராதென்பதில்லை. ப்ராணனைவிட தர்மமே மேல் எனக்கூறி புலி இருப்பிடம் வந்தது. அதற்குள் அதன் கன்று அதிவேகமாகச் சென்று அன்னையைவிட்டு என்னைப் புசி என்று புலியிடம் பகன்றது.

இச்சிறு குழந்தையும் அதன் தாயும் உடலைவிட தர்மம் சிறந்ததெனக் கருதி என்னிடம் வர, பல ப்ராணிகளைக் கொன்று வயிற் வளர்த்த யான் இவைகளைக் கண்டேனும் கொல்லா வ்ரதம் கொள்ளலாகாதோ? நமது உடலும் ஒரு நாள் அழியுமன்றோ? கூற்றவனுக்கு யானும் பதில் கூற வேண்டுமன்றோ? என்று புலி சிந்தித்தது. அருகிலுள்ள தேனுவை அன்னையைப்போல் கருதி அடிபணிந்து, இப்பாபிகரை யேற வழி காட்டாயோ? நீங்கள் அறிந்த தர்மத்தை எனக்கும் உபதேசிக்கலாகாதோ? என்று உள்ளம் உருக மகம் வருந்தி புலி வேண்டியது. அங்ஙனமே நந்தை கொல்லா விருதத்தின் மேன்மையையும் கொலையாலுண்டாகும் தீமைகளையும் மற்றும் பல அரிய தர்மங்களையும் உபதேசித்தது. தர்மசர்ச்சை நடக்குமவ்விடத்தில் தர்மதேவன் ப்ரத்யக்ஷமாகத் தோன்றினன். புலியினது உடலை அகற்றிப் பழைய படி ப்ரபஞ்சனனை அரசனுக்கினன். நந்தாய்! உனக்கு யாது வரம் வேண்டுமென்று தர்மதேவர் கேட்க, தேநு இங்கு நந்தை என என் பெயரால் ஓர் நதீ தோன்றட்டும். அதில் மூழ்குவோரது பாபம் அகலட்டும் என்றது. அங்ஙனமே அவரும் அருள் புரிந்து தன்னிருப்பிடம் சென்றார்.

ஸமுத்ர பாநம்.

காலேயர் எனும் ஓர் ராக்ஷஸக் கூட்டம் பகலெல்லாம் கடலில் பதுங்கி இருந்து இரவெல்லாம் வெளியில் வந்து திரியும். படுத்துறங்கும் பல்லாயிரம் ப்ராணிகளை இக் கூட்டம் கொன்று தின்பது வழக்கம். ச்யவனரெனும் முனி பல்கோடி முனிவர்களைத் தனது ஆச்ரமத்திற்கழைத்து வந்து விதி வழுவாது கந்தமூலங்களைக்கொண்டு அதிதி பூஜை செய்து வந்தார். ஓரிரவு காலேயனது கோஷ்டி இங்கு புகுந்து குவியல் குவியலாக வைத்திருந்த கந்தமூலங்களைக் கொள்ளை அடித்துச் சென்றது. உணவில்லாமல் குஞ்சு குழந்தைகளுடன் முனிகணங்கள் பசியால் தவித்தன. வயிற்றிற்கில்லாதபோது விருந்தேது? வேள்வி ஏது? வந்தந வழிபாடுகள் தான் ஏது? எங்கும் பசி! பசி!! எனும் கூக்குறலே கிளம்பியது. இதைக் கேட்டு வருந்திய வானவர் வைகுண்ட நாதனைச் சரணமடைந்தனர். அவர் அமரரைப் பார்த்து நீங்கள் அகஸ்த்யரிடம் சென்று கடலைக் குடிக்கும்படி கூறுங்கள், பிறகு காலேயர் காலவசமாவர் என்றருள் புரிந்தார்.

அங்ஙனமே தேவரும் அகஸ்த்யரை வணங்கி விந்த்ய மலையின் கர்வத்தை அகற்றியது முதலிய அவரது பெருமைகளைக்கூறி போற்றினர். ஸந்தோஷமடைந்த கும்பஸம்பவர் தேவர்களும் என்னைச் சரணமடைந்தனரா? லோகோபகாரமான எக்காரியத்தையும் செய்வது என் கடமை! என்று கூறி தேவர்களுடன் கடற்கரை சென்றார். மிக பயங்கரமான அலைகளுடன் கொத்தளிக்கும் ஸமுத்ரத்தை இங்கு வா! என்று அகஸத்யர் அழைத்தார். நந்தியின் ஆணைக்கு அஞ்சி அரனது உள்ளங்கையில் நாகைக் கனிபோல் வந்த ஹாலாஹலம்போல் கடல் அகஸ்த்யரது உள்ளங்கையில் சிறு உருகொண்டு வந்து நின்றது. உடனே அதை அவர் பருகி

விட்டார். அங்கு பதுங்கி நின்ற காலேயர் பயந்து ஓட அமரர் அவர் பின் சென்று அவர்களைக் கொன்று வெற்றி பெற்றனர். நன்றி மறவாது தேவர்கள் மறுபடியும் அகஸ்த்யாச்ரமம் வந்து அவரடி பணிந்து துதித்து முன்போல் கடலை வெளியில் விடுங்கள் என்று வேண்டினார்கள். அம்முனி அது என் குக்ஷியில் ஜீர்ணமாகி விட்டது. வேண்டுமானால் பிரும்மாவைக்கொண்டு வேறு ஸமுத்ரத்தைப் பெறுங்கள் என்றார். அப்படியே அமரரும் சதுர்முகனை வேண்ட நாளடைவில் நதி ஜலங்களால் ஸமுத்ரம் நிரம்பிவிடும் என ஆசீர்வதித்தார். அகஸ்த்யருக்குக் கைம்மாறு புரியக் கருதி அவர் யாது வரம் வேண்டுமென வினவினர். முனிபுங்கவர் ஸ்வாமின்! யான் வஸித்த இந்த ஆச்ரமம் என்றும் பாவநமாய் வர்ணாச்ரம தர்மம் நிறைந்ததாயிருத்தல் வேண்டும். இங்குவருவோரது பாபம் தொலையவேண்டு மென்றார். அங்ஙனமே அவரும் அநுக்ரஹித்தார்.

தானம் வாங்காமை.

ஒரு ஸமயம் பலநாள் பாரினில் மழை பொழியாது பெரும் பஞ்சம் தோன்றியது. பச்சை மரங்கள் பட்டன. கந்தமூலங்கள் பொசுங்கி அழிந்தன. வனத்திலுள்ள முனிகள் உணவுக்கு வழியின்றி வருந்தினர். பலநாள் பட்டினி கிடந்தனர். குழந்தைகளும் பெண்களும் பட்ட துயரம் மட்டல்ல. எனினும் மஹர்ஷிகள் பிறரை அணுகி யாசிப்பது பாபமென்றெண்ணினர். ஒருநாள் பசியால் இறந்த ஓர் குழந்தையின் உடலைப் பாகம் செய்து முனிவர் தேவபூஜை அதிதி பூஜை முதலியவைகளைச் செய்து புசிக்க ஆரம்பித்தனர். இதைக் கேட்ட அந்நாட்டு நரபதி எண்ணிறந்த தனத்துடன் தவஸிகளிடம் வந்தான். அவர்களை நமஸ்கரித்து இதோ! தநம்! வேண்டிய அளவுபெற்றுக் கொள்ளுங்கள்! என்றான். தபோ

தநர்கள் பிராணனை இழந்தாலும் இழப்போம்! ஒருவரிடம் தானம் பெறமாட்டோம் என்றனர். எவ்வளவு கெஞ்சியும் முனிவர் மனம் இளகாதது கண்டு அரசன் அன்னவரிடம் விடைபெற்று நாடு சென்றான்.

மந்திரிகளுடன் கூடி மந்த்ராலோசனைசெய்து அத்திப் பழங்கள் நிறைய ஸ்வர்ணத்தை வைத்து மூடி முனிவர் நடக்கும் வழியில் அவைகளை இறைத்தான். பசியுள்ள ரிஷி குமாரர்கள் அதைப் பொறுக்கிப் பெரியோரிடமளித்து, அதைப் பகவானுக்கு நிவேதநம் செய்து தங்களுக்குப் புசிக்கத்தரும் படி வேண்டினர். அப்பழம் கனமாக இருக்கக் கண்டு ரிஷிகள் மரமில்லா அரண்யத்தில் பழம் ஏது? அன்றியும் இயற்கைக்குமாறாக இக்கனிகள் கனமாயிருக்கின்றன. இது அரசனது சூதாயிருத்தல் வேண்டும், என்று கூறி அப்பழங்களைப் பூமியில் எறிந்து விட்டனர். தநத்தினால் வரும் துன்பத்தை அத்ரி வஸிஷ்டர் காச்யபர் பரத்வாஜர் கௌதமர் விச்வாமித்ரர் ஜமதக்நி அருந்ததி ஷண்டர் பசுஸகர் சுநஸ்ஸகர் முதலியவர்கள் விரிவாகக் கூறி அக்கனிகளைக் கண்ணெடுத்தும் பாராதீர்கள் என உபதேசித்தனர். இவர்களது தர்மச் செயலைக் கண்டு ஸந்தோஷித்து தர்மதேவர் இவர்பொருட்டு மழை பொழிந்து பூமியைச் சுபிக்ஷமாகச் செய்தார்.

விபூதித்வாதசி வ்ருதம்.

ரதந்தரகல்பத்தில் புஷ்பவாஹநன் என்றோர் அரசனிருந்தான். அவனுக்குத் தாமரைப்புஷ்பம் போன்றதோர் விமானம் தேவரால் அளிக்கப்பட்டது. அது புஷ்பக விமானம் போல் எவ்வளவு பேர் வந்தாலும் இடமளிக்கும். லாவண்யவதி என்ற தன் மனைவியினிடம் அரசனுக்கு ஆயிரம் புதல்வர்கள் பிறந்தனர். யாதொரு குறையுமின்றி இவன் பாரினை ஏக சக்ராதிபதியாக ஆண்டு வந்தான். ஒருநாள் தற்செயலாக

ப்ரசேதஸர் எனும் முனிபுங்கவர் இவ்வரசனது அரண்மனைக்கு வந்தார். தக்கபடி நரபதி அவரை அர்ச்சித்து ஆஸநத்திலமர்த்தி அடிபணிந்து ஐயனே! உயர்ந்த விமாநம் உத்தம மனைவி! ஸத்புத்ரர்கள்! அகண்டராஜ்யம்! இவைகளைப் பெற யான் முற்பிறவியில் செய்த புண்யம் யாதோ? அதை அருள் புரிக! என்றான்.

ஞானக்கண்ணால் அதை அறிந்து முனிவர் கூறினர்! வேந்தே! பூர்வ ஜன்மத்தில் நீ ஓர் வேடனாயிருந்தாய். உன் உடலில் ஓர் பெரிய வியாதி தோன்றிற்று. அதன் துர்க்கந்தத்தைச் சகியாமல் உறவினர் உன்னைக் கைவிட்டனர். உன் மனைவியுடன் நீ உணவின்றி நோயால் மெலிந்து பசியால் வருந்தி வநாந்தரம் சென்றாய். அங்கு அழகிய தாமரைத் தடாகத்தைக் கண்டாய்! அத்தாமரை மலர்களைப் பறித்து அருகிலுள்ள ஊர் வந்து வீதி வீதியாகச் சென்று அதற்கு விலை கோரினாய். எவரும் அதை வாங்காமல் போகவே பொழுது சென்றபின் ஓர் வீட்டுத் திண்ணையில் படுத்திருந்தாய். அது ஓர் தாஸியின் வீடு. அன்றிரவு அநங்கவதி எனும் அவ்வீட்டு வேசி, விபூதித்வாதசி பூஜை செய்தாள். புஷ்ப வாஸனையும் மந்த்ரத்வனியும் உன்னை உள்ளே அழைப்பதுபோலிருந்தது.

உனக்கும் நித்ரை இல்லாததால் மனைவியுடன், பறித்து விலையாகக் கிடக்கும் புஷ்பத்துடனும் உள்ளே நுழைந்தாய். பகவான் சயனித்திருக்கும் ரத்நக் கட்டிலை அங்கு கண்டாய். அச்சயநத்தை இப்புஷ்பங்கொண்டு அலங்காரம் செய் என அவளிடம் இதைக் கொடுத்தாய். அத்தாஸியும் அங்ஙனமே அதைப்பெற்று அக்கட்டிலை நன்கு அலங்கரித்தாள். அவள் அப்புஷ்பங்களுக்கு சிறிது தான்யத்தைவிலையாக அளித்தாள். நீ அதை ஏற்றுக்கொள்ளாமல் பகவானுக்கு அதை காணிக்கையாகக் கருதினாய். அன்றிரவெல்லாம் விழித்திருந்து அப்

பூஜையைத் தர்சித்திருந்தாய். மறுநாட் காலையில் அவ்வேசி பலதானங்களைச் செய்து பலருக்கு அன்னமிட்டாள். நீயும் அங்கு உண்டு களித்து உன் இருப்பிடம் சென்றாய். சிறிது காலம் சென்றபின் காலவசத்தால் நீ இறந்து நரகத்தை அனுபவித்தாய். இப்பிறவியில் முன் பிறவியில் நீ செய்த புஷ்பதானத்தால் புஷ்பக விமானம் உனக்குக் கிட்டியது. அவ்வேசியே உன் மனைவியாக வந்தாள். என்ற இக் கதையைக்கேட்டு புஷ்பவாஹனன், விபூதி த்வாதசி என்ற வ்ரதத்தைக் கைகொண்டான்.

ருத்ர, ஸௌபாக்ய, ஸாரஸ்வத, லக்ஷ்மி, ஸூர்ய, சீல தீப்தி, த்ருட, சாந்தி, ஸுவ்ரத, கல்ப விருக்ஷ, பீம, குண்ட, மஹார்ஹ, ப்ராப்தி, ஸுகதி, வைச்வாநர, ஸ்வர்ண தேவி, வைநாயக, ஸௌர, விஷ்ணு, விருஷ, ப்ராஜாபத்ய, மித்ர, சிவ, அச்வ, கரி, வாருண, தாபக, முதலிய அறுபது வ்ரதங்கள் கோரிய பலத்தை அளிக்கத்தக்கவை. மூன்றரை கோடி தீர்த்தங்கள் ஜம்பூத்வீபத்தில் புண்யப்ரதமானவை.

தர்ம மூர்த்தி என்ற ஓர் அரசன் அவனது பெயருக்கேற்றபடி எண்ணிறந்த தர்மத்தைச் செய்து நீதியுடன் ராஜ்ய பரிபாலனம் செய்து வந்தான். பானுமதி என்ற அவன் மனைவி, பர்த்தாவிற்கேற்றபடி உயர் குணம் வாய்ந்த உத்தமியாய் இருந்தாள். ஒருவகைக்குறையுமின்றி இருவரும் இல்லற தர்மத்திலீடுபட்டு ஸுகமாக வாழ்ந்து வந்தனர். ஒருஸமயம் அரசன் அரண்மனையை நாடி முனிச்ரேஷ்டரான வஸிஷ்டர் வந்தார். அவரடிபணிந்து அரசன் அவரை ஆஸனத்திலமர்த்தி, குசலப்ரச்னம் கேட்டபின் குரோ! அடியேன் அகண்ட ராஜ்யத்தையும் உத்தம மனைவியையும் பெற முற்பிறவியில் யான் செய்த புண்யம் யாது? என வினவினான். ஞானக் கண்ணால் அதையுணர்ந்த முனிவர், அரசே! லீலாவதி எனும் ஓர் வேசிப்பெண், சதுர்த்தசியன்று பரம

சிவனைப் பூஜித்து உப்புமலையுடன் சிவனது ஸ்வர்ண ப்ரதிமையையும் தானம் செய்தாள். அப்பிரதிமை மிக அழகு வாய்ந்ததாக இருந்தது. அதை அமைத்தவன் சுத்தன் எனும் ஓர் தட்டான். இவ்வழகிய வேலை செய்ததற்கு லீலாவதி தகுந்த கூலியையும், பாரிதோஷிகத்தையும் அவனுக்கு அளித்தாள். சுத்தன் தாங்கள் செய்த பூஜையிலும் தானத்திலும் எனக்கும் சிறிதளவு பாகம் வேண்டும். ஆதலின் இவைகளைப் பெறேன் என்றான். எவ்வளவு வற்புறுத்தியும் அவன் அதை ஏற்கவில்லை. அச்சுத்தனே நீ, அந்த லீலாவதியே உன் மனைவியான பானுமதியானாள். ஊதியம் பெறாமல் பகவானது அழகிய விக்ரஹத்தைச் செய்த கைங்கர்யத்தால் நீ ராஜ்ய லக்ஷ்மியைப் பெற்றாய் என்றார். அதைக் கேட்ட அரசன் தான்யம், உப்பு, வெல்லம், ஸ்வர்ணம், எள், பருத்தி, நெய், ரத்னம், வெள்ளி, முதலியவைகளை மலைபோல் குவித்து தக்கவருக்குத் தானம் செய்தான். இத்தகைய தானத்திற்கு மேருதானம் எனப் பெயர். ஸப்தமியன்று இதைச் செய்தால் ஸகல ஸௌபாக்யமு முண்டாகுமாதலால் கல்யாண ஸப்தமி, கமலா ஸப்தமி, மந்தாரஸப்தமி என அதற்குப் பல பெயருண்டானது.

அகஸ்தியரது ஜனனம்.

தேவரும் அஸுரரும் ஓயாது சண்டையிடுவது வழக்கமல்லவா ? ஒரு ஸமயம் அரக்கர் செய்த தீங்கைப் பொறுக்காமல் இந்த்ரன், அக்நி வாயு ஆகிய இவர்களை அழைத்து உங்களது முழு முயற்சியுடன் அஸுரக்கூட்டத்தை எரித்து அழியுங்களென ஆக்ஞை இட்டான். அவர்களும் அங்ஙனமே ராக்ஷஸப் படையைச் சாம்பலாக்கினர். இதில் தப்பி ஓடிய தாரகன் முதலிய ஏழு தைத்யர்கள் ஸமுத்ரத்தில் பதுங்கி இருந்து ஸமயம் நேர்ந்தபோது வெளி வந்து வேதியர் வேள்

வியை அழித்தும் அவர்களைக் கொன்றும் உலகைத் துன் புறுத்தினார்கள். தேவேந்த்ரன் மறுபடியும் அக்நிவாயுக்களை அழைத்து கடலைக்கனலால் அழித்து விடுங்கள் என்றான். அவர்கள், ஐயா! சிலர் செய்த குற்றத்திற்காகப் பல ரைச் சிக்ஷிப்பது நீதியோ? கடலில் எண்ணிறந்த ஜீவராசி கள் வஸிக்க வில்லையா? கடலைக் கொளுத்தினால் அவை வஸிக்க இடமின்றி ஜ்வாலையில் இறக்குமன்றோ? என்றனர். இதைக்கேட்ட இந்த்ரன் கோபங்கொண்டு நீங்களிருவரும் மாநிலத்தில் மாந்தராகப் பிறப்பீர் என சபித்தார். அவர்கள் தாஸர்களது குற்றத்தை மன்னித்து அருள்புரிய வேண்டும். விரைவில் சாபமோசநம் செய்ய வேண்டுமென்று இந்திரனை ப்ரார்த்தித்தனர். அவன் அவனியிற் சென்று கடலைப் பருகி நிஜஸ்வரூபத்தைப் பெறுவீர்கள் என்று அருள் புரிந்தான்.

ஒரு ஸமயம் ஊர்வசியை மித்ரரும் வருணரும் தனக்கு மனைவியாகும்படி வேண்டினர். அவள் மித்ரரிடம் 'தான் முன்பே வருணனிடம் வருவதாககூறிவிட்டே' னென்றாள். வருணனிடம் 'மித்ரருக்கு முன்பே தான் வாக்களித்ததாகக்' கூறி இருவரையும் வஞ்சித்தாள். இருவரும் இவளது பொய் யை உணர்ந்து மநுஷ்ய ஜாதியில் பிறப்பாய் என்று சபித் தனர். இவளழகைப் பார்த்து இருவரும் மோஹித்ததால், இருவருக்கும் ரேதஸ் ஸ்கலனமாய்விட்டது. அதை ஓர் பானை யில் விட்டு வைத்தனர். அதிலிருந்து சிறிது காலத்திற்கெல் லாம் வஸிஷ்டரும் அகஸ்த்யரும் பிறந்தனர். அகஸ்த்யர் முன் அக்நியாய் இருந்ததால் அவருடன் வாயுவும் சேர்ந்திரு ந்ததால் நாலு கைகளுடன் பிறந்தார். தேவர்களது ப்ரார்த் தனையின்படி ஸமுத்ரத்தை அருந்தி ஆயிரம் பிரும்மாக் களுக்கு எவ்வளவு ஆயுட்காலமோ அதுவரை தான் நக்ஷத்ர மாக இருக்கவேண்டு மென்று பிரும்மாவினிடம் வரம் பெற்றார்.

பிரும்மாவின் மானஸிக புதல்வரான வஸிஷ்டர் ஒரு ஸமயம் ஓர் அரசனது ஸபைக்குச் சென்றார். அவன் பல மனைவிகளுடன் கூடிக்குலவி விளையாடிக்கொண்டு இருந்தான். வந்த வஸிஷ்டரை வா என்றழைக்க வில்லை. தக்கபடி பூஜிக்கவுமில்லை. முனி கோபங்கொண்டார். நீ பெரியோரை அவமதித்ததால் தேஹத்தை இழந்து விதேஹனுவாய் என்று சபித்தார். அவ்வரசன் ஸ்வாமி யான் உம்மைப் பார்க்க வில்லை. அறியாமல் செய்த குற்றத்திற்காக கடுஞ் சாபமிட்ட நீரும் தேஹத்தை இழப்பீர் என சபித்தான். அவ்வரசன் ஜநங்களது கண் இமையிலிருந்து நிமி என்ற பெயரைப் பெற்றான். வஸிஷ்டரும் மித்ரா வருணரது அருளால் மைத்ரா வருணர் என்ற பெயருடன் வேறு சரீரம் பெற்றார்.

அப்ஸரஸ்ஸுகள் கோபிகளானது. ஜலத்தின்ஸாரமாக அக்னியின் அம்சத்தால் அழகான சரீரத்துடன் தோன்றிய பெண்கள் அப்ஸரஸ் எனப்படுவர். அவர்கள் தங்களுக்கு ஈடான அழகுள்ளோர் எவருமில்லை என்று கர்வங் கொண்டிருந்தனர். ஸ்ரீமஹா விஷ்ணுவின் சரீரத்தை ஒரு முறை தர்சித்து, தாங்கள் கொண்ட கர்வத்தைக்களைந்து அவரைப் பதியாக அடைய ஆவல் கொண்டனர். தற்செயலாக நாரத ஸ்வாமி அங்கு எழுந்தருளினர். அவரைக் கண்டவுடன் எழுந்துநின்று வரவேற்று வந்தந வழிபாடு செய்வதன்றோ தருமம்! அதை அனைவரும் அடியோடு மறந்தனர்.ஸ்வாமின்! மஹாவிஷ்ணுவைப் பதியாகப் பெற எக்கருமம் செய்யவேண்டு? மென வினவினர்கள். அவரும் சித்திரை வையாசியில் சய்யாதாந வ்ரதம் என்ற பூஜையைச் செய்யும்படி உபதேசித்தார். பெரியோரைப் பூஜிக்காத குற்றத்திற்காக பகவானையே பதியாகப் பெற்றாலும் நீங்கள் திருடர் கையிலகப்பட்டு தாஸிகளாவீர்கள் என்று நாரதர் அவர்களைச் சபித்தார். அங்ஙனமே அப்ஸரஸ்ஸுகள் வ்ருதம் புரிந்து கோபிகைகளாக

வந்து கிருஷ்ணனைப் பதியாகப் பெற்றனர். கிருஷ்ணன் வைகுண்டம் சென்றபின் இவர்களைத் திருடர்கள் தூக்கிச் சென்றனர். தால்ப்யர் என்ற மஹர்ஷி இவர்களுக்கு முன்பிறவியில், இவர்கள் செய்த பாபத்தை எடுத்துரைத்து தாஸிகளது தர்மத்தையும் போதித்தார்.

பாஷ்கலி என்றோர் பாதாளவாஸியான அரக்கனிருந்தான். அவன் கடுந்தவம் புரிந்து பல வரங்களைப்பெற்று உலகைப் பீடித்துவந்தான். ஒரு ஸமயம் தேவலோகஞ் சென்று இந்த்ரனை ஜயித்து அவனது ராஜ்யத்தை அபஹரித்தான். இந்த்ரன் பிரும்மாவிடம் சென்று சரணமடைந்தார். அவர் தேவகோஷ்டிகளுடன் வைகுண்டம் சென்றார். மாதவன் தேவர்களை வரவேற்று ஆசீர்வதித்து வந்த காரணம் யாதென வினவினர். அஸுரர்கள் செய்யும் தீமையைக்கூறி தங்களைக் காக்கவேண்டுமென்று இவர்கள் ப்ரார்த்தித்தனர். பகவான், இது நம்மால் ஆகும் கார்யமல்ல. இவ்வஸுரனை விரைவில் பராசக்தி கொல்லப்போகிறாள். அஞ்சாதீர்கள்! அம்பிகையைப் போற்றுங்களென்று கூறி விண்ணவருக்கு விஷ்ணு விடை அளித்தார்.

ஜகந்மாதாவான பார்வதி தேவி ஒரு ஸமயம் ஸகல தபோதநர்களது தபத்திற்கும் தானே பயனளிப்பவளானாலும் தன் உருவைத்தானே நினைத்து நீல மலையில் தவம் புரிந்தாள். ஆங்குள்ள தேவரிஷி கணங்கள் ஒரு ஸமயம் பயந்து ஓட அவர்களைக் கண்டு அன்னை என்ன காரணம்? ஏன் ஓடுகிறீர்கள்? என்று கேட்டாள். அம்பிகையின் அடிபணிந்து அமரர் தாயே! கடலினிடையே ரக்தபுரம் என்றோர் நகருளது. அதை ஆள்பவன் ருரு எனும் அரக்கன். அவன் அடிக்கடி அவனிதலத்தில் தோன்றி அனைவரையும் கொன்று வருகிறான். அவன் பெற்ற வரத்தினுல் அவனைக்கொல்ல தங்களைத்தவிர வேறெவராலும் இயலாது. இங்கும் வந்து

ருரு பலரைக் கொல்கிறான். அவனைக் கண்டு அலறி அழுது அனைவரும் ஓடுகின்றனர் என்று விக்ஞாபித்துக்கொண்டனர். இதைக்கேட்டு தேவி புன்னகைபுரிய பயங்கரமான பல ஆயுதங்களைத் தாங்கிய பல பெண் வீரர்கள் அச்சிறிப்பிலிருந்து பிறந்தனர். அன்னையின் ஆணையின்படி அவர்கள் அரக்கர் படை அனைத்தையும் அழித்தனர்.

பாஷ்கலி கோபங்கொண்டு மாயையால் மறைந்து நின்று எண்ணிறந்த சரவாஷங்களை வர்ஷித்து சக்தி கணங்களைத் தாக்கினான். ஓர் சக்தி அம்பிகையின் பாதாரவிந்தத்தை மனதில் நினைத்து, வேகமாக ஓடிவந்து ஸிம்ஹம்போல் பாஷ்கலியின் மீது பாய்ந்து அவன் தலையை அறுத்து கையிலேந்தி ஆநந்தத்தாண்டவம் ஆடினாள். ஏனைய சக்திகளும் இவளுடன் சேர்ந்து ரக்த வெறிகொண்டு பசிபசி என அம்பிகையின் அருகே சென்றனர். உமாதேவி ஸோமசேகரனை ஸ்மரிக்க பகவானங்கு எழுந்தருளினார். அவரது உடலில் ஆட்டின் வாஸனை வந்தபடியால் அவரருகே சென்று மாத்ரு கணங்கள் அவரைப் புஜிக்க எண்ணினர். ருத்ரனது மஹிமையால் அவரை அணுக முடியாமல் போகவே அங்கு ஆட்டு நாற்றம் வரக்காரணம் யாதென்று கேட்டனர். தக்ஷனது யாகத்தைத் தானழித்தபோது யக்ஞம் மிருக வடிவமெடுத்து ஓடியது. அதன்பின் சென்ற காலத்தில் என் உடலில் இவ்வாஸனை தோன்றியது என்று பகவான் உரைத்தார். தங்கள் பசிதீர ஏதேனும் உணவு அளிக்கவேண்டுமென அவர்கள் அரனை யாசித்தனர். பிறருடைய வஸ்த்ரத்தை உடுக்கும் கர்ப்பிணி பரபுருஷனது வஸ்தரத்தைத் தொடும் பெண் ஸதாசாரத்தைவிட்ட மாதர் இவர்களை உணவாகக் கொள்ளுங்கள். வீடு க்ஷேத்ரம் தடாகம் உத்யாநம் முதலிய இடங்களில் தலையை விரித்து அழும் ஸ்திரீகள் உங்களுக்கு வீடாகும் என்று கூறி பகவான் கைலாஸம் சென்றார்.

ப்ரேத உடலை அளிக்கும் பாபம்.

ப்ருது எனும் ஓர் பூஸுரன் நித்ய கர்மாநுஷ்டான நிரதானுய் சாந்தனுய் இல்லற தர்மத்தை அநுஷ்டித்து வந்தார். ஒரு ஸமயம் மாலைக்கடனை முடித்து ஜபம் செய்து உபஸ்தானம் செய்ய இவர் எழுந்தார். அவரெதிரில் மிக பயங்கரமான உருகொண்ட ஐந்து பிரேதங்கள் தோன்றின. அக்கொடிய பாபசரீரத்தைக் கண்ட அந்தணேத்தமர் ஐயா! நீங்கள் யார்? ஏன் இவ்வுடல் பெற்றிருக்கிறீர்கள்? என்று வினவினுர். அவர்கள் தங்கள் பெயரையும் தாங்கள் செய்த பாபத்தையும் கூறினர். பழைய அன்னம் ருசியாக இருக்கிறதென்றெண்ணி சாஸ்த்ரவிதிக்கு மாருக அதைப் புஜித்த பாபத்தால் பர்யுஷிதன் என்ற ப்ரேதனுனேன் என்று முதல் ப்ரேதம் கூறியது. இரண்டாவது ப்ரேதம், பசி என்று வந்த விருந்தினருக்கு அன்னமளிக்காமல் அங்குபோ அன்னம் கிடைக்குமென்றேன். ஆதலின் ஸூசீமுகனுக ஆனேன் என்றது. மூன்ருவது ப்ரேதம் கூறிற்று. என் பெயர் சீக்ரகன். யான் யாசகரைக் கண்டவுடன் வெகுவேகமாக ஓடி மறைவேன். அப்பாபத்தால் இக்கதி பெற்றேன். நான்காவது ப்ரேதமுரைத்தது. வீட்டின் மாடியில் ஏறி ஒருவருமறியாமல் யான் ஏகாந்தமாக ருசியுள்ள பதார்த்தங்களைப் புஜித்தேன். அதனுல் இக்கதி அடைந்து ரோஹகன் என பெயர் பெற்றேன். ஐந்தாவது ப்ரேதம் சொன்னது. என்னிடம் யாசகர்வந்து யாசித்தபோது தலையைக் கீழேகுனிந்து பூமியைக் காலால் கீரிக்கொண்டு பேசாமலிருந்தேன். அதனுல் லேககன் என பெயர்பெற்று இந்த ஸ்திதியை அடைந்தேன்.

இதைக்கேட்டு மஹரிஷி அவர்களிடம் அநுதாபங்கொண்டு கூறினுர். ஸ்வதர்மத்தை விடுவது சூத்ரான்னத்-

தைப் புஜிப்பது பிறர் பூமிகன்யகை முதலியவைகளை அப ஹரிப்பது நாஸ்திகம் பேசுவது முதலிய பாபங்களாலும் ப்ரேத ஜன்மமுண்டாகும். ரக்தம் கோழை சீ மூத்ரம் பெண்களது சரீரமலம் முதலியவைகளே உங்களுக்கு உண வாகும். அலங்கரிக்காத வீடுகளே நீங்கள் வஸிக்குமிடம். நல்ல தர்மத்தைச் செய்து பகவானது சரிதத்தையும் கேட் டால் இப்பாப சரீரமகலும் என்று கூறி அவர்களது பாபத் தைஅகற்றினூர். அவர்களும் தேவ சரீரம் பெற்று முனி வரை வணங்கி விமானத்தின் மீதேறி ஸ்வர்க்கம் சென்றனர்.

மார்க்கண்டேயர்.

மிருகண்டு மஹரிஷியின் தவப்புதல்வன் மார்க்கண்டே யன். இவனது ஐந்தாம் பிராயத்தில் இவர் தந்தை தன்னுச் ரமத்திற்கு வந்த ஓர் ஸித்தரைப் பூஜித்தார். ஐயனே எனது குழந்தைக்கு இன்னும் எவ்வளவு வயது மிகுந்திருக்கிறது? என்று கேட்டார். அவர் ஆறுமாத மிருப்பதாக உரைத் தார். பிதா புத்ரனுக்கு அப்பொழுதே உபநயநம் செய்து வைத்து வரும் பெரியோர்களுக்கெல்லாம் வந்தநம் செய்யும் படி குழந்தைக்கு உபதேசித்தார். அங்ஙனமே மார்க்கண் டேயர் பணியும்போது பெரியோரெல்லாம் தீர்க்காயுளாக இரு என்று ஆசீர்வதிப்பர். ஒரு நாள் தற்செயலாக ஸப்த ரிஷிகள் ஆச்ரம வழியாகச்செல்ல இவன் அவர்களேயும்வழக் கப்படி நமஸ்கரித்தான். அவர்களும் முறைப்படி தீர்க்காயுர்ப் பவஎன ஆசிர்வதித்தனர். உடனே அவர்கள் மார்க்கண்டே யன் ஐந்து தினத்தில் மாளப்போவதைக் கண்டனர். தங்களது ஆசீர்வாதம் வ்யர்த்தமாகுமோ என்று அஞ்சி அக்குழந்தை யையும் அழைத்துக்கொண்டு ப்ரம்மலோகம் சென்றனர். தாமரை மலர்மீது வீற்றிருக்கும் ப்ரம்மனைப் பணிந்து மார்க் கண்டேயனேயும் பணியும்படி சொன்னூர்கள். வழக்கப்படி

வாணீபதியும் "தீர்க்காயுர்ப்பவ" என ஆசீர்வதித்தார். ஸப்த ரிஷிகள் இங்ஙனமே தாங்கள் ஆசீர்வதித்ததையும் அவனுயுள் அதிவிரைவில் முடிவதையும் எடுத்துச் சொன்னார்கள். சதுர்முகன் தனது சொல் வீணாகாமல் இருக்க ஸப்த ரிஷிகளது கௌரவத்தையும் காக்க, மார்க்கண்டேயனை என்றும் பதினாறு வயதுள்ள சிரஞ்ஜீவியாகச் செய்தார். அவர்களிடம் விடைபெற்ற மார்க்கண்டேயர் தன்னைவிட்டுப் பிரிந்து தவிக்கும் தாய்தந்தைகளது பாதாரவிந்தத்தைப் பணிந்து நடந்தவற்றைக் கூறினார். பேரானந்தம் பெற்ற பெற்றோர் புஷ்கரத்திலுள்ள பிதாமஹனைத் தர்சனம் செய் என்று மார்க்கண்டேயனை அனுப்பினார்கள்.

தாயின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவும் தந்தையின் சொல்லைச் சத்தியமாக்கவும் தானாக வந்த தரணியை உதரித்தள்ளி பதினாலாண்டு வனவாஸம் புரியும் ஸ்ரீராமன் அத்ரி மஹரிஷியினது ஆச்ரமத்தை அடைந்தார். அவரைப் பணிந்து தீர்த்த மஹிமையைக் கூறும்படி அவர் வேண்டினார். அத்ரி உலகெலாம் அலைந்து திரிந்து தீர்த்தங்களின் பெருமையை உணர்ந்த மார்க்கண்டேயரை யடுத்து தீர்த்த மஹிமையை அறிவாய் என்றார். அங்ஙனமே அவரைத்தேடி வரும் ராகவன் தந்தை தசரதனை ஓரிரவில் கனவில் கண்டார். சாஸ்த்ரவிதியை அறிந்த ராமன் உடனே தந்தையைக் கருதி விதிப்படி ச்ராத்தம் செய்தார். முனிவர்களை பித்ருக்களாக வரித்து பூஜை செய்து இலையில் உட்கார வைத்து ஸீதையை பரிமாறும்படி சொன்னார். தேவி அங்ஙனமே பரிமாறும்பொழுது வெட்கத்தினால் தலை குனிந்து பரிமாறாது வெளியில் சென்றாள். லக்ஷ்மணனைக்கொண்டு கார்யத்தை முடித்த காகுத்ஸ்தன், ஸீதையைப் பார்த்து இங்ஙனம் பித்ருக்களை ஆராதிக்காமல் நீ வெளியிற் சென்ற காரணம் என்ன? என்று வினவினார். நாத! எனது மாமனார்

சக்ரவர்த்தி லக்ஷணத்துடன் இலேயில் அமர்ந்திருக்க மரவுரியுடன் யான் அவர் எதிரில் செல்ல வெட்கம்கொண்டு வெளியிற் சென்றேன் என்றாள். தனக்கு தர்சனமளிக்காவிடினும் அன்புடன் தசரதர் தானுக வந்து ச்ராத்தத்தை ஏற்றதைக் கண்டு தாசரதி பரம ஸந்தோஷங்கொண்டார்.

பின்னர் மார்க்கண்டேயரை அடுத்து ராகவன் தீர்த்தங்களுடைய மஹிமையை நன்கு உணர்ந்தார். அவரிடம் விடைபெற்று ஒவ்வோர் இடமாகச் சென்று புஷ்கரமெனும் க்ஷேத்ரத்திற்கு வந்தார். லக்ஷ்மணனைப் பார்த்து அவர் நதியிற் சென்று புனலாடி தீர்த்தம் கொண்டுவா என்றார். லக்ஷ்மணன் உமக்கு யான் பணியாளனே? கைகேயி உம்மைமட்டிலும் வனம் செல்ல வரம் கேட்டாள். அன்புகொண்டு உம்முடன வந்த நான் இராப்பகலாக கண்விழித்து ஆகாரமின்றி அலேய ஸீதையும் நீங்களும் ஸுகமாக வீற்றிருப்பது நியாயமோ? இனி ஒரு க்ஷணமேனும் என்னல் பொருக்கமுடியாது என்றான். அபூர்வமான இச்சொல்லேக்கேட்டு தேவியும் இராகவனும் இதில் ஏதோ ஓர் விசேஷமுளது என்றுணர்ந்து இவ்விடத்தைவிட்டு விரைவில் வெளியில் செல்லக்கருதி லக்ஷமணனே வா என அழைத்தனர். அவன் அண்ணனோடு வந்த ஸுகம்போதும்! இனியான் உம்முடன் வரமாட்டேன். அயோத்திக்கும் செல்வதில்லே. இங்கிருந்தே காலத்தைக் கழிப்பேனெனக் கூறினன். அவ்விருவர்களும் பதில் கூறாது வேறு வனம் சென்றனர். அவர்களேக் காணுமல் லக்ஷமணன் தாயை யகன்ற கன்றுபோல் கதறியழுது அவர்களேத்தேடிச் சென்றார். ஸீதையின் பாதத்தைப் பணிந்து தாயே! யான செய்த குற்றம் யாது? நீங்களே எனது தந்தை தாய்! நீங்களே எனது தெய்வம்! உங்களேத்தவிர உறவினர் எனக்கு யாருளர்? ஆதலின் எனது குற்றத்தை மன்னித்து என்னே ஏற்கும்படி அண்ணுவிடம் கூறுவாய் என வேண்டினன்.

ஸீதாபிராட்டி ராகவனைப் பணிந்து உத்தம ஸஹோதரனை லக்ஷ்மணன் தங்களது உத்திரவை மறுத்துக்கூறக் காரணம் யாது? தாங்கள் அவனை ஏன் த்யாகம் செய்தீர்கள்? என்று வினவினுள். நானும் அவனை த்யாகம் செய்யவில்லை. அவனும் என் சொல்லை மறுப்பவனல்லன். ஆனுல் புஷ்கரமெனும் க்ஷேத்திரத்தின் மஹிமை அது. ஆங்கு அண்ணனும் தம்பியும் தந்தையும் மைந்தனும் மனைவியும் கணவனும் ஒருவருக்கொருவர் கலஹம் செய்யும் இடம் இது என, பெரியோர்கூறி இருக்கின்றனர் என்று ராகவன் கூறினுர். பிறகு இதை உணர்ந்த லக்ஷ்மணன் தான் தெரியாமல் செய்த குற்றத்தை மன்னிக்கும்படி வேண்ட முன்போலவே ஸஹோதரர்கள் அன்புடன் வாழ்ந்து வந்தனர்.

க்ஷேமங்கரீ.

தவம் செய்வோருக்கு தவப்பயனை அளிக்கும் தாக்ஷாயணி காரணமின்றித் தன்னைத்தானே நினைத்து புஷ்கர க்ஷேத்ரத்தில் தவம் புரிந்தாள். அவளது உக்ரதவத்தினுல் அவள் சரீரத்திலிருந்து எண்ணிறந்த சக்திகள் தோன்றின. ஒரு ஸமயம் நாரதர் அங்கு சென்று மஹிஷாஸுரனது செய்கையைக் கூறி அவனை வதம் செய்ய வேண்டுமென்று ப்ரார்த்தித்துச் சென்றுர். அன்றியும் அம்மஹிஷாஸுரனிடம் சென்று உனக்கேற்ற உருவம் வாய்ந்தவள் உமாதேவியே. அவளை மணந்து ஸுகம் பெறு. அவளருகே எண்ணிறந்த தேவர்கள் சூழ்ந்திருப்பதால் அவர்களைக் கொன்று அவளை ஸ்வாதீனம் செய்ய வேண்டும் என்று கூறி தன் இருப்பிடம் சென்றுர். மஹிஷாஸுரன் மந்திரிகளுடன் கலந்து அவளைத் தூக்கிவர யோசனை செய்தான். ப்ரகஸன் எனும் மந்திரி 'நாரதர் தேவர்களது நன்மையை நாடி இங்ஙனம் கலகம் புரிகிறுர். அவரது சொல்லைக் கேளாதே! தேவியுடன்

போருக்குப்போனுல் நமக்குத் தோல்வியே நேறும். ஆத லால் ஸமாதானமாக அவனை ஸ்வாதீனப்படுத்த வேண்டும் என்ருன். இதனிடையில் அவ்வஸுரனுல் பீடிக்கப்படும் தேவர்கள் ப்ரஹ்மாவைச் சரண மடைந்தனர். மஹிஷன் வித்யுத்ப்ரபன் என்பவனைத் தேவியினிடம் தூதனுக அனுப்பி தன்னை மணக்கும்படி வேண்டினுன். மஹிஷன் யார் என்று தேவி வினவ அவாது சரிதத்தை வித்யுத்ப்ரபன் விளம்பினுன. ஸுபார்ச்வர் என்று ஓர் மஹர்ஷி மாஹிஷ்மதி எனும் பட்டணத்திற்கருகே நின்று தவம் செய்து வந்தார். விப்ரசித்தி எனும் அரசனது பெண்ணுன மாஹிஷ்மதீ என்பவள் முனியின் அருகே வந்து அவரைப் பயமுறுத்தி வெளியே அனுப்பி தான் ஏகபோகமாக அவ்வனத்தில் விளையாடக் கருதினுள். ஓர் எருமையின் உருவைத்தாங்கி அம் மஹர்ஷியின் அருகிற் சென்று பயமுறுத்தினுள். அவர் ஞானதிருஷ்டியால் இவளது உண்மையை உணர்ந்து நீ எருமையாகவே ஆவாய் என சபித்தார். அவள் அவர் காலில் விழுந்து தனது குற்றத்தை மன்னிக்கும்படி வேண்டினுள்.

மஹர்ஷி, நீ ஓர் புதல்வனைப் பெற்றவுடன் உன் சாப மகலும் என மொழிந்தார். நர்மதா தீரத்தில் தவம் செய்யும் ஸிந்துத்வீபரென்ற முனி, வஸ்திர மில்லாது ஜலக்ரீடை செய்யும் வித்யுந்மதியைக்கண்டு மோஹித்தார். உடனே அவர் ரேதஸ் ஸ்கலனமாகி ஜலத்தில் கலந்தது. அந்த ஜலத்தை இவள் பருக அவளிடமிருந்து மஹிஷாஸுரன் தோன்றினுன். அவளும் மஹிஷரூபத்தைவிட்டு நிஜஸ்வரூபத்தைப் பெற்ருள். அத்தகைய மஹிஷாஸுரன் உமக்கேற்ற கணவனுவன் என்று கூறினுன். தேவி புன்னகை கொண்டு பிணக் கோலம் கொள்ளும் மஹிஷனை மணப்பவர் உலகில் ஒருவரும் இலர் எனக்கூறி மாத்ருகணங்களோடு போருக்குக் கிளம்பி அஸுரகணங்களை வென்று முடிவில் மஹிஷனையும் கொன்ருள்.

ச்வேதராஜன். வனவாஸம்செய்யும் ராகவனை வரவேற்று அத்ரி அழகிய ஆபரணங்களை அவருக்கும் ஸீதாதேவிக்கும் அளித்தார். அபூர்வமான இவ்வாபரணங்கள் எங்கிருந்து தங்களுக்குக் கிடைத்தன? என்று ராமன் கேட்க, அகஸ்த்யர் கூறலானார். தேவகார்யத்தின்பொருட்டு ஸமுத்ரத்தை அகஸ்த்யரைப்போல் பருகியவன் ச்வேத ராஜன். அவனது அரிய தவத்தைக்கண்டு அமரரும் வியந்தனர். அவன் ப்ரஹ்மலோகம் சென்றபொழுது அன்னதானம் செய்யாத குறையால் அங்கும் பசி தாகம் அவனைப் பீடித்தது. ஆங்குள்ள மஹர்ஷிகளைத் தனக்கு புசிக்க ஏதேனும் உணவளிக்க வேண்டுமென கேட்டானவன். அவர்கள் ச்வேத வனத்தில் உனது உடல் ப்ரேதமாக மிதக்கும். அதே உனக்குணவு. அகஸ்த்யரைத் தர்சித்தால் இங்கு உணவு கிடைக்கும் என்றனர். இங்ஙனம் பலகாலம் செல்ல ஒருநாள் யான் அங்கு சென்றேன். என்னைக்கண்டு பணிந்தவுடன் ப்ராஹ்மணர் சொன்னபடி அவன் பாபமகன்று வைகுண்டம் சென்றான். அவன் செல்லும் பொழுது யான் செய்த உதவிக்குக் கைம்மாறாக அவனிடமிருந்த அரிய ஆபரணங்களை யெல்லாம் எனக்களித்தான். தபஸியான யான் தாசரதியே இதற்கேற்றவன் எனக் கருதி தங்களது வரவை எதிர்பார்த்திருந்தேன் என்றார் அகஸ்த்யர்.

தண்டன். வைவஸ்வதமனு தனது புதல்வனை தண்டனென்பவனை ராஜ்யத்தில் பட்டாபிஷேகம் செய்துவைத்தார். அவர் ஒருஸமயம் வேட்டைக்குச்சென்றபொழுது வனத்தில் பார்க்கவரது புதல்வியான அரஜா என்பவளைக்கண்டு காமனை கொண்டார். அவள் அருகே சென்று அவர் விருப்பத்தைத் தெரிவித்தார். அவள்எனது தந்தைக்குஅதீனமானவள் யான். அவரோ மிகக் கோபமுள்ளவர். அவர் அறியாது நீ செய்யும்

இக்கார்யத்தைக் கண்டு உன்னைச் சபிப்பார் என்றார். அரசன் இதை மதியாது காமாதுரனாய் வெட்கத்தைவிட்டு பலாத்காரமாக அரஜையை ஆலிங்கனம் செய்துக் கொண்டான். தனது பெண்ணைத் தன்னைக்கேளாது தண்டன் பலாத்காரமாக அபஹரித்ததைக் கேட்டு சுக்ரர் மிகக் கோபங் கொண்டார். அவ்வரசன் ஏழுநாட்களில் இறப்பான் என்றும் அவனது நகரத்தில் ஒரு வாரம் மண்மாறி பொழியுமென்றும், சபித்தார். அங்ஙனமே அரசனும் அழிந்து நகரமும் நாசமாயிற்று. அரஜையும் தனது கற்பு அழிந்ததைக்கண்டு இனி இவ்வுடலை வைத்திருக்கலாகா தென்றெண்ணி தந்தையின் அருளைப்பெற்று நதீரூபமாக ப்ரவஹித்தாள். அவ்வரசனது நகரமே தண்டகாரண்யமென அழைக்கப்படுகிறது.

ஆந்தையும் கழுகும்.

ஒரு ஸமயம் ராகவன் தர்ம ராஜ்யம் புரியும்பொழுது ஓர் கழுகும் ஆந்தையும் கலஹமிட்டுக்கொண்டு அரசனிடம் வந்தன. ஓரிடத்தைக் குறிப்பிட்டு இது என் வீடு என்று கழுகும் என் வீடென்று ஆந்தையும் கூறிற்று. ராகவன் இதன் தத்துவத்தை அறிய மந்திரிகளைக்கொண்டு விஸ்தாரமாக விசாரித்தார். எனது மூதாதை காலம் முதல் இவ்வில்லத்தை நாங்களே அனுபவித்து வருகிறோம் என்று கழுகு கூறிற்று. மந்திரிகள் நன்கு விசாரணை செய்து ஆந்தையினது கிரஹமே அது. அது மிக துர்பலமாயிருந்ததால் பலமுள்ள கழுகு அதை அபஹரித்தது. ஆதலால் வீடு ஆந்தையைச் சார்ந்ததே என்றனர். இவர்களது தீர்மானத்தை ஏற்று தாசரதியும் தக்கபடி கழுகைச் சிக்ஷிக்க ஆரம்பித்தார். அச்சமயம் அசரீரியான வாக்கு ஒன்று ஆகாயத்தில் தோன்றியது.

"ராம! ஏற்கனவே முனி சாபத்தினால் நொந்த இவனைச் சிக்ஷிக்காதே. இவன் முற்பிறவியில் ஓர் அரசன். ப்ரம்ம

தத்தன் என்பது அவனது நாமம். தனது அரண்மனையை நாடி வந்த மனைவியுடன் கூடிய மாமுனியை ஓராண்டு தன் அரண்மனையில் வைத்து அர்ச்சித்தான். ஒரு ஸமயம் அரசன் முனிவரது பத்னியின் மேல் வஸ்திரம் காற்றினால் விலக அவள் ஸ்தனத்தைக்கண்டு காமனைகொண்டு அருகிற்சென்று அதைத் தொட்டான். இதைப் பார்த்திருந்த தபஸி அரசனைக் கழுகாவாய் என சபித்தார். அவ்வரசன் மஹர்ஷியின் பாதத்தைப் பணிந்து தனது சாபத்தை அகற்றும்படி வேண்டினான். கருணைக்கடலான முனிவர் த்ரேதாயுகத்தில் அயோத்திமா நகரில் தசரத சக்ரவர்த்தியின் திருக்குமாரனுக பகவான் அவதரிக்கப் போகிறார். அவரைத் தர்சித்தவுடன் உனது சாபமகலுமென்றார்." இதை அசரீரி சொல்லிமுடித்தவுடன் இக்கழுகு தனது உடலைவிட்டு திவ்ய சரீரம் பெற்று ராமனைத் துதித்தது. ஆந்தையை அழைத்து கிருஹத்தை அளித்து விமானத்தின்மீது ஏறி வானுலகம் சென்றது.

வாமன ப்ரதிஷ்டை.

ராகவன் தனது ராஜ்யபாரத்தை ஒரு ஸமயம் லக்ஷ்மணனிடம் ஒப்படைத்தார். பரதனைத் தனக்கு ஸஹாயமாகக் கொண்டார். புஷ்பக விமானத்தின் மீதேறி தனது பக்தனான விபீஷணனுக்குச் சில உபதேசம் செய்ய லங்கையை நாடிக் கிளம்பினார். இடையே தாங்கள் வனவாஸம் செய்த இடத்தையும் கரதூஷணன் முதலியவர்களைக் கொன்ற ஸ்தலத்தையும் பரதனுக்குக் காட்டிச் சென்றார். கிஷ்கிந்தையில் இறங்கி ஆப்தமித்ரனான ஸுக்ரீவனைக் கண்டார். அவனது ப்ரார்த்தனைக்கிணங்கி அங்கு சில நாள் தங்கி சுக்ரீவனுடன் கிளம்பினார். விபீஷணன் ஸ்ரீராகவன் வருவதைக் கேட்டு பேரானந்தம்கொண்டு அவரை வரவேற்று பூஜித்தான். அவனது தாயான கைகேயியும் மனைவியான ஸரமையும் ராகவ

னைப் பூஜித்தனர். விபீஷணனை அழைத்து தேவர்களுக்கும் பிராமணர்களுக்கும் அனுகூலமான கார்யத்தைச் செய். எல்லோருக்கும் அடங்கிநட. எவரையுங் கொல்லாதே, பரோபகாரத்தை மறவாதே. உலகெலாம் போற்றும் உத்தமனுய் இரு என உபதேசித்தார்.

அதைக் கேட்டு விபீஷணன் இன்றுமுதல் எந்த ராக்ஷதனும் மனிதரைக் கொல்லலாகாது என்று உத்தர விட்டான். அன்றுமுதல் லங்கையில் உள்ள ராக்ஷதர்கள் ப்ராணி ஹிம்ஸையை நிறுத்தினர். இதனிடையில் வாயுதேவன் ஓடி வந்து பகவந்! மேகநாதன் எனும் ராவணனது புதல்வன் ஸ்வர்க்கம் சென்று இந்திரனை ஜயித்து ஆங்குள்ள வாமன விக்ரஹத்தைத் தூக்கிச் சென்றுன். அன்றுமுதல் இன்றளவும் அதை அர்ச்சித்து தேவர் நன்மை பெற முடியாமல் தவிக்கின்றனர். அவ்விக்ரஹத்தைத் தக்கவிடத்தில் ப்ரதிஷ்டை செய்து பலரும் நன்மை அடையும்படி அருள் புரிய வேண்டுமென்றுர். ராகவன் விபீஷணனை அழைத்து அந்த விக்ரஹத்தைக் கண்டுபிடித்து வா என்றுர். அது எங்கோ ஓர் மூலையில் அலக்ஷ்யமாக வைக்கப்பட்டிருந்தது. பக்தியுடன் விபீஷணன் அதைத் தேடிப்பிடித்து பகவானிடம் அளிக்க விதிப்படி அதை அவர் கான்யகுப்ஜ தேசத்தில் ப்ரதிஷ்டை செய்தார். தனது தனுஸ்ஸால் தான் ஆதியில் இயற்றிய நளஸேதுவை அழித்தார். ப்ரம்மா சிவன் முதலிய தேவர்களது பிரார்த்தனைக்கிணங்கி பகவான் வைகுண்டம் சென்றுர்.

குமார சரிதம்.

திதியினது புதல்வன் வஜ்ராங்கன் எனும் அஸுரன். அவனுக்கு வராங்கி எனும் மனைவியிடம் தாரகன் பிறந்தான். அவன் கால நேமியை ஸஹாயமாகக் கொண்டு திக்விஜயம் செய்யும்பொழுது தேவர்களை ஜீவனுடன் பிடித்து வந்து

தனது பணியாளனுக்கினன். தேவேந்திரனைக்கொண்டு வந்து நாயின் காலால் அவனது உடலை அலங்கரித்துக் கழுதையின்மேல் வைத்து ஊரைச் சுற்றிவரும்படி செய்தான். இவன் செய்த துன்பத்தைப் பொறுக்கமுடியாத தேவர்கள் பரமசிவனைப் பணிந்துப் போற்றினர். இவர்களது கருத்துக்கிசைந்து சிவன் ஸப்த ரிஷிகளை அழைத்து ஹிமவானிடம் சென்று அவனது பெண்ணான உமையைத் தனக்கு மனைவியாகத்தரும்படி வேண்டினர். இதற்கு ஹிமவான் இசைந்து தனது பெண்ணைப் பரமசிவனுக்களித்து மணம் செய்து வைத்தார்.

உலகத்திற்குத் தாய் தந்தைகளான உமையும் சிவனும் ஒன்றுகூடி க்ரீடை செய்தனர். ஒரு ஸமயம் இவர்கள் அருகில் கணங்களுடன் கூடி விளையாடும் கணபதியைப் பார்த்து இவர் யாரென தேவி வினவ, உனது புதல்வனை விக்னேசன் இவன் என்று சிவன் உரைத்தார். உமை அன்புடன் அக்குழந்தையைத் தழுவி பாலூட்டினள். தேவி இவனொருவன் தானே நமது புதல்வன் என்று வினவ, பிறந்து ஏழுநாட்களுக்குள் தாரகனைக் கொல்லும் குமாரன் தோன்றப்போகிறான் என்று கைலாஸநாதன் கூறினர். ஒருநாள் தேவியும் தேவனும் விளையாட்டாகப் பேசிக்கொண்டிருக்கும்போது தேவியைப் பார்த்து நீ கறுப்பாய் இருக்கிறாய் என்று பரமசிவன் பரிஹஸித்தார். உமை தவம் புரிந்து சிவந்த வர்ணமுள்ள கௌரியானலன்றி இங்குவருவதில்லை என்று கூறி வனம் சென்றாள். வீரகன் எனும் கணபதி தாய் செல்லுவதைக் கண்டு கதறியழ விரைவில் யான் வந்துவிடுவேன். யான் வருமளவும் வாசற்படியிற் நின்று எப்பெண்மணியையும் உள்ளே நுழையாமல் காத்துவா என்று கட்டளையிட்டுச் சென்றாள்.

அங்ஙனமே தேவியின் விரஹத்தைத் தாளாமல் கண்

ணீர் சொறியும் குஸுமாமோதினி எனும் வனதேவதையை அழைத்து நீயும் காவல் புரிந்துவா. விரைவில் யான் வந்து விடுகிறேன் என்று கூறிச் சென்றாள். அந்தகன் எனும் அரக்கனைப் பரமசிவன் கொன்றதால் அவனது புதல்வனை ஆடி என்ற அஸுரன் பரமசிவனைக்கொன்று பழிதீர்க்க எண்ணினான். பிரம்மனைக்குறித்துத் தவம் புரிந்து சாவில்லா வரம் வேண்டினான். வேறு உருவோடு நீ இருக்கும்பொழுது இறப்பாய் என்று பிரம்மன் கூறினார். அவ்வரக்கன் தேவியில்லாமல் தனித்திருக்கும் பரமசிவனை உமை உருவம் கொண்டு மயக்கிக் கொன்றுவிடுவோமெனக் கருதினான். வாயிற்படியில் காவல்புரியும் விநாயகரின் கண்ணிற்படாமல் செல்ல பாம்புருவம்கொண்டு உள்ளே நுழைந்து உமையானான்.

கோபத்துடன்சென்றஉமை திரும்பி வந்தனள் என்றெண்ணிபரமசிவன் அவளை ஆலிங்கனம் செய்துகொண்டார். அச்சமயம் அரன் இவன் இராக்ஷதன் என உணர்ந்து ஹுங்காரத்தினால் அவனை எரித்துச் சாம்பலாக்கினார். வனதேவதை உள்ளே உமைபோன்ற மற்றொரு பெண்ணிருக்கக்கண்டு பார்வதீ தேவியிடம் இதை அறிவித்தாள். வாயிற்படியில் காவல் புரியும் கணபதியை நோக்கி எப்படி அன்யஸ்தீரீயை எனது உத்தரவின்றி உள்ளே விட்டாய்? என்று கோபங்கொண்டு கௌரி, நீ பூலோகத்தில் மனுஷ்யனாவாய் என சபித்தாள். தேவியின் சரீரத்திலிருந்து கோபம் நிறைந்த கௌசகீ என்ற தேவி கிளம்பிச் சென்றாள். அதனால் பார்வதி ஸ்வர்ணவர்ண முள்ளவளாக மாறி கௌரி என்றழைக்கப்பட்டாள். அத்தகைய தேவி பரமசிவனுடன் லீலை புரிய உள்ளே சென்றாள். வழியில் இருந்த விநாயகர், புதிய ரூபம் கொண்டமையால் அன்னையை அன்ய ஸ்திரீ என்றெண்ணி உள்ளே நுழையாதே என்று தடுத்தார்.

தனது உருவம் மாறியதற்குக் காரணத்தைக்கூறிஉமை உள்ளே நுழைந்தாள். அன்னையும் பிதாவும் ஒன்றுகூடி சிற்றின்பத்தை அனுபவிக்கும்போது தேவர்களால் தூண்டப்பட்ட அக்னி கிளி வடிவம்கொண்டு உள்ளேசென்றான். தேவி அன்ய புருஷன் அங்கிருப்பதைக்கண்டு விலகினாள். உடனே சிவனது வீர்யம் கீழே சிந்தியது. பரமசிவன் அக்னியைப் பார்த்து நீயே இதைப்புஜி என்றார். அங்ஙனமே அக்னி அதைத்தூக்க அவ்வீர்யத்தைப் பரிக்கமுடியாமல் தவித்தார். உடனே பரமசிவன் அவனுக்குப் பலத்தையளித்து வாயுவையும் ஸஹாயமாக அனுப்பி அவ்வீர்யத்தைக் கங்கையில் விடும்படி ஆஞ்ஞையிட்டார். கங்கையும் அதை வகிக்கமுடியாமல் சாவணப் பொய்கையில் கொண்டுவிட்டது. ஆங்கு ஆறுமுகம் தோன்ற கிருத்திகா நக்ஷத்திரங்கள் பால் ஊட்டின. அக்காங்கேயன் தந்தையிடம் சென்று அனேக லீலை செய்து பிறந்த ஏழு நாட்களுக்குள்ளாக சூரன் தாரகன் க்ரௌஞ்சன் முதலிய அரக்கர்களை அழித்து தேவயானையை வல்லி என இருமனைவிகளை மணந்தார்.

அந்தகாஸுரவதம். அஸுர குலத்திலுதித்த அந்தகனென்பான் அன்னை உமாதேவியை ஒருஸமயம் கண்டான். அவளை மனைவியாக அடையக்கருதி அவரைச் சூழ்ந்துள்ள அமரர்களைக் கொன்றான். அவனது வீர்யத்தை ஸஹிக்காத சதமகன் சிவனைச் சரணமடைந்தான். கருணை மூர்த்தியான கைலாஸநாதன் தனது கணங்களை அந்தகனோடு போர்புரியும்படி அனுப்பினார். கணங்களுக்கும் அந்தகனுக்கும் உலகம் நடுங்கும்படி உக்ரமான போர் நிகழ்ந்தது. அந்தகன் தனது மாயையால் உலகெலாம் இருள் சூழும்படி செய்து கணங்களைக் கொன்று குவித்தான். சந்திரசூடன் தனது கலையினால் இருளை அகற்றி உலகெலாம் பிரகாசமாகச்

செய்து அஸுரனைச் சூலத்தினுல் குற்றினர். அரக்கனது உடலிலிருந்து ரத்தம் பிரவாஹமாக ஓடியது. அதிலிருந்து எண்ணிறந்த அரக்கர்கள் தோன்றினர். அவர்களது சரீரத்தைத் தாக்கும்பொழுது ஆங்கிருந்தும் அரக்கர் படை தோன்றிற்று. பரமசிவன் சக்தியை அழைத்து ரக்தம் பூமியில் சிந்தாமல் குடிக்கும்படி செய்து அந்தகனைச் சூலத்தினுல் குத்தி ஏந்தி நூருண்டு கையில் வைத்திருந்தார். அப்போதும் அவன் இறக்கவில்லை. பரமசிவனது ஸந்நிதான விசேஷத்தால் உண்மையை யுணர்ந்து உமாகாந்தனை அந்தகன் துதித்தான். ஸந்தோஷம்கொண்ட பரமசிவன் அவனுக்கு வரமளித்து ப்ரிங்கிரிடர் என்ற கணமாகச்செய்து கைலாஸத்தில் தங்கியிருக்கும்படி அருள்புரிந்தார்.

காயத்ரீ.

ரிக் யஜுஸ், ஸாம எனும் மூன்று வேதத்திலிருந்தும் மூன்று ஸாரமான பாதங்களைப் பொருக்கி எடுத்து காயத்ரீ என்ற மந்திரத்தைப் பரமாத்மா லோகோபகாரமாகத் தோற்றி வைத்தார். காயத்ரீ மந்திரத்திற்குச் சமானமாக வேறு ஒரு மந்திரமும் கிடையாது. அதை ஜபிப்பவனை நரகத்தில் விழாமல் காப்பதால் காயத்ரீ என அதற்குக் காரணப் பெயர் தோன்றிற்று. எக்கருமங்களைவிட்டாலும் காயத்ரியை மாத்ரம் விடாது ஜபிப்பவன் உத்தமனுவான். உயர்ந்தது ஆயிரமும் மத்யமம் நூறும், அதமம் பத்துமுறையாவது இதை ஜபிக்கவேண்டும். காயத்ரீ ஜபத்திற்கு அங்கமாக முதலில் ப்ராணுயாமம் செய்யவேண்டும். ப்ராணுயாமம் செய்பவருக்குப் பல நன்மை கைகூடும். பாபம் அவர் அருகே அணுகாது. காயத்ரீ மஹாமந்திரத்தில் இருபத்தினுன்கு அக்ஷரங்கள் அமைந்துள. ஒவ்வோர் அக்ஷரத்திற்கும் ஒவ்வோர் அதிஷ்டான தேவதை உண்டு. காயத்ரியை ஜபிப்பதனுல்

எல்லா தேவர்களும் ஸந்தோஷமடைகின்றனர். அக்னி, வாயு, ஸூர்யன், ஆகாசம், யமன், வருணன், பிருஹஸ்பதி, பர்ஜன்யன், இந்திரன், கந்தர்வன், பூஷா, மித்ரன், த்வஷ்டா, வாஸவன், மருத், ஸௌம்யன், ஆங்கிரஸர், வைச்வதேவர், ஆச்வினர், பிரஜாபதி, ஸர்வதேவர், ரௌத்ரர், பிரம்மர், வைஷ்ணவர், என்பவர் காயத்ரீ அக்ஷர அதி தேவதைகளாவர். இருபத்தினன்கு ஸ்தானங்களில் இருபத்தினன்கு அக்ஷரங்களை வைத்து ஜபித்தல் சிறந்ததாம்.

ருத்ராக்ஷம் முதலிய மாலைகளால் ஜபிப்பதும் அகாரம் முதல் க்ஷகாரம் வரை அக்ஷரங்களால் காயத்ரியை எண்ணுவதும் ச்லாக்யமாம். அத்தகைய காயத்ரியை விட்டவனும், யஜ்ஞத்திற்காக யாசகம் செய்து யஞ்ஞம் செய்யாதவனும் ஊதியம் பெற்று தேவாலயத்தில் அர்ச்சிப்பவனும் தனம் பெற்று ஜோதிஷம் சொல்பவனும் க்ராம புரோஹிதம் செய்பவனும் பரதாரத்தில் ஆசைகொண்டவனும், பாபிகளிலும் பரம அதமனுவான்.

உயர் குலத்தில் உதித்த ஓர் அந்தணன் ஸ்வதர்மத்தை இழந்து சண்டாளியினிடம் ஆசைகொண்டான். அவளை மணந்து தன் மனைவியை மறந்தான். பரஸ்த்ரீயினிடம் பல பல புதல்வர்களைப் பெற்றுன். ஒருநாள் அவள் அருகில் ரமிக்கும் அந்தணனை அழைத்து மதுவை அருந்தும்படி வேண்டினுள். பழக்கமில்லாததால் அவன் அதை மறுத்தான். அவன் படுத்திருக்கும்பொழுது அவள் பலாத்காரமாக அவன் வாயில் கள்ளை ஊற்றினுள். அவனது வதனத்திலிருந்து தோன்றிய வன்னி பரிவாரத்துடன்கூட பரச்சியைஎரித்துவிட்டது. அவ்வந்தணன்ஓர் முனிவரையணுகி என் வாயிலிருந்து கிளம்பிய நெருப்பு மனைவி மக்களைக் கொளுத்தக் காரணம் யாது?என வினவினுன். அவர் 'காயத்ரியால் உனது

உள்ளே உண்டான தேஜஸ் சண்டாள ஸ்திரீ ஸஹவாஸத்தாலும் ஸுரா பானத்தாலும் வெளிச்சென்றது. உத்தம நதீ ஸ்நாநத்தாலும் சாந்திராயணாதி தபஸ்ஸுகளாலும் இழந்த தேஜஸ்ஸைத் திரும்பப் பெறலாம்' என்றார்.

தாயின் அடிமைத் தனத்தை அகற்ற அமரர் உலகம் சென்று அமிருதத்தைக்கொண்டுவர கருடன் கிளம்பினான். இடையில் தன் பசியை அகற்ற ஆஹாரம் வேண்டுமென தாயை வேண்டினான். பிராம்மணனைவிட்டு நிஷாதரைப் புஜி என்று தாய் கூறினாள். அக்கருடன் இப்பிராமண சண்டாளனுடன் வேடர்களை விழுங்கும்போது தன் கழுத்துசுட அதற்கென்ன காரணம்? என்று யோசித்துக் கக்கினார். கீழே விழுந்த ப்ரஷ்ட பிராம்மணனே காரணமெனக் கருதி அவரையும் அவன் கோறியபடி அவன் பந்துக்களையும் விட்டு மற்றவர்களைப் புஜித்தார். தந்தையின் உத்திரவுபடி ஓர் பெரிய ஆனையையும் ஆமையையும் தூக்கி அதைப் புஜிக்க ஓர் மரத்தின்மீதில் உட்கார்ந்தார். அம்மரத்தின் கிளை முறிந்துவிழ அதிலுள்ள ஆயிரக்கணக்கான வாலகில்யர்களைப் பார்த்து அவர்களைக் கொல்லலாகாதெனக்கருதி மூக்கால் அக்கிளையையும் காலால் ஆனை ஆமைகளையும் தூக்கிச்சென்றார். ஒருவருமில்லாத்தீவில் அக்கிளையை வைத்து அம்மஹர்ஷிகளது ஆசீர்வாதத்தைப் பெற்றார்.

இவரது ப்ராம்மண பக்தியைக் கண்ட மஹாவிஷ்ணு தனது புஜத்தைநீட்டி அதில்அமர்ந்து அவைகளைப் புஜிக்கும்படி சொன்னார். அங்ஙனமே செய்து வயிர் நிறையாது விஷ்ணுவின் கையையும் அவர் கொத்த ஆரம்பித்தார். வைகுண்டநாதன் அப்போதும் அசையாது நிற்பதைக்கண்டு வியந்த வைநதேயன் மிகபலசாலியான தாங்கள் யார்? எனக்கேட்டான். பகவான், தனது நிஜரூபத்தைக் காட்டி, கருடா!

உனது வீரியத்தைக்கண்டு களித்தோம். உனக்கு யாது வரம் வேண்டும்? என்றார். கருடன், யான் ஒருவரிடமும் பிச்சை வாங்கத்தக்க துர்பலன் அல்லன். உமக்கு வேண்டிய வரத்தைக்கேளும் தருகிறேன் என்றான். மாதவன் அப்படி ஆனால் நீ எனக்கு வாஹனமாய் இருக்கும் வரமளி என்றார். அங்ஙனமே கருடன் அங்கீகரித்து அமிருதத்தைக் கொண்டு வந்து தாயை மீட்டு, மஹா விஷ்ணுவுக்கு வாஹனமானார். கருடனால் கக்கப்பட்ட ப்ராம்மணுதமன் மஹர்ஷி கூறிய படி மஹாநதிகளில் ஸ்நாநம் செய்து காயத்ரீ ஜபத்தினால் இழந்த தேஜஸ்ஸை மீண்டும் பெற்றான்.

ஸதாசாரம். ஸந்தியாவந்தனமென்பது ஸகல தர்மங்களுக்கும் அடிப்படையான வேராம். அதை அனுஷ்டிக்காதவன் ஸூர்யனைக்கொன்ற பாபத்தைப் பெறுவான். ஸந்த்யையில் அர்க்கியப்ராதனமென்பது ஓர் முக்ய அம்சமாம். அதைக் கரையிலிருந்தால் கரையிலும் ஜலத்திலிருந்தால் ஜலத்திலுமே விட வேண்டும். எண்ணெய் தேய்த்துக்கொண்டிருப்பவனையும், எச்சில் கை அலம்பாதவனையும் ஈர வஸ்திரத்தோடு இருப்பவனையும், ரோகியையும், ஸமுத்ரத்தில் இருப்பவனையும், வாடியுள்ளவனையும், சுமை தூக்கிச் செல்பவனையும், யஞ்ஞத்தில் ஈடுபட்டவனையும், குழந்தைகளோடு அல்லது பெண்களோடு விளையாடிக்கொண்டிருப்பவனையும், புஷ்பமல்லது தர்ப்பையை வைத்திருப்பவனையும், நமஸ்கரிக்கலாகாது. ஸ்வர்க்கம்செல்பவருக்கு அடையாளம் ஸத்பாத்ரதானம் மதுரவாக்கு தேவ ப்ராம்மண பூஜை ஆகிய இவைகளாம். கார்ப்பண்யம், ஸ்வஜன நிந்தை, கிழிந்த துணியுடுத்தல், நீசனிடத்தில் பக்தி அதிகோபம், கடினமான வார்த்தை, தந்தை தாயிடத்தில் அன்பில்லாமை; ஸ்வாமி த்ரோகம், தக்கவரைத் தகாதவரோடு ஸமமாக நினைத்தல், ஆகிய இவைகள் நரகம் செல்பவ

ருக்கு அடையாளமாம். பித்ரு பூஜை, பதிபக்தி ஸமதிருஷ்டி மித்ரர்களை வஞ்சியாமை விஷ்ணுபக்தி என்பவை பஞ்சமஹா யஞ்ஞங்களாம்.

நரோத்தமன்.

பூஸுரர குலத்துதித்த நரோத்தமன் என்றொருவன் இருந்தான். இவன் தந்தைதாய்களைக் கவனியாது அவர்கள் சொல்லையும் மீறி உத்தமநதிகளில் நீராடி வந்தான். அப் புண்ய விசேஷத்தால் அவனது ஈரவஸ்திரம் ஆகாசத்தில் நின்று உலர்ந்து அவன் போகும் இடமெல்லாம் வரும். இதனுல் அவன் கர்வம் கொண்டான். ஒரு நாள் அவன் வாயைத் திறந்து ஆகாசத்தைப் பார்க்கும்போது ஓர் கொக்கு அவன் வாயில் எச்சமிட்டது. அக்கொக்கை அவன் சபித்துச் சாம்பலாக்கினுன். இவ்வழியாக அவன் தபம் அழிந்ததால் அன்றுமுதல் அவன் வஸ்திரம் ஆகாயத்தில் உலர்ந்து அவன் செல்லுமிடத்திற்கு வருவதில்லை. இதைக் கண்டு நரோத்தமன் சிந்தைகொண்டான். அசரீரியான ஓர் வாக்கு ஆகாயத்தில் இருந்து தோன்றி மூகன் எனும் சண்டாளனதுவீட்டிற்குச்சென்றுஅவனிடம் தர்மத்தை அறிந்து கொள் என்றது. அவனது வீடுதெரியாமல் இவன் தவிக்கும் போது ஓர் கிழ பிராம்மணன் இவனை அங்கு அழைத்துச் சென்ருன். தந்தை தாய்ப் பணிவிடை செய்யும் அப் பரைய னிடம் சென்று இவன் தர்மத்தைச் சொல் என்ருன். பித்ரு சுச்ரூஷை செய்யும் எனக்கு தற்சமயம் அவகாசமில்லை. பின்னர் வா! தர்மத்தைக் கூறுகிறேன் என்ருன் அவன். இதைக் கேட்ட நரோத்தமன் கோபங்கொண்டு பிராமணனைத் தமனை என்னைவிட தந்தை தாய்ப்பணிவிடை பெரிதோ? பூஸுரனைப் பூஜிப்பதன்றோ புண்யம் என்ருன். சண்டாளன் ஸ்வாமிந்! உமது பாபத்தால் வஸ்திரமுலராததையும் அசரீ

ரிணி உம்மை இங்கு அனுப்பியதையும் அறிவேன். இஷ்டமிருந்தால் நில்லும். இல்லேயேல் செல்லும் என்முன்.

அச்சண்டாளனது க்ருஹத்திலிருந்து மஹாவிஷ்ணு வெளிக்கிளம்பி வருவதைப் பார்த்து ப்ராஹ்மணன் பலகாலம் யான் தீர்த்த யாத்ராதி புண்யங்களால் உம்மை உபாஸிக்கிறேன். நீர் எனக்கு தர்சனம் தராது நீசனுன சண்டாளன் வீட்டிலிருந்து கிளம்புகிறீர்! இது நியாயமோ? என்று பகவானே வினவினுன். அவர் அந்தணனே நோக்கி உமது புத்தி இன்னும் சுத்தமாக வில்லே! ஓர் பதிவ்ரதையைத் தர்சித்து அவளிடம் உபதேசம் பெற்று பின்னர் என்னேத் தர்சிப்பாய்! என்று கூறி மறைந்தார். அவன் அப் பதிவ்ரதையைத் தேடிச்சென்று தனக்குத் தர்மோபதேசம் செய்யும்படி வேண்டினுன். அவள் ஐயனே! பிக்ஷைபெற்று செல்லும்! பதிக்குப் பணிவிடை யான் செய்ய வேண்டும்! என்முள். அதைக் கேட்ட அந்தணர் உன்னேச் சபித்து விடுவேன் என்று கற்பரசியைக் கடிந்துகூறினுர். அம்மாது தர்மதுலாதாரன் என்பவனே அடுத்துக்கேளும் அவன் தர்மத்தைக் கூறுவான் என்முள். அவனது வீட்டுக்கு வழி தெரியாது இவன் தவிக்கும்போது மஹா விஷ்ணு ப்ராம்மண வேஷம்பூண்டு அவனே அவ்விடத்திற்கு அழைத்துச் சென்முர். ப்ராம்மணன் அவனேப்பார்த்து தர்மோபதேசம் செய்யும்படி வேண்டினுன். வந்தவர்களுக்குத் தக்கபடி வேண்டிய பொருளே அளித்துப் பின்னர் கூறுகிறேன் காத்திரும், இல்லேயேல் தர்மாகரன் என்ற வைச்யனிடம் செல்லும் என்முனவன். விஷ்ணு காட்டிய வழியைப் பின்பற்றி ஆங்கு சென்று அவனேக் கண்டு ஸ்நாநாநுஷ்டானம் செய்யாத இவனே நமக்குத் தர்மோபதேசம் செய்பவன் என்று பிராமணன் கூற, விஷ்ணு அவனது சரித்ரத்தையும் குணத்தையும் இவனுக்கு எடுத்துரைத்தார். தர்மாகரன் எனும் வைச்யன் சிறுவரிட

மும் பெரியோரிடமும் ஏழையினிடமும் தனிகனிடமும், பந்துவினிடமும் மற்றவரிடமும் சத்ருவினிடமும் மித்ரனிடமும் ஸமானமாக நடந்துக்கொள்பவன். எவனுக்கும் எள்ளளவேனும் துரோகத்தைக் கனவிலும் கருதான். இவனது உயர் குணத்தைக் கண்டு எல்லோரும் வியந்தனர்.

தீர்த்த யாத்ரைக்குச் செல்லும் ஓர் ராஜ குமாரன் தனது இளம்மனைவியை எங்கும்விட்டுவைக்க மனமில்லாமல் இவ்வைச்யனிடம் வந்தான். யான் திரும்பி வருமளவும் இவளைக்காக்க வேண்டுமென்று வைச்யனிடம் கூறினன். அவன் எனது மனைவியுடன் இவளை ஒரேசயனத்தில் வைத்து அருகில் யான் படுத்திருப்பேன்! அதற்கு ஸம்மதமானால் இவளை இங்கு விட்டுவை! இல்லையேல் அழைத்துச் செல்! என்றான். இராஜ குமாரன் இவனது குணத்தைத் தீர்க்கமாக ஆலோசனை செய்து படுக்கையில் இருந்தாலும் பரஸ்த்ரீயை இவன் தாயைப்போல் கருதுவான் என்று எண்ணி இவனிடம் தன் மனைவியை விட்டுச் சென்றான். தர்மாகரன் தான் சொன்னபடியே அரசன் மனைவியைத் தன் மனைவியுடன் ஒரே சயனத்தில் படுக்க வைத்து இருவருக்கிடையில் தான் படுத்து உறங்குவான். ராஜகுமாரியின் ஸ்தனம் முதலிய அவயவங்கள் தூக்கத்தில் தனது உடலில் படும்போது தாயின் அங்கம் என்று எண்ணி அவன் காமவிகாரம் கொள்ளாமல் இருந்தான். இங்ஙனம் பலகாலம் செல்ல சிலர் இச்செயலை இகழ்ந்தும் சிலர் புகழ்ந்தும் பேசி வந்தனர். ஜனபவாதம் நாளுக்கு நாள் பலமாக, வைச்யன் அதைப் பொறுக்காமல் அக்னி ப்ரவேசம் செய்யத் தீர்மானித்தான்.

பலர் தடுத்துக்கூறியும் கேளாமல் அக்னியில் விழ வைச்யன் தீர்மானித்து தீயை வலம்வரும்பொழுது ராஜ குமாரனும் வந்து சேர்ந்தான். அவனும் பொய்யான அப

வாதத்திற்காகத் தாங்கள் ஸாஹஸம் செய்யலாகாதென வேண்டியும் தர்மாகரன் அக்னியில் நுழைந்து விட்டான். உடனே ஸகல தேவர்களும் எதிரில் தோன்றி தர்மாகரனைக் காத்து அவனது உயர் குணத்தைக் கொண்டாடிச் சென்றனர். ராஜகுமாரன் தன் மனைவியை அழைத்துச் சென்ருன். பொய்யாக அபவாதம் சொன்னவர் வாயில் குஷ்டரோகம் தோன்றியது. தரணியில் உள்ளோர் தர்மாகரனை அத்ரோஹகன் என அழைத்தனர். அவனும் ஜ்ஞானக்கண்ணைப் பெற்ருன். ஆதலின் அவனிடம் உபதேசம் பெறுவதே உத்தமமென விஷ்ணு கூறினர். நரோத்தமன் அவன் வீடு சென்று அருகில் உள்ள விஷ்ணு பக்தனை ப்ராம்மணனைப் பார்த்து எங்கே விஷ்ணு இருப்பர்? என்று வினவினன். அவர் அபாவை என்ற பதிவ்ரதையின் வீட்டிலிருப்பர், என்று கூறி அங்கே அழைத்துச் சென்ருர். ஆங்குள்ள மஹா விஷ்ணுவை நரோத்தமன் தர்சித்துப் பணிந்து துதித்தான். அவர் நீ எவ்வளவு புண்யம் செய்தாலும் தந்தை தாய்களுக்குப் பணிவிடை செய்யாதது பெரும் பாபம். ஸ்வதர்மமான அதை நீ விட்டதால் என்னை இதுவரை தர்சிக்க முடியாமல் இருந்தது. பித்ரு பக்தியுள்ள சண்டாளன் வீட்டிலும், பதி பக்தியுள்ள பதிவ்ரதையின் வீட்டிலும் எல்லோரிடத்தும் ஸமதிருஷ்டியுள்ள தர்மதுலாதாரன் இல்லத்திலும், த்ரோஹமில்லாமல் தர்மநிரதனுயுள்ள தர்மாகரன் வீட்டிலும், யான் ப்ரத்யக்ஷமாக வீற்றிருக்கிறேன். ஸ்வதர்மத்தை விட்ட உனக்கு அறிவூட்டவே ப்ராம்மண வேடம்பூண்டு இவர்களை உனக்குக் காண்பித்தேன். இவைகளைக் கண்டும் நீ தர்மத்தைத் தெரிந்துகொள்ளவில்லை. இவர்களைத் தர்சித்த புண்யத்தால் உனக்கு யான் தர்சனம் தந்தேன். இனியேனும் தந்தை தாய்ப்பேண். பித்ருக்களை ச்ரார்த்தவகையால் ஆராதிப்பதும் ஜீவித்திருப்பவரது சொற்படி நடப்பதும் புத்ரனது கடமை

யாம். சிராத்தம் செய்ய தனமில்லாவிடில் அத்தினத்தன்று இளம்புற்களைப் பசுவிற்குக் கொடு! அது பிண்டதானம் செய்த பலத்திற்குச் சமமாம், என்று கூறி மறைந்தார். நரோத்தமனும் பித்ருபக்தி செய்துபெரும்பதவி பெற்றான்.

ஸைப்யாஸதீ.

ஸைப்யா என்று பெயருள்ள ஓர் பதிவ்ரதை இருந்தாள். அவளது பதி கௌசிகர் என்பார். அவர் குஷ்டமெனும் பெரியவ்யாதியால் பீடிக்கப்பட்டு வந்தார். அவரது துர்நாற்றம் ஊரெல்லாம் வீசியது. என்றாலும் அவரது மனைவி அவரையே மன்மதனாக எண்ணினாள். காலோசிதமான பணிவிடை தவறாது செய்வாள். ஒருநாள் வாசத்திண்ணையில் வீற்றிருந்த கௌசிகர் வீதிவழியாகச் சென்ற வேசி ஒருவளைக் கண்டார். அவள்பால் அவர் காமனை கொண்டார். அக்காம விகாரத்தால் மதிமயங்கி காம ஜ்வரம் மேலிட்டு அவர் மிகக் கஷ்ட மடைந்தார். ஸதி பதியின் நோயை அறிந்து ஸ்வாமிந்! தங்களுக்கு யான் யாது செய்யவேண்டும்? என்று வணங்கி வினவ, அவர் வேசி மீதுள்ள ஆசையைக் கூறினார். உடனே ஓர் தூதனை அனுப்பி அவ்விலைமாதைத்தன் பதியுடன் சேரும்படி வேண்டினாள். வேசி அதை வெறுக்கவே, இப்பதிவ்ரதை அவள் வீடு சென்றாள். இங்கு வரத்தகாத உத்தமியான நீ எதற்காக இங்கு வந்தாய்? உனது வரவால் என்பாக்யமெல்லாம் நசித்து விடும். விரைவில் சொல். நீ வேண்டுவதென்ன? நீ கோறுவதெல்லாவற்றையும் அளிப்பேன் என்றாள் வேசி. பதிவ்ரதை தன் பர்த்தாவின் இஷ்டத்தை நிறைவேற்ற வேண்டுமென ப்ரார்த்தித்தாள். அங்ஙனமே ஆகட்டுமென்று அம்மாது கூற அன்றிரவு ஸதி தன் பதியை அலங்கரித்துத் தன் தோளின்மீது தூக்கி வேசி வீடு சென்றாள். இடையில் இவர் புண்ணிலுள்ள புழு

நிண்டியதால் காலை உதறினர். அது அங்கு திருடனென்றெண்ணி சூலத்திலேற்றப்பட்டிருந்த மாண்டவ்யர் தலையில் பட்டது. வலியைத்தாளாத மஹர்ஷி என்னைக் காலால் தலையில் உதைத்தவன் ஸூர்யனுதயமாவதற்குள் இறப்பான் என்று சபித்தார். இதைக்கேட்ட பதிவ்ரதை திடுக்கிட்டு பயந்து ஸூர்யனே உதயமாகாமல் போகட்டுமென சபித்தாள். பிறகு பலநாள் சூர்யன் உதிக்காமல் போகவே ஸகல தேவர்களும் ஒன்றுகூடி அவள் வீட்டிற்கு வந்தார்கள். தேவர்களது ஒளியைக் கண்டு அவள் ஸூர்யன் தான் வருகிறான் என்று எண்ணித் தன் கணவன் இறப்பனே என்று அஞ்சிக் கதறினள். ப்ரஹ்மா அவளை வணங்கி ஸூர்யன் உதயமாகும்படி அருள் புரிய வேண்டினர். தனது பர்த்தா ஜீவித்திருக்க வேண்டுமென அவள் வரம் கேட்க ப்ரம்மாவும் அங்ஙனமே ஆசீர்வதித்தார். பதிவ்ரதையின் உத்திரவுபடி ஸூர்யன் உதிக்க அந்த மஹர்ஷி கீழே விழுந்து இறந்தார். ப்ரஹ்மா அவரை அழகிய சரீரத்துடன் ஸ்வர்க்கத்திலிருந்து அழைத்து வந்தார். பிறகு ஸதியும் பதியும் கூடி திவ்ய விமானத்தின் மீதேறி தேவலோகம் சென்றனர்.

ஸ்த்ரீரக்ஷணம். பரமனது படைப்பில் புருஷனை விட பெண் மக்களிடம் அழகு, காம விகாரம், முதலியவை அதிகமாக அமைக்கப்பட்டிருக்கிறது. பெண்கள் நெய்க்கும்பத்திற்குச் சமமானவர். புருஷர்கள் நெருப்புச்சட்டிக்கு ஸமமானவர். ஆதலின் இவ்விரண்டையும் ஒரிடத்தில் தனித்து வைக்கலாகாது. யானைப்பாகன் யானையை அடக்குவதே போல் பெண்களைப் புருஷன் அடக்கி தன் ஸ்வாதீனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். இளமையில் பிதாவும் யௌவனத்தில் பதியும் கிழவயதில் புத்ரர்களும் பெண்மக்களை

ரக்ஷிக்க வேண்டும். பெண்கள் எப்போதும்தனித்தும் ஸ்வதந் திரமாகவும் இருக்கலாகாது. பெண்மக்களுக்கு வ்யபிசார தோஷம் ஏற்பட்டால் குலம்அழியும். பித்ருக்களுக்குரிய ச்ராத்தாதி கர்மாக்கள் நஷ்டமாகும். தாய், குருபத்னி, ப்ராம்மணீ ஸஹோதரீ, ஸஹோதரியின் நாட்டுப் பெண், தனது நாட்டுப் பெண், மாமன் மனைவி, சிற்றன்னை, தாயு டன் பிறந்தவள் முதலியவர்களைப் பெண்டாடியவன் ப்ரஹ் மஹத்தி செய்தவனாவான். லோபத்தினால் தக்க இடத்தைத் தேடி கன்னிகையைக் கொடாதவன் நரகம் செல்வான். மிக உண்பவன், வெகு தூரத்திலுள்ளவன், மிகதனிகன் துர்ஜ னன், துஷ்குலத்துதித்தவன், மூர்க்கன், அதிவிருத்தன், அதிதீனன், அதிரோகி, அதிகோபி, ஸந்தோஷமில்லாதவன் முதலியவர்களுக்குக் கன்யகாதானம் செய்யலாகாது.

ஆசையின்மை.

முன் ஒரு ஸமயம் மிக அடக்கமுள்ள சூத்ரன் ஒருவன் இருந்தான். அவன் உணவுக்காக வேண்டி எவரிடமும் வேலை யும் செய்வதில்லை. யாசிப்பதுமில்லை. தானாகக் கிடைக்கும் காய்கனிகளைக் கொண்டும் உஞ்சவிருத்தியினாலும் (வயலில் சிந்திக்கிடக்கும் தான்யத்தைப் பொருக்குதல்) ஜீவித்து வந் தான். பிறர் பொருளை மனதாலும் கருதான். அவன் உடுத் துவதோர் கந்தைத் துணி. அவனைச் சோதிக்க கடவுள் அவன் தங்குமிடத்தேஇரு புதிய துணிகளை வைத்திருந்தார். அக்குடியானவன் அத்துணிகளைக் கண்ணெடுத்தும் பாரா மல் தூரே சென்றான். அவன் சென்ற வழியில் அத்திக்கனி யின் உள்ளே ஸ்வர்ணத்தை வைத்து பகவான் அவன் கண் ணெதிரே தோற்றி வைத்தார். அதைப் பார்த்து அவன் இதைப் பெறுவோமானால் இதிலிருந்து லோபமும் லோபத் தினால் மோஹமும் மோஹத்தினால் அஹங்காரமும் அஹங்

காரத்தினுல் கோபமும் உண்டாகும். ஆதலால் இதை யான் தொடவும் மாட்டேன் என்று எட்டிச் சென்ருன். இத னிடையில் பகவான் ஓர் ஜோஸ்யனைப்போல் அவன் மனைவி யினிடம் சென்று உன் கணவன் கடவுள் கொடுத்ததைக்கூட எடுத்துக்கொள்ளமாட்டேன் என்கிருன். மறுபடியும் உனது குணத்திற்காக ஸ்வர்ணம் நிறைந்த அத்திக்கனியைப் பக வான் அவன் எதிரே அளிப்பார். அதையும் அவன் ஏற்கா விடில் உங்களது பந்துக்கள் அழிவார்கள். ஆதலால் அக் கனியை எடுத்துக்கொள்ளும்படி உன் கணவனுக்குக் கூறு என்று சொன்னுர்.

அச்சமயம் பதி வர அவன் மனைவி இக்கதையைக் கூறி அக் கனிகளைக் கைப்பற்றும்படி வேண்டினுள். அவன் பெண்ணே! யான் பொருளில் ஆசைகொண்டவனல்லன். பணமுடையோர், திருடன் ஞாதி அரசன் முதலியவர்களைக் கண்டு அஞ்ச நேரிடும். ஆதலின் அழியாப் பொருளான பரம் பொருளைத் தேடும் எனக்கு இப்பொருள் வேண்டா மென் ருன். ஜோஸ்யனுக வந்த பரமாத்மா இத்தம்பதிகளின் எதி ரில் மறுபடியும் தோன்றி சில நீதிகளைப் புகட்டினுர். அர்த்த முடையவனே நற்குலத்துதித்தோன் என கருதப்படுவன். தனமுள்ளவனுக்கு மித்ரன் அதிகம். தனிகனே சீலமுள் ளோன். தனிகனே பண்டிதன். வ்ரதம் முதலிய தர்மங்களை அனுஷ்டிக்க தனம் வேண்டுமென்ருே? சத்ருவை ஜயிக்கவும் ரோகமில்லாமல் உடலைக் காக்கவும் ஏனைய ஸுகங்களைப் பெறவும் தனமே தக்க ஸாதனமல்லவா? என்று ஈசன் கூறி னுன். ஆசையில்லாமையே பெரும் தர்மம். கோபமில்லா மையே தீர்த்த யாத்திரை. தயையே ஜபம். ஸந்துஷ்டியே தனம். அஹிம்ஸையே ஸித்தி. உஞ்சவிருத்தியே ஜீவனம். சாகமே அமிருத ஆஹாரம். உபவாஸமே தபஸ். ஆதலால் மற்ற தனம் எனக்கு வேண்டாம் என்று சூத்ரன் கூறினுன்.

உடனே தேவர்கள் இவன் தலையில் புஷ்பமாரிப்பொழிந்தனர். எதிரில் உள்ள ஜோஸ்யர் சங்கு சக்ர பீதாம்பரதாரியான பகவானாகத் தோன்றி நின்றார். ஆசையை ஜயித்தமையால் அவனுக்கு வைகுண்ட மளித்தார்.

தீர்த்தராஜன். சாந்தனு என்கிற ஓர் மஹர்ஷி அமோகை எனும் பத்னியுடன்கூட கர்மானுஷ்டானம் செய்து வந்தார். ஒரு ஸமயம் அவர் கந்த மூலங்களைக் கொண்டு வர காநகம் சென்றார். அதுசமயம் இம்மஹர்ஷியைக் காண ஸத்யலோக வாஸியான சதுர்முகன் வந்தார். அமோகை தனது கடமையெனக் கருதி அதிதியைத் தக்கபடி பூஜித்தாள். அவளது அழகைக்கண்டு ப்ரம்மா மோஹம் கொண்டார். அவர் ரேதஸ் ஸ்கலனமானதால் வெட்கமடைந்து ஸத்யலோகம் சென்றார். மஹர்ஷி தன் ஆச்ரமத்திற்குவந்து சுக்லத்தைக் கண்டு இது ஏது? என மனைவியை வினவினார். ப்ரம்மாவினது வரவை மனைவி கூறி, மேல் நடந்த விருத்தாந்தத்தைத் தாங்களே ஞானக்கண்ணால் அறியுங்கள் என்றாள். அவரும் அதை அறிந்து ப்ரம்மாவின் சுக்லமாதலின் அதை நீ ஏற்றுக்கொள் என்றார். அதைப் பர்த்தாவின் ஆஜ்ஞையின்படி அவள் ஏற்று சுமக்க முடியாததால் என் செய்வதெனவினவ, ஜலத்தில் விடு என்றவர் கூறினார். ஆங்கிருந்து தீர்த்தராஜன் என்பது தோன்றிற்று. தேவர்கள் பூமாரிப் பொழிந்து அதைப் போற்றினர். பரசுராமன் இருபத்தோரு தலைமுறை க்ஷத்ரியர்களை அடித்துக்கொன்று ரக்தக்கரை உரைந்ததனது பரசுவைப்பல தீர்த்தங்களில் அலம்பிப் பார்த்தார். அக்கரை அகலாததால் என் செய்வதென சிந்தித்தார். அசரீரிணியான வாக் ஒன்று தீர்த்தராஜனிடம் செல். அங்கு பரசுவின் கரையும் உன் பாபமும் அகலும் என்றது. அங்ஙனமே தீர்த்த ராஜனிடம் சென்று பரசுராமர் பாவனமானார்.

ருத்ராக்ஷ மஹிமை.

க்ருதயுகத்தில் த்ருபுரன் எனும் அஸுரன் மூவ்வுலகை யும் பிடித்து வந்தான். தேவர்களது பிரார்த்தனைக் கிணங்கி மாதேவன் அரக்கனைக் கொல்ல அரிய பல ஆயுதங்களைக் கைகொண்டு முப்புரத்துடன் போருக்கு வந்தார். அச்சம யம் கோபம் கொண்ட ருத்ரனது உடலிலிருந்து வேர்வைத் துளிகள் கீழே சிந்தின. அதிலிருந்து ருத்ராக்ஷ விருக்ஷங்கள் தோன்றின. அம்மரத்தின் பழமான ருத்ராக்ஷத்தைத் தரிப் பதனுல் ஸகல ரோகங்களும் பாபங்களுமகலும். கோரிய பலன் கைகூடும். முன் ஒரு ஸமயம் குகப்பெருமானுக்கு சிவபிரான் இதன் மஹிமையை விளக்கிக் கூறினர். ஓர் முக ருத்ராக்ஷம் சிவாம்சமாகும். அது பிரும்மஹத்தி முதலிய பாபத்தை அகற்றும். இரண்டு முகம் கொண்டது தேவ தேவாம்சமாம். கோவதம் முதலிய பாபத்தை அகற்றும். மும்முகம் அக்னியின் அம்சமாம். ஸ்த்ரீஹத்தி முதலிய பாபத்தை அகற்றி அதைத் தரிப்பவனுக்கு ஜயத்தையும் அளிக்கும். நான்முகம் ப்ரம்மாவின் அம்சம். அதைத் தரிப்பதால் சாஸ்திர ஜ்ஞானமுண்டாம். ஐந்து முகம் ருத் ராம்சம். தகாதவர்களைப் புணரும் பாபமும் அகலும். ஆறு முகம் ஷண்முகாம்சம். ப்ரம்மஹத்தி பாபத்தை அகற்றும். தரிப்பவனைச் சூரனுக்கும். ஏழு முகம் அனந்தாம்சம். விஷத் தை அகற்றவல்லது. எட்டுமுகம் விநாயகாம்சம். அதைத் தரிப்போன் எப்பிறவியிலும் மூர்க்கனுக மாட்டான். ஒன்பது முகம் பைரவாம்சம். அதைக்கையில் தரிப்பது சிறந்தது. அது ஸகல நோயையும் அகற்றவல்லது. பத்து முகம் விநாய காம்சம். ஸர்ப்பதோஷத்தை அகற்றும். ஏகாதசமுகம் ருத் ராம்சம். அதைச் சிகையில் தரிப்பது ச்லாக்யம். ஸகல பாபத்தையும் அது அகற்றும். பனிரண்டு முகம் ஆதித்யாம்

சம். அச்வமேத பலத்தை அளிக்கும். பதின்மூன்று முகம் ருத்ராம்சம். அழியாப் பலத்தை அளிக்கும். பதினான்கு முகம் விஷ்ணு ரூபமான சக்தியின் அம்சம். அதைத் தரிப் போர் தேவர்களாலும் பூஜிக்கப்படுவர். ஒரு ஸமயம் வியா பாரநிமித்தம் வெளியிற் சென்ற ஓர் வைச்ய குமாரன் ஓர் பாலே வனத்தில் இறந்தான். அவன் உடலிலிருந்து ப்ரேதம் கிளம்பி நர்த்தனம் செய்தது. அதைக்கண்ட ஓர் அந்தணன் அதன் உண்மையை அறிந்து அவ்வைச்யனது உடலே ருத் ராக்ஷவனத்தில் எறிந்தான். அப் புண்யத்தால் ப்ரேத சரீர மகன்று வைச்யன் கைலாஸம் சென்றான்.

நெல்லிமரம் மஹாவிஷ்ணுவின் அம்சத்தால் ஜனித்த தாம். அதன் கனி ஹரி பலம் எனப்படும். அதைப் பக்ஷிப்ப தாலும் மேலே பூசிக்கொண்டு ஸ்நானம் செய்வதாலும், ஸகல பாபங்களுமகலும். நெல்லிக்கனியுள்ள வீட்டில் பூதப்ரேத பிசாசங்கள் அணுகா. அலக்ஷ்மி அகலுவாள். துஷ்ட க்ர ஹங்கள் துலேயும்; சாந்தி உண்டாகும். முடிவில் வைகுண்ட மும் செல்வான். நெல்லிக் கனியைப் பானுவாரத்திலும் நவமி அமாவாஸ்யையிலும் இரவிலும் புஜிக்கலாகாது. ஓர் சண்டாளன் கோஹத்தி முதலிய பாபங்களைச்செய்து வாடி ஓர் நெல்லிமரத்தின் கீழேவந்து படுத்தான். உடனே ஓர் ஸர்ப் பம் தீண்டி அவன் மூர்ச்சையுற அவனைத்தின்ன பூதப்ரேத பிசாசங்கள் ஓடிவந்தன. ஆங்குள்ள மஹர்ஷிகள் அவைகளைத் தடுத்து அந்தியகாலத்தில் ஆமலக மரத்தின்கீழ் இறந்த இச் சண்டாளன் வைகுண்டம் செல்லத்தக்கவன். அவனருகே வராதீர்கள். நீங்களும் இக்கனியைப் புஜித்தால் பாபசரீர மக லும் என்று கூறினார்கள். அவைகளும் அங்ஙனமே ஆமல கனியைப் புஜித்து வைகுண்டம் சென்றன.

கணேச பூஜை.

கைலாஸத்தில் பரமசிவன் உமையுடனும் இரு குழந்தை

களுடனும் உல்லாஸமாக வீற்றிருக்கும் தருணத்தில் தேவர்கள் வந்து தரிசித்தனர். பெரியோரைத் தர்சிக்கும்பொழுது வெருங்கையோடு வரலாகாதென வானவர் அமிருதத்தாலாகிய மோதகத்தைப் பகவானுக்கு நிவேதனம் செய்தனர். அம்மோதகம் ஸர்வ சாஸ்த்ரார்த்த ஞானத்தையும் அளிப்பதுடன் எழுதும் ஸாமர்த்தியத்தையும் கொடுக்கவல்லது. ஜனன மரணம் முதலியவைகளை அகற்றும் அம்மோதகத்தை விரைவில் பாபத்தை அகற்றி அருகில் வருவோருக்குத் தருகிறேனென தந்தை மைந்தர்களைக்குறித்துக் கூறினர். உடனே ஸுப்ரமண்யன் மயூரவாஹனத்தின் மீதேரி கங்கை முதலிய புண்ய நதிகளில் புனலாடி பூப்ரதக்ஷணம் செய்து பாபத்தை அகற்றக்கருதி வெளியிற் சென்றார். விநாயகர் உலகத்திற்கு ஆதி தாய் தந்தையான உமா மஹேசர்களை ப்ரதக்ஷணம் செய்து நமஸ்கரித்து எனது பாபமகன்றது. மோதகத்தைக் கொடுமென்றார். அதைக்கண்டு ஸந்தோஷித்த பெற்றோர் அவருக்கு மோதகத்தை அளித்துத் தர்ம ஸூக்ஷ்மத்தை உணர்ந்த நீயே ஸகல தேவர்களிலும் முதலில் பூஜிக்கத்தக்கவன் என அருள் புரிந்தனர். முன் ஒரு ஸமயம் தேவர்கள் கணேசனைப் பூஜியாமல் அரக்கர்களோடு போர் புரிந்து பராஜயமடைந்து பரமசிவனைச் சரணமடைந்தனர். அவர் விநாயக பூஜை செய்து யுத்தத்திற்குச் செல்லுங்களென்றார். பின்னர் அங்ஙனமே செய்து அமரர் ஜயமடைந்தனர். அதேபோல் விநாயக பூஜையால் சித்ராதன் காலகேயனையும், ஜயந்தன் காலேயனையும், இந்திரன் பலிநமுசி முதலியவர்களையும், குகன் தாரகன் முதலியவர்களையும், எமன் துர்தர்ஷன் துர்முகன் முதலியவர்களையும், விஷ்ணு மதுவையும் வென்றனர்.

சூரியனைத் தர்சனம் செய்வதால் ஸகல பாபங்களும் அகல்கின்றன. அமாவாஸ்யை, ஸங்கராந்தி முதலிய புண்ய

காலங்களில் ஸத்பாத்ரத்தில் தானஞ்செய்தல், பிதுருக்களைக் குறித்து சிராத்தம்முதலியவைகள் செய்தலும் மிகஅவச்யம். மத்ய தேசத்தில், பத்ரேச்வரன் என்று ஓர் அரசன் இருந்தான். அவன் தானத்தில் சிறந்தவன். ஒருஸமயம் அவனது கையில் குஷ்டரோகம் தோன்றிற்று. ஸாதுக்களை அழைத்து அதற்கு ஓர் சாந்தி செய்து இதை அகற்றுங்கள். இல்லையேல் இக்கொடிய நோயின் துக்கத்தைச் சகியாமல் வனஞ்சென்று உயிரைத் துறப்பேன் என்றார். இதைக் கேட்ட ஸாதுக்கள் தீர்க்காலோசனை செய்து சூர்யனது மந்திரத்தை உபதேசித்து அர்க்கனை அர்ச்சித்துவா என்றனர். அங்ஙனமே அரசன் ஆதித்யனை அனேக ஆண்டுகள் ஆராதித்துவர சூர்யன் எதிரில் தோன்றி அரசனது நோயை அகற்றி, ஆரோக த்ருடகாத்திரராக இருக்கும்படி ஆசீர்வதித்துச் சென்றார். இங்ஙனம் துர்க்கை நவக்கிரஹம் முதலியவர்களைப் பூஜிப்பது நன்றாம். கிருதயுகத்தில் தபஸும் திரேதாயுகத்தில் த்யானமும், த்வாபரயுகத்தில் யக்ஞமும், கலியில் பக்தியும் சிறந்த மோக்ஷ சாதனமாம்.

ஸ்ருஷ்டி கண்டம் முற்றிற்று.

உத்தர கண்டம்.

ஜாலந்தரன். கௌரவர்களது சூதினால் பனிரண்டாண்டு வநவாஸம் புரியும் பாண்டவரருகே தேவமுனியான நாரதர் வந்தார். தர்மராஜன் அவரைப் பணிந்து நல்வரவு கூறி தாங்கள் படுந்துயரைக் கூறினார். நாரத ஸ்வாமி கூறினார். தர்ம! தேவராயினும் மூவராயினும் அவரவர் செய்தவினையை அவரவரே அனுபவிக்கவேண்டும். உலகெலாம் பரிபாலிக்கும் நாராயணமூர்த்தி கடல் குஹையில் வஸிக்கவில்லையா? அது ஏனெனில்; ஒரு ஸமயம் தேவேந்த்ரன் கைலாஸநாதனை நாட்யத்தால் ஸந்தோஷிக்கும்படி செய்தான். அவர் உனக்கு

யாதுவரம் வேண்டுமென்று வினவ, இந்த்ரன் தங்களைப்போல் ஓர் போர்வீரன் என்னோடு யுத்தம் செய்ய வேண்டுமென்றான். இவனது கர்வத்தைக்கண்ட சம்பு கோபங்கொண்டார். அவர் கோபத்திலிருந்து ஓர் பயங்கரமான பூதந்தோன்றிற்று. ஸமுத்ர ராஜனுக்கும் ஸிந்துவுக்கும் குழந்தையாகப் பிறந்து நீ இந்த்ரனை ஜயி என்று ருத்ரனவனுக்குக் கட்டளை யிட்டார். அங்ஙனமே சிசுவாகி ஸாகரத்திலிருந்து பயங்கரமாக அது கர்ஜித்தது. அதைக் கேட்டு மூவ்வுலகும் நடுங்கிற்று. கடலருகே கமலாஸனன் ஓடிவந்தார். அவர் மடியில் இக்குழந்தையை விட்டு தன் புதல்வனை ஆசீர்வதிக்கும் படி ஸமுத்ரம் கூறிற்று. அக்குழந்தை ப்ரும்மாவின் தாடியைப் பிடித்திழுத்தது. அவர், வலி தாளாது தன் தாடியை அச்சிறு குழந்தை கையிலிருந்து விடுவிக்க வேண்டிய முயற்சி செய்தார். அவரால் முடியாமற்போகவே ஸமுத்ர ராஜன் ஓடி வந்து இருவருமாகச் சேர்ந்து மிகச்ரமப்பட்டு தாடியிலிருந்து சிசுவின் கையை அகற்றினர். ஆதலால் ஜாலந்தரன் என்று பெயரிட்டு தேவராஜ்யத்துடன் பாதாளத்தையும் இவன் அனுபவிப்பான். தேவரால் இவனை ஜயிக்க முடியாதென பிரும்மா வரந்தந்தார்.

அசுர குருவான சுக்ரர் கூறியவண்ணம் ஸமுத்திரத்தினிடையே ஜாலந்தரபுர மென்றோர் நகரை நிர்மாணம் செய்து அஸுரசேனையுடன் ஜாலந்தரனங்கு வசித்தான். க்ரௌஞ்சராருளால் ஸ்வர்னை எனும் அப்ஸரஸினிடம் தோன்றிய ப்ருந்தையை அவன் மணந்தான். அவள் உத்தம பதிவ்ருதை. அசுரன் தனது சிறியதந்தையான பாற்கடலைக்கடைந்து அமிருதம் சந்ரன் லக்ஷ்மி ஐராவதம் முதலிய பொருளைக் கொள்ளை கொண்டதாகக்கூறி இந்தரனைக் குறித்து படை எடுத்துச் சென்றான். ப்ருஹஸ்பதியின் உபதேசப்படி சதமகன் ச்ரீதரனைச் சரணமடைந்தான். பகவான் கருடனை

அழைக்க, மஹாலக்ஷ்மி நாதனைப் பணிந்து எனது உடன் பிறந்தவனான ஜாலந்தரனை நீங்கள் கொல்லலாகாதென வேண்டினாள். அங்ஙனமே ஆகுக என்று கூறி நாராயணன் தேவர்களுடன்கூட போர்கோலங்கொண்டு அஸுரருடன் சண்டை செய்தார்.

பகவான் காலநேமியைக் கதையால் கொன்றார். ராகு சந்த்ரனை விழுங்கி தனது மிருக அடையாளத்தைச் சந்த்ரன் உடலில் வைத்துப் பிறகு கக்கிவிட்டான். அன்று முதல் சந்த்ரன் உடலில் ஓர் களங்கம் தோன்றிற்று. சந்த்ரனை அடித்துக் கையில் பிடித்துக்கொண்டு இந்திரனது ஐராவதத்தையுமபஹரித்து இரண்டையும் ஜாலந்தரனுக்குக் காணிக்கையாகக் கொடுத்தான். நமுசியை நாகபாசத்தால் கட்டி இந்த்ரன் பாதாளத்தில் தள்ளி பலியுடன் போர்புரிந்தான். சக்ரனது சௌர்யத்தைக் கண்டு பலி ஸந்தோஷங்கொண்டு உனக்கென்ன வரம் வேண்டுமென்றான். உன் உடலைக் கொடு என்று அமராதிபன் கேட்க அரக்கன் அஸ்த்ரத்தால் பிளந்து என் சரீரத்தை எடுத்துக்கொள் என்று பேசாமலிருந்தான். வஜ்ராயுதத்தால் அவன் பலியின் உடலைச் சேதிக்க அவ்வுத்தம த்யாகியினது சரீரத்திலிருந்து நவரத்நங்களும் லோஹங்களும் உண்டாயின. பலியின் பத்நீப்ரபாவதியெனும் ஆறுகப் பெறுகினாள். சைல ரோமன்சௌரியோடு போரிட்டு மாண்டான். ஜாலந்தரன் கருடனை மூர்ச்சிக்கும்படி அடித்தான். பகவான் தனது ரதத்தை நினைக்க அது ஸாரதி இல்லாமல் அருகேவந்தது. கருடனைத் தட்டியெழுப்பி ஸாரதியாக்கி நாலு புருஷார்த்தங்களைக் குதிரைகளாகச் செய்து அரக்கர் படையை அச்யுதன் அழித்தார். சுக்ரர் இறந்த ராக்ஷஸர்களை ஸஞ்ஜீவினி வித்தையால் எழுப்பி வந்தார். மாதவனது தூண்டுதலால் ப்ருஹஸ்பதி பாற்கடலிலிருந்து ஓஷதி பர்வதத்தைக் கொண்டு வந்து இறந்த ஸுரர்களைப் பிழைப்பித்தார்.

இதைக்கண்ட ஜாலந்தரன் போர்களத்தை விட்டு பாற்கடல் சென்றான். தேவருக்குதவிபுரியும் ஒஷதி மலையை விழுங்கி விடு என பாற்கடலைக்கூறினன். அது சரணாகதனைக் காப் பது எனது தர்மம் என்று கூற அவன் அம்மலையை ஓங்கி கையாலறைந்தான். அம்மலை அவனைச்சரணமடைந்து அவன் ஆணையின்படி பாதளஞ் சென்றது. அஸுரன் விஷ்ணு வின் எதிரே வந்துநகைத்து இப்போது என் செய்வீர்? வாரும் போருக் கென்றான். பிருஹஸ்பதி அம் மலை யைத் தேடி அது சென்ற விடம் தெரியாததால் தேவ ரிடம் வந்து சண்டையை நிறுத்துங்கள்! என்று கூறி னார். அங்ஙனமே அமர ரனைவரும் போரை விட்டுப் புறங் காட்டி ஓடினர். மாதவன் மட்டில் ஜாலந்தரனுடன் கடும் போர்புரிய அரக்கன் கருடனைக் க்ரௌஞ்சத்வீபத்தி லும் ரதத்தை ச்வேதத்வீபத்திலும் தூக்கி எறிந்தான். பூமியில் நின்று பத்மநாபன் அவனைக்கொல்லக் கருதி லக்ஷ்மிக் களித்தவாக்கை நினைத்து அவனைக் கொல்லாது அவன் பாண த்தால் தான் அடிபட்டுக் கீழே விழுந்தார். லக்ஷ்மிதேவி ஓடி வந்து ஸஹோதரனை ஸமாதானப் படுத்தினள். மூர்ச்சை தெளிந்த முகுந்தன் அஸுரராஜனே! உனது வீர்யத்தைக் கண்டு வியந்தேன். வேண்டிய வரத்தைக் கேள்! என்றார். அவனும் அச்யுதனைப் பணிந்து பாற்கடலைவிட்டுத் தாங்கள் செல்லலாகாது என்று வேண்டினன். அநந்தனும் அதற் கிசைந்து என்றும் பாற்கடலில் பள்ளி கொண்டான். தேவர் களைத் தாஸராக்கி ஜாலந்தரன் மூவுலகையும் தனதாளு கைக்குள்ளாக்கினன்.

இத்துன்பத்தைச் சஹிக்கமாட்டாமல் வானவர் பத் மாஸநனுடன் சந்த்ரசூடனைச் சரணமடைந்தனர். அவர் தன்னைவிட வேறில்லா தாமோதரனை நினைத்தார். மும்மூர்த் திகளும் ஒன்று சேர்ந்து தங்களது தேஜஸை அளித்து விச்வ

கர்மனைக்கொண்டு விசித்ரமானதோர் ஆயுதத்தைச் செய்வித்தனர். இதைக்கொண்டு அவ்வரக்கனைக் கொல்வதாக ருத்ரன் ப்ரதிக்ஞை செய்தார். இதை என் (நாரதர்) மூலமாக அறிந்த ஜாலந்தரன் ராகுவை அனுப்பி உமையை என்னிடமளித்து நீ புத்ரர்களுடன் பிச்சை எடு என்று பரமசிவனுக்குச் செய்தி அனுப்பிப் படைகளை அழைத்துக் கைலாஸத்தைத் தாக்கும்படி கூறி விஷ்ணு லக்ஷ்மி கடல் முதலியவர்களிடம் போருக்கு விடை பெற்றான். அவன் மனைவியான பிருந்தை பதியை வணங்கி பார்வதி எனும் அன்னையிடம் ஆசை கொள்ளாதே என்றாள். அச்சொல்லுக்குச் செவிமடுக்காது சுக்ருடன் கைலாஸஞ் சென்று ஸதாசிவனைக் காணாது மாநஸோத்தரம்என்ற மலைக்குச் சென்றான். சிவகணமும் ராக்ஷஸ கணமும் கைகலந்து கடும்போர் புரிந்தது. விநாயகனும் ஸ்கந்தனும் அடிபட்டதைக் கேட்டு காலகாலன் கடுங் கோபங் கொண்டு யுத்தரங்கம் சென்றார். அவருக்கு முன்சென்ற வீரபத்ரன் யானைமீது யானையையும் ரதத்தின்மீது ரதத்தையும் தூக்கி எறிந்து அரக்கர் ஸேனையை அடித்துக் கொன்றான். ருத்ரனது உருவைக்கண்ட ஜாலந்தரன் தனது வெற்றியில் ஆசை அற்றவனாக சும்பனுக்குத் தனது வேஷத்தை அளித்துப் போர்முனையில் நிறுத்தித் தான் பரமசிவ வேடம்பூண்டு பார்வதியினிடம் சென்றான். மாயையால் அறுபட்ட விநாயகரது தலையையும் சுப்ரமண்யரது தலையையும் படைத்து தேவியினருகே அதைக் காட்டி சோகக்கடலில் அவளை அமர்த்தினன். சில நாட் சென்றபின் தேவியைச் சிற்றின்பத்திற்கழைத்தான். தேவியும் நந்தியும் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர்.

இதனிடையில் சேஷசாயியின் உள்ளத்தே ஓர் ஐயமுதிக்க கருடனை அழைத்து வேகமாக கைலாஸத்தில் என்ன நடக்கிறது? அறிந்துவா என்றார். கணப்பொழுதில் கருடன்

தான் கண்ட காக்ஷியையும் கபட சங்கரனது கார்யத்தையுங் கூறினர். உடனே பகவான் அநந்தனை அழைத்து இருவரும் ரிஷி வேஷம்பூண்டு ப்ருந்தை இருப்பிடம் சென்றார். ஸ்ரீதரனது மாயையால் முதல்நாளிரவு கெட்ட கனவு கண்ட ப்ருந்தை பகவானிருப்பிடத்திற்கு வந்தாள். ஆங்கு ஓர் அஸுரன் வந்து அவளைத் தூக்க முயன்றான். அவள் அலருவதைப் பார்த்து பகவான் பெண்ணே! அஞ்சாதே !! உன்னைக்காக்கவே இங்கு வந்துளோம். பரத்வாஜ முனிவரது புதல்வன் யான். என் பெயர் தேவசர்மன். இவன் எனது சிஷ்யன். இதோபார் என் தவவலிமையை! என்று கூறி அரக்கனைச் சாம்பலாக்கினர். ப்ருந்தை பேரானந்தம்கொண்டு முனிவரை நம்பி அவர் பின் சென்றாள். ஆங்கு தன் பர்த்தாவின் தலைமட்டிலும் அறுந்து கிடக்கக் கண்டு மூர்ச்சை அடைந்தாள். தெளிந்தெழுந்து மஹர்ஷியைச் சரணமடைந்தாள். அவர் அத்தலையை ஏகாந்தத்தில் முத்தமிடு. உன் பதி பிழைப்பான் என்றார். அங்ஙனமே தன் கணவன் வரக்கண்டு ப்ருந்தை மட்டில்லாமகிழ்ச்சிகொண்டு அவரை இருகக்கட்டி அணைந்தாள். அவனே உண்மையான ஜாலந்தரனல்ல. முனி வேடம் பூண்ட முகுந்தனே ஜாலந்தரனாக வந்தார். பலநாள் அவருடன்கூடி அக்கட்டழகி காமஸுகத்தைப் பெற்றாள். இங்ஙனம் பலகாலம் செல்ல, ப்ருந்தையின் கற்பழிந்ததால் பரமசிவன் ஸுலபமாக ஜாலந்தரனைக் கொல்லக்கூடும் என்று எண்ணி பகவான் ஒருநாள் சயநத்தில் சங்க சக்ரகதாபாணியான தன் நிஜ உருவை ப்ருந்தைக்குக் காட்டினார். அவள் பகவானது மாயையை உணர்ந்து மிகக் கோபங்கொண்டாள். கபட முனி வேஷம் பூண்டு என்னை, நீர் ஏமாற்றியதால் உமது மனைவியை ஓர் கபடமுனி தூக்கிச்செல்வான் என சபித்தாள். கற்பிழந்தபின் கணநேரமேனும் ஜீவிக்க விருப்பில்லாதவளாகக் கடுந்தவம் புரிந்து காயக்லேசம்

செய்து கந்தர்வ லோகஞ் சென்ருள். அந்த இடமே ப்ருந்தாவநமென்றழைக்கப்படுவது.

ஜாலந்தர வதம்.

கங்கைக் கரையில் கணவனது ஜயத்தைநாடி கடுந்தவம் புரியும் காமாக்ஷியினிடம் சிவ வேடம்பூண்ட ஜாலந்தரன் சென்ருன். தேவி ஐயங்கொண்டு ஜயை எனும் தோழியை அனுப்பினுள். அவள் உமை வேஷம்பூண்டு அவனருகே சென்று அவனது காமவிகாரத்தைக் கண்டு அரக்கன் என்றறிந்து அம்பிகையிடம் வந்து கூறினுள். அன்னை வண்டுருபங் கொண்டு தாமரையில் தங்கினுள். இதனிடையில் சண்டமுண்டரெனும் தூதர்கள் வந்து ப்ருந்தையின் மரணத்தைப் பற்றி ஜாலந்தரனிடம் கூறினர். கோபங்கொண்ட அஸுரேசன் பரமசிவத்துடன் கடும்போர் புரிந்தான். ருத்ரனுல் கொல்லப்படும் அரக்கர் படை அனைத்தையும் சுக்ரர் ஸஞ்ஜீவினி வித்யையால் பிழைப்பித்து வந்தார். நீலகண்டன் ஓர் பெண் பூதத்தை அழைத்து ஸமர் முடியும்வரை சுக்ரனை விழுங்கி பின்னர் விட்டுவிடும்படி கட்டளையிட்டார். இவரது உக்ர ரூபத்தைக் கண்டு பயந்த தைத்யன் மாயையை அழைத்து உமா வேஷம்பூண்டு மன்மதாரியை மயக்கும்படி செய்தான். பிறகு சிவகணங்களைக் கொன்று தள்ளினுன். கருடத்வஜன் அதிவேகமாக வந்து இங்குள்ள நிலையைக்கண்டு வியந்து விருஷபத்வஜனைத் தேற்றி ரணத்திற்கனுப்பினுர். உலகெலாம் நடுங்கும்படி உக்ரகோபங்கொண்டு சூலத்தால் அரக்கர் படையை அரைக்ஷணத்தில் அழித்து ஜாலந்தரனுடன் சற்று போர் செய்து முடிவில் அவனையும் சூலாயுதத்தால் கொன்ருர். அமரரும் முனிவரும் மாதேவனை பூமாரிபொழிந்து பொன்னடிபோற்றி வணங்கித் துதித்துச் சென்றனர். வண்டின் வடிவைவிட்டு பர்வதராஜ குமாரி பரசிவத்துடன் கலந்து பேரானந்தம் பெற்ருள்.

துளஸீ. பிருந்தையின் சரீரமெரிந்தஇடத்தே மஹாவிஷ்ணு அவளிடம் கொண்ட அன்பால் பித்தனைப்போல் பிருந்தே பிருந்தே!! என்று சுற்றி வந்தார். தனது ஸஹோதரனது நிலையைக் கண்டு வருந்திய கௌரீ, அவரருகே வந்து அவர் வேர்வை ஜலத்தைப் பிருந்தையின் சாம்பலின்மேல் தெளித்தாள். அங்கு துளஸீ வநம் தோன்ற அதை ஆலிங்கனம் செய்துக்கொண்டு பகவான் தாபத்தை அகற்றி ஸந்தோஷங் கொண்டார். அத்துளஸீ பத்ரம் பகவானுக்கு ப்ரியமானது. ஆதலால் பகவதர்ச்சனைக்கு ஸகல குஸுமங்களைவிட ச்லாக்கியமானது துளஸீ. அதை ஸ்த்ரீகள் பரிக்கலாகாது. செவ்வாய் வெள்ளியிலும் ஏகாதசி த்வாதசிகளிலும் போஜநத்திற்குப் பிறகும் அதை எடுக்கலாகாது. எப்பொருளைத் தாநம் செய்தாலும் அதன்மேல் ஒரு துளஸி தளத்தை வைத்துக் கொடுக்க வேண்டும். உலர்ந்த துளஸிக் கட்டையால் ஹோமம் செய்வதும், அதைக்கொண்டு பாகம் செய்து பகவானுக்கு நிவேதனம் செய்வதும் மிக புண்யகரமாம். துளஸியைப் பூஜிக்கும் வீட்டில் அபமிருத்யு வியாதி பூதப்ரேத பிசாசங்கள் அணுகுவதில்லை. ப்ரதி த்வாதசியிலும் துளஸியைப் பூஜித்து அது கதிர்விட்டதும் ரிதுவானுள் என்று நினைத்துப் புட்டு சமைத்து விதிப்படி பகவானுடன் அதற்கு விவாஹம் செய்துவைப்போர் கோரிய பலனைப் பெறுவர். துளஸியின்மேல் பட்டவாயு நம்மேல் பட்டாலும் போதும். ஸகல ரோகங்களுமகலும். பாபம் துலையும். துளஸியால் பகவானைப் பூஜிப்போர் தாரித்ர்யமகன்று தனிகராவர். துளஸீ ஸாளக்ராமம் கங்கை இம் மூன்றும் துல்யமாம். துளஸீ விருதம் என்பதை மூன்று நாள் விதிப்படி அநுஷ்டிப்போர் வைகுண்டம் செல்வர்.

வ்ரததாநம்.

நம்மை நரகத்தில் விழாமல் காப்பதால் தாநம் பெறு

வாருக்குப் பாத்ரமென்று பெயர். அவர் வேதமறிந்து கர்மாநுஷ்டாநபரராய் அடிக்கடி பலரிடம் தாநம் வாங்காத வராய் ஏழையாய் பேராசை யற்றவராயிருந்தால் ஸத்பாத்ர மெனப்படுவர். ஸத்பாத்ரத்தில் செய்த தானம் அக்ஷயமான பயனை அளிக்கும். மார்கழி மாதம் ஏகாதசியில் துவக்கி ஓராண்டு தீபத்தை விதிப்படி பூஜித்து தாநம் செய்வது தீப் வ்ரதம் எனப்படும். ஸரஸ்வதீ நதிக்கரையில் கபிலர் என் னேர் பூஸுரர் இருந்தார். அவர் மிக்க தரித்திரராதலின் அன்றன்று பிக்ஷை எடுத்து தீபத்தில் பகவானை அர்ச்சித்து அதிதிக்கன்னமிட்டு மிகுதியைப் புஜிப்பார். அவரில்லத்தில் சேமித்திருந்த எண்ணையையும் வர்த்தியையும் எலி கொண்டு போயிற்று. அவர் மிக ச்ரமபபட்டு புதிது புதிதாக எண் ணேயும் வத்தியும் தேடி தீப பூஜை செய்வார். எலி தனக்குத் தீனி கிடைத்ததென்று அவ்வீட்டில் குடிகொண்டு குழந்தை குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. இதை அறிந்து ஓர் பூனை அநாயாஸமாக ஆ ாரங் கிட்டியதென்றெண்ணி அவ்வீடு சென்று பல எலிகளைப் புஜித்து ஸந்தோஷமடைந்தது. ஓர் ஏகாதசியன்று தீப பூஜை செய்து கபிலர் கண் விழித்து வந்தார்.

அவரை அறியாமல் நித்ரை அவர் கண்ணை மூடிற்று. அச்சமயம் தீபம் மந்தமாக எரிய எலி எண்ணையைக் குடிக்க வந்தது. அதைப்பிடிக்க பூனை தாவியபொழுது எண்ணைப் பாத்ரம் கவிழ்ந்து விளக்கில்விழ தீபம் ப்ரகாசமாக எரிந்தது. மறுநாள் காலையில் கபிலர் பாரணை செய்தவுடன் அவருக்கு ஓர் விமானமும் தற்செயலாக அவியுந் தருவாயிலுள்ள தீபத் தை ப்ரகாசப்படுத்திய பூனைக்கோர் விமானமும் ஸ்வர்க்கத் திலிருந்துவர இருவரும் அதிலேறிச் சென்றார்கள். மறு பிறப்பில் பூனை ஸுதர்மா என்ற அரசனாகவும் எலி ரூபசுந் தரி எனும் அவன் மஹிஷியாகவும் பிறந்தது. தீப பூஜை

யாலும் தானத்தாலும் கண்நோய் அகலும். அக்னியினிடமிருந்து ஸ்வர்ணமும் விஷ்ணுவினிடம் பூமியும் ஸூர்யனிடம் பசுக்களும் உண்டானபடியால் ஸ்வர்ணபூகோதானங்கள் ஸகல தானங்களிலும் சிறந்தவைகளாம். தானம் செய்வோரது பித்ருக்கள் ஸந்தோஷங்கொண்டு இவர்களை ஆசீர்வதிக்கின்றனர்.

ஏகாதசீ த்வாதசீ த்ரயோதசி இந்த மூன்றும் எந்ததினத்தில் நேரிடுகிறதோ அந்த ஏகாதசிக்கு த்ரிஸ்ப்ருசா என்று பெயர். இது ஸகல பாபங்களையு மகற்றவல்லது. தாலஜங்கனெனும் அஸுரனுக்கு மரு என்றோர் புத்ரனிருந்தான். சந்த்ரவதி எனும் பட்டிணத்தில் வஸித்து வந்த அவன் ஸகல தேவர்களையும் பீடித்துவந்தான். உலகை ரக்ஷிப்பதற்காக பரமாத்மா அவனுடன் ஆயிரமாண்டு போர்புரிந்து களைத்து ஓர் குஹையில் படுத்துறங்கினர். அவரது உடலிலிருந்து ஓர் கன்யகைதோன்றி அவ்வரக்கனைக் கொன்றாள். அவளைக் கண்டு பரமாநந்தங் கொண்ட பத்மநாபன், பெண்ணே! உனக்கு ஏகாதசி என்று பெயர். உபவாஸமிருந்து உன்னை எவர் பூஜிக்கிறாரோ அவர் பிறவிக்கடலைத் தாண்டுவர். வைகுண்டம் செல்வர் என்றார். ஏகாதசியன்று உபவாஸமிருந்து இரவெலாம் பகவதர்ச்சனை செய்து பகவந்நாமோச்சாரணத்தாலோ புராண ச்ரவணத்தாலோ கண் விழிப்பவரது மஹா பாபங்கள் அகலும். கண்விழிப்போர் பிறரை நிந்தித்தாலும், மனந்தெளியாமல் ஏதாவதொன்றைச் சிந்தித்துக் கொண்டிருந்தாலும், வீண்வம்பு பேசினாலும், பக்தியில்லாமல் பாடினாலும் இருட்டிலிருந்தாலும் உபசாரமில்லாமல் பூஜித்தாலும், பெரியோரிடம் உதாஸீநமாக நடந்தாலும் பிறரை நிந்தித்தாலும் நாடகம் பார்த்தல் முதலிய பாபத்தைச் செய்தாலும் ஜாகரண பலனைப்பெறாததோடு நரகமும் செல்வர்.

25 ஏகாதசிகளின் மஹிமை.

மார்கழிமாத சுக்ல பக்ஷ ஏகாதசிக்கு உத்பத்தி என்று பெயர். கிருஷ்ண ஏகாதசி மோக்ஷை எனப்படும். அன்று உபவாஸமிருந்து கண்விழித்துப் பகவானைப் பூஜிப்போரது பித்ருக்கள் நற்கதி பெறுவர். சம்பகநகரத்தில் வைகாநஸன் எனும் அரசன் ஓரிரவு தனது தந்தை நரகதுக்கம் பொறுக்க முடியாமல் தன்னிடம்வந்து கதறுவதாகக் கனவுகண்டான். இதனுண்மையை அறிய பர்வதரெனும் மஹரிஷியினிடம் சென்றான். அவர் ஞானக்கண்ணால் அறிந்து, அரசே! உனது தந்தை ருது காலத்தில் மனைவியை மறந்து மற்றோர் காரியத்தைக் கவனித்ததால் இத்துன்பத்தை அடைகிறான். மோக்ஷைகாதசியன்று விருதமிருந்து வைகுண்ட வாஸியைப் பூஜித்து அப்புண்ணியத்தை அவனுக்களி என்றார். அங்ஙனமே வைகாநஸன் அநுஷ்டித்துப் பிதாவை ஸ்வர்க்கத்திற் கனுப்பினான்.

தைமாத க்ருஷ்ண ஏகாதசி ஸபலை எனப்படும். அன்று உபவாஸமிருந்து பழங்களைப் பகவானுக்கர்ப்பணம் செய்து தீபதானம் செய்யவேண்டும். சம்பாவதி பட்டணத்தில் மாஹிஷ்மதனென்ற அரசனுக்கு ஐந்து புதல்வரிருந்தனர். லும்பகன் எனும் மூத்த புத்ரன் பரஸ்த்ரீயை அபஹரித்தல் முதலிய பாபங்களைச் செய்துவந்தான். ஆதலால் அவனது தந்தை அவனைக் காட்டிற்குத் துறத்திவிட்டார். ஆங்கு சென்று அவன் கள்வருடன் கலந்து களவாடி அரசகுமாரனென்றறிந்த காவலாளிகளால் விடப்பட்டான். வேடருடன் சேர்ந்து வேட்டையாடி ஜீவித்தான். ஒரு நாள் ஓர் அரச மரத்தின்கீழ் பல பழவர்க்கங்களைக் கொண்டுவந்து அருகில் வைத்துக்கொண்டு பின்னரதைத்தின்னலாமென படுத்தான். குளிர் மிகுதியால் அக்கனிகளைப் புஜிக்க முடியாமல் ஈசா! உனக்கே இவைகளைத் தந்தேன்! என் குளிர் நீங்காதா? என்று

இரவெல்லாம் கண்விழித்திருந்தான். அத்தினம் ஸபலை ஏகாதசி நாளானதால் இவனது பாபத்தையகற்றி நற்புத்தி அளித்து பகவான் ராஜ்யத்தையு மவனுக்களித்தார். தை சுக்ல ஏகாதசி புத்ரதா எனப் பெயருள்ளது. இதை விதிப்படி அனுஷ்டிப்போர் புத்ர பாக்யத்தைப் பெறுவர். பத்ராவதீ நகரில் ஸுகேதுமான் என்றரசன் சம்பகை எனும் உத்தம மனைவியுடன் பூவுலகை ஆண்டுவந்தான். அவனுக்கு எல்லா பாக்யமிருந்தும் புத்ர செல்வமில்லாமையால் மிக மனம் நொந்து பற்பல காம்யகர்மங்களைச் செய்தான். அப்போதும் அப்பாக்யம் கைகூடாததால் மனம் முறிந்து ஒரு வருமறியாமல் குதிரைமீதேறி கானகம் சென்றான். ஆங்கு ஓர் அழகிய தடாகத்தில் திவ்ய ரூபம் வாய்ந்த சிலர் புனலாடக்கண்டு, அவரருகே சென்று வணங்கித் தாங்கள் யார்? என்று அரசன் வினவினான். அவர்கள், நாங்கள் விச்வ தேவர்கள். ஸமீபத்தில் புத்ரதாஎன்ற ஏகாதசி வரப்போகிறது. அன்று உபவாஸமிருந்து பரமனைப் பூஜிப்போர் புதல்வனைப் பெறுவர். அதை நாடி விருதம் புரிய நாங்களிங்குவந்தோம் என்றனர். இவ்வரசனும் அங்கு புனலாடி புண்ய விருதம் செய்து புத்ரபாக்யத்தைப் பெற்றான்.

மாசி க்ருஷ்ண ஏகாதசி ஷட்திலா எனப்படும். அன்று கோவின் சாணியைப் பூமியில் விழாமல் கையிலேந்தி எள்ளையும் பருத்திக்கொட்டையையும் அதுடன் கலந்து பிண்டமாகச் செய்து பகவத்பூஜை செய்யவேண்டும். அது பௌர்ணமி வரை உலராமலிருந்தால் நமது பாபமகன்று புண்யமுண்டானதென்றறியலாம். முன்னோர் ஸமயம் ஓர் ப்ராம்மண ஸ்த்ரீ தானம் ஒன்றைத்தவிர மற்ற ஸகல தர்மங்களையு மநுஷ்டித்துவந்தாள். பகவான் அன்னதானத்தின் பெருமையைக் கூற அவளெதிரே ஓர் ப்ராம்மண பிக்ஷு வேஷங்கொண்டுவந்தார். அவள் அவரை வரவேற்று பூஜித்து யோக க்ஷேமம்

விசாரித்தாள். அவர், அம்மா! பசிக்குக் கொஞ்சமன்னமிடு என்று தனது பிக்ஷாபாத்திரத்தை நீட்டினார். கோபங் கொண்ட அவள் ஓர் மண் கட்டியை எடுத்து அப்பாத்திரத்தில் போட்டாள். அவர் உடனே மறைந்துவிட்டார். சில நாட் சென்றபின் அவள் இறந்து புண்யபலத்தை அனுபவிக்க வைகுண்டம் வந்தாள். அங்கு அவளுக்கு அன்னத்தைத் தவிர மற்ற பொருளைக்கொண்டு ராஜோபசாரம் நடந்தது. அழகிய ஒரு அரண்மனை அவளுக்களிக்கப்பட்டது. அவள் அதைச் சுற்றிப் பார்த்து ஆஹார மில்லாமல் பகவானை வணங்கி அன்னம் வேண்டினள். பகவான், உன்னைத் தர்சிக்க தேவகன்யகைகள் வருவார்கள். அவர்களிடமிருந்து ஷட்திலா புண்யத்தைப் பெற்று அவர்களுக்குத் தர்சநமளி. உன் பசி அகலுமென்றார். அங்ஙனமே அவள் தன்வீடு சென்று வாயற்கதவைத் தாளிட்டுக் கொண்டாள். தேவ ஸ்த்ரீகள் கதவை இடித்தபோது ஷட்திலா புண்யத்தை அளித்தால் கதவைத் திறப்பேனென்றாள். எல்லோரும் அதை அளிக்க மனமில்லாமல் செல்ல, ஒருவள் மட்டிலும் அப் புண்ணியத்தை அளித்தாள். அதனால் அவள் பசி அகன்றது.

மாசி சுக்ல ஏகாதசிக்கு ஜயா என்று பெயர். பிரும்மஹத்தியையும் பிசாசத்தன்மையையும் அது நீக்கவல்லது. புஷ்பவந்தி மால்யவான் என்ற கந்தர்வதம்பதி, தேவேந்த்ரனது ஸபையில் பாடும்போது, பரஸ்பரம் உள்ள காமவிகாரத்தால் அபஸ்வரமாகப் பாடினார்கள். அதை அறிந்த இந்த்ரன் பிசாசங்களாகும்படி அவர்களைச் சபித்தான். அங்ஙனமே பலகாலம் அவர்கள் பிசாசங்களாகப் பிறந்து அலைந்து திரிந்து ஒரு நாள் துக்கத்தினல் உணவுகொள்ளாது இராவெலாம் கண் விழித்துத் தங்கள் நிலையைக் கருதிக் கதறினர். தற்செயலாக அன்று ஜயா ஏகாதசியானதால் பிசாச நிலை நீங்கி ஸ்வர்க்கம் சென்றனர்.

பங்குனி கிருஷ்ண ஏகாதசி விஜயா எனப்படும். ஸ்ரீ ராகவன் பகதால்ப்யர் என்ற முனிவரால் உபதேசிக்கப்பட்டு இவ்விருதத்தை அநுஷ்டித்து ராவணன் முதலிய சத்ருக்களை வென்று ஸீதாதேவியை அடைந்தார். பங்குனி சுக்ல ஏகாதசி ஆமலகை எனப்படும். முன்னொரு ஸமயம் நெல்லிமரம் புதிதாகத் தோன்ற அதனருகே சென்று பிரும்மாதி தேவர்கள் இது என்ன விருக்ஷம்? அபூர்வமாகக் காணப்படுகிறதே! என்று ப்ரமைகொண்டு விழிக்க பகவான் அசரீரியானவாக்காக இருந்து தேவர்காள்! யானே இவ்வபூர்வ மரமாகத் தோன்றியவன். என்னை ஆமலக ஏகாதசியன்று ஜாமதக்ந்யராக எண்ணி ஸ்வர்ண பிம்பம் செய்து ஆமலக மரத்தடியிலே பூஜை செய்வோர் வைகுண்டம் செல்வர் என்று கூறினர்.

சித்திரை க்ருஷ்ண ஏகாதசி பாபமோசநிகா எனப்படும் முன்னொர் ஸமயம் சைத்ரரதத்தில் மேதாவி என்றோர் முநி தவஞ்செய்து வந்தார். மஞ்சுகோஷை என்ற அப்ஸரஸ் அவரை மயக்கி அவருடன் கலந்து பலநாள் காமஸுகத்தை அனுபவித்து வந்தாள். ஒருநாள் தனது தபஸ் இவளால் குறைந்ததைக்கண்டு கோபங்கொண்ட மேதாவி அவளை விட்டுப் பிறிந்து ச்யவநமுநிவரை அடுத்து பாபமோசினீ ஏகாதசியால் இழந்த தபஸைத் திரும்பப் பெற்றார். சித்திரை சுக்ல ஏகாதசிக்குக் காமதை என்று பெயர். நாகபுரத்தில் புண்டரீகன் என்றோர்ரசனிருந்தான். அவனது ஸபையில் ப்ரதி தினம் கந்தர்வர் வந்து ஆடுவது வழக்கம். லலிதை எனும் தன் மனைவியினிடம் அதிக ஆசை கொண்டவனாதலால் அவளை விட்டுவந்து லலிதன் ஆடும்போது மனைவியையே நினைத்திருந்தான். ஆதலால் நாட்டியத்தில் பல தவறுதல்கள் நேர்ந்தன. அரசன் கோபங்கொண்டு அவனை ராக்ஷஸனாகும்படி சபித்தான். லலிதை ஓர் மஹர்ஷியை அடுத்து காமதா ஏகாதசியால் தன் கணவனுக்கு வந்த சாபத்தை அகற்றினாள்.

வைசாக கிருஷ்ண ஏகாதசி வரூதினி எனப்படும். இத ஞல் துந்துமாரன் முதலியவர்கள் ஸ்வர்க்கஞ் சென்றனர். இவ்வேகாதசியில் செய்யும் தானம் ஆயிரம் மடங்கு பலனை அளிக்கவல்லது. வைசாக சுக்ல ஏகாதசி மோஹினீ எனப் படும். ஸரஸ்வதீ தீரத்தில் பத்ராவதி எனும் நகரில் த்ரிதி மான் என்ற அரசன் ராஜ்யபாரம் செய்யும்போது ஆங்கு தனபாலன் என்றோர் வைச்யனிருந்தான். அவனது ஐந்து குமாரரில் த்ருஷ்டபுத்தி என்ற கடைவன் மிகப்பாபியாக இருந்தான். அவன் மறந்தும் நற்கார்யம் செய்யான். அவன் செய்யாத பாபமில்லை. தந்தை இவனை விறட்டி விட்டார். தீயருடன் சேர்ந்து திருடினன். சோரனுக்குரிய சிக்ஷை பெற்றான். வேடவிருத்தியைக் கைகொண்டு பல ஜீவஹிம் ஸை செய்தான். வயது முதிர்ந்து மூப்புக்கும் பிணிக்குமா ளாகி சொல்லொணுத் துன்பத்தைஅனுபவித்தான். ஒரு ஸம யம் தற்செயலாக கௌண்டின்ய முனிவரது ஆச்ரமஞ் சென் றான். கங்கா ஸ்நாநம் செய்து கரை ஏறிய கௌண்டின்யரது வஸ்த்ரத்திலிருந்து ஓர் ஜலத்திவிலை அவன்மேல் விழ, அவன் பாபமகன்றது. தான் நற்கதி பெற வழிகாட்டும்படி அவரை வணங்கி வேண்டினன். மோஹத்தை அகற்றும் மோஹினி ஏகாதசியை உபதேசித்தாரவர். அதனுல் அவன் ஸ்வர்க்கம் சென்றான்.

ஆனிக்ருஷ்ண ஏகாதசிக்கு அபரா என்று பெயர். இது ஸகல துரிதங்களையுமகற்ற வல்லது. ஆனி சுக்ல ஏகா தசி நிர்ஜலா என்றழைக்கப்படும் வ்ருகம் என்ற ஜடராக் நியால் அதிக பசியுள்ள பீமன் தன்னுடன் பிறந்தவரனை வரும் ஏகாதசி உபவாஸ மிருக்க வியாஸரை அடுத்து என்னுல் ஏகாதசி உபவாஸ மிருக்க முடியாது. எல் லா ஏகாதசிகளின் பயன்மட்டிலும் எனக்கு வரவேண் டும். அதற்கேற்ற உபாயத்தை உபதேசியுங்கள் என்று

வேண்டினன். அவர், நிர்ஜலாதிநத்தன்று ஜலங்கூட அருந் தாமலிருந்தால் ஏனைய ஏகாதசி பலனைப் பெறுவாய் என்றார். அங்ஙனமே பீமன் அநுஷ்டிக்க அன்றுமுதல் பாண்டவ ஏகாதசி என்றுமதற்கு மற்றோர் நாமமுண்டாயிற்று. ஆடி கிருஷ்ண ஏகாதசி யோகினீ எனப்படும். அலகாபுரியில் குபேர னுக்கு ஹேமமாலி என்றோர் கிங்காரனிருந்தான். ப்ரதி திநம் மாநஸஸரஸிலிருந்து ஸ்வர்ணபத்மங்களைக் குபேரனது சிவ பூஜைக்குக் கொண்டுவர வேண்டியது அவனது கடமை. ஒரு நாள் விசாலாக்ஷி எனும் தனது மனைவியுடன் கூடிக்களித்து கடமையை இவன் மறந்தான். பூஜையிலமர்ந்தகுபேரன் புஷ்பத்தைக் காணுமல் பதினெட்டுவித குஷ்டத்தாலும் பீடிக்கப்பட்டு நீ மனிதனுவாய் என்று அவனைச் சபித் தான். அங்ஙனம் பலகாலமவன் சொல்லொணுத்துயர மனுபவித்து மார்க்கண்டேயரது அருளால் யோகினீ விருதம் செய்து சாபமகன்று தந்நிலை பெற்றான். ஆடி சுக்ல ஏகாதசி சயினீ எனப்படும். மஹாபலியின் கர்வத்தை அகற்றி நற்கதி அளிக்க பகவான் வாமனனுகவும் த்ருவிக்ரமனுகவுந் தோன்றி களைத்தவர்போல் இவ்வேகாதசி யன்று படுத்துறங்கி கார்த் திகையில் எழுந்திருக்கிறார். இந்நான்கு மாதமும் சாதுர் மாஸ்யமெனப்படும். அது ஸமயம் நாம் பூமியில் படுத்து ஆவணியில் சாகங்களையும் புரட்டாசியில் தயிரையும் அற்பிசி யில் பாலையும் கார்த்திகையில் நெய்யையும் பருப்புகளையும் உட்கொள்ளலாகாது. ஆவணிக்ருஷ்ண ஏகாதசிக்குக் காமிகை என்று பெயர். இவ்வேகாதசியில்துளஸீ தளத்தால் தாமோ தரனை அர்ச்சித்து தீபதாநம் செய்வோர் ஞானத்தைப் பெற்று முடிவில்மோக்ஷமடைவர். ஆவணி சுக்ல ஏகாதசி புத்ரதா எனப்படும். முன்னோர் த்வாபரயுகத்தில் மாஹி ஷ்மதீ நகரில் மஹீஜித்என்றோரரசன் புத்ரபாக்யமில்லாமல் வருந்தினன். இவனதுகுறையை அகற்ற வேதியர் பலர்

ஒன்றுகூடி லோமசரை அடுத்தனர். அவர், இவ்வரசன் முற்பிறவியில் வைச்யனாக இருந்தான். தாஹங்கொண்டு தண்ணீர் அருந்த தடாகம் சென்றான். ஆங்கு கன்றுடன் ஜலம் பருக வந்த கோவை ஓட்டித்தான் தண்ணீர் அருந்தினான். அப்பாபத்தால் புத்ரபாக்யத்தை இழந்தான். புத்ரதா விருதம அனுஷ்டித்து புதல்வனைப் பெறட்டுமவன் என்றார். அங்ஙனமே அரசன் தநயனைப் பெற்றான். புரட்டாசி க்ருஷ்ண ஏகாதசி அஜா எனப்படும். ஸத்யத்திற்காக நாடுநகரத்தையும் மனைவி மக்களையுமிழந்த அரிச்சந்திரன் கௌதமரது உபதேசத்தால் அஜா விருதத்தை அநுஷ்டித்து நாட்டையும் ஸ்வர்க்கத்தையும் அடைந்தான். புரட்டாசிசுக்ல ஏகாதசி பத்மநாபை என்றழைக்கப்படும். மாந்தாதாவினது ஆளுகையில் மூவ்வாண்டு மழைபொழியாதொழிந்தது. பயிர்கள் அழிய குடிகள் தவிக்க மாந்தாதா ஆங்கிரஸரை அடுத்து பத்மநாபா வ்ருதத்தால் மழை உண்டாகும்படி செய்தான். ஐப்பிசி க்ருஷ்ண ஏகாதசி இந்திரா எனப்படும். நாரதர் இந்த்ரஸேனன் எனும் அரசனது ஸபைக்குவந்து அவன் முன்னோர்கள் நரகத்தில் மிகத் துயரமனுபவிப்பதாகக் கூறி இந்திரா விருதத்தால் அவர்களுக்கு நற்கதி அளி என்றார். அங்ஙனமே அரசன் அநுஷ்டித்து முன்னோரை ஸ்வர்க்கத்திற்கனுப்பினான். ஐப்பிசிசுக்ல ஏகாதசி பாபாங்குசா எனப்படும். இது ஸகல பாபங்களையுமகற்றும். கார்த்திகை க்ருஷ்ண ஏகாதசி ரமா எனப்படும். முசுகுந்தன் என்ற விஷ்ணு பக்தனுக்கு சந்த்ரபாகா என்றோர் கன்யகை இருந்தாள். சோபநன் என்ற ராஜ குமாரனுக்கு அவள் மாலை இட்டாள். சோபநன் ஓர் ஸமயம் மாமனார் வீட்டிற்கு வர அன்று ஏகாதசியாக இருந்ததால் அவ்வூரில் ஒருவரும் உணவு உட்கொள்ளாததைக் கண்டான். பசியால் வாடி சந்த்ரபாகையைத் தனக்கு ஏதேனும் உணவு அளிக்கும்படி

வேண்டினன். அவள், ஸ்வாமிந்! இன்று இங்கு பசு கூட புல் தின்னாதே! என்றுரைத்து ஒன்றும் கொடாமலிருந்தாள். பசியால் இறந்த சோபநன் ஏகாதசி உபவாஸ புண்யத்தால் மந்தரமலையில் ஓர் ராஜ குமாரனாகத் தோன்றி, ஸோமசர்மாவின் மூலமாக சந்த்ரபாகையை அழைத்து அங்கு ஸுகமாக வாழ்ந்தான். கார்த்திகைசுக்ல ஏகாதசி ப்ரபோதினீ என்று கூறப்படும். அச்சமயம் துளஸீ தளத்தால் அச்யுதனை அர்ச்சித்து பாகவதம் கேட்போர் முக்தி பெறுவர். துளஸியைத் தர்சிப்பது, தொடுவது, த்யாநம் செய்வது, அதன் நாமாவை உச்சரிப்பது, துதிப்பது, நடுவது, ஜலம் விடுவது, நித்யம் பூஜிப்பது, நமஸ்கரிப்பது, என்ற ஒன்பது விதமான பக்தி செய்வோர் இஹபர சுகம் பெறுவர். அதிக மாஸம் வரும் ஏகாதசி கமலா எனப்படும். அவந்திநகரில் சிவசர்மா என்பவர் இளைய குமாரன் மிக பாபியாயிருந்ததால் அவனை வீட்டைவிட்டுத் துறத்தி விட்டார். அவன் பசியால் மெலிந்து ப்ரயாகையில் ரிமித்ரர் எனும் முனிவராச்ரமஞ் சென்றான். அன்று கமலா விருத மநுஷ்டிப்பதால் இவனுக்கு அங்கும் உணவு கிடைக்கவில்லை. இரவெலாம் அவர் கூறிய ஏகாதசி மஹிமையைக்கேட்டுக் கண் விழித்திருந்தான். காலையில் கமலாதேவி அவனுக்கு ப்ரத்யக்ஷமாகி பல வரங்களை அளித்து மறைந்தாள். பகவான் படுத்துறங்கும் நாலு மாதத்திலும் சாதுர் மாஸ்யம் என்ற விருதத்தை அநுஷ்டித்து உத்யாபநம் செய்வோர் வைகுண்டம் செல்வர். மார்கழிமாத கிருஷ்ண பக்ஷத்வாதசீ முதல் ப்ரதி மாதமும் கிருஷ்ண த்வாதசியில் விருதமிருப்போர் வைதரிணீ எனும் எமலோகத்திலுள்ள நெருப்பாற்றைச் சுலபமாகத் தாண்டுவர்.

ச்ரவண த்வாதசீ.

பாத்ரபத சுக்ல த்வாதசீ ச்ரவண நக்ஷத்ரத்துடன்

கூடியபோது, மிக புண்யகரமான திநமாகும். புதனன்று ச்ரவண த்வாதசீ சேர்ந்தால் அத்யந்த புண்யநாளாகுமது. அன்று நதீ ஸ்நாநம் செய்து கலசத்தில் பகவானை ஆவாஹநம் செய்து பூஜித்து அன்னதாநம் செய்வோர் கோரிய பலனைப் பெறுவர். தாசேரகமென்ற தேசத்திலிருந்து வைச்யர்கள் ஒன்றுகூடி வியாபாரம் செய்ய தேசாந்தரம் சென்றனர். அதிலொருவன் கோஷ்டியை விட்டுப் பிறிந்து வழி தெரியாமல் பெருங் காட்டில் நுழைந்து பசிதாஹத்தால் வாடி களைத்து நின்றான். அவனெதிரே அநேக ப்ரேதங்கள் ஒன்றுகூடி வரக்கண்டு நடுங்கினான். ஓர் ப்ரேதம், வைச்ய! அஞ்சாதே! பகலில் இம்மரத்தின் கீழ் உனக்குரிய உணவு வரும் அதை உண்டுசெல் என்றது. அங்ஙனமேவந்த அன்னத்தைப் புஜித்த வைச்யன் ஆச்சரியமடைந்து தாங்கள் யார் என்று ப்ரேதத்தை விசாரித்தான்.

அப்ரேதம் சொன்னது:—முற்பிறப்பில் யானும் ஓர் வைச்யனாயிருந்தவன். எனது நண்பன் ஓர் பூசுரன். அவனுடன் தாபீ என்ற நதிக்குச் சென்றேன். அன்று ச்ரவண த்வாதசியாதலின் எனது மித்ரனைப்போல் புனலாடி உபவாஸமிருந்தேன். தனலோபத்தால் அவர் செய்ததைப் போன்ற அன்னதாநாதிகளைச் செய்ய வில்லை. ஆதலால் எனது பரிவாரத்துடன் மற்ற மித்ருடனும் இப்பிரேதப் பிறவி பெற்றேன். இதோ நாங்கள் தேடிப்புதைத்த தநமுள்ளது. அதைக்கொண்டு கயையில் எங்களது குலகோத்ரத்தைக்கூறி பிண்டமளி என்றது. அங்ஙனமே அவன் செய்ய அனைவரும் நற்கதி பெற்றனர்.

ஆடி மாதத்தில் நதிகளில் புதிய ப்ரவாஹம் வரும் போது த்ரிராத்ரம் என்ற விருதத்தைஅநுஷ்டிக்கவேண்டும். வ்ருதாநுஷ்டாநம் செய்ய முடியாதவர் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தையேனும் ஜபிக்கவேண்டும். அதனால்தான் பார்வதி

தேவி பரமசிவனது பாதி உடலைப் பெற்ருள். அதையும் ஜபிக்க முடியாதவர் ஸ்ரீராம நாமாவையாவது ஜபிக்கவேண்டும், கலியில் பகவந்நாமாவைவிட பாவநமான தர்மம் வேறில்லை.

ரிஷி பஞ்சமீ. பாத்ரபத சுக்லபஞ்சமியில் இதைஅநுஷ்டிக்கவேண்டும். தேவசர்மா என்ற ஓர் ப்ராஹ்மணன் அக்நிஹோத்ரம்முதலிய ஸத்கர்மாநுஷ்டாநம் செய்துவந்தார். அவர் தனது பிதாவின் ச்ராத்த தினத்தன்று மிக பக்திச்ரத்தையுடன் அதை அநுஷ்டித்தார். அவர் வீட்டில் கட்டியுள்ள காளையைப்பார்த்து அருகிலுள்ள பெண்ணுய், நாத! இவ்வீட்டில் எனது நாட்டுப்பெண், பாலைக்குடித்து மூடாமல் வைத்தாள், அதை ஓர் ஸர்ப்பம் குடித்தது. அது விஷஸம்பந்தமுள்ளதாதலின் குழந்தைகளுக்கு ஆபத்து வருமே! என்றஞ்சி அதை யான் குடித்தேன். அதைக்கண்ட அவள் தடியால் என் இடுப்பை முறித்தாள். யான் படுந்துயரைத் தைவமே அறியும் என்றது. காளை நாயைப்பார்த்து இன்று பிராமண போஜனம் செய்துவைத்தானே அன்றி எனக்கோர் பிடி புல்லும் அளிக்கவில்லை; ஜலமும் காட்டவில்லை. என் துன்பத்தை என்னென்று கூறுவேன் என்றது. இதைக் கேட்டு வியந்த தேவசர்மா வஸிஷ்டரை வணங்கி இவர்கள் யார்? ஏன் இப்பிறவி பெற்றனர்? என்று கேட்டார். அவர் ஞாநக்கண்ணுல் நடந்ததை அறிந்து கூறினர். இவர் உன் பிதா, அவள் உன் தாய். ரிஷி பஞ்சமி விருதத்தை இவர்கள் அநுஷ்டிக்காம லிருந்தனர். அன்றியும் பித்ரு ச்ராத்த தினத்தில் உன்தாய் பஹிஷ்டையாகி வீட்டைவிட்டு விலகாமல் பாகம்செய்து பிராமணருக்குப் பரிமாறினுள். அப்பாபத்தால் இருவரும் இப்பிறவி பெற்றனர். நீ அதை அனுஷ்டித்து அவர்களது பாபத்தை அகற்று. என்று

வஸிஷ்டர் சொன்னபடி தேவசர்மா அனுஷ்டித்துப் பெற்றோருக்கு நற்கதி அளித்தான்.

ஸத்யபாமையின் முற்பிறவி.

ஒரு ஸமயம் நாரதஸ்வாமி கண்ணனைக்காண கல்பவிருக்ஷத்தின் புஷ்பத்தைக் காணிக்கையாகக் கொண்டுவந்தார். அதைப் பகவான் ஸத்யபாமையைத் தவிர மற்றவர்களுக்குப் பங்கிட்டார். பாமை கோபங்கொண்டு அழ பகவான் கருடன் மீது ஏறி அவளையும் அழைத்து ஸ்வர்க்கம் சென்று பாரிஜாத மரத்தைக்கொண்டு பாமைவீட்டில் வைத்தார். பகவானைப் பாரிஜாதத்துடன்வைத்து துலையில் நிறுத்து அதற்கு ஸமஎடை ஸ்வர்ணத்தைப் பாமை நாரதருக்கு அளித்தாள். எந்த புண்யத்தால் பகவானைப் பதியாகப்பெற்று பாருக்குக்கிடைக்காப் பாரிஜாதத்தைப் பெற்றேனென பாமை பகவானைவினவினள். க்ருதயுகத்தில் மாயாபுரியில் தேவசர்மா என்ற ஓர் உத்தம பிராமண னிருந்தான். அவன் ஸூர்யோபாஸகன், குணவதி என்று அவனுக்கோர் புத்ரி இருந்தாள். சந்த்ரனெனும் தனதுசிஷ்யனுக்கு அவர் அவளைக் கொடுத்து மணம் செய்துவைத்தார். ஒரு நாள் ராக்ஷஸனொருவன் மாமனையும் மருமகனையும் கொன்று தின்றான். க்ஷேத்ர மஹிமையால் அவ்விருவரும் வைகுண்டம் வந்தனர். அவர்களிறந்த துக்கத்தால் குணவதி தனது செல்வங்களனைத்தையும் தானம் செய்து எனக்குப்ரியமான ஏகாதசி கார்த்திகை என்ற இரு வ்ரதங்களைச் செய்துவந்தாள். கிழவயதில் கங்காஸ்நானம் செய்யச்சென்ற அவள் கால் தவறி கீழே விழுந்து வைகுண்டம் சென்றாள். அவளே நீ! பகவதாலயத்தின் முன் துளஸீவைத்து வளர்த்ததால் கல்பவிருக்ஷம் உன் வீட்டில் வளர்கிறது என்று பகவான் கூறினார். சங்கனெனும் ஸமுத்ர புதல்வன் வேதத்தைத் தூக்கிச் சென்

ருன். தேவர்களது பிரார்த்தனைக் கிணங்கி பகவான் யோக நித்ரையை விட்டெழுந்து மத்ஸ்யாவதாரம்செய்து சங்கனைக் கொன்று கார்த்திகையில் வேதங்களைக் கொண்டுவந்தார் ஆதலால் கார்த்திகை ஏகாதசி மிக ச்லாக்யமானது.

கரவீர பட்டணத்தில் தர்மதத்தன் என்றோரந்தணுத் தமனிருந்தான். அவரநுஷ்டானம் முடிந்து எழுந்திருக்கை யில் மிக பயங்கரமாய் வஸ்த்ரமில்லாப் பெண்ணுரு ஒன்று அவரெதிரில் தோன்றிற்று. துளஸீ ஜலத்தால் அதை ப்ரோக்ஷித்து நீ யார் என்று அவர்வினவ, ஸௌராஷ்டரதேசத்தில் பிக்ஷு என்ற பிராமணர் ஒருவரிருந்தார். அவர் மனைவியான் கலஹா என்று அர்த்தமுள்ள பெயரெனக் கிடப்பட்டது. பதிக்கன்னமிடாமல் என் வயிற்றை வளர்த்து வீடு வீடாக வம்புக்குச் செல்வேன். கலஹம்செய்து பல குடும்பங்களைக் கலைத்தேன். எனதாயுள் முடிந்ததும் யமகிங்கரா் என்னை அடித்திழுத்துச் சென்றனர். ஆங்கு பல்லாண்டு நரகயாதனை அனுபவித்து இந்த ப்ரேத சரீரத்தை அடைந்தேன். பசி தாஹத்தால் மெலிந்து ஓர் வைச்யனுடலில் புகுந்தேன். அவன் கிருஷ்ணவேணீ ஸங்கமஸ்நாநம் செய்ததால் அவனுடலில் தங்க முடியாமல் திரிகிறேன் என்றது. கருணை மூர்த்தியான முனீந்த்ரர் துளஸீ தீர்த்தத்தைக்கொண்டு த்வாதசாக்ஷரீ ஜபம் செய்து அந்த ப்ரேதத்திற்கு அபிஷேகம் செய்தார். உடனே அவளுக்கு வைகுண்டத்தி லிருந்து விமாநம் வந்தது. விஷ்ணு கிங்கரர்கள் தர்மதத்தரது விஷ்ணு பக்தியையும் கருணையையும் கண்டு களித்து மறுபிறப்பில் நீ தசரதனுகப் பிறப்பாய். உனதிரு மனைவிகளும் கௌஸல்யை ஸுமித்ரையாக வருவார்கள். இக்கலஹைக்குப் பாதி புண்ய மளித்ததால் அவளும் மூன்றுவது மனைவியான கைகேயியாவாள் என்று கூறி கலஹையுடன் வைகுண்டம் சென்றனர்.

ஸாத்விக பக்தியே சிறந்தது.

காஞ்சிநகரில் சோளராஜன் ஓர் விஷ்ணு ஆலயங்கட்டி விலை உயர்ந்த ஆடை ஆபரணங்களால் பகவானை ப்ரதி தின மலங்கரித்துத் தானே அர்ச்சித்து வந்தான். மறுநாள் இவன் பூஜைக்குச் செல்லும்போது இவன் முதல் நாளளித்த ஆடை ஆபரணங்கள் ஓர் மூலையில் கிடக்கும், ஓர் துளஸீமாலை மாத்ரம் பகவானது மூர்த்தியில் காணப்படும். இதை அறிய ஆவல்கொண்டு அரசன் ஓர்தினம் பதுங்கி கவனித்திருந்தான். விஷ்ணுதாஸன் என்றோர் ஏழை ப்ராமணன் அரசனளித்த பூஷணங்களைக் களைந்து அர்ச்சிக்கக் கண்டான். அவரை அரண்மனைக் கழைத்து பரம தரித்ரனான நீர் யக்ஞ யாக தானாதிகளைச் செய்யாமல் எப்படி விஷ்ணுபக்தராவீர்? என்று கடிந்து பேசினன். அவர், தநத்தால் செய்யும் பக்தி ராஜஸ பக்தியாகும். உள்ளன்புடன் ஏழை செய்யும் ஸாத்விக பக்தியையே பகவான் ஏற்பார் என்று கூறினர். அரசன், ஐயனே! அப்படியாயின் நீர் முதலில் பகவானைத் தர்சிக்கிறீரா? நான் தர்சிக்கிறேனா? பார்ப்போம் என்று கூறி முத்கலரை அழைத்து ஓர் உயர்ந்த விஷ்ணுஸத்ரத்தை ஆரம்பித்தான்.

எண்ணிறந்த ஸாதுக்கள் ஆங்கு வந்து குவிந்தனர். அபரிமிதமான அன்னதான ஸ்வர்ணதான பூதான கோதானதிகள் நடந்தன. ஏழை விஷ்ணுதாஸனே ஏகாந்தமாக உட்கார்ந்து அஷ்டாக்ஷரீ ஜபம் செய்வார். துளஸீ வநத்தை வளர்த்து அதனல் மாலை தொடுத்து பகவானுக்குச் சாத்துவார். ஒரு வேளை தானே பாகம்செய்து பகவன் நிவேதனம் செய்து புஜிப்பார். ஒருநாள் இவரது அன்னம் களவாடப்பட்டது. மற்றோர் முறை பாகம் செய்தால் பகவத்யாநம்புரிய அவகாசமிராதெனக் கருதி பாகம் செய்யாமல் த்யாநம் செய்தாரிவர். தொடர்ந்து ஏழுநாள் இங்ஙனம் களவுபோக, எட்

டாம்நாள் யாரிதைக் களவாடுபவர்? என்று கவனித்தாரிவர். மிக வாடி வதங்கிய சரீரத்துடன் ஓர் சண்டாளக் கிழவன் அதை அபஹரித்துப் புஜிக்கக்கண்டு அவனருகே சென்று ஐயோ! வெறும் அன்னம் நெஞ்சை அடைக்கப்போகிறதே! இதோ! நெய் தருகிறேன் என்று நெருங்கினர்.

இவர் வருவதைக் கண்டு சண்டாளன் ஓடிக் கீழே விழுந்து மூர்ச்சை அடைந்தான். விஷ்ணுதாஸன் தனது வஸ்த்ரத்தால் அவனை விசிறி கண் திரும்படி செய்ய சண்டாள உருமாறி பகவான் பரிவாரத்துடன் வந்து விமாநத்தின் மீது அவரை ஏற்றி வைகுண்டம் அழைத்துச் சென்றார். இதைக்கண்டு சோளராஜன் துயருற்று முத்கலனைக் கடிந்து பேசி புதல்வனில்லாததால் மருமகனிடம் ராஜ்யத்தை அளித்து அக்கியில் விழுந்தான். முத்கலரும் தன் சிகையைக் கோபத்தால் பித்தெரிந்து நெருப்பில் விழுந்தார். இவ்விருவருக்கும் பகவான் காக்ஷி அளித்தார். அரசன் மருமகனுக்கு ராஜ்யமளித்ததால் இன்றும் அவ்வம்சத்தைச் சார்ந்தவர் மருமகனுக்கே ராஜ்யத்தைத் தருகின்றனர். முத்கல வம்சத்தைச் சார்ந்தோர் இன்றும் சிகை இல்லாமலிருக்கின்றனர்.

ஜய விஜயர்.

த்ருணபிந்துவின் கன்யகையான தேவஹூதியினிடம் கர்த்தமரது த்ருஷ்டியால் ஜயவிஜயரென இரண்டு புதல்வர் தோன்றினர். மருத்தராஜனிவர்களை ஓர் யாகம் செய்து வைக்கும்படி அழைத்து எண்ணிறந்த த்ரவ்யங்களை அளித்தான். இத் தநத்தைப்பிறித்துக் கொள்ளும் விஷயமாக இவ்விருவருக்கும் சண்டை நேர்ந்தது. யானையாகவும் முதலையாகவும் போகும்படி ஒருவருக்கொருவர் சாபமிட்டனர். ஒரு ஸமயம் யானைமடுவில் இறங்க ஆங்குள்ள முதலை இதை உள்ளே

இழுத்தது. யானை பகவானை நினைத்து வீரிட்டுக்கதற பகவான் சக்ராயுதத்தால் முதலையைக் கொன்று இருவரையும் வைகுண்டத்திற் கழைத்து சென்று த்வாரபாலகர்களாக்கினார்.

யாசகம் வாங்கியோ திருடியோ தர்மம் செய்வோர் தர்ம பலனைப் பெறார். பணக்காரனே அதன் பயனைப் பெறுவான். தர்மாதர்ம கார்யத்திற்கு புத்தி சொன்னவன், செய்யும்படி அநுமதித்தவன், ஸாதநத்தை அளித்தவன், ஸஹாயம் செய்தவன் ஆகிய இவர்கள் ஆறிலொருபங்கு அதன் புண்ய பாபத்தைப் பெறுவர். ஜநங்களிடமிருந்து ராஜாவும் சிஷ்யனிடமிருந்து குருவும் பத்நியிடமிருந்து பதியும் புத்ரனிடமிருந்து பிதாவும் புண்ய பாபத்தில் ஆறிலொரு பாகத்தைப் பெறுகிறார்கள். அநுகூலமான பத்நி புருஷனது பாதி புண்யத்தை அடைவாள். அவந்தீபுரியில் தநேச்வரன் என்றோர் பிராமணனிருந்தான். அவன் சாஸ்த்ர நிஷித்தமான நெய் எண்ணை கம்பளம் முதலிய வியாபாரங்களால் ஏராளமான தநத்தைத்தேடி தர்மம் செய்யாமலிருந்தான். ஒரு ஸமயம் மாஹிஷ்மதி நகரில் பௌர்ணமியன்று பக்தர்கள் பஜனை செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தான். இரவில் அரவந்தீண்டி அவன் இறக்க யமதூதர்கள் நரகத்தில் அப்பாபியைத் தள்ளி சிக்ஷித்தனர். நாரதர் அங்கு வந்து தர்மத்தைக்கண்ணால் கண்டவனுக்கும் ஆறில் ஓர் பாகம் புண்யமுண்டு. ஆதலால் இவனை ஸ்வர்க்கத்திற்கனுப்புங்கள் என்றார். அங்ஙனமே அவன் ஸ்வர்க்க ஸுகம் பெற்றான்.

பசியால் வாடும் அதிதிக்கு அன்னமளிக்காதவன் தப்தவாலுகம், குரு பித்ருத்ரோஹி அந்த தாமிஸ்ரம், ஸ்த்ரீ புருஷரைத் தந்தை தநயரைப் பிறித்தவன் அஸிபத்ரவநம், பெரியோரை நிந்திப்பவன் கண்டக்ரஹம் என்ற நரகத்தையுமடைவர். பாற்கடலைக் கடைந்தபோது அதிலிருந்து தோன்றிய

ஸ்ரீதேவியைப் பகவான் மணம் புரியும்போது,எனது ஜ்யேஷ்டையான தேவிக்கு விவாஹமாகாமல் இளையவளான யான் மணம்புரிந்து கொள்வது நியாயமோ என்று கமலை கூறினாள். புருஷோத்தமன் உத்தாலக முனியை அழைத்து அவளை அவருக்கு அளித்தார். அவரது ஸதாசாரத்தைக் கண்டு வெறுப்புகொண்ட அலக்ஷ்மி தனக்கேற்ற (துராசாரமுள்ள) இடத்தைக்கொடுமென்று புருஷரை வேண்டினாள். அவர் அரசமரத்தைக் காட்டி பெண்ணே! யான் உனக்கேற்ற வீடு தேடிவருமளவும் இங்கு தங்கி இரு என்று கூறி சென்று பல வருஷங்களாகியும் வந்தாரில்லை. புருஷ வியோகத்தால் அலக்ஷ்மி அழுங்குறல் வைகுண்டத்திலுள்ள லக்ஷ்மியின் காதில் விழுந்தது. அவள் தன் ஸஹோதரியின் துன்பத்தை அகற்றும்படி பகவானை வேண்டினாள். அவர் லக்ஷ்மியுடன் அச்வத்தமரத்தருகே வந்து, இது என் அம்சத்தால் தோன்றிய மரம். இங்கேயே நீ வஸி. சனிக்கிழமை ஒருநாள் கமலையுடனிங்கு யான் வருவதால் உனக்கு இங்கு இடங்கிடையாதென்றார். ஆதலால் சனியன்றே அச்வத்த பூஜை சிறந்தது. அற்பிசிசுக்ல பக்ஷ ஏகாதசி முதல் ஓர் மாத உபவாஸமிருந்து பகவானை அர்ச்சித்தல் ஸகல விருதங்களிலும் உத்தமமானது.

கார்த்திகை சுக்ல ஏகாதசிமுதல் ஐந்து திநமுபவாஸமிருந்து பகவானை அர்ச்சிப்பது பீஷ்மபஞ்சக விருதமெனப்படும்.

தவளேச்வரர்.

இந்த்ரக்ராமம் என்ற தீர்த்தத்தின் அருகே அநாதியாக ஓர் சிவலிங்கமுளது. அதற்கு கிருதயுகத்தில் நீலகண்டன், திரேதையில் ஹரன் த்வாபரத்தில் சர்வன் கலியில் தவளேச்

வரன் என்றும் பெயர். மிக அழகுவாய்ந்த அந்த லிங்கம் பக்தரது இஷ்டத்தை விரைவில் பூர்த்தி செய்து வந்தது. நந்தீ என்ெருரு வைச்யன் அந்த லிங்கத்தை அதிகாலையில் விதிப்படி திநந்தோறும் பூஜித்து வந்தான். தற்செயலாக அங்கு வந்த மஹா காலன் என்ற வேடன் அழகிய லிங்கத்தைக் கட்டி அணைந்து அப்பா! இன்றுமுதல் எனக்கு நீ ஸ்வாமி! உனக்கு யான் பக்தன் என்று கூறி அருகிலுள்ள தீர்த்தத்தை வாயால் எடுத்துக்கொண்டு ஒரு கையில் பில்வத்தையும் மற்ெருன்றில் தான் தின்று ருசிபார்த்த மாம்ஸத்தையும்கொண்டு வருவான். பழைய மாலைகளைக் காலால் தள்ளுவான். வாய் ஜலத்தால் அபிஷேகம் செய்து பில்வத்தை அதன் தலையில் வைத்து மாம்ஸத்தையுமளித்துச் செல்வான்.

நந்தி இதைக் கண்டு சிவலிங்கத்தை யாரோ அசுத்தப்படுத்தி விடுகிருரே? என்று வருந்தி புரோஹிதருடன் ஒரு நாள் அங்கே சென்று ரஹஸ்யமாகப் பதுங்கி இருந்து பார்த்தான். வேடனது பூஜையைக் கண்டு வியந்து பலருடன் கூடி யோசனை செய்து அல்லிங்கத்தைப் பேர்த்தெடுத்துத் தன் வீட்டில் வைத்துப் பூஜித்தான். வழக்கப்படி வேடன் வந்து லிங்கத்தைக் காணுமல் கதறி அழுதான், கொண்டுவந்த மாம்ஸத்தை எறிந்துவிட்டுத் தனது மாம்ஸத்தை அறுத்து எடுத்து பகவானுக்கு நிவேதநம் செய்து இறக்கத் தீர்மானித்து த்யாநம் செய்தான். உடனே பகவான் விருஷபாருடராகக் காக்ஷியளித்து மஹாகாள! உனக்கு என்ன வரம் வேண்டும்? என்ருர். அவன், ஸ்வாமி! தாங்கள் யஜமாநன்! யான் தாஸன்! தங்களிடமிருந்து யான் என்ன வரங் கேட்பதென்ருன். ஆசையற்று கபடமில்லாமல் அவன் செய்த பூஜையைக் கண்டுகளித்த கைலாஸநாதன், அவனை ஓர் கணமாக்கிக் கொண்டார். நந்தி இவனது காலில்விழுந்து எனக்

குத் தர்சநமளிக்கும்படி பகவானிடம் கூறென்று வேண்ட அங்ஙனமே அவன் நந்தியை அழைத்துச் சென்றான். பகவான் அவனையும் கணமாக்கிக் கொண்டார்.

பாலாவதீ. கண்வரது கன்யகையான பாலாவதீ ஸூர்யனையே பதியாக அடைய எண்ணிக் கடுந்தவம்புரிந்தாள். பிராமண வேடம் பூண்ட பாநு அவளிடத்தில் ஐந்து இளந்தம் பழத்தை அளித்து இதை எனக்குப் பாகம் செய்து கொடு. பின்னர் உன்னைப் பாஸ்கரன்மணப்பான் என்றார். அங்ஙனமே அவள் பாகம் செய்ய அது வேகவில்லை. வீட்டிலுள்ள விறகெல்லாம் ஆனது. காட்டிலுள்ள கட்டைகள் ஆயின. அப்போதும் இளந்தம் பழம் வெந்தபாடில்லை. தனது காலைக் கழுவிவிட்டு அடுப்பில் வைத்தாளவள். கால் எரிந்தது; பழம் வேகவில்லை. வேறுகால் முளைத்தது. அதையும் அடுப்பில் வைத்தாள். அவளது குணத்தைக்கண்டு களித்த கதிரவன் அவள் மநம் போலவளை மணந்தார்.

இந்திரனது ப்ரஹ்மஹத்தி. தேவேந்தரன் விருத்ரனைக் கொன்றதால் ப்ரஹ்மஹத்திதோஷம் அவனை அண்டியது. அவன் பிருஹ்மாவைச் சரணமடைந்து நால்வரிடமதை அளித்து அச்வமேதம் செய்து சுத்தனானான். அக்நியினிடம் அத்தோஷத்தில் கால் பாகத்தை அளித்து, நீ ஜ்வலிக்கும்பொழுது ஹோமம் செய்யாதவரிடம் இதைக் கொடுத்துவிடு என்று பிரும்மா கூறினார். செடி கொடிகளிடம் கால்பங்கை அளித்து அநாவச்யமாக உங்களை வெட்டுபவரிடம் இதைக்கொடுத்துவிடு என்றார். அப்ஸரஸுகளிடம் கால்பங்கை அளித்து பஹிஷ்டா ஸ்திரீ ஸங்கமம் செய்வோரிடம் இது செல்லும் என்றார். மிகுதியை ஜலத்தினிடமளித்து ஜலத்தில் காரித்துப்புவோர் ஜலமலங்கழிப்போரிடம் இது செல்லும் என்றார்.

கீதா மாஹாத்ம்யம்.

உமைக்குச் சிவன் கூறினர். கமலே கமலாக்ஷனைப் பார்த்து, ஏனைய தேவரைப்போலில்லாது தாங்கள் எப்பொழுதும் பந்நக சயநத்தில் படுத்துறங்கும் காரணம் யாதென வினவினள். ப்ரியே! யான் உறங்கவில்லை, வேதவியாஸ னியற்றிய கீதையின் கருத்தை நினைத்து வெளி விஷயங்களை விட்டு அந்தர்முகனாய் த்யாநம் செய்து ஆநந்தமடைகிறேன் என்று பகவானுரைத்தார். லக்ஷ்மீ பகவானை நோக்கி, தேவ! தாங்களே ஸகலராலும் த்யானம்செய்யத்தக்க பொருளன்றோ? தாங்கள் வேறெவரை த்யானம் செய்கிறீரென்று வினவ, நாரணன், காந்தே! ஸ்ருஷ்டி ஸ்திதிலயத்திற்காக எங்கள் மூவருக்கும் மாயையால் தோன்றிய உடலிது. மநதுக்கும் வாக்கிற்கும் எட்டாத ஜ்யோதிர் மயமானது ஆத்ம ஸ்வரூபம். அதையே த்யாநம் செய்கிறேன் என்றூர். "கீதையின் முதல் ஐந்து அத்யாயங்கள் எனது முகம். பத்து அத்யாயங்கள் கைகள். ஓரத்யாயம் உதரம். இரண்டு அத்யாயம் கால்கள். ஆதலால், யான் கீதாஸ்வரூபமாகவே இருக்கிறேன். இதைக் கொண்டு எவரும் எளிதில் முக்தி பெறலாம்" என்று சிவனுரைத்தார்.

முதலத்யாயத்தால் முக்திபெற்ற ஸுசர்மாவின் சரிதத்தைக் கேள்! பிராமண குலத்திலுதித்த ஸுசர்மா மிக பாப கார்யத்தைச் செய்து வந்தான். அவன் செய்யாத துஷ்கார்யமில்லை. ஒருநாள் ஸர்ப்பந்தீண்டி இறந்தானவன். நரகயாதனையை அனுபவித்து காளையாக பூமியில் பிறந்தான். அதை ஓர் முடவன் விலைக்கு வாங்கி அதன் மீதேறிச் செல்வது வழக்கம். ஒரு நாள் அக்காளை வெயிலில் களைத்து மூர்ச்சையாகிக் கீழே விழுந்து இறக்காமலும் பிழைக்காமலும் கால்களை உதைத்துக் கொண்டு கஷ்டமடைந்தது. எல்லோருமதைப் பார்த்து வருந்தினர். தனது புண்யத்தை அதற்

களித்து அது ஜீவிக்கட்டும் அல்லது இறக்கட்டுமென்றனர். அக்காலையின் அவஸ்தை முன்னிலும் பதின்மடங்கு அதிகமாயிற்று. தற்செயலாக அங்கு வந்த தாஸி ஒருவள் தனது புண்யத்தை அளித்தாள். உடனே அது இறந்து ஓர் பிராமண குலத்துதித்து முன் வாஸனையால் தனக்குப் பேருதவி புரிந்த தாஸி வீட்டிற்கு வந்தது. அவளை வணங்கி, அவர் நீ செய்த புண்யம் யாதென வினவ, யானொன்றும் செய்தறியேன்! இக் கூண்டிலுள்ள கிளி ஏதோ சுலோகஞ் சொல்லக் கேட்டிருக்கிறேன் என்றாள். இருவருமாக அதனருகே சென்று கேட்க யான் வித்யையில் சிறந்த விப்ரகுலத்தவன். எனது வித்யாகர்வத்தால் இப்பிறவி பெற்றேன். இளமையில் எனது பெற்றோரை இழந்தேன். முனிகுமாரர் என்னை எடுத்து வளர்த்தனர். அவர்கள் கூறும் கீதையின் முதலத்யாயத்தைக்கேட்டு பாடம் செய்தேன். இதை இவள் கேட்ட புண்யத்தால் நீர் நற்கதி பெற்றீரென்றது.

த்வதீயாத்யாயம். புரந்தர புரத்தில் தேவசர்மா என்றோர் வேதியனிருந்தான். அவன் நித்யநைமித்திக கர்மாக்களாலும் மநந்தெளியாமல் வருந்தி, ஓர் அவதூதர் மூலமாக மித்ரவந்தன் எனும் இடையனிடம் சென்றான். அவனை வணங்கி மநந்தெளிய ஓர் மருந்து கேட்டான். கோதாவரிக்கரையில் துர்த்தமனெனும் ஓர் பிராமணன் துராசாரபரனாக இருந்து நீசகுலத்துதித்த ஓர் கன்யகையை மணந்தான். ஏழையான இவனை விட்டு அவள் ஓர் சண்டாளனிடமாசை கொண்டாள். அவ்விருவருக்கும் ஓர் கன்யகை பிறந்தது. அதையே துர்தமநன் மறுமணஞ் செய்து கொண்டான். வயது சென்றபின் இவன் இறந்து நரகத்தை அனுபவித்து வேடனாகப் பிறந்தான். அவனது முதல் மனைவிப் பேயாகி அவனைப் புஜித்தாள். அடுத்த பிறவியில் அவள் ஆடாகவும் அவன் புலியாகவும் பிறந்தனர். அப்புலி இவ்வாட்டைத் துரத்திச்

சென்று இவ்வநத்தில் வந்தவுடன் இரண்டும் பகையைவிட்டு ஆடு தன்னைத்தின் என்றும், புலி யான் கொல்லா விருதங் கொண்டேனென்றும் கூறின. இதைக் கேட்டுவியந்த யான் ஆங்குள்ள ஓர் பெருங் குரங்கை அணுகி இஃதென்ன? என்று கேட்டேன். அது கூறிற்று. ஸுகர்மா எனும் முனிவர் கந்த மூலங்களைக் கொண்டு காமனையின்றி கைலாஸ நாதனை அர்ச்சித்து வந்தார். அவர் ஆச்ரமத்திற்கு வந்த ஓர் அதிதி இவரது தவத்தைக் கண்டு வியந்து கீதையின் இரண்டாமத்யாயத்தை ஆங்குள்ள கற்பாறையில் எழுதிச் சென்றார். அன்றுமுதல் இங்கு வருவோர் மநந்தெளிந்து ஸுகம் பெறுவர். ஸுகர்மா சென்றவிடமும் அங்ஙனமே. என்று கூறி இடையன் இரண்டா மத்யாயத்தைக் கற்பாறையில் காட்ட அதனால் தேவசர்மா மநச்சாந்தி பெற்று மோக்ஷமடைந்தார்.

திருதீயாத்யாயம். ஜநஸ்தானத்தில் ஜடன் என்றோரந்தணனிருந்தான். அவன் ஸ்வதர்மத்தைவிட்டு வைச்யவிருத்தியால் ஏராளமான பொருளைத்தேடி துர்விநியோகம் செய்தான். கைப்பொருள் செலவானதும் யாகம் செய்வோரது தநத்தைக் களவாடினான். இவன் திருடிய பொருளைத் திருடர்கள் கைகொண்டு இவனையுங் கொன்றனர். துர்மரணத்தாலும் இவன் செய்த பாபத்தாலும் ப்ரேத சரீரம் பெற்றானிவன். இவனது புதல்வன் இதை அறிந்து கங்கையில் புனலாடி கயையில் பிண்ட மளித்துத் தந்தைக்கு நற்கதி அளிக்க காசிக்குக் கிளம்பினான். தற்செயலாக நடுவழியில் அவன் தந்தை கொல்லப்பட்ட விடத்தில் தங்கி கர்மாநுஷ்டாநம் செய்து நித்யம்பாராயணம் செய்யும் கீதையின் மூன்றாமத்யாயத்தைப் படித்தான். உடனே ஸ்வர்ணவிமாநத்தின் மீதேறிய அவனது தந்தை புதல்வனை ஆசீர்வதித்துத் தனது பந்துக்களையும் நரகத்திலிருந்து மீட்டும்படி கூறினான்.

அவன் அவர்களை மட்டுமல்லாமல் நரகத்திலுள்ள அனை வரையும் மூன்றுமத்யாய பாராயணத்தால் ஸ்வர்க்கத்திற் கனுப்பினான்.

சதுர்த்தாத்யாயம். காசியில் பரதர் என்றோர் ஸன்யாஸி இருந்தார். அவர் எப்பொழுதும் கீதையின் நாலாமத்யாயத் தையே ஜபிப்பார். ஒருநாள் ஓர் உத்யானத்திலயர்ந்து படுத் தார். அவர் அப்போதும் நாலாமத்யாயத்தை நினைத்தார். ஆதலால் அவர் தலைமாட்டிலும் கால் மாட்டிலுமிருந்த இரண்டு இளந்த மரங்கள் ஓர் பிராமணர் வீட்டில் பெண் களாக பிறந்தன. இவர் அங்கு பிக்ஷைக்கு வரும்போது அவரை வணங்கி உமது அருளால் எங்கள் சாபமகன்ற தென்றனர். நீங்கள் யார் ? என்ன சாபமென்று அவர் கேட்க, கோதாவரீ தீரத்தில் கடுந்தவம் புரியும் ஸத்ய தபஸ் என்ற முனிவரது தவத்தை இந்த்ரனாணையால் கலைத்த அப் ஸரஸ்கள் நாங்கள். அதனால் அவர் இளந்த மரமாகும்படி எங் களைச் சபித்தார். அவர் காலில் விழுந்து சாபவிமோசநம் செய்யும்படி வேண்டினோம். பரதரால் சாபமகலு மென்றார். என்று இரு பெண்களும் கூறி நன்கு பிக்ஷை இட்டனர்.

பஞ்சமாத்யாயம். புருகுத்ஸ புரத்தில் பிங்கலனெனும் பூஸுரன் ஸ்வதர்மத்தை விட்டு கந்தர்வ வித்யையிலீடுபட்டு பரஸ்த்ரீகமநம் முதலிய பற்பல பாபங்களைச் செய்தான். அருணை எனும் அவன் மனைவியும் மதுபாநம் செய்து காம வெறிகொண்டு கண்ட புருஷருடன் கலந்து காமசுகம் பெற் றாள். இருவரும் குஷ்டரோகத்தா லிறந்து பல நரகங்களை அனுபவித்து கழுகாகவும் பெண் கிளியாகவும் பிறந்தனர். கழுகு கிளியைத் துறத்த அது ஓர் மண்டை ஓட்டிலுள்ள ஜலத்தில் விழுந்து உயிரைவிட்டது. அதனருகே வந்த கழுகு வேடர் வலையில் சிக்கி அவர்களால் கொல்லப்பட்டது. இருவரும் நரகம் செல்ல யமதர்மராஜன் சற்றுயோசித்து

ஐந்தாமத்யாயத்தை ஜபிக்கும் பிராமணனது மண்டை ஓட்டருகே நீங்கள் சென்றதால் உங்கள் பாபமகன்றது. ஸ்வர்க்கம் செல்லுங்களென்றனுப்பினன்.

ஷஷ்டாத்யாயம். கோதாவரி தீரத்திலுள்ள ப்ரதிஷ்டானமெனும் நகரை, ஜானச்ருதி என்ற அரசன் ஆண்டுவந்தான். இவன் மிக தானசீலன். இவனது கொடையைக்கண்டு வியந்த விண்ணவர் இவனுக்கு நன்மைபுரியக் கருதி ஹம்ஸவேடம் பூண்டு அரசன் காதில் படும்படி பரஸ்பரம் பேசிக்கொண்டனர். ஜானச்ருதியின் தேஜஸ்ஸைத் தாண்டி நம்மால் செல்ல முடியுமா? சற்றுநில்என்று ஒரு ஹம்ஸங்கூறிற்று. மற்றொன்று ரைக்வரா? என்ன இவர்? இவரைக்கண்டு அஞ்சுகிறாயே! என்றது. உடனே அரசன் ரைக்வரைத்தேடிப் பிடித்தான். அவர் ஓர் வண்டியின்கீழுட்கார்ந்து சிரங்குகளைச் சொறிந்துக் கொண்டிருந்தார். அரசனைக் கண்டு சூத்ரா என்றழைத்தார். அரசனளித்த காணிக்கைகளைத் திக்காரம் செய்தார். ஆயினுமரசன் அவருக்குத் தன் பெண்ணை யளித்து ஊருக்கழைத்துவந்து அவரது தேஜஸிற்குக் கீதையின் ஆறுமத்யாயமே காரணமென்றுணர்ந்தான். அவர் கூறிய வண்ணம் அதை ஜபித்து ஜானச்ருதியும் ஆத்மானந்தத்தைப் பெற்றான்.

ஸப்தமாத்யாயம். பாடலீபுரத்தில் சங்குகர்ணன் என்ற ஓர் த்விஜனிருந்தான். அவன் வியாபாரம் செய்து அபரிமிதமான தநத்தைத் தேடினன். அதில் ஓர் சிறிதளவும் தர்மத்தில் செலவுசெய்ய மநமில்லாமல் சேர்த்துவைத்தான். தான் நாலாவது மனைவியை மணக்க பந்துக்களுடன் க்ராமாந்தரம் சென்றான். நடுவழியிலவன் நாகந்தீண்டி இறந்தான். மறுபிறப்பில் அவன் தேடிப் புதைத்த தனத்தருகே ஓர் ஸர்ப்பமாகத் தோன்றி அதைக் காத்து வந்தான். ஒரு நாளிரவு அவன் கனவில் புதல்வர்களிடம் தான் தநத்தைக் காக்கும் ஸர்ப்பமா யிருப்பதைத் தெரிவித்தான். மற்ற

ஸஹோதரர்கள் இதற்கென் செய்வதென யோசித்திருக்கும் போது சிவன் என்ற குமாரன் தன் மனைவியுடன் இரவில் வந்து அப்புத்தைத் தோண்டினான். உடனே ஸர்ப்பம் சீறி வந்து யார்நீ? என்றது. உனது புதல்வன் யானென்று அவன் கூற, கீதையின் ஏழாமத்யாயத்தைப் பாராயணம் செய்து எனது பாபஜன்மாவை அகற்றென்றான். அங்ஙனமே அவன் அதைப் படிக்க சங்குகர்ணன் ஸ்வர்க்கம் சென்றான்.

அஷ்டமாத்யாயம். ஆமர்தக நகரில் பாவசர்மா என்றோர் விப்ராதம னிருந்தான். ஸுராபானம் செய்துக் கொண்டே இறந்து அவன் பனைமரமாகப் பிறந்தான். குசீலவன் என்பவன் குமதி எனும் தன் மனைவியுடன் எருமை முதலிய பலதானங்களைப் பெற்று தானொரு தானமும் செய்யாமலிருந்தான். அதனால் இருவரும் பிரும்ம ரக்ஷஸாகப் பிறந்து அப்பனைமரத்தடியே நின்று தம் வினையை நினைத்து வருந்தினர். எந்த ப்ராயச்சித்தம்செய்தால் இந்த ஜன்மமகலுமென்று குமதிகேட்க, பிரும்ம ஞானமின்றி இதற்கேது பிராயச்சித்தம் என்று குசீலவன் கூறினான். அந்த பிரும்மம் எது? அத்யாத்மமென்பதென்ன? எது கர்மா? என்று அவள் கேட்க இது கீதையின் எட்டாமத்திபாயத்தின் பாதி சுலோகமானதால் பனைமரம் பாவசர்மாவாக மாறியது. இத்தம்பதிகளும் ஸ்வர்க்கம் சென்றனர். தன்னை விட்டுப்பிறிந்தோடும் தாமோதரனை என்ன அவஸரமென்று லக்ஷ்மிகேட்க பகவான், என் பக்தன் பாவசர்மாவாராணஸியில் கீதையின் பாதி சுலோகத்தால் என்னை வசப்படுத்தினான்; அங்கு செல்கிறேனென்றார்.

நவமாத்யாயம். மாஹிஷ்மதீ நகரில் மாதவனெனும் உத்தமத்விஜன் ஓர் யாகத்தை ஆரம்பித்து அஜத்தின்வபையை எடுக்கச் சென்றார். அவ்வாடு, ஐயனே! இந்த யாகத்தால் உமக்கு சாச்வத பயனுண்டோ? என்றது. இதைக்கேட்டு

வியந்த விப்ரர் நீ யார்? என்று கேட்க, யானோர் த்விஜன். என் குழந்தையைக் காக்க என் மனைவி சொன்னபடி ஓராஜத்தைக் காளிக்கு பலி இட்டேன். 'யக்ஞம் முதலிய சாஸ்த்ரஸம்மதமான வழியிலல்லாது என் குழந்தையைக்கொன்றமையால் நீ ஆடாவாய்,' என்று அதன் தாய் என்னைச்சபித்தது. குரங்காய் நாயாய் குதிரையாய்ப் பிறந்து பெருந்துயரைப்பெற்று முடிவில் இப்பிறவியை அடைந்தேன்,' என்றது. மற்றோராச்சரியத்தைக் கேளும்! குரு க்ஷேத்திரத்தில் சந்த்ரசர்மா என்றோரரச னிருந்தான். அவன் சந்த்ர க்ரஹண காலத்தில் ஓர் பிராமணரை அழைத்து காலபுருஷ தாநம் செய்தான். அதை அவர் வாங்கும்போது இவ்வுத்தம காலத்தில் இந்த தாநத்தை ஏன் வாங்குகிறாய்? என்றோர் சப்தம் தோன்றிற்று. அந்தணரதை அலக்ஷ்யம் செய்து தாநத்தைப் பெற்றார். ஓர் பறயனும் பறச்சியு மந்தணனருகே ஓடிவந்து அவனை ஒத்துப் பார்த்து பயந்தோடினர். இஃதென்னவென்று அரசன் வினவ, அரசே! உனது பாபமே சண்டாளன். நீ செய்த பாநிந்தையே சண்டாளி. கீதையின் ஒன்பதாமத்யாயத்தை மநதால் ஸ்மரித்தேன். ஆதலால் இருவரும் பயந்தோடினர் என்று புரோஹிதர் கூறினர். என்று கூறி மாதவரை ஒன்பதா மத்யாயத்தை ஜபிக்கச் சொல்லி அவரும் ஆடும் நற்கதி பெற்றனர்.

தசமாத்யாயம். காசியில் தீரதீரனென்றோர் சிவபக்தனிருந்தான். அவன் வெளியில் ஸஞ்சரிக்கும்பொழுது பரமசிவன் அவனுக்குத் தனது கையை அளிப்பார். இதைக் கண்டு வியந்த பிருங்கிரிடர் என்ற பக்தர், ஸ்வாமிந்! இவனுக்குத் தாங்கள் கரத்தை அளிக்கும் காரணம் யாதென்று விநயமாக வினவினர். சிவன் கூறினர்:—கைலாஸத்தில் என்னெதிரில் ஓர் ஹம்ஸபக்ஷி கீழே விழுந்து, தேவ! முற்பிறவியில் யான் ஸுதபன் எனும் பிரும்மசாரி. குருசுச்

ரூஷை செய்து வரும்போது தூக்கத்தில் என்கால் குருவின் மேல் பட்டது. அப்பாபத்தால் பக்ஷியாகவும், குருசுச்ரூஷா பலத்தால் பிரும்மாவை வஹிக்கும் ஹம்ஸமாகவும் பிறந்தேன். திடீரென என் உடல் கறுக்கவும் யான் கீழே விழவும் காரணம் என்ன? என்று என்னைக் கேட்டது. உடனே அருகிலுள்ள தாமரைத் தடாகத்திலிருந்து பத்மினீ எனும் பெண்ணெழுந்து கூறினள்.—ஓ பக்ஷி ராஜ! என்னை அவமதித்ததால் நீ வர்ணம் மாறி கீழே விழுந்தாய்! என் கைத்தாமரையிலிருந்து ஓடும் அறுபதினாயிரம் வண்டுகளும் இங்கு தவம் செய்த முனி குமாரர்கள். இங்குவந்து பாடிய ஓர் அப்ஸரஸைக் கண்டு மோஹித்து எனக்கிவள் எனக்கிவள் என்று ஒருவருக்கொருவர் சண்டையிட்டு மாண்டனர். பல ஜன்மமெடுத்துப் பெருந்துன்பத்தைப் பெற்று இப்போது ஸ்வர்க்கம் செல்கின்றனர்.

யான் மூன்றாவது பிறவியில் ஸரோஜவதநா எனும் பிராமண கன்யகையாயிருந்தேன். ஓர் பெண் கிளியைப்பிடித்து பல பாட்டுகளைப்படிப்பித்தேன். இதைக்கண்ட என் கணவன் நீ கிளியாவாய் என்று என்னைச் சபித்தார். கிளியாகப் பிறந்த யான் ஒரு தபஸியின் ஆச்ரமத்தில் வளர்ந்து அவர்கூறும் கீதை தசமாத்யாயத்தைக் கற்றுக்கொண்டேன். அதனால் பத்மாவதி எனும் அப்ஸரஸாகப் பிறந்து லக்ஷ்மீதேவியின் தோழியானேன். ஒரு ஸமயம் விமானத்தின் மீதேறி வந்து இத்தடாகத்தில் ஜலக்ரீடை செய்தேன். இவ்வழியாக வந்த தூர்வாஸரைக் கண்டு ஐந்து தாமரை மலர்களால் என்னுடலை மறைத்துக்கொண்டேன். அவர் என்னைத் தாமரை ஆவாய் என்று சபித்தார். என்னை அவமதித்த நீயும் இக்கதி அடைந்தாய். கீதையால் நம்மிருவர் சாபத்தையுமகற்றுகிறேன் என்றாள். அப்பக்ஷி அவளளித்த தாமரை மலரை என் பாதாரவிந்தத்திலளித்து இந்த தீரதீர பக்தனானான் என்றார் பகவான்.

ஏகாதசாத்யாயம். ப்ரணீதாகரையில் மேகங்கரமெனும் நகரில் ஸுநந்தரென்றஸாது, ஏகாதசாத்யாயத்தைத் திநந்தோறும் பாராயணம் செய்வது வழக்கம். தீர்த்த யாத்ரைக்குச் சென்ற அவர் கரஸ்தாநமென்ற நகரில் தேவியைத் தர்சித்து வழிப்போக்கருடன் ஓர்ஸத்திரத்தில் படுத்துறங்கினர். காலையில் எழுந்தவுடன் தான் தெருவில் கிடப்பதையும் உடன் வந்தவர்கள் காணுததையுங் கண்டு வியந்து அருகிலுள்ள நகரபாலகனை விசாரித்தார். அவன் இவரை வணங்கி நீர் ஓர் பெரிய யோகி. உம்மிடத்தில் ஏதோ ஒரு விசேஷ தைவ சக்தி உளது. இல்லையேல் ஏனைய வருடன் ராக்ஷஸனுல் நீயும் புஜிக்கப்பட்டிருப்பாய் என்றுன். மறுநாள் ஓடிவந்து நகரபாலன் கூறினன். ஸ்வாமின்! தனது நண்பனை விடுவிக்கப் போன என் தநயன் அந்த ராக்ஷஸனுல் புஜிக்கப்பட்டான். இவ்வூர் ஜநங்களது ப்ரார்த்தனைக் கிணங்கி அவ்வரக்கன் உள்ளூராரைப் புஜிப்பதில்லை. வரும் வழிப்போக்கனையே புஜிப்பான். முப்பிறவியில் உழுதுவாழும் ஓர் அந்தணனவன். அருகில் கழுகினுல் கொல்லப்படும் ஓர் ஸாதுவைப் பார்த்து இவன் அவரை மீட்காமலிருந்த குற்றத்தால் ஓர் மஹர்ஷி இவனை ராக்ஷஸனுவாய் என்று சபித்தார். அவன் அவரை வணங்கித் தன்னை மன்னிக்கும்படி வேண்ட கீதை ஏகாதசாத்யாய மறிந்தவரருளால் நீ நற்கதி பெறுவாய் என அவர் அருள் புரிந்தார். நீர் வந்து அவ்வரக்கன் சாபத்தை அகற்றிஎன் தநயனையும் பிழைப்பித்ததுத்தாரும்என்று அவர் காலில் விழுந்தான். ஸுநந்தர் அரக்கனை ஜலத்தால் ப்ரோக்ஷிக்க அவன் சாப மகன்றது. இறந்த வழிப்போக்கரும் வைகுண்டஞ் சென்றனர். நகரபாலன் தன் தநயனைத்தேட அவன் தகப்பனைப் பணிந்து நீரும் கீதையால் நற்கதிபெறுமென்று கூறி வைகுண்டம் சென்றுன்.

த்வாதசாத்யாயம். கோல்ஹாபுரத்திலுள்ள மஹாலக்ஷ்மி

யைக் குறித்து ஓர் ராஜகுமாரன் பலநாள் தவம் செய்துத் துதித்தான். தேவி ப்ரத்யக்ஷமாகி உனக்கு யாது வரம் வேண்டுமென்றாள். அவன் தேவியைப் பணிந்து எனது தந்தை ஓர் அச்வமேதயாகம் செய்யும்போது அதைப் பூர்த்தி செய்யாமலே இறந்தார். அவரது உடலை எண்ணைக் கொப் பறையிலிட்டு யாகத்தை யான் பூர்த்தி செய்யக்கருதினேன். இரவில் யாகசாலையிலிருந்த குதிரையை எவரோ கொண்டு சென்றனர். யாகத்தைப் பூர்த்தி செய்துவைக்க தாங்கள் அருள்புரியவேண்டுமென்றான். தேவி தன்னாலயத்தின் வாசற் படியிலுள்ள ஸித்த ஸமாதி எனும் பக்தனை அழைத்துச் செல் என்றாள். அங்ஙனமே ஸித்தர் ராஜகுமாரனுடன் சென்று தனது தவ வலிமையால் தேவர்களெல்லோரையு மழைத்துக் குதிரை சென்றவிடத்தைக் கேட்க இந்திரன் அதைக்கொண்டு கொடுத்தான். யாகம் பூர்த்தியானது. இறந்த அவன் தந்தையையும் எழுப்பினார். எதனால் இந்த சக்தி உமக்கு உண்டானதென்று அரசர் கேட்க கீதையின் த்வாதசாத்யாயமஹிமையால் என்று ஸித்தர் கூறினார்.

த்ரயோதசாத்யாயம். துங்கபத்ரா கரையில் ஹரிஹரபுர மென்ற நகரில்ஹரிதீக்ஷிதரென்றோர் ஸாது இருந்தார். அவர் மனைவி மிக துராசாரமுள்ளவள். பதியை வஞ்சித்துப் பர புருஷனிடம் செல்வாள். ஓரிரவு தனதாசை நாயகனை இருள் சூழ்ந்த மஹாரண்யத்தில் ஸந்திக்கும்படி ஸங்கேதம் செய்து அங்கு சென்றாள். குறித்த காலத்தில் அவன் வராததால் காமப்பேய் பிடித்து கண்டபொருளை எல்லாம் கணவனென் றெண்ணிக் கட்டிக்கொண்டாள். ஓர் புலி இவளைக் கொல்ல ஆரம்பித்தபோது இவள் அதைப்பார்த்து நீ யார்? என்றாள். அது கூறிற்று. யான் முற்பிறவியில் ஓர் வைதிக ப்ராமணன். தகாத பல தானங்களை வாங்கித் தநத்தைச் சேர்த்தேன். எவ ருக்கும் எவ்வகையான தானமும் யான் செய்யவில்லை. மூப்பு

வந்தும் தந ஆசை ஒழியாததால் தர்ப்பை முஷ்டியுடன் தனந் தேட அயலூர் சென்றேன். வழியில் ஓர் நாய்கடித்திறந்து இப்புலி ஜன்மமெய்தினேன். இப்பிறவியிலும்முப் பிறப்பின் வாஸனையால் ஸாதுக்களைக் கொல்வதில்லை. உன்போன்ற துராசாரர்களையே கொல்வேனென்று கூறி அவள் மேல் பாய்ந்து அவளைக் கொன்றுதின்றது. அவள் பற்பல நரகங் களை அனுபவித்து விட்டு சண்டாளன் வீட்டில் பிறந்து குஷ்டரோகத்தால் துன்பமுற்றாள். ஒரு ஸமயம் வாஸு தேவரெனும் கீதாத்ரயோதசாத்யாயம் ஜபிப்பவரைத் தர் சித்து அவள் நற்கதி பெற்றாள்.

சதுர்தசாத்யாயம். காச்மீரத்திலுள்ள சௌர்யவர்மா வும் ஸிம்மளத்வீபவாஸியான விக்ரமவேதாலனும் அன் யோன்யம் அன்புகொண்ட நண்பர்கள். தனது மித்ரனுல ளிக்கப்பட்ட இரு நாய்களை விக்ரமவேதாலன் மிக அன் புடன் பரிபாலித்து வந்தான். அதில் ஓர் நாய் ஒரு முயலைத் துறத்திக்கொண்டு வெகுதூரம் சென்றது. அதன்பின் சென்ற அரசன் அந்நாயும் முயலும் சேறில் விழுந்து இவ் வுடலைவிட்டு விமானமேறி விண்ணுலகம் செல்லக்கண்டு வியந்தான். அதனருகே நின்று சிறிக்கும் ஸ்வகந்தரனெனும் முனிவனைப் பார்த்து அரசன் இவை எப்படி ஸ்வர்க்கம் சென்றன? நீர் யார்? ஏன் சிறிக்கிறீர்? என்று கேட்டான். கீதையின் பதினாலாமத்தியாயத்தை ஜபிக்கும் வத்ஸரின் சிஷ் யன் யான். எனது காலலம்பிய ஜலத்தால் சேறான பூமியில் வந்தவுடன் இவ்விரண்டும் பாபமகன்று ஸ்வர்க்கம் சென்றன. முப்பிறவியில் முயல் மஹாராஷ்ட்ர தேசத்தில் ப்ரத்யுதகரில் ஓர் அந்தணாயிருந்தது. அவன் மிக பாபியானதால் துரா சாரமுள்ள தன் மனைவியைக்கொன்றான். அதனால் முயலா கப் பிறந்தான். அவன் மனைவி பாபத்தால் நாயாகப் பிறந்து பூர்வவைரத்தால் முயலைக்கொன்றதாதலால் சிறித்தேனென்

ஸ்தாராம தருபாவன வாசக சாலை

ருன். அரசனுமவரிடம் சதுர் தசாத்யாயத்தைக் கற்று சென்ருன்.

பஞ்சதசாத்யாயம். கௌட தேசத்தில் க்ருபாணநரஸிம்ஹனென்ருேர் பூபதி இருந்தான். ஸரபபேருண்டன் என்பவன் அவனது சேனுதிபதி. இவன் எங்ஙனமேனும் அரசனைவென்று தான் ராஜ்யபாரம் செய்ய ஆசைகொண்டான். அதற்கேற்ற பல ஆலோசனைகள் செய்துக்கொண்டிருக்கும்பொழுது விஷஜ்வரத்தால் சேனுதிபதி இறந்தான். ஸிந்து தேசத்தில் ஸகல லக்ஷணமும் பொருந்திய ஓர் உத்த மாச்வமாகப் பிறந்தானவன். அதை ஓர் வைச்யன் அதிக விலைக்கு வாங்கி இவ்வரசனுக்களித்தான். அதன் மீதேறி மன்னன் வனஞ்சென்று வேட்டையாடிக் களைத்து குதிரையை ஓர் மரக்கிளையில் கட்டி அருகிலுள்ள பாறையில் அமர்ந்தான். அந்த விருக்ஷத்தின் இலையில் வரைந்திருந்த கீதையின் ஓர் பாதிச்லோகத்தைப் பார்த்திவன் படிக்க அதைக்கேட்டதும் பரி பாரில் விழுந்து உடலைவிட்டு உத்தம விமானத்தின் மீதேறிச் சென்றது. இந்த விந்தையை மீவந்தன் அருகிலுள்ள முனிவர் மூலமறிந்து அதை அவனும் ஜபித்து நற்கதி பெற்ருன்.

ஷோடசாத்யாயம். கூர்ஜர தேசத்தில் அரிமர்த்தநனென்ற பட்டத்துயானை ஒரு ஸமயம் மதங்கொண்டு கட்டுக்கடங்காமல் திரிந்தது. நகரிலுள்ளோரனைவரும் அதற்கஞ்சி வெளியில் நடமாடாது வீட்டிற்குள் சென்று தாளிட்டுக்கொண்டார். மாடிமீதேறி மதங்கொண்ட யானையின் சேஷ்டையைக் கட்கபாஹு எனும் மன்னன் பார்த்துக்கொண்டிருந்தான். மதாந்தமாய் வீதிவழிச் செல்லும் கரியை மதியாமல் ஓர் அந்தணன் ஸ்நாநம்செய்து விட்டுக் கீதையின் பதிஞருமத்யாயத்தை ஜபித்துக்கொண்டே வந்தான். மதயானை வருகிறது! ஓடும்! பதுங்கிச் செல்லும்! என்று பலர் கூற

அதை அவர் காதில் ஏற்காமல் வீதிவழியே சென்றார். ஆனை அவரைக் கண்டு அஞ்சி வணங்கி சென்றது. அதைப்பார்த்து பேராச்சர்யமடைந்த பூபதி அவரை வணங்கி கீதோபதேசம் பெற்றான்.

ஸப்ததசாத்யாயம். கட்கபாஹுவினது மதங்கொண்ட யானையைத் தான் அடக்குவதாகக் கூறி துச்சாஸநன் என்றோர் வேலைக்காரன் அதனருகே வந்தான். அது கோபங் கொண்டு அவனைக் காலால் மெதித்துக் கொன்றது. அவன் ஓர் யானையாகப் பிறந்தான். அது ஸிம்ஹல த்வீபத்தரசனிட மிருந்ததால் அவன் தனது மித்ரனன கட்கபாஹுவிற்கு அதை வெகுமதியாக அளித்தான். அரசனதை வெகு காலம் அரண்மனையில் வைத்திருந்து ஓர் மஹாகவிக்கு அதைத்தான மாக அளித்தான். ஒருநாள் அந்த யானைக்கு ஜ்வரம் வந்தது. எவ்வளவு சிகித்சை செய்தும் அது நீங்கவில்லை. அதைக் காண கட்கபாஹு அங்கு வந்தபோது அது, அரசே! கீதையின் பதினேழாமத்யாயங்கற்ற ஸாதுவை அழைத்து வாரும்! நோய்தானே அகலும் என்றது. அங்ஙனமே அரசன் ஓர் உத்தமனை அழைத்துவர யானை உடல் நீங்கி, துச்சாஸநன் திவ்ய தேஹம் பெற்று தனது விருத்தாந்தத்தை அரசனுக்குரைத்தான். அரசனும் கீதோபதேசம்பெற்று நற்கதி அடைந்தான்.

அஷ்டாதசாத்யாயம். ஒரு ஸமயம் அமராவதியில் இந்த்ரன் மற்றோர் தேவேந்த்ரன் தனது வைபவங்களை விட மிகச் சிறந்த செல்வத்துடன் ஐராவதத்து மீதேறி ஸகல தேவ கணங்களும் சூழ! பவனிவரக்கண்டு வியந்தான். வைகுண்ட வாஸியைச் சரணமடைந்து ஸ்வாமிந்! அவன் யார்? நூறு அச்வமேதம் செய்தானு? தடாக ப்ரதிஷ்டை செய்தானு? ஓயாது பகவதர்ச்சனை செய்தானு? அபரிமிதமாக அன்ன தானம் செய்தானு? எப்புண்யத்தால் என்னை அவமதித்து

என் பதவியைப் பெற்றானிவன் என்று கேட்டான். பகவா னுரைத்தார். இவைகளால் என்ன பயன்? கீதை பதினெட் டாமத்யாயத்தில் ஐந்து சுலோகங்களைப் பாராயணம் செய்தா னிவன். அந்த புண்யத்தால் இப்பதவி பெற்றான். இதைக் கேட்ட உடனே இந்திரன் மாநிடவடிவம் பூண்டு கோதாவரீ தீரம் சென்று ஓர் ஸாதுவினிடம் கீதோபதேசம் பெற்றான்.

ஸ்ரீ பாகவத மஹிமை.

விசாலா நகரிலிருந்து நான்கு முநிகுமாரர்கள் ஸத்ஸங் கத்தை நாடி வெளிக்கிளம்பினர். நடுவழியில் வாடியவதநத்து டன்வரும் நாரத முனியைப் பார்த்து நித்யாநந்த புருஷரான உமக்கென்ன கவலை? என்று முநி குமாரர் வினவினர். கலியினாலுண்டான அதர்மங்களை நினைத்து வருந்தி ஓர் ஸம யம் யமுனாநதி தீரஞ் சென்றேன். ஆங்கு ஓர் யுவதியினருகே இரு கிழங்களிருக்க நீங்கள் யாரென வினவினேன். அந்த யுவதி தான் விஷ்ணுபக்தி என்றும் ப்ரஞ்ஞை யற்று கிழவர் களாயுள்ள இவ்விருவரும் ஞாநவைராக்யரெனும் இரு புதல் வர்களென்றும், கலியினால் தங்களை ஆதரிப்பாரின்றி தங்க ளுக்கு இந்நிலை நேர்ந்ததென்றும் இதற்குப் பரிஹாரம் தாங் களே கூறவேண்டுமென்றும் கூறினாள். அஞ்சாதே என்று கூறி அக்கிழவர்களது காதில் வேதம் சாஸ்த்ரம் கீதை முத லியவைகளை ஓதினேன். அப்பொழுதும் அவர்கள் கண்ணைத் திறக்கவில்லை. இதற்கென்ன செய்வதென்று, மநவருத்தத் துடன் ஸஞ்சரித்தேன். ஸநகாதிகளைக்கண்டு வணங்கி பக்தி ஞாந வைராக்யங்கள் புற்றுயிர்பெற்று நடமாட யாது மார்க்கமென வினவினேன். அவர்கள் ஞாநயக்ஞமெனப் படும் பாகவதபடந ச்ரவணாதிகளைச் செய்! பகவான் ஈரைவிட்டுப் பரமபதம் சென்றபோது உத்தம பக்த ரான உத்தவனைப் பார்த்து, அஞ்சாதே! யான் பாகவ

தமெனும் வாங்மய சரீரத்துடனிங்கே வஸிக்கிறேனென்ருர். பதினெட்டாயிரம் சுலோகங்களைப் பனிரண்டு ஸ்கந்தத்தில் அடக்கியிருக்கும் பாகவதத்தை ஸப்தாஹ முறைப்படி நடத்து என்று கூறி சென்றனர். எவரைக் கொண்டு இதை நடத்துவதென யோசித்து வருகிறேன் என்று நாரதர் கூற இந்நான்கு முனி குமாரர்களும் கங்கா தீரத்தில் ஸப்தாஹ விதியைத்தழுவி ஞாநயக்ஞம் செய்தனர். பக்தி வைராக்ய ஞாநங்கள் அங்கு ப்ரத்யக்ஷமாகத்தோன்றிய பகவானது அருளால் பூர்ணபலத்தைப் பெற்றுச் சென்றன. ஸகல தேவர்களும் வேதவேதாங்க புராணுதிகளும் கங்காதி ஸகல தீர்த்தங்களும் அங்கு வந்து குவிந்தன.

துங்கபத்ரா கரையில் பிக்ஷுகன் எனும் பிராமணன் துந்துலீ எனும் தன் மனைவியுடன் நித்யகர்மாநுஷ்டாநம் செய்து வந்தான். அவன் புத்ரபாக்யமின்மையால் மநம் நொந்து காநகம் சென்ருன். ஆங்கோர் யோகியைக் கண்டு தனது குறையைக்கூறி அதை அகற்றும்படி வேண்டினன். அவர் இவனது தலை எழுத்தை ஞாநக்கண்ணுல் கண்டு எழு தலைமுறை உனக்கு புத்ரனில்லை. ஞாநமார்க்கத்தைக் கை கொண்டு மோக்ஷமடைவாய் என்ருர். அவனதை விரும்பாது புத்ரச் செல்வமுண்டாகும்படி அருள்புரிய அந்த யோகியை வர்புறுத்தினன். அவர் ஓர் மாங்கனியை அளித்து இதை உன் மனைவி புஜித்து ஓராண்டு நியமமாயிருந்தால் ஸத்புத்ரன் உண்டாவான் எனக்கூறி சென்ருர். குழந்தை உண்டாக வேண்டுமென்ற ஆசையிருந்தாலும் தன்னுயிரில் பேராசை கொண்ட துந்துலி தான் கர்ப்பமாய் பிரஸவிக்கும்போது இறந்தால் என் செய்வதென நினைத்து அக்கனியைப் பசுவிற்களித்தாள். அவள் கர்ப்பிணிபோல் பாசாங்கு செய்து தற்செயலாக அச்சமயம் பிரஸவித்த தன் ஸஹோதரி குழந்தையைத் தன் குழந்தை என்று கூறி கணவனை வஞ்சித்

தாள். விதிப்படி அவர் ஸகல வைதிக ஸம்ஸ்காரங்களை யுமதற்குச் செய்து வைத்தார். பழத்தைத் தின்ற பசுவுக் கும் ஓர் ஆண் குழந்தை ஜனித்தது. அதற்கு பிக்ஷுகர் கோகர்ணனென்றும் தன் குழந்தைக்குத் துந்துகாரீ என்றும் நாமமிட்டு கல்வி புகட்டி வந்தார். துந்துகாரி நாளுக்குநாள் துர்குண துராசாரம் நிறைந்தவனுகி தந்தைதாய்க் கடங் காது அவர்களையே ஹிம்ஸித்து வந்தான். இவன் ஏன் பிறந் தானென பெற்ருேர் வருந்தினர். இவன் செய்த கொடுமை யைப் பொறுக்க முடியாமல் தவிக்கும் தந்தைக்குக் கோகர் ணன் பக்தி மார்க்கத்தைக் கூறி தபோவநத்திற் கனுப்பித் தானும் தவஞ்செய்யச் சென்ருன்.

தந்தை தேடிய பணத்தைக் கொடு என்று துந்துகாரி தாயை அடிக்க, அவள் கிணற்றில் விழுந்திறந்தாள். பின்ன ரிவன் பெற்ருேர் தேடிய பொருளை விலைமாதருக்களித்து அழித்தான். தநம் வேண்டியபோது வேறுவகையின்றித் திருடி வேசிக்களித்தான். ஓரிரவு தாசிகள் ஒன்றுகூடி யோசி த்து இவனை வைத்திருந்தால் தங்களுக்கு ஆபத்தெனக் கருதி அவன் கழுத்தை கயிற்ருலிருகக் கட்டி வாயில் தணலை யிட்டுக் கொன்று பூமியில் ஆழத் தோண்டிப் புதைத்துவிட் டனர். அபமிருத்யுவால் அவன் ப்ரேத சரீரம்பெற்று சொல் லொணுத்துன்பமடைந்தான். யத்ருச்சையாக அங்குவந்து தங்கிய கோகர்ணனெதிரில் இவன் ஆடுமாடு முதலிய பற்பல பிராணிகளது உருவமெடுத்துவந்தான். இவனது நிலையை யறிந்த கோகர்ணன் கயாச்ராத்தம் செய்து இப்பாப சரீ ரத்தை அகற்றுவதாகக் கூறினன். ஆயிரம் கயாச்ராத்தத் தாலும் என் பாபமகலாது. வேறு உபாயந்தேடென்று ஸஹோதரன் கூற, கோகர்ணன் ஸூர்யனை உபாஸித்தான். பலநாள் சென்ற பின் பாநுதேவர் அவரெதிரேதோன்றி பாக வத ஸப்தாஹமே இவனது பாபத்தை அகற்றவல்லதென்

ளூர். அங்ஙனமே கோகர்ணன் ஸப்தாஹ விதிப்படி பாகவத பாராயணம்செய்தான். ஸகல தேவர்களும் அங்கு வந்தனர். துந்துகாரி ஏழு கணுவுள்ள ஓர் மூங்கில் மரத்தில் தங்கினுன். ஒவ்வொருநாள் ஒவ்வோர் கணுவாக வெடிக்க ஏழாம் நாள் மாலை துந்துகாரி திவ்ய சரீரம் பெற்று விமானத்தின்மீதேறி வைகுண்டம் சென்ருன். கோகர்ணன் ஆங்குள்ள பெரியோரைப்பார்த்து பாகவதம் படித்த யானும் ச்ரவணம் செய்த நீங்களும் வைகுண்டம் செல்லாத காரணம் யாதென்று வினவ, ஏகாக்ரசித்தனுய் தனது துன்பமகல துந்துகாரி பக்தியுடன் கேட்டதால் விரைவில் சென்ருன். ஏனையோரும் அவரவர் ச்ரத்தைக்கேற்றபடி சற்று தாமதித்துச் செல்வரென்றனர். உடனே சங்கத்வனியுடன் ஸ்ரீதரன்ப்ரத்யக்ஷமாகி சண்டாளன் முதலாக அவ்வூரிலுள்ள அனைவரையும் விமானத்தின் மீதேற்றி வைகுண்டம் சென்ருர். பலரும் கோகர்ணனைப் போற்றினர்.

புரட்டாசி ஐப்பசி கார்த்திகை மார்கழி ஆகிய நான்கு மாதத்திலும் ஸப்தாஹம் செய்வோர் மோக்ஷமடைவர். ஸ்ரோதருக்கு ஸூதகமுண்டாவதால் நித்யம் நடைபெறும் புராணத்தை த்வாதசியன்று நிறுத்தவேண்டும். ஸர்வக்ஞனுய் வைராக்யம் நிறைந்தவனுகவுள்ள ஒரு வித்வானைச் சுகனுக வரிக்கவேண்டும். பற்பல தேசங்களிலும் பறைசாற்றி பல பக்தர்களை அழைக்கவேண்டும். வித்வான்களுக் கேற்றபடி ஆஸனமளித்து தக்க பூஜை செய்யவேண்டும். ஏகவார ஆஹாரத்துடன் நியமமாக கேட்போர் விரும்பிய பயனைப் பெறுவர்.

இந்த்ரப்ரஸ்தம். ஒரு ஸமயம் நாரதரும் பர்வதரும் காண்டவ வனத்தருகே இறங்கி யமுனையில் புனலாடினர். சிபி அவர்களை வணங்கி ஆங்குள்ள ஸ்வர்ணயூபங்களை யார் நாட்டியதென்று வினவினுர். ஹிரண்யனைக் கொன்று

நரஸிம்மரளித்த தன் தேவராஜ்யத்தைப் பெற்ற இந்த்ரன் பிருஹஸ்பதியின் உத்திரவுபடி இங்கு தங்கி யாகம் செய்தான். மும்மூர்த்திகளு மங்குவந்து ஸகல தீர்த்தங்களை யும் ப்ரயாகையில் வரவழைத்தனர். இந்த்ரன் ஸ்வர்ண யூபங்களை நட்டு பல யாகங்களைச் செய்து அபரிமிதமாக ஸ்வர்ணதானம் செய்தான். அதுமுதல் இவ்விடத்திற்கு இந்த்ரப்ரஸ்தம் என்று பெயர் வழங்கியது. அவ்விந்திரன் ஓர் ஸமயம் அவனியில் தர்மம் குறைந்தபொழுது சிவசர்மா வின் புதல்வனுக அவதரித்தான். ஜ்யோதிஷர் மூலமாக தன் குழந்தை விஷ்ணுபக்தனய் நால்வகை ஆச்ரம தர்மங்களை யும் நன்கு அநுஷ்டித்து இந்த்ரப்ரஸ்தத்தில் உடலை விடுவான் என்று சிவசர்மா அறிந்து பேரானந்தம் பெற்ருன். அதற்கு தந்தை விஷ்ணு சர்மா என்று பெயரிட அவர் ஸகல கர்மா நுஷ்டாநங்களையும் செய்து ஸத்புத்ரனைப்பெற்று வாநப்ரஸ்த ஞய் வநம் சென்ருர். அவர் தந்தையும் அவனுடனே சென்று முடிவில் இருவரும் ஸந்யாஸியாயினர். விஷ்ணு சர்மா தான் இந்த்ரனென்பதைக் கூறி இந்த்ரப்ரஸ்தத்தின் மஹிமையையும் தந்தைக்கு விளக்கினர். இருவருமாக அங்கு சென்று ஸ்நாநம் செய்தனர். சிவசர்மாவுக்கு உடனே பூர்வ ஜந்மஞான முண்டானது. இங்கிறப்போர் நமதுலகம் வருவர் என மஹாவிஷ்ணு வரமளித்தபடி அங்கே இறந்த ஸிம்மமும் வேடனும் விமானமேறி வைகுண்டஞ் சென் றதை இருவரும் கண்டு வியந்தனர். சிவசர்மா தனது பூர்வ ஜந்ம விருத்தாந்தத்தைப் புதல்வனுக்குரைத்தார்.

சரபன். கான்யகுப்ஜ புரத்தில் சரபனெனும் வைச்யன் தேவரிஷியை வணங்கித் தனக்குப் புத்ரபாக்ய முண்டாகும் படி ஆசீர்வதிக்கவேண்டினன். அவர் ஞானக்கண்ணு லறிந்த விஷயத்தைச் சரபனுக்கெடுத் துரைத்தார். உன் மனைவிதான் கர்ப்பிணியானல் ஆலயஞ்சென்று கௌரியை அர்ச்சிப்பதாக

வேண்டிக்கொண்டாள். கர்ப்பமுண்டான பிறகு தான் வீட்டைவிட்டு வெளியிற் செல்லலாகாதென்றெண்ணிதோழி களைக்கொண்டு பூஜைசெய்தாள். எந்த கர்மாவையும் தம் பதிகள் சேர்ந்தே செய்யவேண்டும். அல்லது இருவரில் ஒரு வர் செய்யவேண்டுமே அல்லாது வேலைக்காரரைக்கொண்டு செய்யலாகாது. அப்படி செய்ததால் அக்கர்ப்பம் குறையா கப்பிறந்திறந்தது. ஆதலால் திலீபனைப்போல் நீங்களிருவரும் ஒன்ருகச் சேர்ந்து கௌரியைப் பூஜித்து புத்ரனைப்பெறுவீர் என்ருர். இதைக்கேட்ட சரபன் திலீபனது சரிதத்தை விவரிக்கும்படிவேண்ட அவர் கூறினுர்.

திலீபன்.

வைவஸ்தவதமநுவின் குலத்தில் திலீப னென்ருேரரா சன் தர்மமாக தரணியை ஆண்டு வந்தான். ஒரு ஸமயம் தனது ராஜ்யத்தை மந்திரிகளிடம் ஒப்புவித்து பத்நியான ஸுதக்ஷிணையுடன் ஸந்தாநத்தைக் கருதி வஸிஷ்டாச்ரமஞ் சென்ருன். அவர் அரசனைப் பார்த்து, திலீப! நீ ஸ்வர்க்கம் சென்று இந்திரனைச் சேவித்து விட்டு ருதுஸ்னனம் செய்த உன் மனைவியை நினைத்துக் கொண்டு மிக வேகமாக வந்தாய்! ருதுகாலந் தவறலாகாதென்ற தர்மத்தை நாடி மாநிலம் வந்தநீ மந்தாரமருத்தருகே படுத்திருந்த தேனு வை ப்ரதக்ஷிணம் செய்யாமல் சென்ருய். அதனல் அது தன் பெண்ணை ஆராதித்தாலன்றி உனக்கு அபத்யமுண்டா காதென சபித்தது. அதன் பெண்ணுன நந்தினி நம் ஆச்ரமத் திலிருக்கிருள். அவளை நீ மனைவியுடன் ஆராதி என்ருர். அவர் கூறிக்கொண்டிருக்கும்பொழுதே நந்தினி அங்கு வந்தாள். இருவரும் சுப சகுநத்தைக்கண்டு கார்யஸித்தி ஆனதென்று ஸந்தோஷித்தனர்.

ப்ரதி தினம் காலையில் நந்தினியை ஸுதக்ஷிணை நன்ருக பூஜித்து மேய காட்டிற்குச் செல்லும்போது வழிகொண்டு

விடுவாள். மாலையில் எதிர்கொண்டழைத்து வந்து பூஜிப்பாள். அரசனும் அதன்பின் நிழல்போல் சென்று அவள் நிற்கும்போது நின்று படுக்கும்போது உட்கார்ந்து ஜலமருந்தும்போது ஜலங் குடித்து வந்தான். காட்டீக்களை ஓட்டி ருசியான புற்களைப் பிடுங்கிக் கொடுத்தும் இருபத்தோரு நாள் அரசன் நந்தினியை உபாஸித்தான். மறுநாள் அரசன் ஹிமாலயத்தின் குஹையின் அழகைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது பசுவின்மேல் ஓர் ஸிம்ஹம்தாவிப் பாய அது உறக்கக் கதறியது. அதைக் கண்ட அரசன் மிருகேந்தரனைக் கொல்ல, வில்லைவளைத்து நாணைப் பூட்டினுன். மன்னனது கை அசையாது சித்ரம்போலிருந்தது. உடனே ஸிம்மம் மநுஷ்யனைப்போல் மன்னனைப் பார்த்து, ராஜன்! யான் கும்போதரனெனும் சிவ கிங்கரன். எதிரிலுள்ள தேவதாருமரத்தைப் பார்வதி புதல்வனைப்போல் வளர்த்தாள். ஓர் மதயானை அதன்மேலுரைந்து பட்டையைப் பேர்த்தது. அதைக்கண்டு அன்னை வருந்த என்னைப் பார்த்து ஈசன் நீ ஸிம்மமாக இருந்து அத்தருவை ரக்ஷி! அருகில் வரும் மிருகங்களைப் புசி! என்று கட்டளை இட்டார். ஆதலினிதை உண்பேன்! நீ வீடு செல். என்று கூறிற்று. திலீபன், மஹேசனது ஆணையை எவரே மீற வல்லவர்? எனது உடலை உட்கொண்டு குருவின் தேநுவை விட்டுவிடு என்றான்.

ஓர் பசுவுக்காக உத்தம ராஜ சரீரத்தை விடுவது நியாயமா? உயிருடனிருந்தால் நீ எண்ணிறந்த தானதர்மத்தைச் செய்யலாமென்று ஸிம்மம் கூறியும், அரசனதை மறுத்து தன் உடலை அதற்கு ஆஹாரமாக அளித்தான். திலீபன் சிரஸில் தேவர் புஷ்பமாறிப் பொழிய, பசுவின் மேலிருந்து ஸிம்மமும் மறைய நந்திநி, அரசே! எழுந்திரு! உம்மை யான் பரீக்ஷிக்கவே மாயையால் மிருகேந்தரனைத் தோற்றி வைத்தேன். உமது உத்தம குணத்தைக் கண்டு ஸந்தோஷித்

தேன். எனது பாலைக் கறந்து குடி. ஸத்புத்ரன் ஜனிப்பான் என்று கூறிற்று. பார்த்திவன், தாயே! கன்றுக்கும் ஹோமத்திற்கும் தங்களது க்ஷீரத்தை அளித்து மிகுந்ததை குருவின் உத்திரவுபெற்றுப் பருகுகிறேனென்றான். அங்ஙனமே பாலைப் பருக திலீபனுக்கு ரகு வெனும் ப்ரஸித்தனான புதல்வனுண்டானன். இதைக்கேட்டு சரபன் மனைவியுடன் அம்பிகையை பக்திச்ரத்தையோடு அர்ச்சித்தான். ஏழாவது திநத்தில் பகவதி ப்ரத்யக்ஷமாகி இந்த்ரப்ரஸ்தத்தில் ஸ்நாநம் செய். நற்புதல்வனைப் பெறுவாய் என்றான். அங்ஙனமே அவருக்கு யான் புத்ரனாகப் பிறந்தேன்.

அவர் எனக்கு விஷ்ணு பக்தியை உபதேசித்து வீட்டை விட்டு க்ஷேத்ராடநம் செய்து வந்தார். ஒரு ஸமயம் இந்த்ரப்ரஸ்த தீர்த்தத்தில் தங்கி த்ரிகாலஸ்நாநம் செய்து வந்தார். அங்கு அவர் கடும் ஜ்வரத்திற்காளாகி தற்செயலாக வந்த வழிப்போக்கனைச் சகாயமாகக்கொண்டு ஊருக்குக் கிளம்பினார். நடுவழியிலோர் அரக்கன் வழிப் போக்கனையும் வண்டியிலுள்ள குதிரைகளையும் கொன்று தின்று சரபனது பாத்திரத்திலுள்ள ஜலத்தைப் பருகினான். அத்தீர்த்த மஹிமையால் பூர்வஜன்மஞாநம் பெற்று அவ்வஸுரன் சரபனிடம் கூறினன்.

நண்ப! யானோரந்தண குலத்துதித்த கர்மசண்டாளன். எனது துராசாரத்தைக் கண்டு வெறுப்புகொண்ட தந்தை என்னை விரட்டிவிட்டார். தேவகனெனும் நண்பனது வீட்டிற் சிலகாலந் தங்கினேன். அவன் ஊரிலில்லாதபோது அவன் மனைவியின் கற்பை அழித்தேன். அவ்வுத்தமி விஷமுண்டு என்னால் கெடுக்கப்பட்ட உடலை விட்டாள். இதைக் கண்டு இனி இங்கு தங்கலாகாதென இரவில் ஓடினேன். திருடனென்றெண்ணி என்னைக் காவலாளிகள் கொன்றுவிட்டனர். பலகாலம் நரகயாதனை அனுபவித்து பின்னர் இந்த ராக்ஷஸ

சரீரம் பெற்றேன். தீர்த்த மஹிமையால் யான் கொன்ற வழிப்போக்கனும் வாஹநங்களும் வைகுண்டஞ் செல்கின்றன! பார்! இத்தீர்த்தம் எனக்குக் கிடைக்க யான் செய்த புண்யத்தைக் கேள்! தேவகனது ஸங்கத்தால் ஓர் ஏகாதசி விருதமநுஷ்டித்தேன். தற்செயலாக த்வாதசியன்று ஓர் ஸாது பசி என்று என் வீட்டிற்கு வந்தார். அவரைப் பார்த்து வேஷதாரியாய் பெண்களிருக்குமிடம் செல்லும் நீர் யார்? என்றேன். அவரதைக் கேளாமல் உட்செல்ல அவரைக் காலாலுதைத்துக் கீழேதள்ளி அடித்தேன். இதைக் கண்டு இரக்கங்கொண்ட என் மனைவி அவருக்கு அன்னமிடும்படி கூறினுள். அன்னமிட்டேன். அதனுல் எனக்கு இந்த தீர்த்தம் கிடைத்தது என்ருன். அதைக்கேட்ட என் தந்தை ஊராசையைவிட்டு அந்த ராக்ஷஸனது ஸஹாயத்தால் இந்த்ரப்ரஸ்த தீர்த்தம் சென்று அங்கே வஸித்தார். தற்செயலாக யானங்கு செல்ல, அவர் உடலைவிட்டு வைகுண்டம் சென்ருர். என் பிதா வஸித்த இடத்தில் யான் வஸிப்பேனென்று சிலகாலமங்கு தங்கினேன். ஒரு ஸமயம் ஓர் பசு இத்தீர்த்தத்திலுள்ள சேற்றி லகப்பட்டுக்கொண்டு கதறியது. அதை விடுவிக்கச் சென்ற என் தந்தையின் நண்பனுன நிசாசரன் முதலையாலிழுக்கப்பட்டு ஜலத்திலிறந்தான். உடனே அவனுக்கு விமானம் வந்தது. அங்கு வஸித்திருந்த யான் பூஜைமத்யையில் வந்த தூர்வாஸருக்கு நல்வரவு கூருதிருந்தேன். அவர் சாபத்தால் இப்பிறவி பெற்றேனென்று கூறி சிவசர்மா விஷ்ணு சர்மாவுடன்கூட ஆங்கு பலநாள் தங்கி முடிவில் முகுந்தனது திருவடியடைந்தான்.

த்வாரகா தீர்த்தம்.

இந்தரப்ரஸ்தத்தினருகே காம்பில்ய மென்ருேர் நகரமுண்டு. அங்கு மன்மதனேபோல் ரூபம் வாய்ந்த ஓர் அந்த

ணன், குயிலினுமினிய குரலுடன் பாடுவான். அங்கர ஸ்திரீகளனைவரும் அவனைச் சுற்றிச் செல்வர். இதை அறிந்த அந்நாட்டரசன் அவனை அழைத்து எந்த மந்திரத்தால் உன்னை எல்லோரும் சுற்றுகின்றனர்? உண்மையைச் சொல். இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேனென்றான். இதே ஸமயத்தில் புருஷர்கள் தங்கள் மனைவிகள் மனதை இழுக்குமிவனைச் சிக்ஷிக்க வேண்டுமென்று அரசனிடம் வந்தனர். பெண்மக்களுமங்கு வந்து தங்கள் வீட்டிற்கு வந்து தங்கள் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யுமென அவ்வந்தணரை வேண்டினர்.

அப்பூஸுரர்; நீங்கள் என் தாய்மார்கள். உங்கள் பதியைப்பூஜித்தால் பரந்தாமன் பரமஸந்தோஷமடைந்து உங்கள் விருப்பைப் பூர்த்தி செய்வார் என்றான். இதைக்கேட்டு நாரிகள் தங்களது செயலை நினைத்து வெட்கி வீடு சென்றனர். சில நாட் சென்றபின் காரூஷதேச மன்னன் படை எடுத்து வந்து காம்பில்யராஜனைக் கொன்றான். தங்களது புருஷர்களிறந்தபின் கற்புக்கு ஹானி வருமென்றஞ்சி அங்கர நாரீமணிகள் விஷமுண்டு உயிரை விட்டனர். அவர்கள் அந்தணரைக் கண்டு ஆசைகொண்டு மநத்தாலும் வாக்காலும் செய்த பாபத்திற்கு ப்ராயசித்தம் செய்துகொள்ள வில்லை. ஆதலால் ராக்ஷஸிகளாகப் பிறந்து அர்ஜுநனது யாகத்தை அழித்தனர். அவ்வர்ஜுநனது தேர் கொடியில் வீற்றிருந்த வீர அநுமானால் கொல்லப்பட்ட அவர்கள் மற்றோர் பிறவியிலும் ராக்ஷஸிகளாகப் பிறந்து, த்வாரகா தீர்த்தம் சென்று வந்த ஒருவரைக் கண்டனர். அவர் விமலரெனும் விப்ரச்ரேஷ்டர். அவருக்கு விஷ்ணுவினருளால் ஹரிதத்தனென்ற குழந்தை பிறந்தது. வயது சென்றவுடன் அது ஸந்யாஸம் செய்துகொண்டு சென்றதால் குலவிருத்திக்கோர் குழந்தை வேண்டுமென்று விமலர் தீர்த்தாடநம் செய்து வந்தார். ஓரிரவு கனவில் கமலாஸநன் தோன்றி த்வாரகா தீர்த்தம்

செல். புதல்வனுண்டாவனென்றார். அங்கு சென்று விமலர் விதிப்படி ஸ்நாநம் செய்து ஊருக்குத் திரும்பினர். 'வழியில் அந்த ராக்ஷஸிகள் வந்து இவரைப் புஜிக்க ஆரம்பித்து இவர் கையிலுள்ள த்வாரகா தீர்த்தமஹிமையால் நற்கதிபெற்றனர்.

கோசலா தீர்த்தம். முகுந்தனெனும் பிராமணன் தனது கல்வித்திறத்தால் ஏராளமான பொருளைத் தேடி வைத்திருந்தான். ஓரிரவு சண்டகனெனும் நாபிதன் இவர் மனைவியுடன் படுத்திருக்கும்பொழுது தம்பதிகளிடமிருந்த ஆபரணங்களை அபஹரித்துச் சென்றான். விழித்தெழுந்த முகுந்தன் திருடனைத் துறத்திச்செல்ல அவன் இவரைக் கத்தியால் வெட்டிக் கொன்றான். கர்ப்பிணியான அவன் மனைவி புருஷனுடன் உடன்கட்டை ஏறத் துணிந்தாள். அச்சமயம் வேதாயநரெனும் அவன் குரு அங்குவந்து அவளுக்கு ஸமாதாநம் சொல்லி முகுந்தனுக்கு வேண்டிய பரலோக கார்யங்களைச் செய்துமுடித்தார். அவனுடைய ஸஹோதரனிடம் முகுந்தனது அஸ்திகளைக்கொடுத்து குரு அவளையும் தன்னுடன் அழைத்துக்கொண்டு கங்கைக்குச் சென்றார். நடுவழியில் கோஸலா தீர்த்தக் கரையிலிருவரும் படுத்துறங்க, ஒரு நாய் இவ்வெலும்பைத் தூக்கிச்சென்று ஜலத்தில் எறிந்தது. அந்த தீர்த்த மஹிமையால் திவ்யசரீரம்பெற்ற முகுந்தன் குருவை வணங்கித்தனது லோபத்தால் தனக்கு அபமிருத்யு தோன்றிற்றென்றும் தன் வீட்டிற்கு வந்த ஓர் விருத்தினர் திடீரென்றிறக்க அவரது அஸ்தியைத்தான் கங்கையில் போட்ட புண்யத்தால் தனக்கு இந்த தீர்த்தம் கிட்டியதென்றும் கூறி வைகுண்டம் சென்றான். சண்டனும் அரசனால் கொல்லப்பட்டு பற்பல நரக யாதனைகளை அனுபவித்து கோஸலாதீர்த்தக்கரையில் பாம்பாகப் பிறந்து அடிபட்டிறந்து ஸ்வர்க்கம் சென்றான்.

மதுவநம்

பனிமலைச் சாரலில் கிராதநகரத்தில் குசலன் என்றோர்

ஏழை ப்ராமணனிருந்தான். அவன் மனைவி மிக்க துராசார முள்ளவள். கணவனை வஞ்சித்துப் பல ஆசைநாயகர்களை அடைந்து சிற்றின்ப மெய்தினள். அவர்கள் அளிக்கும் ஆடை ஆபரணங்களைத் தானுமணிந்து தனது பதிக்கு மளிப்பாள். அவன் இவளது செயலைக் கண்டு மநம் நொந்து விஷமருந்தி உயிரை விட்டான். அவள் தனது சிறு புதல் வனைக்கொண்டு கணவனுக்கு ஈமக்கடன்களை முடித்து புதல் வனுக்கு உபநயநம் செய்து வைத்தாள். அவன் கல்வி கற்று தாயின் ஒழுக்கம் நன்றாக இராததால் வீட்டை விட்டுக் கிளம்பி விஷ்ணு பக்தியால் நற்கதிபெற்று பூத உடலை விட் டான். இவன் தாய் தன்னைக் கேட்பாரெவருமில்லை, ஆதலால் யௌவந முள்ளவரைப் பலருக்குத் தன்னுடலை அளித்து தன த்தைப்பெற்றாள். வயதுமுதிர்ந்தது. இவளை வாஎன்றழைப்பா ரெவருமில்லை. துர்மார்க்கத்திற்குரிய குஷ்டரோகமும் இவ ளுக்குத் தோன்றிற்று. கை கால்கள் குறைந்தன. துர்நாற் றம் வீசியது. பசிக்கு உணவில்லாமல் இறந்தாள். இவளது உடலை நாய் நரிகள் இழுத்துச் சென்றன. இவள் பல காலம் ரௌரவாதி நரகங்களை அனுபவித்துச் சுடுகாட்டில் பிணங் கொத்தும் கழுகாகப் பிறந்தாள். இவளுடைய புதல்வன் மறுபிறப்பில் ஓர் முனிகுமாரனாகப்பிறந்து தற்செ யலாக இவளுள்ளவிடம் வந்தான். அப்பறவை தன் தாயென உணர்ந்து அவளுக்கு நற்கதி அளிக்க பெரியோர் சொற்படி மதுவநம் சென்று ஆங்கு ச்ராத்தம்செய்தான். முற்பிறவியில் இவன் தந்தையாயிருந்து விஷமரிந்து மரித்தவர் விமானத் தின்மீதேறிவந்து இவனைப்போற்றி விஷ்ணுபக்திஉண்டாகும் படி ஆசிர்வதித்துச் சென்றார். இவன் தாயும் குழந்தையைக் கொண்டாடி பாபமகன்று ஸ்வர்க்கம் சென்றாள். இவனது பிதாமஹன் வந்து வத்ஸ! யான் உனது பிதாமஹன். யான் முற்பிறவியில் மந்த்ரங்களைக் கொண்டு ஜீவநம் செய்தேன்.

ஓர் கர்ப்பிணி என்னை யடுத்து தனக்கென்ன பிறக்கு மென்று கேட்டாள். பெண்ணென யான் கூற அவள், ஐயா! யான் ஆறுபெண்களை அடுக்கடுக்காகப் பெற்றேன். இதுவும் பெண்ணானால் யான் உயிரை விடுவேன்! அது புதல்வனாகப் பிறக்கும் படி தாங்கள் அருள்புரியவேண்டும் மென்றாள். அதைக்கேட்டு ஆயிரக்கணக்காக தநத்தைப் பெற்று. அவள் கர்ப்பம் கறையும்படி மருந்தளித்தேன். பிள்ளை பிறவாததால் அவள் தானளித்த தநத்தைத் தனக்கு அளிக்கும்படி வேண்டினாள். நீ அளித்ததைப் போல் இருமடங்கு யான் உனக்காகச் செலவு செய்தேன்! இதோபார் உன் பணத்தை என்று செங்கல் பொடியை மஞ்சள் ஜலத்தில் கறைத்துக் காட்டி அவளை ஏமாற்றி அனுப்பினேன். எமனை எவர் ஏய்க்க முடியும்? பல நரகயாதனைகளை யான் அனுபவித்துப் பன்றியாய் நாயாய், மரமாய் பிறந்தேன். நீ செய்த மதுவநச்ராத்தத்தால் இதோ வந்ததுபார் எனக்கு விமாநம்! என்று கூறி அவரும் ஸ்வர்க்கம் சென்றார். அவனது பிதாமாஹியும் அவனை ஆசீர் வதித்து பதிலோகம் சென்றான். இக்குழந்தையின் குணத்தைக்கண்டு முகுந்தன் ப்ரத்யக்ஷமாகி அவனுக்கும் வைகுண்டமளித்தார். இச்சிறுவன் மூன்றாவது பிறப்பில் புதனைப் பார்த்து இவன் பிருஹஸ்பதியின் புதல்வனா? சந்த்ரன் புத்ரனா? என்று பரிஹஸித்தான். அதனால் ஓரேதாயிடம் இரண்டுதந்தைகளுக்குப் புத்ரனாகப் பிறக்க நேர்ந்தது.

பதரீ தீர்த்தம். மகத தேசத்தில் தேவதாஸன் என்ற ஓர் உத்தம த்விஜனிருந்தான். அவன் தனது புதல்வனுக்கு யௌவநம் வந்த பிறகு மனைவியை அழைத்து, இதுவரை இல்லறசுகம் பெற்றது போதும்! தீர்த்தயாத்ரை செய்வோம் வா என்று கூறி, புத்ரனிடம் குடும்பபாரத்தை அளித்தான். ஒவ்வொரு தீர்த்தமாகச் சென்று வரும்போது ஓர் ஸித்தர் இடைவழியில் இவரைச் சந்தித்தார். அவரை வணங்கித் தாங்

கள் எங்கிருந்து வருகிறீரென்று தேவதாஸன் வினவ அவர், யான் கபிலரது சிஷ்யன். பதரிகாச்ரமத்திலிருந்து வருகிறேன் அங்கு நடந்த ஓர் விந்தையைக் கூறுகிறேன். கேள். ஒரு எருமை ஆங்குள்ள தீர்த்தத்தில் ஜலங் குடித்தெழுந்தவுடன் கபிலரை வணங்கி கபிலரே! இஃதென்ன தீர்த்தம்? யானிதைப் பருகிய உடன் பூர்வ ஜன்மஞானத்தைப் பெற்றேன். யான் கலிங்காதிபதியாயிருந்து பணத்தாசையால் பல குழந்தைகளைப் கொன்றேன். காமாவேசங் கொண்டு கற்புள்ள பல மாதர்களைக் கெடுத்தேன். யான் செய்த கொடுமையைக் கண்ட குடிகள் கோபமே ரூபமாய் வந்த தூர்வாஸரைச் சரணமடைந்தனர். அவர் திகம்பரராய் விபூதியணிந்து வருவதைக் கண்ட யான், சேற்றைப் பூசிவரும் எருமைபோல் வரும் இவரை உள்ளேவிடாதே என்றேன். உடனே அவர் என்னை எருமையாகும்படி சபித்தார் என்று கூறியது. கபிலர் இது பதரீதீர்த்தம்! இங்கு புனலாடி உன் சாபத்தை அகற்றிக்கொள்! என்றார். அங்ஙனம் எருமை உடலைவிட்டு கலிங்காதிபதி ஸ்வர்க்கம் செல்லக் கண்டனேன் என்றார். தேவதாஸன் மனைவியுடன் அங்கு சென்று ஸ்நாநம்செய்து உத்தமகதி அடைந்தான்.

ஹரித்வாரம். காலிங்கனென்ற சண்டாளன் ஹரித்வார யாத்ரைக்கு வருபவர்களைக் கொள்ளையடித்து வந்தான். ஒரு ஸமயம் ஓர் பெரிய வியாபாரி அங்குவர அவனைச் சூழ்ந்து பல கிங்கரர்கள் ஆயுதபாணியாக இருந்ததால் காளிங்கன் அவனருகே செல்லமுடியவில்லை. ஆதலால் வைச்யனுடன் நட்புகொண்டு அவன் படுத்துறங்கும்போது அவன் பொருளைக் களவாடினன். இதை அறிந்த அவன் காவலாளிகளிருவர் அவனைப் பிடிக்க அவ்விருவரையும் அவன் கொன்றான். அத்திருடனை மூன்றுவது காவலாளிகொல்ல இம்மூவரும் தீர்த்தமஹிமையால் ஸ்வர்க்கம் சென்றனர்.

புஷ்கரம். விதர்ப்பதேசத்தில் மாலவனென்றோர் மஹா புருஷனிருந்தான். அவன் பல்லாண்டு கிருஹஸ்தனுக்குரிய கர்மாநுஷ்டானங்களைச் செய்து தனது முதுமையில் தான் தேடிய தனத்தைத் தக்க பாத்ரத்திற்குத் தரவேண்டுமென விரும்பினான். தனது ஸஹோதரியின் புதல்வனான புண்டரீகனைவிட வேறு ஸத்பாத்ரமில்லை என்றறிந்து அவனை அழைத்தான். தானம் செய்யும் தேசமும் நல்ல தேசமாயிருத்தல் வேண்டுமென்று புஷ்கரஞ் சென்றான். அங்கு விதிப்படி ஸ்நான தானாதிகளைச் செய்து, புண்டரீகனை ஊருக்கனுப்பி மற்றோர் தீர்த்தம் சென்றான். புண்டரீகனும் புஷ்கரத்தில் புனலாடி தன் பொருளில் நாலிலோர் பங்கு தர்ம விநியோகம் செய்து, வீட்டிற்குத் திரும்பினான். நடுவழியில் இவனது ஸஹோதரனான பரதன் உடலில் ரக்த வெள்ளம் ஓட அண்ணனைக் கண்ணால் கண்டஉடன் உயிரைவிட்டான்.

ஸஹோதரனை நினைத்து இவன் கதறி அழும்போது அவன் விமானத்தின் மீதேறிவந்து, அண்ணா! அழாதே! யான் பாபி! நீ தானம்பெற்றுவந்தபொருளை உன்னைக்கொன்று அபஹரிக்க வேண்டுமென்று வந்தேன். நடுவழியில் ஓர் வைச்யக் கூட்டத்தைக் கண்டு சற்று விலகி அங்கு படுத்துறங்கினேன். நள்ளிருளில் திருடர் புகுந்து வைச்யர் தனத்தைக் கொள்ளைகொண்டனர். விழித்தெழுந்த வைச்யர் என்னைத் திருடனென் றெண்ணிக் கொன்றனர். உன்னைக் கொல்ல நினைத்த பாபத்தால் யான் கொல்லப்பட்டேன். ஆயினும் அநாதையாகக் கிடந்த ஓர் சவத்திற்கு ஸமஸ்காரம் செய்து அஸ்தியைக் கங்கையில் போட்டேன். அப்புண்யத்தால் இப்புஷ்கரத்திற்கருகே இறக்க நேர்ந்தது. இந்த பாக்யத்தால் என் பாபமகன்று விமானமேறினேனென்றான். அவனுக்குரிய சடங்குகளைச் செய்துவிட்டு புண்டரீகன் வீடு வந்ததும் புண்டரீகாக்ஷன் தன்னில்லத்தே அமர்ந்திருக்கக்

கண்டு பேரானந்தமடைந்து அவரைப் பணிந்தான். அவர் அன்ப! புஷ்கரத்தில் புனலாடும்போது ஓர் மாதம் நமது கிருஹத்தில் கேசவன் வந்து தங்கி இராரா? என்று நீ நினைத்தாய் ஆதலாலிங்கு ஓர் மாதம் தங்குவேனென்ருர். புண்டரீகன் புருஷோத்தமனை அன்றன்றுமர்ச்சித்து வைகுண்டம் சென்ருன்.

ப்ரயாகை. விச்வாவஸு எனும் கந்தர்வராஜன் பிரும்ம ஸதஸில் காநம் செய்யச்சென்ருன். அங்கு அவரருகே ப்ரயாகம் எனும் தீர்த்தம் வீற்றிருக்க தீர்த்தராஜன் அதற்குச்சாமரம் வீசக்கண்டான். மாஹிஷ்மதீ தீரத்தில் மோஹினீ என்ருேர் வேசி இருந்தாள். அவள் தனது சரீரலாவண்யத்தால் பலரைத் தனக்கு வசமாக்கி அபரிமிதமான செல்வத்தைத் தேடினுள். தனக்கு ப்ரதிகூலமாக இருந்த பல தாஸிகளைக் கொன்ருள். அவள் வீட்டிற்குவந்த பிராமணர்களுடைய பணத்தில் பேராசைகொண்டு ஏழுபேரைக் கொன்று பிரும்மஹத்தியும் செய்தாள். அவள் ஒரு ஸமயம் தனக்குப் பிறகு இச்செல்வத்தை யாரடையப் போகிருர்? என்று யோசித்து நகரைச் சுற்றி தண்ணீர்ப்பந்தல் வைத்தும் ஸத்ரம் கட்டியும் பொருளைத் தர்ம விநியோகம் செய்தாள். ஒரு நாளிவள் வெளியூருக்குச் செல்ல நடுவழியில் திருடர்கள் இவளிடம் தனமிருக்கு மென்றெண்ணி அவளை அடித்துச் சென்றனர். அவ்வழியாக வந்த அந்தணன் தன் கையிலிருந்த ப்ரயாக தீர்த்தத்தை அவள் வாயில் விட்டான். அவள்தானோர் மஹிஷியாகவேண்டு மென்றெண்ணி இறந்தாள். அதே போல் தாநமஹிமையாலும் தீர்த்த ப்ரபாவத்தாலும் வீரவர்ம ராஜனின் மனைவியாகப் பிறந்தாள். ஹேமாங்கி என்ற அவள் ஒருநாள் மந்திரியின் வீடு சென்று விருந்துண்டாள். மந்திரியின் மனைவி ராணிக்குப் பரிசாக தனது புருஷனந்தரங்கமாக வைத்திருந்த ஓர் புத்தகத்தை அளித்தாள். அதில்

ஸகல பூமண்டலமும் நதி கிரிகளும் வரையப்பட்டிருந்தன. ப்ரயாகத்தைப் படத்தில் பார்த்தவுடன் பார்த்திவனை அணுகி தனது பூர்வ ஜன்ம கதையைக்கூறி ப்ரயாகத்திற்குச் செல்லும்படி அவள் வேண்டினாள். அங்ஙனமே இருவரும் ப்ரயாகை சென்று வைகுண்டமடைந்தனர்.

மாகஸ்நானம். திலீப சக்ரவர்த்தி ஒரு ஸமயம் வேட்டையாடி வீட்டிற்குத் திரும்பும்போது விருத்த ஹாரிதர் என்ற முனி அரசனைப் பார்த்து அரசே! தக்க ஸமயமாயிருக்கிறதே! மாகஸ்நானம் செய்து திரும்பலாகாதோ? என்றார். அரசனங்ஙனமே புனலாடி தன் குலகுருவான வஸிஷ்டரை வணங்கி மாகஸ்நான மஹிமையை விளக்கும்படி வேண்டினான். அவர் கூறினார். முன்னோர் ஸமயம் பனிரண்டாண்டு பாரினில் மழை பொழியாது பஞ்சமுண்டானது. பார்க்கவரிஷி தனது பரிவாரத்துடன் மணிகூடமெனும் மலைக்குச் சென்றார். ஓர் வித்யாதரன் புலி முகத்துடன் அவரை வணங்கித் தனது புலி முகமகன்று முன் முகம் வரும்படி அருளப்ப்ரார்த்தித்தான். அவர் நீ முற்பிறவியில் ஏகாதசி உபவாஸமிருந்து த்வாதசியன்று எண்ணை தேய்த்துக்கொண்டாய்? உபவாஸத்தால் வித்யாதர சரீரமும் எண்ணையால் வியாக்ரமுகமும் பெற்றாய். மாகமாஸ ஸ்நாநம் செய்து மாதவனைப் பூஜி. உனது இஷ்டம் கைகூடுமென்றார். அங்ஙனமே வித்யாதரனனுஷ்டித்துத் தன் ஸ்வரூபத்தைப் பெற்றான். வத்ஸனெனும் முனிகுமாரன் மாகஸ்நாந புண்யத்தால் விஷ்ணு பக்தியைப் பெற்றான். ஏகாக்ர சித்தனாய் மதுவனத்திலுட்கார்ந்து மாதவனை த்யாநம் செய்தானவன். அசைவற்று கட்டைபோலிருந்ததால் இவன் சரீரத்தில் மிருகங்கள் கொம்பைத் தீட்டுவது வழக்கம். ஆதலின் இவன் மிருகச்ருங்கன் எனப் பெயர்பெற்றான். பகவானிவனெதிரிற்றோன்றி

ருபு என்ற அந்தணனாக நீ அடுத்த பிறவி பெற்று ஜீவன் முக்தனாகி என்னடி பெறுவாய் என்று வரந்தந்து மறைந்தார். வத்ஸன் வனமார்க்கமாக வரும்போது மாகஸ்நாநம் செய்ய வந்த மூன்று பெண்கள் பாழுங்கிணற்றில் விழுந்துமாள, அவர்களது அன்னை அலறி அழுவதைக் கண்டான். கருணைக்கடலான வத்ஸன் உன் பெண்களைப் பிழைப்பிக்கிறேன். அழாதே! என்றுரைத்து கழுத்தளவு ஜலத்திலிறங்கி த்யாநம் செய்ய ஆரம்பித்தான். அதற்குள் மதங் கொண்ட யானை அவனைக் கொல்ல வந்தது. வத்ஸன் அதன் நிலையை அறிந்து, அதைக்காக்க தனது எட்டு நாள் மாகஸ்நான புண்யத்தை அதற்களித்தான். உடனே அது திவ்ய தேஹம் பெற்று தனது முற்பிறவியைக் கூறிற்று. நைஷதநாட்டில் தர்மகுப்தன் எனும் ஓர் வைச்யனாக நானிருந்தேன். ஓர் ரஸவாதியினிடம் சென்று பேராசையால் எனது தனமனைத்தையும் ஸ்வர்ணமாக்கித் தரும்படி கொடுத்தேன். அவனதை அபஹரித்துச் சென்றான். பிழைப்பிற்கு வேறுவகையின்றி, யான், தர்மத்திற்காக என் தந்தை வைத்திருந்த பொருள்களை விற்று ஜீவித்தேன். அப்பாபத்தால் யானை ஜன்மம் பெற்றேன். உமது மாகஸ்நான புண்யதாநத்தால் தேவனானேனென்று கூறி ஸ்வர்க்கம் சென்றான்.

மிருகச்ருங்கர் மிருத்யுவைத்துதித்து இறந்தபெண்களை எழுப்பினார். அவர்கள் தாங்கள் யம லோகத்தில் கண்ட வைபவங்களைத் தாய்க்கெடுத்துக் கூறினர். இருபத்தெட்டுகோடி நரகங்களையும் பாபம்செய்தோர் அங்குபடுந் துன்பத்தையும் விவரித்தனர். பாபம்செய்தோரது முன்னே பதினெட்டு கைகளுடன் பயங்கரமாக யமன்தோன்றுவான். கிடைத்தற்கரிய மானிடப்பிறவி பெற்று மாதவனை அர்ச்சிப்போர் யமயாதனையைப் பெறார். ப்ரதி தினம் பகவந்நாமாவை ஜபித்து அவரை அர்ச்சித்து ஸாளக்ராம ஜலத்தை உட்கொண்டு

ஏகாதசி உபவாஸமிருப்பவர் மாகஸ்நாநம் செய்பவர் பரமனது திருவடியை அடைவர் என்றனர். நந்திக்ராமத்தில் புஷ்கரன் என்றோர் பூஸுரனிருந்தான். நித்ய கர்மாநுஷ்டான நிரதனை இவன் திடீரென்றிறக்க யமன் தூதர்களைப் பார்த்து, இப்பெயர்கொண்ட மற்றொருவனை அன்றோ அழைத்து வரச் சொன்னோம். மாகஸ்நாநம் செய்து தீர்க்காயுள் பெற்ற இவரை ஏன் அழைத்து வந்தீர்! அவனியிற்கொண்டு விடுமிவரை என்றார். புஷ்கரன் யமனை வணங்கி யாதநா சரீரத்துடன் துன்பத்தை அனுபவிக்கும் ஜீவராசிகளைக் கண்டு பரிதபித்து பகவந்நாமாவைக்கூறி அவர்களுக்கு இன்பமளித்து பூலோகம் வந்தார்.

ஸௌபரி. காம்பில்ய நகரில் ஸௌபரி என்றோர் மஹர்ஷி ஜலத்திற்குள் உட்கார்ந்து தவம் புரிந்தார். ஸாமமதன் என்ற மீன் தன் மனைவி மக்களுடன் அழகாக அவரருகே சென்று விளையாடிற்று. அதைக் கண்ட அத்தபோதனர்தானும் மனைவியை மணந்து மக்களுடன் கூடிக்குலவி விளையாடக் கருதினார். மாந்தாதா எனும் மன்னனுக்கு ஐம்பது கன்யகைகளிருப்பதாகக் கேட்டுதனக்கோர் பெண்ணைத் தரும்படி கேட்டார். அவன் எந்த பெண் தங்களை விரும்புகிறாளோ அவளை உமக்கு அளிக்கிறேனென்றான். ஸௌபரி மன்மதனைப்போல் உருவெடுத்து அந்தப்புரம் சென்றார். ஐம்பது கன்யகைகளும் அவரை வரிக்க அரசனப்படியே அவருக்கு அவர்களை அளித்து மணம் செய்துவைத்தான். மனைவிகளுடன் வனஞ்சென்ற முநி தவ வலிமையால் அவர்களுக்குத் தனித்தனி அரண்மனையைப் படைத்து ஸகல ராஜபோகங்களையு மளித்தார். பெண்களைப் பார்க்க மாந்தாதா தபோவநம் வந்து அரண்மனைகளைக் கண்டு வியந்து ஓர் வீடு சென்று பெண்ணால் நன்கு உபசரிக்கப்பட்டான். அப்பெண் தான் ஸகல பாக்யங்களைப் பெற்றும் மஹர்ஷி தன்னைவிட்டகலாதிருப்பதால் மற்ற ஸஹோ

தரிகளைக் கண்டு விசாரிக்கவும் இயலவில்லை. இவ்வொரு குறைதான் தனக்கென்றுன். அங்ஙனமே மாந்தாதா மற்ற வீடுகளுக்கும் சென்று ஐம்பது ஸௌபரியைக் கண்டுவியந்து முனிவரைப் போற்றினுன். மாகஸ்நாந மஹிமையால் தானிந்த வைபவத்தைப் பெற்றதாக முனிவர் கூறினர்.

ஆன்ஹிக தர்மம். இரவில் படுத்துறங்கும் மனிதர் ப்ராஹ்ம முகூர்த்தமெனும் ஐம்பத்தைந்தாவது நாழியில் படுக்கையைவிட் டெழுந்திருக்க வேண்டும். ஈசனை த்யாநம் செய்து தர்மார்த்தங்களைச் சிந்திக்க வேண்டும். வீட்டிற்கு வெகு தூரத்திற்கப்பால் சென்று தலையைத் துணியால் மூடி பூணூலை வலது காதில் சுற்றிக்கொண்டு பகலில் வடக்கு முக மாகவும் இரவில் தென்முகமாகவு மிருந்து ஜலமலங்களைக் கழிக்கவேண்டும். அச்சமயம் பேசலாகாது. காறித் துப்ப லாகாது. மலத்தைக் கண்ணுல் காணக்கூடாது. ஜலத் தைப் பாத்ரத்தில் எடுத்தே ப்ரக்ஷாளநம் செய்ய வேண்டும். குறியில் ஒன்றும் குதத்தில் ஐந்தும் இடதுகையில் பத் தும் வலது கையில் ஏழும் இரண்டு கால்களிலும் ஐந்து ஐந் துமாக மண்ணை இட்டுசுத்தி செய்யவேண்டும். பாலுள்ள மரத்தைப் பார்த்து அதற்குரிய சுலோகத்தால் பிரார்த்தித் துப் பல்குச்சி ஒடித்துப் பல்துலக்கிப் பனிரண்டுமுறை வாய் கொப்பளிக்கவேண்டும். ஆசமநம் செய்து ஸங்கல்ப பூர்வ மாக ப்ராதஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நாநாங்கமாக தேவரிஷி பித்ரு தர்ப்பணம் செய்து உலர்ந்தமடி வஸ்த் ரத்தைத் தரிக்கவேண்டும். காலலம்பி ஆசமநம் செய்து குல ஸம்ப்ரதாயத்தைத் தழுவி புண்ட்ர மணிந்து ஸந்த்யா வந்தநம் செய்யவேண்டும். நக்ஷத்ரமிருக்கும்போதே காலை ஸந்த்யையைத் துவக்கி ஸூர்யோதம்வரை காயத்ரீ ஜபம் செய்யவேண்டும். ஔபாஸநம் செய்து திகசூன்யமில்லா மல் கிஞ்சித் தாநம் செய்யவேண்டும். இவை திநத்தின்

முதற் பகுதியில் செய்யத் தக்கது. இரண்டாவதில் வேதாத்யயநம்செய்து ஸமித்குசம் புஷ்பம் முதலியவைகளைக்கொண்டுவரவேண்டும். மூன்றாவதில் சரீரத்திற்கு அதிக ச்ரமமில்லாமல் யாகம் செய்து வைத்தல் வேதமோதி வைத்தல் ஸாதுக்களிடம் தானம் பெறல் என்ற ஜீவநஸாதநத்தால் பொருள் தேட வேண்டும். நாலாவது பாகத்தில் மாத்யாந்ஹிகஸ்நாநம் செய்து பிரும்ம யக்ஞம் செய்து மாத்யாந்ஹிகமான பிறகு ஆதித்யன் அம்பிகை விஷ்ணு கணநாதன் மஹேச்வரன் என்ற மூர்த்திகளைப் பூஜிக்க வேண்டும். பின்னர் வைச்வதேவஞ் செய்து அதிதிகளை எதிர் பார்த்து பசு கறக்கும் நேரம் வரை வாயிற்படியில் நிற்க வேண்டும்.

வந்த அதிதியைத் தக்கபடி பூஜித்து பெற்றோர் குரு கர்ப்பிணி பாலவிருத்தர் முதலியவர்கள் புஜித்த பிறகு யஜமானன் கால்களைக் கழுவி சுத்தமான விடத்தில் உட்கார்ந்து சாந்த மநத்துடன் புஜிக்க வேண்டும். ஒரு வஸ்தரத்துடனும் விரிந்த மயிருடனும் புஜிக்கக்கூடாது. ஸகல பதார்த்தங்களையும் கரண்டியால் பரிமாறவேண்டும். ப்ராணாஹுதிகளைப் பல்லால் கடிக்கக் கூடாது. ஸன்யாஸிக்கு எட்டு கபளமும் வாநப்ரஸ்தனுக்குப் பதினாறும் கிருஹஸ்தனுக்கு முப்பத்திரண்டும் பிரம்மசாரிக்கு கணக்கில்லாமலும் உணவு உட்கொள்வது சாஸ்திர விதியாம். தாமஸ பதார்த்தங்களையும் பழையதையும் உண்ணக்கூடாது. புஜித்த பிறகு ஆசமநம் செய்து இஷ்ட தேவதையை நினைத்து தாம்பூல மேற்க வேண்டும். திநத்தின் ஆறாவது ஏழாவது பாகங்களை இதிஹாஸ புராணங்களால் கழிக்க வேண்டும். எட்டாவது பாகத்தில் குடும்ப கார்யத்தைக் கவனித்து ஊருக்கு வெளியிலுள்ள தீர்த்தங்களில் ஸாயம் ஸந்தியை அநுஷ்டிக்க வேண்டும். இரவு போஜநத்திற்குப் பிறகு தன் வீட்டில் கிழக்கே தலை வைத்தும் மாமனார் வீட்டில் தென் முகமாகவும் வெளியூரில்

மேற்கு முகமாகவும் படுக்க வேண்டும். வடக்கு முகமாக எங்கும் எப்போதும் படுக்கலாகாது.

பதிவ்ரதாதர்மம். எத்தகையவனுயினும் முக்கரணத்தாலும் புருஷனை ஒத்து அழகிற் சிறந்த அன்யபுருஷனைக் கண்ணெடுத்துக் காணுமலும் காண நேர்ந்தால் கர்மவிகாரமுண்டாகாமலும் இருப்பவள் உத்தம பதிவிருதையாம். வீட்டை அலங்கரித்து ஸுமுகமாகப் புருஷனிடம் தனக்குரியகடமைகளைச் செய்து வீட்டின் வரவு செலவுகளைக் கவனிக்க வேண்டும். அதிக சிரிப்போ கோபமோ கூடாது. புருஷன் விரும்பாததைத் தான் ஏற்கலாகாது. அஸத் ஸ்த்ரீகளுடன் சேரக் கூடாது. ரஜஸ்வலையாயிருக்கும் பொழுது ஸ்நாநம், காநம், அலங்காரம், அழுகை, சிறிப்பு, வண்டி ஏறல், எண்ணை தேய்த்துக்கொள்ளல், விளையாட்டு, பகலில் தூக்கம், தேவதர்சநம் சிருங்காரஸ்மரணம் முதலியவைகளை விடவேண்டும். நான்காவது நாள் ஸ்நானஞ் செய்தவுடன் எந்த புருஷனையுங் காணுமல் ஸூர்யனைப் பார்த்து பஞ்சகவ்யம் அல்லது பாலைப் புஜிக்க வேண்டும். கர்ப்பிணியா யிருக்கும்பொழுது பராந்நம், கோபம், சண்டை, காரமான ஆஹாரம், பயங்கரமான ரூபம், அடிக்கடி குழந்தை இறப்பவள், அன்ய புருஷன் பெயர் முதலியவைகளை விடவேண்டும். எப்போதும் ஸந்தோஷமாக இருந்து ஸத் கதைகளைக் கேட்டு ஸாத்விகாஹாரத்தை உட்கொள்ளவேண்டும். புருஷன் ஊரிலில்லாதபோது பெண்கள் தன்னை அலங்கரித்துக் கொள்ளலாகாது. மாமி மாமன் எதிரில் படுப்பது, குங்குமம் மை இல்லாமை, ஊத்தைப்பல் அழுக்குத் துணி உறக்க சிறித்தல், பிறர் வீட்டிற்குச் செல்லுதல், அதிக நித்ரை, கலஹம், வெட்க மில்லாமை, கஞ்சுக மணியாமை, தன்னிஷ்டமான இடஞ் செல்லல், பரபுருஷன் கை கால்களைப் பிடித்தல் முதலிய தோஷங்களை அகற்றி ஸதாசாரத்துடன் வாழ்பவள் உத்தம பதிலோகம் செல்வாள்.

தீர்த்தயாத்ரை. ஸத்யம், பொருமை, இந்திரியங்களை அடக்குதல் ஸர்வ ப்ராணிகளிடம் தயை, கபடமில்லாமை, தாநம், அடக்கம், ஸந்தோஷம், நியமம், மந்த்ரஜபம், பிரியமாகப் பேசுதல், இவைகளே முக்ய தீர்த்தங்கள். இக்குணமில்லாதவர் கங்காதி ஜலத்தில் முழுகினாலும் நற்பயனடையார். மஹர்ஷிகள் அங்கிகரித்ததால் தான் நதிகள் தீர்த்தமெனப் படுகின்றன. தீர்த்த யாத்ரை செல்வோர், முதல் நாள் உபவாஸமிருந்து மறுநாள் ஸ்நாநம் செய்து தீர்த்த ச்ராத்தம் செய்ய வேண்டும். அங்கு தாநம் வாங்குதல், வாஹநத்தில் செல்லுதல் அப்யங்கனம் செய்து கொள்ளல் முதலியவைகளைச் செய்யக்கூடாது. ச்ரத்தையற்றவர் நாஸ்திகர் அருத ஸம்சயமுள்ளவர் காரணம் கேட்பவர் ஆகிய இவ்வைவரும் தீர்த்த பலனைப்பெறமாட்டார். தீர்த்தங்களில் வபநம்செய்து கொண்டால் நம் தலையை அவலம்பித்த பாபமகலும். சக்திக்கேற்ற அளவு தீர்த்தத்தில் தாநம் செய்ய வேண்டும். ஸுவ்ரதர் என்ற அந்தணர் நர்மதா தீரத்தில் அகலங்கமெனும் அக்ரஹாரத்தில் வஸித்து வந்தார். பல ஆசார்யர்களிடம் சென்று ஸகல கலைகளையுமவர் கற்று குருதக்ஷிணை கொடாது வந்தார். தநாசையால் சண்டாளனிடமும் தாநம் வாங்கினர். உப்பு பால் நெய் எண்ணை முதலிய தகாத வஸ்துக்களை வியாபாரம் செய்து அபரிமிதமான பொருளைத் தேடினர். வார்த்தக்யம் வந்து தனது இந்திரியங்கள் தளர்ந்து எவரும் தன்னை மதிக்காமல் போகவே ஓரிரவு படுத்துக் கொண்டே அவர் யோசித்தார். நமக்கோ வய்தாய் விட்டது. யமனழைக்கிறன். தேடிய பொருளோ நம்முடன் வாராது. புண்ய பாபமே நமது தோழர்கள்! தேடிய தநத்தால் யான் தாநதர்மம் செய்யாது நானுமதை அநுபவிக்காது இறக்கப் போகிறேனே! இனியாவது ஈசனளித்த பொருளை நல்விநியோகம் செய்வேனென்று எண்ணிக்கொண்டே உறங்கினன்.

அன்றிரவு சோரர்கள் உள்ளேபுகுந்து ஸகல பொருளேயும் களவாடிச்சென்றனர். காலேயில் எழுந்து ஸுவ்ரதன் மாகஸ்நாநத்தைத் தவிர தனக்கோர் கதியுமில்லே. என்று யோசித்து ப்ரயாகை சென்று ஸ்நாநத்தால் ஸ்வர்க்கம் சென்ருன்.

சிவராத்ரி யன்று உபவாஸமிருந்து இரவெலாம் கண் விழித்து ஏகாக்ரசித்தனுய்ப் பரம சிவனேப் பில்வங்கொண்டு அர்ச்சிப்போர் மஹாபாபியாளுலும் கைலாஸம் செல்வர். வேடனெருவன் சிவராத்ரியின் மஹிமையை உணராமல் அன்று ஆஹார மகப்படாததால் பகலெலாம் பட்டினி கிடந்து, இரவில் வநஞ்சென்று பிராணிகளேப் பிடிக்க வலே வீசினன். தானிருப்பது தெரியாமலிருக்க ஓர் கல் மீதேறி மரத்தில் உட்கார்ந்தான். ஓர் திக்கில் சத்த முண்டாகவே அங்கு மிருகம் வருகிறதோ என்று பார்க்க அம்மரத்திலுள்ள தழையை உருவிக் கீழேபோட்டான். ப்ராணிஒன்றும்வர வில்லே. ஆயினும் நான்குயாமத்திலும் நாற்புறமுள்ள தழைகளே உருவி எறிந்து காலேயில் மிருகமகப்படாததால் மனம் நொந்து வீட்டிற்குத் திரும்பினன். அச்சமயமவனுயுள் முடிந்ததால் பயங்கரமான யமகிங்கரர்கள் அவனேத் தூக்கிச்செல்ல வந்தனர். அதே ஸமயத்தில் சிவ கணங்கள் விமானங் கொண்டுவந்து இவனேத் தூக்கிச் சென்றனர். இப்பாபிக்குக் கைலாஸமேதென்று யமன் வினவ, நேற்று சிவராத்ரியன்று இவ்வேடன் உணவில்லாதிருந்து வேட்டைக்காக வனமவந்து கண்விழித்து பில்வமரத்தின் மீதேறி கீழே உள்ள ஸ்வயம்பு லிங்கத்தின்மீது பில்வ பத்ரத்தைப் போட்டான். ஆதலால் இவன் கைலாஸம் செல்கிருனென்று சிவகணம் கூறிற்று.

ஸ்ரீகுண்டலவிகுண்டலன் என்று ஹேமகுண்டலவைச்யருக்கு இருபுதல்வர்களிருந்தனர். தந்தைக்குப்பிறகு இவர்கள் துன்மார்க்கத்திலிறங்கி தந்தை தனத்தை அழித்துப் பிழைக்க வகையின்றி வேடர்களுடன் சேர்ந்தனர். ஓரே தின

த்தில் ஒருவன் புலியாலும் மற்றவன் ஸர்ப்பத்தாலுங் கொல்லப்பட்டான். யமதர்மராஜன் விகுண்டலனை ஸ்வர்க்கத்திற்கும் ஸ்ரீகுண்டலனை நரகத்திற்கு மனுப்பினர். இதைக் கண்டு வியந்த விகுண்டலன் தேவதூதரை வணங்கி இருவரும் சேர்ந்தே ஸகல பாபங்களையும் செய்தோம். ஒன்றாகவே இறந்தோம். இருவருக்கும் இங்கு பேதம்பாராட்டப்படும் காரணம் யாது? என்று வினவினன். அவர் நீ ஸௌமித்ரனெனும் உன் நண்பன் வீடுசென்று ப்ரயாகையில் இரண்டு மாகஸ்நாநம் செய்தாய். ஒரு ஸ்நாநத்தால் உன் பாபமகன்றது. மற்றொன்றால் ஸ்வர்க்கம் செல்கிறாய் என்றார். விகுண்டலன் தேவதூதரிடமிருந்து பல அரிய தர்மோபதேசம் பெற்றான்.

சிவபூஜை சிறந்த மார்க்கமெனினும் சிவவிஷ்ணுபேதம் பாராட்டுபவர் நரகம் செல்வர். சிவஸ்வத்தை அணுவளவேனும் அபஹரிப்பவனது ஏழுதலைமுறை, அழிந்து நரகத்தைப் பெறும். மடாதிபதியாயிருத்தல் மிகபாபமாம். அவரைத் தொடுபவரும் அவரன்னத்தைப் புஜிப்பவரும் நரகத்தைப் பெறுவர். க்ரீஷ்மருதுவில் தீர்த்த தானமும் ஹேமந்தத்தில் விறகு தானம் செய்வதும் உத்தமம். அன்னதானத்திற்கீடான வேறு தர்மம் கிடையாது. பரான்னத்தைப் புஜிக்காதவன் யமயாதனையைப் பெறான். எதைத்தானம் வாங்கினாலும் வாங்கலாம். அன்னத்தை மாத்ரம் ஏற்கலாகாது. பரான்னத்தை உண்பவன் அன்னதானம் செய்பவனது பாபத்தையும் அன்னத்துடன் புஜிக்கிறான். ப்ரதிதினம் பதினறு ப்ராணயாமம் செய்தால் ஸகல பாபமுமகலும். கோவிந்தா என்று சொல்லிக்கொண்டே இறப்பவன் வைகுண்டம் செல்வான். பகவானுக்கு ப்ரியமான வீடு ஸாளக்கிராமம். அதைப் பூஜித்து அந்த ஜலத்தைப் பருகுவோர் நரகம் செல்லார். சிவநிந்தை செய்யும் வைஷ்ணவன்

நரகம் செல்வான். ஸன்யாஸிகளது சரீரத்தில் பகவான் வஸிப்பதால் அவர்களை அர்ச்சிப்பது சிறந்த தர்மம்.

காஞ்சனமாலினீ என்ற அப்ஸரஸ் மாகஸ்நாநம் செய்து விட்டு ஆகாயமார்க்கமாகக் கைலாஸத்திற்குக் கிளம்பினுள். அவளுடைய வஸ்திரத்திலிருந்து ஜலபிந்து ஹிமாலயத்தி லுள்ள ஓராக்கன்மேல் விழுந்தது. அவன் தனது இயற்கை யான குரூர குணத்தைவிட்டு பெண்ணே நீ யார்? என்று கேட்க, அவள் யான் கலிங்காதிபதியின் மனைவி. ரூபலாவண் யத்தாலும் தநாசையாலும் கற்பையிழந்து மிக பாபம் செய் தேன். கிழத்தன்மை வந்தபோது புரோஹிதரை வணங்கி, எனது பாபமகன்று யான் ஸத்கதி பெற ஓர் வழி கேட் டேன். ப்ரயாகையில் மாகஸ்நானம் செய் என்றார். அங்ங னமே செய்து அப்ஸரஸாக ஆனேன் என்றாள். ராக்ஷஸன், யான் காசியில் பிராமணனாக இருந்து சண்டாளன் முதல் எல்லோரிடமும் தானம் வாங்கினேன். காசியிலிறந்தோர் நரகம் செல்வதில்லை. ஆதலால் யானிறந்த பல பாபப்பிறவிக ளைப்பெற்று இந்த ராக்ஷஸ ஜன்மத்தை அடைந்தேன். என்னை நீ சுத்தனாக்கவேண்டும் என்று பிரார்த்தித்தான். அவள் தனது மாகஸ்நான பலத்தை அளித்து அவனை ஸ்வர்க்கத் திற் கனுப்பினாள்.

மாகஸ்நான பலன். ப்ரமோஹிநீ ஸுசீலா ஸுஸ்வரா ஸுதாரா சந்த்ரிகா என்ற ஐந்து அப்ஸரஸ் கன்யகைகள் கௌரீபூஜைக்கு மலரெடுக்க அச்சோதஸரஸிற்கு வந்தனர். ஆங்கு வேதநிதியெனும் வேதியரின் குமாரன் அநுஷ்டானம் செய்துகொண்டிருந்தான். இவனைக்கண்டு அக்கன்யகைகள் ஆஹா! இஃதென்ன ரூபம்! மன்மதனே இவன்! இவனைக் கட்டி அணைப்பவளன்றோ பாக்யசாலி! என்று பேசிக் கொண்டே இவரருகே வந்தனர். இதைக்கேட்ட ரிஷி புதல் வன் நமது தவத்தைக் கெடுக்கவரும் மாயை இவர்களென்று

எண்ணி தன்னுருவை மறைத்துச் சென்றான். அவனைக் காணுமலவர்கள் ஏங்கி மயங்கி மறுநாளங்கு வந்தனர். அவனும் அநுஷ்டானம் செய்ய அங்கு வந்தான். கன்யகைகள் விரைவாகச் சென்று தங்களை மணக்கும்படி பல ருசியான சொற்களைக் கூறினர். ஜிதேந்திரியனான அவனதற்கு செவி சாய்க்காததுகண்டு அவனை ஐவரும் பலாத்காரமாக ஆலிங்கனம் செய்தனர். பேய்களாவீர்கள் என்று கோபங் கொண்ட அவர் அவர்களைச் சபிக்க அவர்களும் இவரை பேயாக சபித்தனர். ஆறுபேய்களாக இவர்கள் வேதநிதியினருகே செல்ல அவர் லோமச முனி சொன்னபடி ப்ரயாகையில் மாகஸ்நாநம் செய்து இவர்களது சாபத்தை அகற்றி விவாஹம் செய்து வைத்தார்.

பிசாசமோசநம். சைத்ராரண்யத்தில் ஸுமித்ரர் புத்ரரான தேவத்யுதி என்றோர் முனிவரிருந்தார். ததீசியின் உபதேசத்தால் மஹாவிஷ்ணுவைத் தர்சித்து யாதொரு வரமும் வேண்டாது விஷ்ணு பக்தியையே இவர் கோரினர். ஒரு நாள் இவர் ஆச்ரமத்தில் அழுகைக்குறல் கேட்க கருணமூர்த்தியான முனிவர் அருகே சென்று ஓர் பயங்கரமான பிசாசத்தைப் பார்த்து நீயார்? என்றார். அது தானோர் தக்ஷிண தேசத்தரசனாக இருந்து விஷ்ணு நிந்தையால் பல நரகங்களை அனுபவித்து இப்பிசாச ஜன்மம் பெற்றதாகக் கூறி தன்னைக் காத்தருளும்படி வேண்டிற்று. மஹர்ஷி ப்ரயாகையில் மாகஸ்நானம் செய்யச் சொன்னர். அதனால் நற்கதி பெற்றது. கேரள தேசத்தில் வஸு என்ற பூஸுரனை அவனது தாஸிகள் தனத்தைப் பிடிங்கிக்கொண்டு காட்டிற்குத் துறத்தினர். அங்கு அவன் உணவின்றி இறக்க அவனுக்குப் பரலோக கார்யத்தை எவரும் செய்யாததால் அவன் ப்ரேதமானன். ஒரு நாள் அப்ரேதமுள்ள வழியாக ஒருவன் செல்ல அது அவனைப் பார்த்து ஐயா, கொஞ்சம் ஜலம்கொடு! இல்லையேல்

இப்போதே இறப்பேனென்றது. வழிப்போக்கனதற்கு ஜல மளித்து நீ யார் என்றான்.

அது தான் ஓர் பிராமணனாயிருந்து ஸ்வதர்மத்தை அநுஷ்டிக்காததால் பேய் ஜன்மம் பெற்றதாகவும் ஓர் பக்ஷி கூறிய கதையைக் கேட்டு வருந்துவதாய்ச் சொல்லி பக்ஷி கதையைக் கூறிற்று. தூஸரா என்ற நதிகரையில் ஓர் பக்ஷி வந்து ஸ்நாநம்செய்து அருகிலுள்ள மரத்தில் உட்கார்ந்தது. உடனே ஓர் பயங்கரமான குரங்குவந்து அப்பக்ஷியின் கால் களைப் பிடித்துக் கொல்ல ஆரம்பித்தது. உடனே பக்ஷி அதைப் பார்த்து என்னை ஏன் கொல்கிறாய்? உன் முற்பிறவி யைச் சொல்கிறேன் கேள். நீ விந்த்யாதிப ராஜனாய் இருந் தாய்! நான் உனக்குப் புரோஹிதனாயிருந்தேன்! ஓர் கிரஹண காலத்தில் பிராமணர்களுக்குக் கொடுக்கும்படி நீ அளித்த தநத்தை அவர்களுக்குக்கொடாமல் நானேஎடுத்துக்கொண் டேன். நீ ஓர்பிராமணனது தோப்பில்சென்று அவனைக் கேளாமல் ஆங்குள்ள பழங்களைப் புஜித்தாய்! அதனால் குரங்கு ஜன்மமெடுத்தாய். யான் வெங்கலபாத்ரத்தைத் திருடிசூதாடி னேன். ஆதலால் யான் பக்ஷியாகப் பிறந்தேன். இன்னும் பல சரீரமெடுத்து நாமிருவரும் கங்கா ஜலத்தால்நற்கதி பெறப் போகிறோம் என்றது. அந்த கங்காஜலத்தை எனக்களி. யான் ப்ரேத சரீரத்தைவிட்டு தேவ தேஹம் பெறுவேனென்று ப்ரேதங் கூறியது. அங்ஙனமே வழிப்போக்கனுபகாரத்தால் அது நற்கதி பெற்றது.

வைஷ்ணவம். பகவானது அஷ்டாக்ஷரீ மந்த்ரத்தைக் குரு மூலமாக தீக்ஷையுடன் உபதேசம் பெற்றவர் வைகுண் டம் செல்வர். ஊர்த்தவபுண்டரத்தில் பகவான் வஸிக்கிறார். கேசவாதி பகவன் நாமாவைச் சொல்லி பனிரண்டு புண்டர மணிய வேண்டும். சங்கசக்ர முத்ரை தரித்தல் ஊர்த் வபுண்ட்ரம் விஷ்ணு மந்த்ரம் பகவதாராதநம் ஜபத்யாநம் நாமஸ்மரணம் கீர்த்தநம் ச்ரவணம் வந்தனம் பாதஸேவை பகவத்பாதோதக ஸேவை, பகவத்ப்ரஸாத முண்ணல் பக்த ஸேவை, த்வாதசீ வ்ரதம் துளஸீவைத்தல் ஆகிய இப்பதி னாறு வகையான பக்தி செய்வோர் பரமபதமடைவர்.

வெளி வேஷந்தரிப்பவர் பாஹ்யவைஷ்ணவர். வைராக்யமுள்ளவர் ஆந்தர வைஷ்ணவர். வைகுண்டத்தில் வேதசாஸ்த்ர மயமான ஏழு ப்ராகாரமுள்ள அயோத்யா நகரியில் நவரத்ந மண்டபத்தில் ஸர்வாக்ஷர மயமான யோக பீடத்தில் அஷ்டதளபத்மத்தின் இடையில் விமலா உத்கர்ஷிணீ க்ஞாநாகிரியா யோகா பிரஹ்வி ஸத்யா ஈசாநாஎன்ற அஷ்டமஹிஷிகளுடன் மேகச்யாமளாகாரராக பகவான் வீற்றிருக்கிறார். ஸகல தேவர்களும் பார்ஷதர்களும் பகவானைப் பணிந்து போற்றுகின்றனர். நான்கு வ்யூஹங்களிலும் பக்த கணங்கள் அமர்ந்து பரமனைப் பூஜிக்கின்றனர்.

தசாவதாரங்கள். கச்யபருக்கு திதியினிடம் பிறந்தவர் ராக்ஷஸர். அதில் ஸோமகன் என்ற அரக்கன் பிரும்மாவை வஞ்சித்து வேதங்களை அபஹரித்து ஸமுத்ரத்தில் நுழைந்தான். யாகாதிகள் இல்லாமல்போகவே பிரும்மா பாற்கடல் சென்று பகவானை வேண்டினார். அவர் மத்ஸ்யாவதாரம் செய்து ஸோமகனைக்கொன்று வேதங்களை மீட்டுவந்தார். துர்வாஸரது சாபத்தால் இந்த்ரன் லக்ஷ்மியை இழக்க, பகவானது உத்திரவுபடி தேவரும் அஸுரரும் பாற்கடலைக் கடைந்தனர். மத்தான மந்தாந மலையைக் கீழேவிழாமல் ரக்ஷிக்க பகவான் கூர்மாவதாரம் செய்தார். ஏகாதசியன்று தேவாஸுரர் உபவாஸமிருந்ததால் ஏகாதசி புண்ய தினமாகும். அன்று உபவாஸமிருப்போரது பதினொரு இந்திரியங்களால்செய்த பாபமகலும். ஜயவிஜயரெனும் வைகுண்ட த்வாரபாலகர்கள் ஸநகாதிகளை வழிமறித்ததால் ராக்ஷஸனாகும்படி சபிக்கப்பட்டனர். பகவான் தாஸனாக ஏழுபிறவி வேண்டுமா? சத்ருவாக மூன்று பிறவிபெற்று இங்குவருகிறீர்களா? என்று கேட்டார். அவர்கள் சத்ருவாக இருந்தாவது பகவான் திருவடியை விரைவிலடையக் கருதினர். அவர்களே ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷர்களாகத் தோன்றினர். ஹிரண்யாக்ஷன் பயங்கரமான உருவெடுத்து பூமியை அபஹரித்து பாதாளம் சென்றான். பகவான் வராஹாவதாரம் செய்து அவனைக் கொன்று பூமியை மீட்டுவந்தார். பலவரங்களைப் பெற்று பக்தனான ப்ரஹ்லாதனைப் பீடித்துவந்த ஹிரண்யகசுபுவை

நரஸிம்ஹாவதாரம் செய்து கொன்ருர். பலியினது கர்வத்தை அடக்க அதிதியின் வயிற்றில் வாமனராகத் தோன்றினர்.

ஜமதக்நிமுநி தனது ஆச்ரமத்திற்கு வந்த கார்த்தவீர்ய ராஜனுக்குத் தனது தேனுவைக்கொண்டு ஓர் அழகிய விருந்தளித்தார். அவன் தேனுவை பலாத்காரமாக இழுக்க அது ராஜஸேனையைக்கொன்று தேவலோகஞ் சென்றது. கோபங்கொண்ட அரசன் முனிவரைக்கொன்று நாட்டிற்குச் சென்ருன். இத்தகைய துஷ்ட அரசர்களைச் சிக்ஷிக்க பகவான் பரசுராமராகத்தோன்றி இருபத்தோரு தலைமுறை அவர்களைக் கொன்ருர். தாயான ரேணுகையின் சொற்படி மாதாமஹர் வம்சமான இக்ஷ்வாகு குலத்தைமாத்திரம் கொல்லாமல் விட்டார். சக்த்யாவேசமானதால் இப்பரசுராமாவதாரத்தை எவரும் பூஜிக்கலாகாது. ஸ்வாயம்புவமநு கங்காதீரத்தில் ஆயிரமாண்டு கடுந்தவம் புரிந்தார். பகவான் எதிரிற்ரேன்ற அவர் மும்முறை தனக்குப் புத்ரனக வரும்படி அவரை வேண்டினர். அங்ஙனமே அவரருள் புரிந்து தசரதகௌஸல்யைகளிடம் ராமராகவும் வஸுதேவ தேவகிகளிடம் கிருஷ்ணனுகவுமவதரித்து கலியுக முடிவில் சம்பளக் கிராமத்தில் ஹரிகுப்தர் தேவப்ரமைகளிடம் கல்கியாக வரப்போகிருர்.

ஸ்ரீராமகதா. தசரத சக்ரவர்த்தி செய்த விஷ்ணுயாகாக்னியில் பகவான் சங்கசக்ர கதாபாணியாகத் தோன்றி லக்ஷ்மீதேவியின் கையிலிருந்து பாயாஸத்தை வாங்கி அரசனுக்கு அளித்து தானவதரிப்பதாகக் கூறி மறைந்தார். அரசன் கௌஸல்யைக்கும் கைகேயிக்கும் பாதிபாதியாகப் பாயஸத்தைப் பகுத்தளித்தார். ஸுமித்ரையும் புத்ரேச்சையுடன் அருகில் வர இவ்விருவரும் பாதி பாதி பாகமளித்தனர். பகவான் கௌஸல்யையினிடம் நிஜஸ்வரூபத்துடனவதரிக்க அவள் அவரைப் பணிந்து குழந்தையாக வரும்படி வேண்டினள். பகவானுமப்படியே மாயாமானுஷ சிசுவானர். அவர் வனவாஸம் செய்யும்பொழுது ஸீதாபராதம் செய்த ஜயந்தன்மேல் ப்ரஹ்மாஸ்தரத்தை விட அவன் மூன்று உலகிலும் சரணங்கிடைக்காமல் பிரும்மா சொன்னபடி ராகவனிடம் வந்து கீழேவிழுந்தான். அவன் தலையைப் பகவானது

பாதாரவிந்தத்தில் வைத்து ரக்ஷிக்கும்படி ஸீதாதேவி வேண்டினள். பகவானவனைக் காத்தருளினர். ஸ்ரீராமர் கையால் தானிறக்கவேண்டுமென்று ராவணன் ஸீதையை அபஹரிக்க பகவான் கங்கையைப் பார்த்து ஸீதை எங்கே என்று கேட்டார். அது பேசாமலிருக்கவே உன் ஜலம் ரக்தமாகுமென சபித்தார். கங்கை காகுத்ஸ்தனது காலில் விழுந்துவேண்ட சபரீஸ்நாநம் செய்யும்போது உன் ஜலம் சுத்தமாகுமென்றருள் புரிந்தார். ராவணாதிகளை வதம் செய்து ஸீதையைப் பெற்று அயோத்யை வந்து பகவான் பட்டாபிஷேகம் செய்துகொண்டார். அச்சமயம் பரமசிவன் அவரைத் துதிக்க பகவான் நிஜரூபத்தைக் காட்டினர். விபீஷணனுக்கு ரங்கநாதரைக் கொடுத்து தனது கதை பூமியில் உள்ளவரை அங்கிருக்கும்படி ஆஞ்ஜநேயனுக்கு ஆக்ஞை செய்து கிருஷ்ணனாக வந்து ஜாம்பவனோடு யுத்தம் செய்வதாகக் கூறி பகவான் வைகுண்டம் சென்றார்.

ஸ்ரீகிருஷ்ணகதாவிசேஷம். பூபாரத்தை அகற்ற வஸுதேவபுத்ரனாகத் தோன்றிய பகவான் மாயையை அழைத்து ஹிரண்யாக்ஷன் புதல்வரான ஆறுபேர்களைத் தேவகியின் வயிற்றில் தனக்குமுன் குழந்தையாகப் பிறக்கும்படிசெய்ய ஆக்ஞையிட்டார். ஸ்ரீராமாவதாரத்தில் அவரது அழகைக்கண்டு மோஹித்த ரிஷிகள் கிருஷ்ணாவதாரத்தில் கோபிகைகளாக வந்து முக்தி பெற்றனர். அவரை த்வேஷித்த ராக்ஷஸர்கள் அவர் கையால் அடிபட்டு முக்தி அடைந்தனர். துக்கத்திற்குக் காரணமான காமக்ரோதங்கள்கூட கிருஷ்ணனிடம் செலுத்தப்படுமாகில் அது முக்தியையே அளிக்கும். ஸர்வ ஜகத்திலும் ஜநார்த்தனனிருப்பதால் ஸகலத்திற்கு மவனே பதியாதலால் அவனை ஆலிங்கனம் செய்த கோபிகைகள் பரபுருஷனைத் தீண்டிய பாபத்தைப் பெறாமல் மோக்ஷ ஸுகத்தையே அடைந்தனர். ருக்மிணீதேவி தனது புரோஹிதனுடைய குமாரனைப் பகவானிடமனுப்பி அவரை மணந்தாள். பிருதிவியின் அவதாரமான ஸத்யபாமையையும் மற்ற ஆறு மனைவிகளையும் பகவான் மணந்தார். க்ஷத்ரியர்களை ஜயித்து சிறையிலடைத்து ப்ரதிமாதமும் கிருஷ்ண சதுர்த்

தசியில்ஒவ்வோரரசனாக வெட்டி ருத்ரனுக்குப் பலியளிக்கும் ஜராஸந்தனைப் பீமார்ஜுனர்களுடன் பகவான்கொன்று மிகுதி அரசர்களை விடுவித்தார். பாரதயுத்தமெனும் வியாஜத்தால் பகவான் பூபாரத்தை அகற்றினார். ஜாம்பவதியின் புதல்வனை ஸாம்பன் கர்ப்பிணி வேடந்தரித்துக் கண்வரை அணுகி என்ன பிறக்குமென்று கேட்க அவர் சாபத்தால் பிறந்த கோடரியை ராவி ஸமுத்ரத்தில் எறிந்தனர். அது கோரையாக முளைக்க இந்திரனளித்த மதுவைப்பருகி சண்டையிட்டு கோரையைக்கொண்டு அடித்து கிருஷ்ண ஸந்ததியு மழிந்தது. பகவான் திவ்யதேஹம்பெற்று தேவர்களால் [illegible]றப்பட்டு வைகுண்டம் சென்றார்.

இங்ஙனம் பகவானது சரிதத்தையும் மஹிமையை [illegible] பார்வதிக்குப் பரமசிவன் எடுத்துரைத்தார். உடனே தேவி பகவதர்ச்சனத்திலீடுபட்டு பகவத் ஸஹஸ்ரநாம பாராயணமும் செய்துவந்தாள். ஒருநாள் கைலாஸநாதன் கர்மாநுஷ்டானங்களை முடித்துவிட்டு போஜநம் செய்ய பார்வதியை எதிர்பார்த்திருந்தார். அன்னைக்கு ஸஹஸ்ரநாமபாராயணம் முடியாததைக்கண்ட சந்த்ரசூடன் தேவி ராமநாமம் ஸஹஸ்ரநாமத்திற்குத் துல்யமாதலின் அதை ஜபித்தால் போதுமென்று கூறினார். அங்ஙனமே அம்பிகை அவஸர காலத்தில் ஸ்ரீராமநாமாவையும் மற்ற ஸமயத்தில் விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தையும் ஜபித்து பகவதாராதனம் செய்கிறாள். என்று இக்கதையை வஸிஷ்டர் திலீபனுக்குக்கூறியபடி ஸூதர் சௌநகாதிகளுக்குரைத்தார். ப்ருகுமும்மூர்த்திகளில் மஹா விஷ்ணுவே ஸத்வமூர்த்தி என்று ப்ரத்யக்ஷமாகக் கண்டு வந்தார். அவரைப்பூஜிப்பதும் அவர் கதையைக் கேட்பதும் உத்தம தர்மம். பத்மவடிவமான ஜகத்திலுள்ள ஸகல விருத்தாந்தங்களையும் கூறுவதால் இப்புராணம் பாத்மமெனப்படும். இது ஆறு கண்டமும அறுநூற்று இருபத்தெட்டு அத்யாயங்களும் ஐம்பத்தைந்தாயிரம் சுலோகமுமுளது. இதைக்கேட்பவர் சொல்பவரை வியாஸராக எண்ணி நன்கு ஸம்மானித்தால் வைகுண்டம் செல்வர்.

பத்மபுராணம் முற்றிற்று.

Garland & Co, Printers, Madras.